SEC | SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA

# ஒரு புதிய கருத்தோட்டம்

ஆண்டறிக்கை 2021



இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# உள்ளடக்கம்


**எம்மைப் பற்றி** ..... 2

**செயலாண்மை மீளாய்வுகள்**

தலைவரின் மீளாய்வு ..... 4

புதிய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திலான ஒரு சுருக்கமான கண்ணோட்டம் ..... 8

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு ..... 13

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ..... 19

விரிவான, செயல்நோக்குடைய, நடைமுறையான மற்றும் அளவிடக்கூடிய மூலதனச் சந்தை மூலோபாயம் 2020 - 2025 ... 23

முக்கிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள் 24

சிரேஷ்ட முகாமைத்துவம் ..... 26

சிரேஷ்ட முகாமையாளர்கள் ..... 27

முகாமையாளர்கள் ..... 28

பணியாட்டொகுதி அங்கத்தவர்கள் ..... 30

வருடத்தின் சிறப்பம்சங்கள் ..... 36

**செயற்பாட்டு மீளாய்வு**

செயற்பாட்டு மீளாய்வு ..... 40

மேலதிகத் தகவல்கள் ..... 72

**நிதியில் அறிக்கைகள**

**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு**

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ... 77

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ..... 80

நிதி நிலைமைக் கூற்று ..... 81

நிதிச் செயற்திறன் கூற்று ..... 82

தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று ..... 83

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ..... 85

**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்**

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ..... 99

நிதி நிலைமைக் கூற்று ..... 102

நிதிச் செயற்திறன் கூற்று ..... 103

தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று ..... 104

காசுப்பாய்ச்சல் கூற்று ..... 105

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ..... 106

**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்**

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ..... 111

நிதி நிலைமைக் கூற்று ..... 114

நிதிச் செயற்திறன் கூற்று ..... 115

தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று ..... 116

காசுப்பாய்ச்சல் கூற்று ..... 117

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ..... 118

**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்**

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ..... 123

நிதி நிலைமைக் கூற்று ..... 125

நிதிச் செயற்திறன் கூற்று ..... 126

தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று ..... 127

காசுப்பாய்ச்சல் கூற்று ..... 128

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ..... 129

பின்புற உள்மட்டை - கூட்டாண்மைத் தகவல்கள் ..... IBC

# ஒரு புதிய

# கருத்தோட்டம்

வரைவிலக்கணம்: பழைய முறையினை மாற்றீடு செய்யும் ஓர் புதிய முறையான சிந்தித்தல் அல்லது காரியங்களை செய்தல்

இ.பி.ப.ஆ. உண்மையிலேயே புத்தாக்கம் மற்றும் சாத்தியமான மாற்றத்தில் கட்டியெழுப்பப்பட்ட ஓர் நிறுவனமாகும். வளர்ச்சிக்கு உகந்த ஓர் பயனுறுதிமிக்க, வெளிப்படையான மூலதனச் சந்தையினை இயக்கும் எமது பணிநோக்கில், பலவருடங்களாக எமது பங்காளிகள் மற்றும் நாம் செயற்படும் சூழலின் மாற்றமடையும் தேவைகளை விளித்துரைப்பதற்கு தொடர்ந்தும் பரிணமித்தும் மற்றும் உருமாற்றம் செய்தும் உள்ளோம்.

அதே புத்தாக்கம் எமது மையமாக உள்ளதுடன், 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க புதிய பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் அறிமுகத்துடன் புரட்சிகரமான மாற்றத்திற்கான எமது வேட்கையினை நாம் தொடர்ந்தும் பகிர்ந்து கொள்கின்றோம். அனைத்து முக்கிய பங்காளிகள் குழுக்களிடையே ஓர் உருமாற்றல் செயற்பாட்டிற்கான எழுச்சியினை நாம் விரிவாக்கினோம் இதன் மூலம் பொருளாதார வளர்ச்சி, நவீனமயப்படுத்தப்பட்ட கட்டமைப்புகள் மற்றும் ஒரு எதிர்கால கூட்டு முன்னேற்றம் ஊக்குவிக்கப்படும்.

நாம் பழையதை புதியதுடன் மாற்றீடு செய்வதுடன் புரட்சிகரமான கருத்துக்கள் மற்றும் பலம்வாய்ந்த செயற்திறனில் செழித்தோங்கும் ஒரு புதிய யுகத்திற்கு இட்டுச்செல்கின்றோம்.

பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

நாம் எதிர்காலத்திற்கான ஒரு புதிய கருத்தோட்டத்தினை உருவாக்குகின்றோம்.

SEC SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA

# எம்மைப் பற்றி

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானாது (இ.பி.ப.ஆ.) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் நிறுவப்பட்டதுடன், இது தற்போது 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தினால் சட்டநீக்கம் செய்யப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்துவதற்கும் மற்றும் அதன் விருத்திக்கு வசதியளிப்பதற்கும் சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் இது நிதி அமைச்சின் கருத்தெல்லையின் கீழ் வருகின்றது.

## பணிநோக்கு

நியாயமான, செயற்திறனான, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான ஒரு மூலதனச் சந்தையினை ஊக்குவிப்பதற்கு, விருத்திசெய்வதற்கு மற்றும் பராமரிப்பதற்கு

## தொலைநோக்கு

பயன்முனைப்புடைய, திறமைமிக்க மற்றும் மேலாக்கமான மூலதனச் சந்தை முறைமைப்படுத்தலுக்கு பிராந்தியத்தில் அளவை தரக்குறியாக வருதல்

# ஒ ரு

## புதிய தரக்குறி

## செயலாண்மை மீளாய்வுகள்

4 தலைவரின் மீளாய்வு | 8 புதிய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திலான ஒரு சுருக்கமான கண்ணோட்டம்
13 பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு
19 ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் | 23 வீரிவான, செயல்நோக்குடைய, நடைமுறையான மற்றும் அளவிடக்கூடிய மூலதனச் சந்தை மூலோபாயம் 2020 - 2025
24 முக்கிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள் | 26 சிரேஷ்ட முகாமைத்துவம் 27 சிரேஷ்ட முகாமையாளர்கள் | 28 முகாமையாளர்கள்
30 பணியாட்டொகுதி அங்கத்தவர்கள் | 36 வருடத்தின் சிறப்பம்சங்கள்

# தலைவரின் மீளாய்வு



"நீண்டகாலம் காத்திருந்த இ.பி.ப.ஆ. சட்டம் (2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டம்) செப்டம்பர் 2021 இல் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதுடன் 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டமானது நீக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டது. சிறப்பாக உருவாக்கப்பட்ட இந்த சட்டமானது இ.பி.ப.ஆ. இன் அதிகாரத்தினை விரிவாக்குவதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கும், மூலதனச் சந்தையினை நவீனமயப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கு துணைபுரியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்."

2021 ஆம் ஆண்டானது இலங்கையின் மூலதனச் சந்தைக்கு ஒரு சிறந்த ஆண்டாகக் கருதப்படுகின்றது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது (கொ.ப.ப.) சுட்டிகள் மற்றும் சந்தை செயற்திறன் ஆகியவற்றில் இதற்கு முன் நிகழ்ந்திராத உச்சத்தினை பதிவு செய்தது. சவால்களுக்கு மத்தியில், பிணையங்கள் சந்தையானது திடமான வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தியது. அனைத்து பங்கு விலைச் சுட்டியானது (அ.ப.வி.சு.) 80.5% வளர்ச்சியினை அடைந்ததுடன் இது 2010 இலிருந்து பதிவுசெய்யப்பட்ட ஆகக்கூடிய விளைவாகும். அதேபோன்று எஸ் அண்ட் பி ஸ்ரீலங்கா 20 சுட்டியானது (S&PSL20) 60.5% ஆல் வளர்ச்சியடைந்து முன்னெப்போதுமில்லாத உச்சத்தினை பதிவுசெய்தது. சந்தை மூலதனவாக்கமானது ரூபா 5.5 டிரில்லியனை எட்டியதுடன் இது மொத்த உள்ளூர் உற்பத்தியின் (மொ.உ.உ.) 37% ஆகும்.

கோவிட்-19 தொற்றுக்கு மத்தியில் முறைமைப்படுத்தல் ஆற்றலின் முக்கியத்துவத்தினை இ.பி.ப.ஆ. வற்புறுத்துவதுடன் சந்தை ஸ்திரத்தன்மை மற்றும் தொடர்ச்சியினை கொண்டுவந்த நெகிழ்ச்சியான மற்றும் நேரகாலத்துடனான முறைமைப்படுத்தல் பிரதிபலிப்புகளை பிரயோகிப்பதில் அதன் கவனத்தினை மீள்அளவீடு செய்தது.

### நடைமுறை போக்குகளுக்கு மேலான புத்தாக்கம்

கடந்த இரண்டு தசாப்தங்களாக பிணையங்கள் சந்தையானது அதன் கட்டமைப்பு, சந்தை பங்குபற்றுனர்கள் மற்றும் முறைமைப்படுத்தலில் துரித மாற்றங்களை சந்தித்தது. 1991, 2003 மற்றும் 2009 திருத்தங்கள்டாக இ.பி.ப.ஆ. காலம்கடந்த ஏற்பாடுகளது இடைவெளிகளை நிரப்பியும் மாற்றீடு செய்துள்ளபோதிலும், இந்த அபிவிருத்திகள் நடைமுறையிலுள்ள பிணையங்கள் சட்டத்தில் பரந்த சீர்திருத்தங்களது அவசியத்தினை குறிப்பிட்டது.

நீண்டகாலம் காத்திருந்த இ.பி.ப.ஆ. சட்டம் (2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டம் ) செப்டம்பர் 2021 இல் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதுடன் 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டமானது நீக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டது. சிறப்பாக உருவாக்கப்பட்ட இந்த சட்டமானது இ.பி.ப.ஆ. இன் அதிகாரத்தினை விரிவாக்குவதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கும், மூலதனச் சந்தையினை நவீனமயப்படுத்துதல்

> “சிறப்பாக உருவாக்கப்பட்ட இந்த சட்டமானது இ.பி.ப.ஆ. இன் அதிகாரத்தினை விரிவாக்குவதில் ஓர் முக்கிய பங்கினை வகிக்கும், மூலதனச் சந்தையினை நவீனமயப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கு துணைபுரியும் என நாம் எதிர்பார்க்கின்றோம். ”

மற்றும் பொருளாதார வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கு துணைபுரியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இ.பி.ப.ஆ. தற்போது நடைமுறையிலுள்ள விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்கள், புதிய சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் ஒத்திருப்பதனை மீளாய்வு செய்யும் செயல்முறையிலுள்ளதுடன் இது புதிய சட்டம், பயனுறுதிமிக்க விதத்தில் வலியுறுத்தப்படுவதனை இயலுமையாக்கக்கூடிய நடைமுறையான நடவடிக்கைகளை வழங்குவதற்காகும்.

### உயரிய டிஜிட்டல் பின்பற்றல்

தொற்று மற்றும் அதன் விளைவான முடக்கல்கள் மூலதனச் சந்தை உள்ளடங்கலான பொருளாதாரத்தின் அனைத்து துறைகளில் டிஜிட்டல்மயமாக்கலது பின்பற்றலை முடுக்கிவிட்டது. இ.பி.ப.ஆ. உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு ஒத்தாற்போல் டிஜிட்டல் மயமாக்கல் முன்னெடுப்பின் இரண்டாம் கட்டத்தினை ஆரம்பிப்பதற்கு கொ.ப.ப. மற்றும் துறையினருடன் சேர்ந்து பணியாற்றியது. இது உள்ளூர் கம்பனிகளுக்கான இணையவழி கணக்கு திறத்தல்களுக்கு சிறந்த நெகிழ்வுத்தன்மையினை இயலுமையாக்கியது, வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத் திட்டத்தின் (ம.வை.தி.) இ-கனெக்ட் இன் அறிமுகம், இ-ஆரம்ப பொது வழங்கல்கள் (ஆ.பொ.வ.), கூட்டாண்மை நடவடிக்கைகளது டிஜிட்டல் மயமாக்கல் என்பவற்றுடன் திறன்பேசிகள் மற்றும் ஏனைய கருவிக;டாக தகுந்த இடைமுகப்பினையும் இயலுமையாக்கியது

மெய்யாகவே, மீளாய்வாண்டில், சாதனை மிக்க எண்ணிக்கையிலான கணக்கு திறத்தல்களுடன் சிற்றளவு முதலீட்டாளர்களின் பங்குபற்றலும் அதிகமாகக் காணப்பட்டது. உயிர்ப்புள்ள முதலீட்டார் தளமானது 63,000 ஆக உயர்வடைந்ததுடன் திறக்கப்பட்ட புதிய கணக்குகளின் எண்ணிக்கையானது 37,400 ஆக காணப்பட்டது.

### முதலீட்டாளர் கல்வி மற்றும் மூலதனச் சந்தையினூடாக நிதி திரட்டுதல்

எமது முதலீட்டாளர் அணுக்கமானது டிஜிட்டல் மயமாக்கப்பட்ட முதலீட்டாளர் கல்வி முன்னெடுப்புகளை முன்னிலைப்படுத்தியது. இலங்கை பூராவும் பங்குச் சந்தை முதலீடுகளை பிரபல்யப்படுத்துவதற்காக நாம் கொ.ப.ப. உடன் இணைந்ததுடன் பிரதானமாக சமூக ஊடக மேடைகள், செல்வாக்கு ஆற்றலுடைய சந்தைப்படுத்துதல், வலைதளப்பதிவுகள் மற்றும் கொ.ப.ப. மொபைல் செயலி விளம்பரப்படுத்தல் உள்ளடங்கலான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் வழிகளுடாக ஓர் கற்பித்தல் பிரச்சாரத்தினை ஆரம்பித்தோம். நாளொன்றுக்கான மொத்த வர்த்தகங்கள் கணிசமானளவு அதிகரித்ததுடன் ஒட்டுமொத்த சந்தை நடைவடிக்கைகளும் விரைவூட்டப்பட்டது. சந்தையானது 2021 இல் அசாதாரணமான சராசரி நாளாந்த வர்த்தகங்களாக 33,000 இனை பதிவுசெய்தது.

இ.பி.ப.ஆ. இனால் மேற்கொள்ளப்பட்ட பிரதிநிதித்துவங்களின் விளைவாக, 2021 பாதீட்டில் புதிதாக பட்டியலிடும் கம்பனிகளுக்கு முன்மொழியப்பட்ட வரிச் சலுகைகள், 2021 இல் பல கம்பனிகளை பட்டியலிடுவதற்கு தூண்டின.

கொ.ப.ப. கம்பனிகள் முன்னெப்போதுமில்லாதளவு மூலதனத்தினை திரட்டியதனை கண்டது. 2021 இல் 29 புதிய பட்டியலிடல்கள் காணப்பட்டதுடன் மூலதனத் திரட்டலானது ஓர் சாதனையான ரூபா 124 பில்லியனை பதிவுசெய்தது. அதேசமயம், “ஸ்தாபகரிடமிருந்து குடுப்பத்திற்கு – பொதுமக்களிடம் செல்வதனூடாக பயனடைதல்” என்ற தலைப்பிலான ஒரு ஆரம்ப வழங்கல் மன்றமானது நடாத்தப்பட்டது. இங்கு குடும்ப வணிகங்களுடன் ஈடுபாடு செய்ததுடன் பட்டியலிடல்கள் தொடர்பான தவறான கருத்துக்களை விளித்துரைப்பதற்காக, விசேடமாக குடும்பத்தினது கட்டுப்பாட்டினை தக்கவைக்கும் வேளை ஒரு பட்டியலிடல் தொடர்பான சிக்கல்களை விளித்துரைப்பதற்காகும். இம்மன்றமானது எவ்வாறு மூலதனச் சந்தையினை அணுகுவது மற்றும் கொ.ப.ப. இல் கிடைக்கக்கூடிய பல்வேறு நிதியளித்தல் தெரிவுகள் குறித்தும் ஒரு சிறந்த புரிந்துணர்வினையும் கம்பனிகளுக்கு வழங்கியது.

# தலைவரின் மீளாய்வு

"பயணக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலுடன், இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஐ.அ.இ. இன் இலங்கை தூதரகத்துடன் ஒன்றிணைந்து டுபாயில் "இலங்கையில் முதலிடுங்கள்" ஒழுங்குசெய்யப்பட்டது."

### கூட்டாண்மை பொறுப்புக்கூறலின் முக்கிய சிறப்பம்சங்களை வடிவமைத்தல்

அதிக உள்ளுர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அடைவதற்காக, எமது மூலதனச் சந்தையில் சிறந்த நம்பிக்கையினை உருவாக்குதல் முக்கியமானதாகும். இது தொடர்பாக, கல்விமான்கள், சட்டச் சமூகம் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் என்பவற்றுக்கிடையே ஒரு பரந்தளவிலான கலந்துரையாடல்களை நடாத்துவதற்கான இ.பி.ப.ஆ. இன் முயற்சிகள் காலத்திற்கேற்றதாகும். ஏனெனில், இலங்கையில் கூட்டாண்மை ஆளுகை வரம்புறுகையிலான முன்னைய மறுசீரமைப்புகள் ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இடம்பெற்றதாகும். மீளாய்வாண்டில், கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு பொருந்துகின்ற கூட்டாண்மை ஆளுகை விதிகளை திருத்தியமைப்பதில் பங்காளிகளிடமிருந்து கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்வதற்காக ஒரு பொது கலந்தாலோசனை நடாத்தப்பட்டது. அதன்பின்னர், பொதுமக்களினால் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பிப்புக்களை கருத்திலெடுத்து அனைத்து பங்காளிகளது பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு நிபுணத்துவக் குழுவானது புதிய கூட்டாண்மை ஆளுகை விதிகளை தயார் செய்தது. வரைவு விதிகளில் ஆணைக்குழுவானது சில மாற்றங்களை செய்து தற்போது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பட்டியலிடல் விதிகளில் உள்ளடக்குவதற்காக கொ.ப.ப. க்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அத்தகைய விதிகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர், பட்டியலிடப்பட்ட கம்பனிகளது பணிப்பாளர் சபைகளில் பெண்களது பிரதிநிதித்துவம் தொடர்பாக இலங்கை பெண்களது கூட்டாண்மை பணிப்பாளர்கள் பிரிவினால் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன. துறையின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில், அனைத்து பங்காளிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரசித்திபெற்றவர்களடங்கிய ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. இதன் பின்னர், பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர் சபைகளில் அதிகளவு பெண்களது பிரதிநிதித்துவத்தினை ஊக்கப்படுத்தும் மற்றும் விளைவிக்கும் பொருத்தமான ஏற்பாடுகளை உள்ளடக்குவது தொடர்பாக கருத்திலெடுக்குமாறு கொ.ப.ப. வேண்டப்பட்டது.

### நிதியியல் உள்ளடக்கத்தினை தூண்டுவதற்கான தேசிய மூலோபாயம்

இலங்கை பூராவும் நிதியியில் உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்காக மிகவும் வினைத்திறனான மற்றும் திறமைமிக்க ஒரு செயல்முறையினை ஊக்குவிப்பதற்காக, நாட்டின் முதலாவது தேசிய நிதியியல் உள்ளடக்க மூலோபாயத்தினை (தே.நி.உ.மூ.) விருத்திசெய்வதற்காக சர்வதேச நிதியியல் கூட்டுத்தாபனம் (ச.நி.கூ.) இலங்கை மத்திய வங்கியுடன் (இ.ம.வ.) கூட்டிணைந்தது. இ.பி.ப.ஆ. உள்ளடங்கலான பல்வேறு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நிதியியல் உள்ளடக்கல் முயற்சிகளுடன் ஒரு தனியான மேடைக்கு தே.நி.உ.மூ. சீரமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இ.பி.ப.ஆ. இந்த தேசிய கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் ஒரு உயிர்ப்பான பங்கினை வகிப்பதுடன் நன்கு கட்டமைக்கப்பட்ட நிதியியல் கல்வியறிவு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதனை தொடரும். இது தே.நி.உ.மூ. இன் ஒரு காலவரைக்குட்பட்ட திட்டத்தின் ஒரு பகுதி என்பதுடன் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தும் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் நோக்கினைக் கொண்டதாகும். தே.நி.உ.மூ. இனது ஆரம்பத்துடன், உலகம் பூராவும் இதேமாதிரியான மூலோபாயங்களை ஆரம்பித்துள்ள 60 நாடுகளுடன் இலங்கையும் இணைகின்றது.

### ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கையின் மூலதனச் சந்தையினை காட்சிப்படுத்துதல்

கோவிட் தொற்றினால் கொண்டுவரப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாக, இ.பி.ப.ஆ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இலங்கையின் மூலதனச் சந்தையில் எவ்வாறு முதலீடு செய்வது என்பது பற்றி இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களது பணியாட்களுக்காக இணையவழிக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இது அந்தந்த நாடுகளைத் தளமாகக் கொண்ட முதலீட்டு சமூகத்தினால் இலங்கையில் முதலீட்டுத்தேக்க முதலீடுகளை அவர்கள் ஊக்குவிக்கக்கூடியதாயிருப்பதற்காக நடாத்தப்பட்டது. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சிங்கப்பூர், சுவீடன், அபுதாபி, ஜப்பான மற்றும் ஐக்கிய அரபு இராச்சியங்களிலுள்ள தூதரகங்கள் ,உயர் ஆணையங்களது பணியாட்களுக்கு இந்த இணையவழிக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

பயணக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலுடன், இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஐ.அ.இ. இன் இலங்கை தூதரகத்துடன் ஒன்றிணைந்து புலம்பெயர் முதலீடுகளை கவர்வதற்காக டுபாயில் "இலங்கையில் முதலிடுங்கள்" ஒழுங்குசெய்யப்பட்டது. திடமான கூட்டாண்மை உழைப்புகள் மற்றும் கவர்ச்சிகரமான பெறுமதியிடல்கள் என்பவற்றின் பயனாக பல்வேறு துறைகளைச் சார்ந்த டுபாயினைத் தளமாகக்கொண்ட பிரபல்யம் வாய்ந்த இலங்கையர்களது திடமான பிரசன்னம் காணப்பட்டது.

### விநியோகம் எதிர் கொடுப்பனவு பொறிமுறையினது நடைமுறைப்படுத்தல்

மூன்று வருடங்களாக எதிர்பார்த்திருந்த ஒரு விநியோகம் எதிர் கொடுப்பனவு (வி.எ.கொ.) பொறிமுறையானது ஆகஸ்ட் 2021 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இ.பி.ப.ஆ, கொ.ப.ப. மற்றும் பங்குத்தரகு சமூகத்தினது கூட்டு முயற்சியாகும். இந்த முக்கியமான சந்தை உட்கட்டமைப்பானது தீர்ப்பனவு இடர்நேர்கையினை நவீனமயப்படுத்தி குறைக்கும் என எதிர்பார்க்கப்படும்வேளை பரிமாற்றகத்தில் புதிய கருவிகளையும் இயலுமையாக்கும். இதன் மூலம் உலகளாவிய பரிமாற்றக சிறந்த நடைமுறைகளுக்கு ஒத்ததாக இது காணப்படுகின்றது.

### மூலதனச் சந்தையின் அபிவிருத்தி நோக்கிச் செயற்படல்

தங்கம் எப்போதும் பாதுகாப்பான முதலீட்டு வகைகளினுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. பங்காளிகளிடமிருந்தான பல பிரேரணைகளை கருத்திலெடுத்து, இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இன் சாளரவழி மேடையினூடாக (சா.வ.) தாள் தங்கம் (தா.த.) இன் வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கான கொள்கையளவு அங்கீகாரத்தினை வழங்குவதன்மூலம் தா.த. இன் வர்த்தகத்திற்கு வசதியளித்தது. தற்போது, சா.வ. மேடையினூடாக தா.த. இன் வர்த்தகத்தினை அறிமுகப்படுத்துவதற்கான வரம்புறுகையானது கொ.ப.ப. இனால் முடிவுறுத்தப்பட்டுக்கொண்டுள்ளதுடன், இது சந்தைக்கு ஒரு புதிய முதலீட்டு சொத்து வகையினை வழங்கும் மற்றும் அரசாங்கத்திற்கு ஒரு புதிய வரி வருமான மூலத்தினையும் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்லாமியக் கருவிகளுக்கு இ.பி.ப.ஆ. கொள்கையளவில் அங்கீகாரத்தினை வழங்கியதுடன் அதன் அறிமுகத்திற்கான கொள்கை வரம்புறுகையானது தற்போது இ.பி.ப.ஆ. ஊடாக ஆ.அ.வ. இனால் வழங்கப்படும் தொழில்நுட்ப உதவியுடன் கொ.ப.ப. இனால் முடிவுறுத்தப்பட்டுக்கொண்டுள்ளது.

"மூன்று வருடங்களாக எதிர்பார்த்திருந்த ஒரு விநியோகம் எதிர் கொடுப்பனவு (வி.எ.கொ.) பொறிமுறையானது ஆகஸ்ட் 2021 இல் அறிமுகப்படுத்தப்பட்டது."

அதேபோன்று, இ.பி.ப.ஆ. பரிமாற்றக வர்த்தகம் செய்யப்படும் மூலாதாரப் பிணையங்கள் சந்தையின் அபிவிருத்தி நோக்கிய சாத்தியமான ஒரு முதலாவது படியாக கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களது அறிமுகத்திற்கான கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விருத்திசெய்யும் நடைமுறையிலுள்ளது. இதற்காக ஆ.அ.வ. இடமிருந்து உறுதுணை பெறப்பட்டுள்ளது. விசேட தேவை கையகப்படுத்தல் கம்பனிகளுக்கான (வி. தே.கை.க.) கொள்கையளவு அங்கீகாரமானது இ.பி.ப.ஆ. ஆல் வழங்கப்பட்டுள்ளதுடன் தேவையான கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை முடிவுறுத்துமாறு கொ.ப.ப. வேண்டப்பட்டுள்ளது. உரித்துவ கூட்டு நிதிநல்கைக்கான கொள்கையளவு அங்கீகாரமானது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது. கொ.ப.ப. இனால் தயாரிக்கப்பட்டுள்ள வரம்புறுகையானது பங்காளிகளது ஆலோசனைகளுக்கு சமர்ப்பிப்பதற்கு தற்போது தயாராயுள்ளது. கொ.ப.ப. இல் வெளிநாட்டு நாணயத்திலான பிணையங்களின் பட்டியலிடல், வர்த்தகம் மற்றும் தீர்ப்பனவிற்கு வசதியளிப்பதற்காக கொ.ப.ப. இற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் இதனை செயல்முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது நடந்தவண்ணமுள்ளன. பசுமை முறிகளின் அறிமுகமானது இ.பி.ப.ஆ. ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ள மற்றுமோர் முன்னெடுப்பாகும்.

மேலும், கொ.ப.ப. இன் சாளரவழி மேடையினூடாக கூட்டாண்மை கடன் பிணையங்களுக்கான மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல் பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்புள்ள குறை விற்பனை, பங்கு கடன்பெறுதல் மற்றும் கடன் வழங்குதல் தொடர்பான கொள்கையும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு கொ.ப.ப. பொது ஆலோசனைகளைப் பெறும் செயல்முறையில் ஈடுபடவுள்ளது.

மூலாதாரப் பிணையங்கள் போன்ற கருவிகள் அறிமுகப்படுத்தப்படவேண்டுமாயின், ஒரு மத்திய எதிர்தரத்தவர் (ம.எ.த.) காணப்படுதல் அவசியமானதாகும். ஒரு ம.எ.த. காணப்படுவதன் முக்கியத்துவத்தினை இ.பி.ப.ஆ. உணர்ந்து அதற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. இதற்கமைய, 2022 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் உரித்துவ சந்தைக்கு ஒரு ம.எ.த. இனை வைத்திருக்கும் நோக்குடன் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகியவற்றின் ஒரு கூட்டுக் குழுவினை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் கூட்டுக் குழுவானது திடமான முன்னேற்றத்தினை மேற்கொள்கின்றது. இக்காலப்பகுதியில் செயலகத்தின் பயனுறுதித்தன்மையினை சீராக்குவதற்காகவும் மற்றும் மேம்படுத்துவதற்காகவும் பல முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது கண்காணிப்புப் பிரிவிற்கான பகுப்பாய்வுக் கருவிகளைப் பெற்றுக்கொள்வதனையும் உள்ளடக்கும்.

### முன்னோக்கிப் பார்த்தல்

மீளாய்வாண்டானது இ.பி.ப.ஆ. க்கு ஒரு திருப்பு முனையாகும். எமது அனைத்து பங்காளிகளுக்குமான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பொறுத்தளவில் புதிய இ.பி.ப.ஆ. சட்டமானது செயற்படும் களத்தினை சமநிலைப்படுத்தும். எமது விரிவாக்கப்பட்ட பொறுப்பாணைக்கான ஒரு திடமான கடப்பாட்டினூடாக நியாயமான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான மூலதனச் சந்தையினை தொடர்ந்தும் ஊக்குவிப்பதற்கு மற்றும் வசதியளிப்பதற்கு நாம் எதிர்பார்ப்புடன் உள்ளோம்.

எமது சந்தை இன்று முகங்கொடுக்கும் சவால்களுக்கு பதிலளிப்பதற்கு இ.பி.ப.ஆ. நல்ல நிலையிலுள்ளது என நான் நம்புகின்றேன். மாண்புமிகு ஜனாதிபதி, மதிப்பிற்குரிய பிரதம மந்திரி, மதிப்பிற்குரிய நிதி அமைச்சர், திறைசேரிக்கான செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் ஏனைய அதிகாரிகளுக்கு அவர்களது உறுதுணை மற்றும் ஒத்துழைப்பிற்கு நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு அவர்களது விலைமதிப்பில்லாத பங்களிப்பிற்கு நான் எனது நன்றிக்கடனை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த வருடத்தில் பணிப்பாளர் நாயகம், திரு. சிந்தக்க மென்டிசுக்கு அவரது அர்ப்பணிப்புடனான சேவைக்கு, பணிப்பாளர்கள் மற்றும் பணியாட்டொகுதி அங்கத்தவர்களுக்கு அவர்களது கடின உழைப்பிற்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். எமது பங்காளிகளது கூட்டுமுயற்சியின்றி எமது பணியானது இலகுவாயிருந்திருக்காது என்பதனால் நான் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



விராஜ் தயாரத்ன ஐ.ச.
தலைவர்
18 ஏப்ரல் 2022

# புதிய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திலான ஒரு சுருக்கமான கண்ணோட்டம்

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க புதிய இ.பி.ப.ஆ. சட்டமானது 21 செப்டம்பர் 2021 இல் சபாநாயகரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சட்டமாக வந்துள்ளது. இது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தினை1 நீக்கி மாற்றீடு செய்கின்றது.

கணிசமானளவு காலத்தில் திட்டமிடப்பட்ட சட்டமானது நன்கு சிந்திக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குவதுடன் இது உலகம் பூராவுமுள்ள பிணையங்கள் சந்தைகளின் நவீன அபிவிருத்திகளை கருத்திலெடுத்துள்ளதுடன் சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்கள் ஒழுங்கமைப்பினால் (ச.பி.ஆ.ஒ.) எடுத்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நியமங்களை கடைப்பிடிக்கின்றது. இது சந்தை அபிவிருத்திக்கு வசதியளிக்கும் அதேவேளை வலுவான முறைமைப்படுத்தலையும் இயலுமையாக்குவதுடன் இலங்கையின் பிணையங்கள் சந்தையின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளையும் நிவர்த்திசெய்யும்.

### சட்டத்தினை வரையும் செயல்முறை

ஏனைய நியாயாதிக்கங்களின் சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வு மற்றும் இடைவெளிப் பகுப்பாய்வின் விளைவாக, புதிய சட்டத்தினை வரையும் செயல்முறையானது 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த முன்னெடுப்பிற்கு உலக வங்கி மற்றும் இலங்கையின் நிபுணர்களிடமிருந்து தொழில்நுட்ப உறுதுணை பெறப்பட்டது. முதலாம் வரைவானது 2013 இல் நிறைவு செய்யப்பட்டதுடன் இது அப்போதைய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. அது தொடர்ந்து செயலாற்றப்படாததன் விளைவாக, பின்னர் வந்த ஆணைக்குழுவினால் அந்த வரைவிற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றதன் பின்னர் இந்த சட்டமூலமானது 2018 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. 2018-2019 காலப்பகுதியில் முன்னைய ஆணைக்குழுவினால் அந்த சட்டமூலத்திற்கு மேலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. சட்டத்தினை முடிவுறுத்தும்போது, முன்னைய வரைவுகளில் காணப்பட்ட மையமான ஏற்பாடுகள் தக்கவைக்கப்பட்டவேளை, தற்போதைய ஆணைக்குழுவானது சட்டத்தின் பிரயோகம் மற்றும் நடைமுறைப்படுத்தலில் எவ்விதமான சிரமமும் இல்லாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக பொருள் தெளிவின்மை மற்றும் வரையறுக்க இயலாத நிலைமை என்பவற்றை நீக்குவதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொண்டது. நீண்ட வரையும் செயல்முறையில் அனைத்து பங்காளிகள் மற்றும் பொதுமக்களுடன் பல்வேறு கலந்தாலோசனைகள் இடம்பெற்றதுடன் இந்த சட்டத்தினை உருவாக்குவதில் அவர்களது பங்களிப்பானது அளப்பரிய உறுதுணையளித்தது என்பதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

### சட்டத்தின் கட்டமைப்பு

சட்டமானது ஏழு பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் அவை மேலும் பல்வேறு அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. முக்கியமான சிறப்பம்சம் என்னவெனில், ஒவ்வொரு பகுதியின் ஆரம்பத்திலும், அந்த பகுதியின் 'குறிக்கோள் மற்றும் நோக்கம்' விரிவாக விவரிக்கப்பட்டுள்ளதாகும். இது அத்தகைய பகுதியில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளினூடாக எதனை அடைவதற்கு முயற்சிக்கின்றது என்று ஒரு அறிகுறியினை வழங்குகின்றது.

பகுதி I பின்வரும் ஆரம்ப விடயங்களை கையாளுகின்றது. சட்டத்தின் பிரயோகம் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் நோக்கம், ஆணைக்குழுவினை நிறுவுதல் மற்றும் அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாளர் என்பவற்றுடன் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணியாட்டொகுதி தொடர்பான விடயங்கள் ஆகியனவாகும். 'சந்தைகள் மற்றும் சந்தை நிறுவனங்கள்' என்று தலைப்பிடப்பட்ட பகுதி II ஆனது பரிமாற்றகங்கள், தீர்வக இல்லங்கள் மற்றும் ஒரு மத்திய வைப்பகம் என்பவற்றின் நிறுவுதலுக்கு வசதியளிக்கின்றது. 'பிணையங்களது வழங்கல்' என்று தலைப்பிடப்பட்ட பகுதி III ஆனது பிணையங்களது பொது கொடைமுனைவுகள், சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களது சொத்துக்களை பாதுகாத்தல் என்பவற்றை கையாளுகின்றது.

1 § 187 இனை பார்க்கவும் - நீக்குதல்கள், சேமிப்புகள் மற்றும் இடைக்கால ஏற்பாடுகள்

பகுதி IV ஆனது 'பட்டியலிடப்படா பிணையங்களிலான வர்த்தகத்தினை' கையாளுகின்றது. 'சந்தை துர்நடத்தை' எனத் தலைப்பிடப்பட்ட பகுதி V ஆனது தடைசெய்யப்பட்ட நடத்தை மற்றும் உள்ளுறைபவர் வர்த்தகம் என்பவற்றை கையாளுகின்றது. பகுதி VI ஆனது ஆணைக்குழுவின் நிதிகள் தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்குவதுடன் பகுதி VII ஆனது சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல், தண்டனைகள் மற்றும் வலியுறுத்தல் பொறிமுறைகள் போன்ற பொதுவான விடயங்களை கையாளுகின்றது.

### சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

சட்டமானது நாட்டின் பிணையங்கள் சந்தையினை முறைமைப்படுத்துவதில் வினைத்திறன், முன்கணிப்புத்தன்மை மற்றும் ஒத்திசைவு என்பவற்றை உறுதிப்படுத்தக்கூடிய பல அனுகூலமான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. மேலும், இது பின்வருவனவற்றினை இயலுமையாக்குகின்றது: அதிநவீன உட்கட்டமைப்பின் பயன்பாடு மற்றும் வழங்குநர்களின் வெவ்வேறு நிதி திரட்டல் தேவைப்பாடுகள் மற்றும் அதனுடன் பல்வேறு கருவிகளை அறிமுகப்படுத்தக்கூடிய ஆற்றலானது முதலீட்டாளர்களுக்கு அவர்களது இடர்நேர்கை விளைவு தனிப்பண்புகளுக்கேற்ப பரவலான விருப்பத்தெரிவினை வழங்குகின்றது.

### சந்தை மற்றும் சந்தை நிறுவனங்கள்

சந்தைகள் மற்றும் சந்தை நிறுவனங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பகுதி II ஆனது புதிய சட்டத்தின் ஒரு முக்கிய பகுதி என்பதுடன் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முக்கிய நிறுவனங்கள் அவற்றின் செயற்பாடுகளை முறையாக செயற்படுத்தும் என்பதுடன் இதன் காரணமாக பிணையங்கள் சந்தையின் வினைத்திறனான மற்றும் திறமைமிக்க செயற்பாட்டிற்கு துணைபுரிவதுடன் முறைசார் இடர்நேர்கைகளைக் குறைப்பதற்கும் துணைபுரியும்.

இந்த ஏற்பாடுகள் ஒரு பரிமாற்றகம், ஒரு தீர்வக இல்லம் மற்றும் ஒரு மத்திய வைப்பகம் ஆகியவற்றின் உரிமைகள் மற்றும் கடமைகளை2, ஒரு உரிமத்தினை பெறவேண்டுமாயின் பூர்த்திசெய்யவேண்டிய தேவைப்பாடுகள்3, ஒரு உரிமம் எப்போது நீக்கப்படலாம்4 மற்றும் ஒரு உரிமம் நீக்கப்பட்டால் பரிகாரத்திற்கான உரிமை5, இந்த சந்தை நிறுவனங்களது விதிகளின் விளைவு6, பணிப்பாளர்களின் நியமனம்7, ஒரு கணக்காய்வாளரின் கடமைகள்8 போன்றவற்றை குறிப்பிடுகின்றன.

ஒரு முக்கிய சிறப்பம்சம் என்னவெனில் ஒரு உரிமமளிக்கப்பட்ட பரிமாற்றகமானது அதன் சொந்த பரிமாற்றகத்தில் அதன் பிணையங்களை பட்டியலிடலாம்9. ஒரு தீர்வக இல்லம் ஒரு மத்திய எதிர்தரத்தவராக செயற்படுவதற்கான அங்கீகாரம் மற்றும் ம.எ.த. வரையறுக்கப்பட்டுள்ளது10. மேலும் ஒரு தீர்வக அங்கத்தவர் சூழ்நிலைகளை கையாள்வதற்காக தவறுதல் விதிகள் மற்றும் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கான விரிவான ஏற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன11. தவறுதல் நடவடிக்கைகள் வர்த்தகங்களின் இறுதிநிலையினை கொண்டுவரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன.

2 ஒரு பரிமாற்றகம், ஒரு தீர்வக இல்லம் மற்றும் ஒரு மத்திய வைப்பகம் ஆகியவற்றின் கடமைகள் முறையே §27, §37 மற்றும் §56 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.
3 §25, §34 மற்றும் §54 என்பன ஒரு பரிமாற்றகம், ஒரு தீர்வக இல்லம் அல்லது ஒரு மத்திய வைப்பகம் ஆகியன ஒரு உரிமமின்றி நிறுவப்படுதலை தடைசெய்வதுடன் §26, §36 மற்றும் §55 என்பன எவ்விதத்தில் ஒரு உரிமம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்பதனை கையாளுகின்றது.
4 §28, §39 மற்றும் §57 இல் நீக்கலுக்கான காரணிகள் காணப்படுகின்றன.
5 அமைச்சருக்கு முறையீடு செய்வதற்கான ஒரு உரிமை கிடைக்கின்றது. § 28 (8), §40 மற்றும் §57 (8) இனை பார்க்கவும்.
6 §64 இனை பார்க்கவும்.
7 §68 இனை பார்க்கவும்.
8 §74 இனை பார்க்கவும்
9 §31 இன் பிரகாரம் ஆணைக்குழு மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஒரு பட்டியலிடல் சாத்தியமானதாகும்.
10 வரைவிலக்கணமானது §32 இல் காணப்படுகின்றது.
11 'தவறுதல் நடவடிக்கைகள்' 'தவறுதல்

விதிகள்' மற்றும் 'தவறுபவர்' ஆகியவற்றிற்கான வரைவிலக்கணத்திற்கு §32 இனை பார்க்கவும், §42 தவறுதல் விதிகள் என்னவென குறிப்பிடுவதுடன் §43 முதல் §46 வரை தவறுதல் நடவடிக்கைகள் தொடர்பானவை விளக்கப்பட்டுள்ளன.

**சந்தை இடையீட்டாளர்கள்**

சட்டமானது 'சந்தை இடையீட்டாளர்களை' மீள்வரையறை செய்துள்ளதை குறிப்பிடுவது பொருத்தமானதாகும் மற்றும் ஒரு சில வகையான நபர்களை சேர்த்துள்ளது. அவர்கள், 'கூட்டாண்மை நிதியியல் ஆலோசகர்', 'சந்தை உருவாக்குபவர்', 'மூலாதாரப் பிணையங்கள் தரகர்' மற்றும் 'மூலாதாரப் பிணையங்கள் வர்த்தகர்' ஆகும்12. சந்தை உருவாக்குபவர்களின் அறிமுகம் முக்கியமானதாகும் ஏனெனில் இவர்கள் கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இடையே தொடர்ச்சியான மற்றும் செயற்திறனான பிணையங்களது பரிமாற்றத்தினை உறுதிசெய்வார்கள்.

சந்தை நிறுவனங்களைப் பொறுத்தளவில், அவர்களது கடமைகள், ஒரு உரிமம் பெறுவதற்கு மற்றும் புதுப்பிப்பதற்கு நிறைவேற்றவேண்டிய தேவைப்பாடுகள்13, ஒரு உரிமம் நிராகரிக்கப்படுதல், இடைநிறுத்தப்படுதல் அல்லது நீக்கப்படுவதற்கான காரணங்கள்14, சந்தை இடையீட்டாளர்களினால் பிணையங்களில் வர்த்தகம்15, ஒரு கணக்காய்வாளரின் கடமை16 போன்றன மிகவும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

சந்தை செயலாற்றுவதில் சந்தை இடையீட்டாளர்கள் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றார்கள். சந்தையின் முன்னணியில் அவர்கள் செயற்படுவதால் மற்றும் இதன் நிமித்தம் முதலீட்டாளர்களுடன் நேரடி தொடர்பினை கொண்டுள்ளதனால் அவர்களது நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துதல் அவசியமானதாகும். இதனை அடைவது நோக்கி மற்றும் அவர்கள் அவர்களது செயற்பாடுகளை மிகவும் செயற்திறனுடன் நடாத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக, 'வாடிக்கையாளர்களது சொத்துக்களைப் பாதுகாத்தல்'17 தலைப்பின் கீழ் சில தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. அவை சந்தை இடையீட்டாளர்கள் பிணையங்களில்18 அவர்கள் கொண்டுள்ள சில அக்கறைகளை வெளிப்படுத்துல் வேண்டும், சில உள்வாரி செயல்முறைகள் மற்றும் செயலாக்கங்களை19 நிறுவுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் விதிகளின்20 மூலம் ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ள வணிக நடத்தைகளுடன் அமைவுறுதல் என்பனவாகும். இவை அவர்களது சொந்த இடர்நேர்கை மற்றும் வெளிப்பாட்டினை குறைக்கும் நோக்குடையது என்பதுடன் மற்றும் இணக்கப்பாட்டினை கண்காணிப்பதற்கும் மற்றும் இவை அவர்களுக்கு மேலதிக முயற்சி அல்லது செலவினத்தை விளைவிக்கக்கூடிய புதிய கடப்பாடுகளோ அல்லது நடவடிக்கைகளோ அல்ல. அத்தகைய தேவைப்பாடுகள் தற்போதும் விதிகள் மற்றும் ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் அறிமுகப்படுத்தப்படும் நியமங்கள் வடிவில் காணப்படுகின்றன. முன்னைய சட்டத்திற்கு எதிர்மாறாக, இச்சட்டமானது சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பான இந்த குறிப்பிட்ட தேவைப்பாடுகளை சட்டத்தின் பொருளிலேயே ஒருங்கிணைத்துள்ளது.

சந்தை இடையீட்டாளர்களுக்கும் மேலாக, ஆணைக்குழுவானது விதிகளின் மூலம், ஒரு சந்தை இடையீட்டாளருக்காக மற்றும் அவரின் சார்பில் வாடிக்கையாளர்களுடன் வர்த்தகம் செய்பவர்களுக்கு21 பதிவீடொன்றினை வேண்டுகின்றது. காப்பீட்டுக் கணிப்பாளர்கள், காப்பான்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் மதிப்பீடு செய்பவர்கள் போன்ற 'துணைச்சேவை வழங்குநர்களையும்22 அங்கீகரிப்பதுடன் அவர்களில் ஆணைக்குழுவானது எதிர்காலத்தில் மேற்பார்வையினை மேற்கொண்டு பொதுமக்களின் நம்பகத்தன்மையினை பலப்படுத்துகின்றது23.

12 'சந்தை இடையீட்டாளர்கள்' யார் என்றும் அந்தப் பிரிவிற்கு சொந்தமானவர்களுக்கான தனித்தனி வரைவிலக்கணத்தினையும் §188 வரையறுக்கின்றது.
13 அத்தகைய உரிமத்தின் புதுப்பித்தலை கையாளும் §94 (1), §101(1) மற்றும் §101 (2) மற்றும் (3) இனை பார்க்கவும்.
14 நிராகரித்தல் மற்றும் புதுப்பித்தலுக்கான காரணங்களுக்கு §95 இனையும் நீக்குவதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு §105 இனையும் பார்க்கவும்.
15 §106 இனை பார்க்கவும்.
16 §108 இனை பார்க்கவும்.
17 பகுதி III இன் 'வாடிக்கையாளர்களது சொத்துக்களைப் பாதுகாத்தல்' என்று தலைப்பிடப்பட்ட அத்தியாயத்தில் §109 முதல் §115 வரை பார்க்கவும்.
18 §113 இனை பார்க்கவும்.
19 §114 இனை பார்க்கவும்.
20 §111 இனை பார்க்கவும்.
21 §97 இனை பார்க்கவும்.
22 §188 இனை வரைவிலக்கணத்திற்காகப் பார்க்கவும்.
23 §169 இனை பார்க்கவும். இவர்கள் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டோ அல்லது பதிவீடளிக்கப்பட்டோ இருக்கவேண்டியதில்லை, ஆனால் சில சமயங்களில் ஆணைக்குழு தகவல்களைக் கோரலாம் மற்றும் திருத்த நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு வேண்டலாம்.

**பிணையங்களது வழங்கல் மற்றும் சிறந்த கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளைப் பராமரித்தல்**

பகுதி III 'பிணையங்களது வழங்கல்' உடன் கையாளுகின்றது மற்றும் ஏனையவற்றுக்கிடையில் இந்த பகுதியின் நோக்கமானது பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளினால் நிதியியல் தகவல்கள் நேரகாலத்துடன் வெளிப்படுத்துதல் மற்றும் சிறந்த கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளுடன் இணக்கப்பாடு காணுதல் என்பவற்றை உறுதிப்படுத்துவதாகும்.

பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும் நிதிகளுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக, பட்டியலிடப்படா கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் சில வகையான பொது வழங்கல்களுக்கு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் தேவையினை கொண்டுள்ள விதிகளை மேற்கொள்வதற்கு, அத்தகைய ஒரு நடவடிக்கை அவசியமென கருதும் பட்சத்தில், ஆணைக்குழுவிற்கு உரிமையுள்ளது. அத்தகைய தேவைப்பாடானது பின்வருவனவற்றை கருத்திற்கொண்டு அறிமுகப்படுத்தப்படலாம், 'பிணையங்களின் தொகை, பிணையங்களின் வகுப்பு, முதலீட்டாளர்களின் எண்ணிக்கை மற்றும் வகை, வழங்குநரின் தன்மை அல்லது பிணையங்கள் சந்தையின் தன்மை'24 போன்றவையாகும்.

பொதுமக்களுக்கு மேற்கொண்ட வெளிப்படுத்தல்களின் அடிப்படையில், ஏதேனும் தவறிழைத்தல் கண்டுபிடிக்கப்படுமாயின், ஆணைக்குழு அல்லது சந்தை நிறுவனங்கள் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களிடமிருந்து தகவல்களை கோருவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளன25. 'முறையான விசாரணை அல்லது புலனாய்வின் பின்னர்' பட்டியலிடப்பட்ட கம்பனியானது சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு, ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகளை மீறியுள்ளன அல்லது இணக்கப்பாடு காண்பதற்கு தவறியுள்ளன என கண்டுபிடிக்கப்பட்டால், பொருத்தமானது என கருதும் ஏதேனும் வலியுறுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது26. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் ஆணைக்குழுவின் கூட்டாண்மை அலுவல்கள் பிரிவினால் பட்டியலிடல் விதிகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக தற்போது மேற்கொள்ளப்படும் மேற்பார்வையானது இதன் ஒரு பகுதி என்பதுடன் புதிதாக ஒன்றுமில்லை என்பதனை இங்கு மீண்டும் அழுத்தமாகக் குறிப்பிடல் வேண்டும். என்ன நடந்துள்ளது என்றால் இந்த ஏற்பாடுகள் சிறந்த கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள் பின்பற்றப்படுவதனை உறுதிசெய்வதற்காக சட்டத்தில் விசேடமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒரு சந்தை நிறுவனத்தின் ஒரு பணிப்பாளராக, பிரதம நிறைவேற்று அதிகாரியாக அல்லது பிரதம முறைமைப்படுத்தல் அதிகாரியாக நியமனத்தினை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் ஒரு நபர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாகும் மற்றும் அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படாததற்கான காரணமும் குறிப்பிடப்பட்டுள்ளது27.
மேலும், ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்கள் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோர் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விதிகளின் மூலம் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பரிமாற்றகத்தின் விதிகளில் குறிப்பிடப்பட்ட பொருத்தமான மற்றும் தகுதியான வரன்முறைகளுடன் இணக்கப்பாடு காணுதல் வேண்டும்28. மற்றுமோர் புதிய சிறப்பம்சம் என்னவெனில், பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வாளர்கள்29, சந்தை நிறுவனங்கள்30

# புதிய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திலான ஓர் சுருக்கமான கண்ணோட்டம்

மற்றும் சந்தை இடையீட்டாளர்கள்31 ஆகியோர் 'அவர்களது கடமைகளை நிறைவேற்றும் இயல்பான நடப்பில்' தெரிந்துகொள்ளும் சில முறைகேடுகளை அறிக்கையிடுவதற்கு கடமைப்பட்டுள்ளார்கள். அவை என்ன மற்றும் யாருக்கு அறிக்கையிடப்படல் வேண்டும் என்பன விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

24 §80 இனை பார்க்கவும்.
25 §85 இனை பார்க்கவும்.
26 §86 இனை பார்க்கவும்.
27 §68 இனை பார்க்கவும்.
28 §89 (2) இனை பார்க்கவும்.
29 §90 இனை பார்க்கவும்.
30 §74 இனை பார்க்கவும்.
31 §108 இனை பார்க்கவும்.

குறிப்பிட்ட நிறுவனங்களில் முறையான கூட்டாண்மை ஆளுகை காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவும், பிணையங்கள் சந்தையில் அவர்கள் வகிக்கும் முக்கியமான பங்கினை கருத்திற்கொண்டு முறைசார் இடர்நோக்கையினை குறைப்பதற்காகவும் இந்த தேவைப்பாடுகள் அறிமுகப்படுத்துப்பட்டுள்ளன. இந்த நடைமுறைகளில் அனேகமானவை தற்போது முடிவுறுத்தப்பட்டுக்கொண்டுள்ள கூட்டாண்மை ஆளுகை வரம்புறுகையின் ஒரு பகுதியாக வணிகச் சமூகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வேளையில், அவர்களது வணிகத்தினது சீரான நடத்தைக்கு இவற்றை தடைகளாகப் பொருள்கொள்ள இயலாது.

### பிரதான சந்தை தவறுகள்

பிரதான சந்தை தவறுகளை உள்ளடக்கியுள்ள சட்டத்தின் பகுதி ஏ ஆனது நாட்டின் பிணையங்கள் சந்தையின் முறைமைப்படுத்தல் நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னேற்றகரமான படியாகக் கருதப்படுகின்றது. இந்தப் பகுதியானது 'தடைசெய்யப்பட்ட நடத்தை' மற்றும் 'உள்ளுறைபவர் வர்த்தகம்' எனும் இரண்டு அத்தியாயங்களை உள்ளடக்குகின்றது.

#### தடைசெய்யப்பட்ட நடத்தை

தடைசெய்யப்பட்ட நடத்தையின் கீழ் ஐந்து வெவ்வேறு தவறுகள் இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன, 'பொய்யான வர்த்தகம் மற்றும் சந்தை செயற்கை ஏற்ற இறக்கம்'32, 'பங்குச் சந்தை கையாடல்கள்'33, 'பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் கூற்றுக்களை மேற்கொள்ளுதல்'34, மோசடியான விதத்தில் நபர்களை பிணையங்களில் வர்த்தகம் செய்வதற்கு தூண்டுதல்'35 மற்றும் 'கையாடக்கூடிய மற்றும் ஏமாற்றக்கூடிய கருவிகளின் பயன்பாடு'36 என்பனவாகும்.

இந்த வகையான தவறுகளுக்கான மிகவும் முக்கியமான அறிமுகமாக, சந்தை கையாளுகை என பொதுவாக அறிந்துகொள்ளப்படும், இரண்டு தவறுகள் முறையே பிரிவு 130 மற்றும் 131 இல் காணப்படுகின்றது. பிரிவு 130 பிணையங்களின் சந்தை விலை அல்லது பருமனை அதிகரிக்கும் அல்லது குறைக்கும் ஒரு விளைவினை ஏற்படுத்தக்கூடிய பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் ஒரு கூற்றினை அல்லது தகவல்களை பரப்புவதலிருந்து ஒரு நபரை தடைசெய்கின்றது. பிரிவு 131 ஏதேனும் கூற்றினை மேற்கொள்ளுல் அல்லது பிரசுரித்தல் அல்லது தவறாக இட்டுச்செல்லும், பொய்யான அல்லது ஏமாற்றும் இயல்புடைய ஒரு எதிர்வுகூறலை மேற்கொள்வதன் மூலம் மற்றுமோர் நபரை வர்த்தகம் செய்வதற்கு தூண்டுதல் அல்லது தூண்டுவதற்கு முயற்சிப்பதிலிருந்து ஒரு நபர் தடைசெய்யப்பட்டுள்ளார்.

எத்தகைய நடத்தை தடைசெய்யப்பட்டுள்ளது என மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இந்த பகுதியின் கீழ் ஒரு தவறு இடம்பெற்றுள்ளது என நிறுவுவதற்கு என்ன ஆக்கக்கூறுகள் காணப்படல்வேண்டும் என்பதனை புரிந்துகொள்வது சிரமமல்ல.

#### உள்ளுறைபவர் வர்த்தகம்

உள்ளுறைபவர் வர்த்தகம் தொடர்பான அனைத்து தோற்றங்களும் மிகவும் துல்லியமாக விபரிக்கப்பட்டுள்ளன37. எப்போது ஒரு நபர் 'உள்ளுறைபவராக' கருதப்படுகின்றார் என்பது தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது38 மற்றும் அத்தகைய நபர் எதனைச் செய்வதிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளார் என்பதும் உறுதிப்பாட்டுடன் குறிப்பிடப்பட்டுள்ளது39

32 §128 இனை பார்க்கவும்.
33 §129 இனை பார்க்கவும்.
34 §130 இனை பார்க்கவும்.
35 §131 இனை பார்க்கவும்.
36 §132 இனை பார்க்கவும்.
37 பகுதி V இன் அத்தியாயம் இரண்டின் §133 தொடக்கம் §146 வரை பார்க்கவும்.
38 §137 (1) இனை பார்க்கவும்.
39 எது 'உள்ளுறைபவர் வர்த்தகத்' தவறினை உருவாக்குகின்றது என்பதற்கு §137 (2) மற்றும் (3) இனை பார்க்கவும்.

இதற்கும் மேலாக, எது தகவலாகக் கருதப்படுகின்றது40, எப்போது அத்தகைய தகவல் பொதுவாகக் கிடைக்கப்பெறும்41, பிணையங்களின் விலை அல்லது பெறுமதியில் கணிசமான தாக்கத்தினை கொண்டுள்ள தகவல் என்ன42, எப்போது ஒரு நபர் மற்றுமொருவரை அடைந்துள்ளதாக கருதப்படுவார்43, எப்போது தகவல் கையுடைமையாக கருதப்படுகின்றது44 அத்துடன் விசேட விலக்களிப்புகள்45 மற்றும் உள்ளுறைபவர் வர்த்தகக் குற்றச்சாட்டு46 தொடர்பாக கிடைக்கக்கூடிய பாதுகாப்புகள் என்பன மிகவும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த விரிவான ஏற்பாடுகள் ஏதேனும் உறுதியின்மை அல்லது சந்தேகம் என்பவற்றை அகற்றும் நோக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் எவ்விதமான நடத்தை அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் எது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதையும் தெளிவாக விளக்குகின்றது, ஏனெனில் சந்தையின் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் அவர்கள் செயற்படவேண்டிய வரம்புறுகை குறித்து முற்றாகவும் நன்றாகவும் அறிந்திருத்தல் அவசியமாகும். மேலும், ஏதேனும் அத்தகைய தவறினை இழைத்தல் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என்பதுடன் இது அச்சுறுத்தலாக செயற்படும் நோக்கினைக் கொண்டதுடன் சந்தை பங்குபற்றுநர்களின் நடவடிக்கைகளை அடக்குவதற்கான அல்லது ஊக்கங் கெடுப்பதற்கான ஒரு உபாயமாக அல்ல.

முன்னைய சட்டத்தின் பிரகாரம் குற்றச்சாட்டுகள் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதைப் போலன்றி, இனிமேல் இந்த தவறுகள் மேல் நீதிமன்றத்தில்47 விளக்கமளிக்கப்படும் மற்றும் அத்தகைய தவறுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட எவரேனும் ஒருவர் பத்து மில்லியன் ரூபாவிற்கும் குறையாத ஒரு தண்டப்பணத்திற்கு அல்லது பத்து வருடங்களை விஞ்சாத காலத்திற்கான சிறைத்தண்டனைக்கு அல்லது தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை48 ஆகிய இரண்டிற்குமான ஒரு தண்டனைக்கு உட்பட்டதாகும்.

### ஆணைக்குழுவின் வழக்குத்தொடரக்கூடிய தீர்ப்புரிமை

#### குற்றவியல் நடவடிக்கைகள்

ஆணைக்குழுவினால் புலனாய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டதன் விளைவாக, பகுதி ஏ இன் கீழ் ஒரு தவறினை இழைத்துள்ளதனை நிறுவுவதற்கான போதிய சான்றுகள் காணப்பட்டால் குற்றவியல் நடவடிக்கைகளை தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற கருத்தினை ஆணைக்குழு கொண்டுள்ளது. குற்றவியல் நடவடிக்கைகள் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவேண்டியுள்ளதனால் குற்றச்சாட்டுக்கள் ஒரு 'குற்றப்பகர்வு' வடிவத்தில் தாக்கல் செய்யப்படுவதுடன் குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையில்49 குறிப்பிட்டுள்ளவாறு இது சட்டமா அதிபரினால் மாத்திரமே சமர்ப்பிக்கப்படலாம் (இலஞ்ச சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குடன்). ஆணைக்குழுவானது இவ்விடயத்தினை குற்றப்பகர்வினை தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பிவைத்து வழக்குத்தொடுப்பு சட்டமா அதிபரினால் நடாத்தப்படும்50. முன்னைய சட்டத்தின் கீழ் அனைத்து தவறுகள் தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படும்போதும், குற்றச்சாட்டுக்களின் தயாரிப்பு மற்றும் வழக்குத்தொடுப்பினை நடாத்துதல் சட்டமா அதிபரினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

40 §133 இனை பார்க்கவும்.
41 §134 இனை பார்க்கவும்
42 §135 இனை பார்க்கவும்
43 §136 இனை பார்க்கவும்
44 §138 மற்றும் §139 இனை பார்க்கவும்
45 §140, §141, §142, §143,§144 மற்றும் §145 இனை பார்க்கவும்
46 §146 இனை பார்க்கவும்
47 §148 (நீதிமன்றங்களின் நியாயாதிக்கம்) இன் பிரகாரம் இந்த பகுதியின் கிழ் இழைக்கப்பட்ட ஒவ்வொரு தவறும் மேல் நீதிமன்றத்தினால் குற்றப்பகர்வின் மீது விளக்கமளிக்கப்படும்.
48 §147 இனை பார்க்கவும்
49 1979 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க

குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையின் §12 இனை பார்க்கவும்

50 §149 இனை பார்க்கவும்

பகுதி ஏ இல் உள்ளடக்கப்பட்டுள்ள தவறுகள் தவிர்ந்த ஏனையவை நீதவான் நீதிமன்றத்தில் விளக்கமளிக்கப்படும்51.

### குடியியல் நடவடிக்கைகள்

சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய சிறப்பம்சமாக குடியியல் நியாயாதிக்கத்தினை பயன்படுத்தி மேல் நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கைகளை52 தொடருவதற்கான தீர்ப்புரிமையானது ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளதாகும். இந்த நீதிமன்றமானது பொதுவாக வர்த்தக மேல் நீதிமன்றம் எனக் குறிப்பிடப்படுவதுடன் இது சேதங்களை மீளப்பெறுவதற்கும் மற்றும் ஒரு குடியியல் தண்டனையினை விதிப்பதனை வேண்டுவதற்காகும்53. சட்டமானது விசேடமாக இந்த நியாயாதிக்கத்தினை வர்த்தக மேல் நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது54. அத்தகைய நடவடிக்கைகள் பகுதி ஏ இன் கீழ் ஒரு மீறுகையினை இழைத்த ஒரு நபருக்கெதிராக தொடரப்படலாம். அத்தகைய நடவடிக்கைகளை தொடருவதற்கான ஆணைக்குழுவின் தீர்மானமானது 'மீறலின் தன்மை மற்றும் விதம், சந்தையில் அது ஏற்படுத்தியுள்ள தாக்கம் மற்றும் யாரேனும் முதலீட்டாளருக்கு ஏற்படுத்தியுள்ள நட்டத்தின் அளவு' போன்றவற்றில் தங்கியுள்ளது55. ஆணைக்குழுவினால் மீளப்பெறக்கூடிய தொகையானது உழைத்த பணவகை இலாபம் அல்லது தவிர்த்த நட்டத்தின் மொத்த தொகையின் மூன்று மடங்காகும் என்பதுடன் நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தண்டப்பணம் மீறுதலின் தீவிரம் அல்லது முக்கியத்துவத்தினைப் பொறுத்து பத்து மில்லியனுக்குக் குறையாதிருத்தல் மற்றும் நூறு மில்லியனுக்கும் அதிகமாயிருத்தல் ஆகாது56. அவ்வாறு மீளப்பெறும் சேதங்கள் எவ்வாறு பகிரப்படல் வேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது57.

பகுதி ஏ இன் கீழான மீறல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணவகையான இலாபம் அல்லது தவிர்க்கப்பட்ட நட்டம் ஆகியவற்றின் மொத்த தொகையின் மூன்று மடங்கிற்கு சமனான ஒரு தொகையினை செலுத்துமாறு, பொறுப்பினை ஏற்றுக்கொண்ட அல்லது ஏற்றுக்கொள்ளாமல் யாரேனும் ஒரு நபருடன் ஒரு உடன்படிக்கையில் உள்நுழைவதற்கான தீர்ப்புரிமையும் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது58. பகுதி ஏ இன் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ள தவறுகளைத் தவிர்த்த ஏனையவை அத்தகைய தவறுக்கு விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டப்பணத்தின் அரைவாசியினை விஞ்சாத ஒரு தொகைக்கு ஒத்திணங்கப்படலாம்59.

### நிர்வாக வலுவளிப்புகள்

அறிமுகப்படுத்தப்பட்ட மற்றுமோர் சிறப்பியல்பாக தவறிழைத்தவர்களில் 'நிர்வாக வலுவளிப்புகளை' ஆணைக்குழு விதிப்பதற்கான ஆற்றல் காணப்படுகின்றது. முன்னர், அனைத்து மீறல்களும் தவறுகளாகக் கருதப்பட்டபோதிலும் தண்டனைகளையோ அல்லது ஏனைய நிர்வாக வலுவளிப்புகளையோ விதிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு வெளிப்படையான அதிகாரம் காணப்படவில்லை.

51 §175 (3) இனை பார்க்கவும்.

52 §188 இல் காணப்படும் 'நீதிமன்றம்' என்பதற்கான வரைவிலக்கணத்தினைப் பார்க்கவும். இதற்கமைய சட்டத்தில் எங்கெல்லாம் 'நீதிமன்றம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதோ, அது வர்த்தக மேல் நீதிமன்றத்தினை குறிக்கும்.

53 §152 (1) மற்றும் (2) இனை பார்க்கவும்.

54 §152 (3) இனை பார்க்கவும். அத்துடன் இது நடவடிக்கைகளை தொடருவதற்கான முறையினை தெளிவுபடுத்துவதுடன் குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவையில் குறிப்பிட்டுள்ள செயல்முறையானது அத்தகைய நடவடிக்கைகளுக்கு பிரயோகிக்கப்படும் என்றும் குறிப்பிடுகின்றது.

55 §152 (1) இனை பார்க்கவும்.

56 §152 (2) இனை பார்க்கவும்.

57 §152 (5) இனை பார்க்கவும்.

58 §152 (4) இனை பார்க்கவும்.

59 §177 இனை பார்க்கவும்.

எவ்வாறாயினும், 'மீறலின் தன்மை மற்றும் விதம், இணக்கப்பாடின்மை அல்லது மீறுகை மற்றும் அதன் தாக்கம்' என்பவற்றைப் பொறுத்து இந்த புதிய ஏற்பாடானது ஆணைக்குழுவுக்கு (பகுதி ஏ இன் கீழான தவறுகள் தொடர்பானவை தவிர்த்து) கண்டனம், தண்டனை, மீட்டளிப்பு போன்ற பல்வேறு நிர்வாக வலுவளிப்புகளை விதிப்பதற்கும் வர்த்தகத்திலான ஒரு தற்காலிகத் தடை அல்லது தடைசெய்தல் போன்றவற்றிற்கான தீர்ப்புரிமை வழங்கப்பட்டுள்ளது60.

முதலீட்டாளர்களது சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்றத்திலிருந்து சில கட்டளைகளை வேண்டுவதற்கான உரிமை

ஏனைய புதிய சிறப்பம்சங்களுள் சிலவாக பின்வருவன காணப்படுகின்றன. வாடிக்கையாளரது சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்61, புலனாய்வுகளை அல்லது விசாரணைகளை நடாத்தும்போது 'முடக்குதல் கட்டளைகள்'62 என்றழைக்கப்படும் பணிப்புரைகளை வழங்குதல் (இவை ஏழு நாட்களுக்கு செல்லுபடியாகும் மற்றும் அதன்பின்னர் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்), மீறுதல் அல்லது நிகழப்போகின்ற மீறுதல் சூழ்நிலைகளில் ஒரு பிணையங்கள் கொடுக்கல் வாங்கலானது வெறிதானது என பிரகடனப்படுத்தல் போன்ற சில கட்டளைகளை வேண்டுதல்63 மற்றும் ஒரு நபரை ஏதேனும் பிணையங்களை விற்றுவிடுமாறு பணிப்புரைத்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கான ஆற்றல் ஆணைக்குழுவுக்கு உண்டு.

### மூலதனச் சந்தையின் அபிவிருத்தி

சந்தையின் அபிவிருத்தி நோக்கி பங்களிப்பினை வழங்கும் பல ஏற்பாடுகள் சட்டத்தில் உள்ளன. மிகவும் அவசியமான மத்திய எதிர்தரப்பினர் போன்ற அதிநவீன உட்கட்டமைப்பின் பயன்பாடானது அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இது மத்திய எதிர்தரப்பினர் இடர்நேர்கையினை பாரியளவில் குறைக்கும் மற்றும் புதிய கருவிகளது அறிமுகத்தினையும் இயலுமையாக்கும். புதிய சட்டமானது மூலாதாரப் பிணையங்களில்64 முதலீடு செய்வதற்கான தேவைகள் (உள்ளார்ந்த சொத்தின் தன்மையினை பொருட்படுத்தாமல் முன்பேரல்கள் மற்றும் தெரிவுரிமைகள் போன்றவை), பங்கு கடன்பெறுதல் மற்றும் கடன் வழங்கல், முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனை65 போன்றவற்றை விளக்குகின்றது. இது சந்தையின் திரவத்தன்மை மட்டங்களை மேம்படுத்துவதுடன் தற்போது காணப்படும் ஒருபக்க சாத்தியத்தினை அகற்றுவதுடன் மற்றும் ஒரு துடிப்பான சந்தையினை உருவாக்குவதற்கு துணைபுரியும். நீண்டகால முதலீட்டாளர்கள் இந்த வாய்ப்புக்களிலிருந்து நன்மையடைவார்கள்.

பட்டியலிடப்படா பிணையங்களின் வர்த்தகமானது ஒரு அங்கீகரிக்கப்பட்ட சந்தை செயலாற்றுபவரினால் செயலாற்றப்படும் ஒரு மேடையினூடாக வசதியளிக்கப்படுவதுடன் ஒரு மேலதிய வர்த்தக மேடையினையும்66 வழங்கும். 'சந்தை உருவாக்குபவர்கள்'67 ஒரு சந்தை இடையீட்டாளராக செயற்படுவதற்கான ஆற்றலானது கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இடையே தொடர்ச்சியான மற்றும் வினைத்திறனான பிணையங்களது பரிமாற்றத்தினை உறுதிப்படுத்தும். இது சந்தைக்கு ஆழத்தினை வழங்குவதுடன் பரிமாற்றக வர்த்தக நிதியங்கள் போன்ற நிதியங்கள் உருவாக்கப்படுவதனையும் ஊக்குவிக்கும்.

60 §178 இனை பார்க்கவும்.

61 §179 இனை பார்க்கவும்.

62 §167 இனை பார்க்கவும். புலனாய்வுகளின் நோக்கமானது அர்த்தமற்றதாக இருத்தலாகாது என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு விசாரணை அல்லது புலனாய்வு இடம்பெறும்போது இந்தக் கட்டளைகள் மேற்கொள்ளப்படலாம்.

63 §180 இனை பார்க்கவும்.

64 §188 மற்றும் §183 (1) (p) இல் உள்ள வரைவிலக்கணத்தினை பார்க்கவும். இது தொடர்பில் ஆணைக்குழுவினால் விதிகள் மேற்கொள்ளப்படலாம் மற்றும் §184 இல் காணப்படும் மூலாதாரப் பிணையங்கள் ஒப்பந்தமானது ஒரு சூது அல்லது பந்தய ஒப்பந்தமாக கருதப்படலாகாது.

65 §183 (1) (q) இனை பார்க்கவும். இங்கு இது தொடர்பில் விதிகளை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

66 பகுதி IV மற்றும் §188 இல் காணப்படும் வரைவிலக்கணத்தினைப் பார்க்கவும். இங்கு ஆணைக்குழுவினால் பதிவீடு செய்யப்பட்ட 'சந்தை செயற்படுத்துபவர்' இலங்கையில் பட்டியலிடப்படா பிணையங்களின் கொள்வனவு மற்றும் விற்பனைக்கான ஒரு மேடையினை செயற்படுத்தலாம்.

67 'சந்தை செயற்படுத்துபவரின்' பங்கானது §188 இல் காணப்படும் வரைவிலக்கணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

# புதிய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திலான ஒரு சுருக்கமான கண்ணோட்டம்

68 'பிணையங்கள்' வரைவிலக்கணத்திற்காக §188 இனை பார்க்கவும்.
69 'கூட்டு முதலீட்டு திட்டங்கள்' வரைவிலக்கணத்திற்கு §188 இனை பார்க்கவும்.

மேலும், புதிய சட்டமானது உலகம் பூராவும் காணப்படும் புதிய அபிவிருத்திகளுக்கேற்ப ஒரு வரிசையான பிணையங்களை உள்ளடக்குவதற்காக 'பிணையங்கள்' என்ற பதம் மீள்வரையறை செய்யப்பட்டுள்ளது68. அதேபோன்று நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளுக்கு அப்பால் சென்றுள்ள 'கூட்டு முதலீட்டு திட்டங்களுக்கான'69 ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. இந்தக் குடையின் கீழ் என்ன வரும் என்பதும் வரையறை செய்யப்பட்டுள்ளது.

தற்போது சந்தையில் கிடைக்கக்கூடிய கருவிகளின் வரம்பினை விரிவாக்கும் சமயம், 'ஏற்பளிக்கப்பட்ட முதலீட்டாளர்கள;'70 ஆக ஒரு வகுப்பு நபர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்கள். இது மதிநுட்பமற்ற முதலீட்டாளர்களை பாதுகாப்பது மட்டுமன்றி, உயர்ந்த இடர்நோக்கையினை பொறுப்பேற்கும் நிலையிலுள்ள முதலீட்டாளர்களினால் பயன்படுத்தக்கூடிய உயர் இடர்நோக்கையுடைய கருவிகள் சந்தைக்கு வழங்கப்படுவதற்கு வசதியளிக்கும்.

அம்பலப்படுத்துபவர்களை71 பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் சந்தை துர்நடத்தைகளை கட்டுப்படுத்துவதற்கு வசதியளிக்கும் என்ற எதிர்பார்ப்புடன் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பானது பொறுப்பற்ற கோரல்கள் மேற்கொள்வதன் மூலம் துர்ப்பிரயோகம் செய்யப்படாமலிருப்பதனை உறுதிப்படுத்துவது முக்கியம் என்பதுடன் அத்தகைய முறையானது கொண்டுவரக்கூடிய நலன்களை பொருட்படுத்தாமலிருக்க இயலாது.

### ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் தீர்ப்புரிமையிலான கட்டுப்பாடுகளும் இருப்புகளும்

ஓர் முறைமைப்படுத்துபவராக அதன் செயற்பாடுகளை மிகவும் அர்த்தமுள்ளதாகவும் மற்றும் வினைத்திறனான விதத்திலும் செயலாற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு பரவலான அதிகாரங்கள் மற்றும் தீர்ப்புரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அதிகாரம் மற்றும் தீர்ப்புரிமை வழங்கப்பட்டுள்ள ஏதேனும் ஏனைய பொது அதிகாரசபையினைப் போன்று ஆணைக்குழுவானது பாதிப்பின்மையினை அனுபவிக்க இயலாது என்பதனை கருத்தில் கொள்ளல் வேண்டும் என்பதுடன் அது அத்தகைய அதிகாரம் மற்றும் தீர்ப்புரிமை சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்படுவதுடன் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இயற்கை நீதியின் விதிகளை பின்பற்றல் வேண்டும். ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தீர்ப்புரிமையானது பல கட்டுப்பாடுகள் மற்றும் இருப்புகளினால் கட்டுப்படுத்தப்படுவதுடன் அது ஆணைக்குழுவினது பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதுடன் மற்றும் எந்த சூழ்நிலையிலும் அதன் அதிகாரத்தினை விஞ்சலாகாது.

இவை ஏற்பாடுகள் வடிவில் ஒரு தரப்பினரது பக்கத்தினை ஆணைக்குழு கேட்கவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது அத்தகைய தரப்பிற்கு எதிராக ஒரு தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னர்72, ஒரு தரப்பிற்கு முறையிடுவதற்கான உரிமையினை வழங்குதல்73, சில தீர்மானங்களுக்காக ஆணைக்குழு காரணங்களை வழங்கும் தேவைப்பாடு74 மற்றும் நீதிமன்றத்திலிருந்து கட்டளையினை ஆணைக்குழு பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு75 மற்றும் ஒரு கட்டளையினை மேற்கொள்வதற்கு முன்னர் பாதிக்கப்பட்ட தரப்பினர் பக்கத்தினை கேட்பதற்கு நீதிமன்றம் அனுமதியளிக்க எதிர்பார்க்கப்படும்போது76 போன்றவையாகும்.

மேலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு பேராணை விண்ணப்பம் மூலமாக ஆணைக்குழுவின் ஒரு தீர்மானத்தினை ஆட்சேபிப்பதற்காக பொதுச் சட்ட பரிகாரமானது சட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது77, இதன் மூலம் ஒரு இடருறும் கட்சிக்காரருக்கான உரிமை சட்டரீதியாக வற்புறுத்தப்படுகின்றது.

70 §188 இனை பார்க்கவும். யார் இந்த பிரிவின் கீழ் வருவார்கள் என்பதைப் பற்றிய ஒரு விரிவான வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது.
71 §172 இனையும் §188 இல் காணப்படும் வரைவிலக்கணத்தையும் பார்க்கவும்.
72 § 28 (7), § 39 (6), § 57 (7) ஓர் உரிமம் நீக்கப்படுவதற்கு முன்னர் சந்தை நிறுவனங்களுக்கு அவர்களிடமிருந்து கேட்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அத்துடன் § 105 (2)இ § 95(2) மற்றும் § 179 (2) இனையும் பார்க்கவும். உதாரணமாக சந்தை இடையீட்டாளர்களுக்கு கேட்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படும்போது மற்றும் § 178 (2) இல் தரப்பிற்கு கேட்பதற்கான ஒரு வாய்ப்பினை வழங்காது ஆணைக்குழு நிர்வாக வலுவளிப்புகளை விதிக்க இயலாதபோது.
73 ஒரு தரப்பிற்கு முறையீடு செய்வதற்கான உரிமை வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் §28 (8), § 40 (1), § 57 (8), § 67 (4) மற்றும் 178 (6) இனை பார்க்கவும்.
74 § 178 (1) இனை பார்க்கவும். ஆணைக்குழுவானது மீறுதலின் தன்மை மற்றும் விதம் மற்றும் சந்தையில் அதன் தாக்கம் தொடர்பாக கவனத்திலெடுத்ததன் பின்னர் மீறுதலின் கடுமை அல்லது முக்கியத்துவத்தின் அளவிற்கேற்ப தண்டனை விதிக்கப்படல் வேண்டும்.
75 §180 (1) இனை பார்க்கவும்.
76 § 167 (3), § 180 (3) மற்றும் § 180 (9) இனை பார்க்கவும்.
77 §186 இனை பார்க்கவும்.

முடிவுரை

சட்டத்தின் முன்னேற்றகரமான ஏற்பாடுகள் அனைத்து சந்தை பங்குபற்றுநர்களும் அவர்களது நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நம்பகத்தன்மை மற்றும் அவசியமான சூழலை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இது மூலதனச் சந்தையின் இறுதி இலக்காகும். சந்தையின் முறைமைப்படுத்துபவராக ஆணைக்குழு எந்நேரமும் மிகை முறைமைப்படுத்தலின் ஆபத்து குறித்து அறிந்திருக்கும் என்பதுடன் ஓர் சரியான சமநிலையினை பேணுவதற்கு கடப்பாடுடையதாகும். அதே சமயம், அனைத்து சந்தை பங்குபற்றுநர்களும் சுய முறைமைப்படுத்தலை கடைப்பிடித்து சட்டத்தின் கட்டுப்பாட்டினுள் செயற்படுவார்களாயின், சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அனேகமான ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கான அவசியமானது காணப்படாது என்பதை வலியுறுத்தல் வேண்டும்.



விராஜ் தயாரத்ன ஜ.ச.
தலைவர், இ.பி.ப.ஆ.

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



“தனியார் துறைக்கு புத்துயிரளிப்பதற்கு மூலதனத்தினை திரட்டுவதற்கும் மற்றும் பொருளாதாரத்தினை மேலுயர்த்துவதற்கும் மீண்டும் பங்குச் சந்தையானது ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. எனவே, டொலர்களை உழைக்கும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து அவற்றின் சாத்தியம், இயக்கம் மற்றும் கடப்பாடு என்பவற்றை ஆராய்ந்து வெற்றியாளர்களை தெரிவு செய்வதற்கும், அடுத்ததாக அத்தகைய வெற்றியாளர்களை நாம் ஊக்கமளித்து போஷிப்பதற்குமான நேரம் இதுவாகும். மூன்றாவதாக, அத்தகைய வெற்றியடையும் கம்பனிகள் வெளியில் சென்று உலகளாவிய ஜாம்பவான்களுடன் போட்டியிட்டு பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றமடைவதற்கான சுதந்திரத்தினை வழங்கல் வேண்டும் என்பதுடன் இது எமது நாட்டின் முழு வடிவத்தினையும் மாற்றியமைக்கும் இது எம்மை ஓர் இயக்க ஆற்றலுடைய தொழில்முனைவுசார் நாடாக மாற்றுவதுடன் நாடு அதன் மெய்யான சாத்தியத்தினை அடைவதற்கு துணைபுரியும்.”

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

2021 இல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு பொறுப்பேற்ற பணியினை நான் மிகவும் திருப்தியுடன் மீளாய்வு செய்கின்றேன்.

### சந்தை மிகவும் சுருக்கமாக

2021 ஆம் வருடத்தினை பின்னோக்கி பார்க்கும்போது, எவ்வித சந்தேகமுமின்றி இது நாட்டின் பிணையங்கள் சந்தைக்கு ஓர் அசாதாரண வெற்றிகரமான ஆண்டாகும். 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அனைத்து பங்கு விலைச் சுட்டி (அ.ப.வி.சு.) எண்பது சதவீதத்திற்கும் (80%) அதிகமான கணிசமான வளர்ச்சியினை கண்டது என்று எனது மீளாய்வினை ஆரம்பிக்கின்றேன். அ.ப.வி.சு. இனால் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சியானது 2011 ஆம் ஆண்டின் பின்னர் கண்ட மிக உயர்ந்த வளர்ச்சியாகும். அதேபோன்று S & P SL 20 சுட்டியும் அறுபது சதவீதத்திற்கும் (60%) அதிகமான வளாச்சியினை காட்டியது. இந்த அனைத்து வளர்ச்சிகளும் சேர்ந்து உலகத்திலேயே இரண்டாவது சிறந்த செயற்திறனுடைய சந்தையாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (கொ.ப.ப.) அங்கீகரிக்கப்படுவதற்கு காரணியாயிருந்தன. இத்துடன் நாட்டின் பிணையங்கள் சந்தையின் நாளாந்த சராசரி புரள்வானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 1.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 4.8 பில்லியனாக உயர்வடைந்தது. நாளாந்த சராசரி புரள்விலான இரண்டு மடங்கிலும் அதிகமான அதிகரிப்பிற்கான காரணிகளாக பின்வருவன காணப்பட்டன. கொ.ப.ப. உடன் இணைந்து இ.பி.ப.ஆ. மேற்கொண்ட டிஜிட்டல் மயமாக்கல் முன்னெடுப்பின் விளைவாக புதிய மத்திய வைப்புத் திட்ட (ம.வை.தி.) கணக்குகள் திறக்கப்பட்டமை மற்றும் நாட்டின் பிணையங்கள் சந்தையில் உள்ளுர் முதலீட்டாளர்கள் காட்டிய புதுப்பிக்கப்பட்ட ஆர்வம் என்பனவாகும்.

இதற்கும் மேலாக, பரிவர்த்தனையின் சந்தை மூலதனவாக்கமானது மொத்த உள்ளுர் உற்பத்தியின் சதவீதமாக கடந்த பத்து வருடங்களில் முதற் தடவையாக முப்பத்து ஐந்து (35%) இனை விஞ்சி நாட்டின் பொருளாதாரத்திற்கு பிணையங்கள் சந்தையானது மேற்கொள்ளும் பங்களிப்பினை குறிப்பிட்டுக் காட்டியது. சந்தையின் நாளாந்த சராசரி புரள்விலான அதிகரிப்பின் காரணமாக, சந்தை மூலதனவாக்கத்திற்கு புரள்வானது நாற்பது சதவீதமாக (40%) வளர்ச்சியடைந்ததுடன் இது 2020 இல் பதினாறு சதவீதமாக (16%) காணப்பட்டது. சந்தை நடவடிக்கை மட்டங்களிலான சடுதியான அதிகரிப்பானது பெரும்பாலும் உள்ளுர் முதலீட்டாளர்களின் பங்களிப்பினாலாகும். இது அண்ணளவாக தொன்னூற்று ஐந்து சதவீதமாக (95%) காணப்பட்டது.

நீங்கள் ஏற்கனவே அறிந்துள்ளவாறு, வழங்குநர்கள் தங்களது நிதி திரட்டல் தேவைப்பாடுகளை சந்திப்பதனை உறுதிசெய்வதில் மூலதனச் சந்தைகள் ஒரு முக்கியமான பங்காற்றுகின்றன. இவ்வாறாக, 2021 ஆம் ஆண்டானது உரித்துவச் சந்தையில் ஆரம்ப பொது வழங்கல்களின் (ஆ.பொ.வ.) எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பினை கண்டதுடன், இது பதின்மூன்றாக (13) காணப்பட்டது. உரித்துவ ஆ.பொ.வ. இலான அத்தகைய எழுச்சியானது கடைசியாக 2011 ஆம் ஆண்டிலேயே காணப்பட்டது. ஆ.பொ.வ. க்கான அதிகரிப்பினை பின்வரும் செயற்பாடுகள் விளைவித்தன. 31 டிசம்பர் 2021 இற்கு முன்னர் கொ.ப.ப. இல் பட்டியலிடும் உள்ளுர் கம்பனிகளுக்கு ஐம்பது சதவீதம் (50%) வரிச் சலுகையினை வழங்கும் அரசாங்கப் பாதீட்டிற்கு இ.பி.ப.ஆ. ஆல் மேற்கொள்ளப்பட்ட பிரேரணை மற்றும் அத்தகைய கம்பனிகளுக்கு அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்கு பதின்நான்கு சதவீத (14%) கூட்டாண்மை வரி வீதத்தின் அறிமுகம் என்பன இ.பி.ப.ஆ. இனால் முன்னியக்கமாக அறிமுகப்படுத்தப்பட்ட பல பிரேரணைகளினாலாகும். இவையனைத்தும் சந்தையில் உரித்துவ ஆ.பொ.வ. ரூபா 12.7 பில்லியனுக்கும் மேலாக திரட்டுவதனை இயலுமையாக்கியது. உரித்துவ சந்தைகள் மாத்திரமன்றி, கடன் சந்தைகளும் கடன் ஆ.பொ.வ. ஊடாக மீளாய்வாண்டில் ரூபா 84 பில்லியனுக்கும் அதிகமான மூலதனத்தினை திரட்டின. கடந்த ஒரு வருடத்தில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைபவர்களினால் வலுவளித்தல் பலகையினை பயன்படுத்துவதற்காக அதிகரித்த ஆர்வம் காணப்பட்டது. இவ்வனைத்து புள்ளிவிபரங்களும் வளர்ச்சி மனநிலையினை குறிப்பிடுவதுடன், சந்தையானது ஒரு தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலினை கண்டது. இந்த எதிர்மறையான தாக்கமானது உள்ளுர் முதலீட்டாளர்களது பங்குபற்றலுடன் குறைக்கப்பட்டது. சந்தையினை பரிசீலனை செய்யும்போது, பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைவான வட்டி வீதங்களினால் ஏற்பட்ட சாத்தியமான செல்வாக்கினையும் சந்தையின் செயற்திறனையும் புறக்கணிக்க இயலாது.

> "எவ்வாறாயினும், நான் இந்த மீளாய்வினை எழுதும்போது நாடானது புதுப்பிக்கப்பட்ட பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்களுக்கு முகங்கொடுப்பதுடன் இது சந்தையில் போதுமானளவு பிரதிபலிக்கப்படுகின்றது. சவால்களை எதிர்கொண்டு இந்த நிதியியல் மற்றும் பொருளாதார இக்கட்டான நிலையினை வெற்றிகொள்வதற்கு, எதனை செய்தல் வேண்டும் என்பதனை புரிந்துகொள்ளுதல் மற்றும் அவை இடம்பெறுவதற்கான விரைவான மற்றும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாகும்."

எவ்வாறாயினும், நான் இந்த மீளாய்வினை எழுதும்போது நாடானது புதுப்பிக்கப்பட்ட பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்களுக்கு முகங்கொடுப்பதுடன் இது சந்தையில் போதுமானளவு பிரதிபலிக்கப்படுகின்றது. சவால்களை எதிர்கொண்டு இந்த நிதியியல் மற்றும் பொருளாதார இக்கட்டான நிலையினை வெற்றிகொள்வதற்கு, எதனை செய்தல் வேண்டும் என்பதனை புரிந்துகொள்ளுதல் மற்றும் அவை இடம்பெறுவதற்கான விரைவான மற்றும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாகும்.

இருப்பினும், நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் கடந்த வருடத்தில் ஒரு சாதனை மிக்க வளர்ச்சிக்கு நாட்டின் பங்குச் சந்தையுடன் பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் திரும்பியுள்ளதை அழுத்தமாக தெரிவித்தல் முக்கியமானதாகும். மெய்யாகவே, நடந்துகொண்டிருக்கும் கொந்தளிப்பான பொருளாதார நிலைமையிலான உறுதியின்மை தனியார் துறைக்கு புத்துயிரளிக்கும் கொள்கைகளை முன்னிலைப்படுத்துவதற்கு நாட்டிற்கான ஒரு வாய்ப்பாகவும் காணப்படுகின்றது. இது நாட்டிற்கு மிகவும் அவசியமான வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதற்கான திடமான வழிமுறைகளுடன் மீள்கட்டியெழுப்புவதனை இயலுமையாக்கும்.

எவ்வாறாயினும், பல வழிகளில், நடைமுறை சூழ்நிலையின் காரணமாக ஒன்றும் மாற்றமடையவில்லை. ஏனையவற்றுக்கு மத்தியில், நாட்டின் வளமான இயற்கை வளங்கள், மூலோபாய இடஅமைவு, உயர்ந்த ஆற்றலுடைய தொழிற்சேனை மற்றும் சுற்றுலாத்துறை, த.தொ. இயலுமையாக்கப்பட்ட சேவைகள், ஏற்பாட்டியல்கள், உயர் பெறுமதிசேர்க்கப்பட்ட ஆடை மற்றும் உணவு மற்றும் விவசாய சேவைகளிலான முதலீடுகளுக்கான உறுதியளிக்கும் வாய்ப்புக்கள் மாற்றமின்றி காணப்படுகின்றன. இவ்விடயத்திற்காக, கம்பனிகளுக்கு அவற்றின் ஏற்றுமதிகளை பலப்படுத்துவதற்கும் மற்றும் உற்பத்தியினை வளர்ப்பதற்கும் உறுதுணையளிப்பதற்காக ஒழுங்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டால் நாடானது அதன் இறக்குமதி பட்டியல்கள் மற்றும் வளர்ச்சி இலக்குகளை சந்திக்கும் ஆற்றலுடையது என்பதனைக் கூறுவது பொருத்தமானது என்பதுடன் இது நாட்டின் வெளிநாட்டு கடன்களை மிகவும் நிலைபேறுள்ள அடித்தளமிடுவதற்கு துணைபுரியும்.

எனவே, தனியார் துறைக்கு புத்துயிரளிப்பதற்கு மூலதனத்தினை திரட்டுவதற்கும் மற்றும் பொருளாதாரத்தினை மேலுயர்த்துவதற்கும் மீண்டும் பங்குச் சந்தையானது ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. எனவே, டொலர்களை உழைக்கும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து

அவற்றின் சாத்தியம், இயக்கம் மற்றும் கடப்பாடு என்பவற்றை ஆராய்ந்து வெற்றியாளர்களை தெரிவு செய்வதற்கும், அடுத்ததாக அத்தகைய வெற்றியாளர்களை நாம் ஊக்கமளித்து போரிப்பதற்குமான நேரம் இதுவாகும். மூன்றாவதாக, அத்தகைய வெற்றியடையும் கம்பனிகள் வெளியில் சென்று உலகளாவிய ஜாம்பவான்களுடன் போட்டியிட்டு பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றமடைவதற்கான சுதந்திரத்தினை வழங்கல் வேண்டும் என்பதுடன் இது எமது நாட்டின் முழு வடிவத்தினையும் மாற்றியமைக்கும் இது எம்மை ஒரு இயக்க ஆற்றலுடைய தொழில்முனைவுசார் நாடாக மாற்றுவதுடன் நாடு அதன் மெய்யான சாத்தியத்தினை அடைவதற்கு துணைபுரியும். எனவே, இ.பி.ப.ஆ. இன்னமும் பாரம்பரியமான முறைமைப்படுத்தல் பங்கிற்கு மற்றும் முதலீட்டாளர்களது நம்பகத்தன்மையினை ஊக்குவிப்பதற்கு மரபுசார் அணுகுமுறைக்கு வரையறைசெய்ய இயலாது.

இந்த பின்னணியில், இந்த மீளாய்வின் பின்வரும் பகுதிகளில், அசாதாரணமான சூழ்நிலைகளில் இ.பி.ப.ஆ. அடைந்த வெற்றியினை விவரிப்பதனை நான் கௌரவமாக கருதுகின்றேன்.

### 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் சட்டமயமாக்கல் : ஓர் முன்னுதாரண மாற்றம்

21 செப்டம்பர் 2021 இல் மிகவும் காத்திருந்த 2021ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமானது சபாநாயகரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அமுலுக்கு வந்தது. இதன் மூலம், 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமானது நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது. இ.பி.ப.ஆ. சட்டத்தின் சட்டவாக்கத்துடன், இ.பி.ப.ஆ. முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தியில் வினைத்திறன், முன்கணிப்புத்தன்மை மற்றும் சீரமை ஆகியவற்றை அடையும் குறிக்கோளுடனான பயனுறுதிமிக்க முறைமைப்படுத்தலினை இயலுமையாக்குகின்றது.

இ.பி.ப.ஆ. சட்டமானது வருங்காலத்திற்குரியதாகும். இது ஏனைய அபிவிருத்தியடைந்த சந்தைகளுக்கு ஒத்ததான அபிவிருத்திகளை எதிர்நோக்குகின்றது. இ.பி.ப.ஆ. இனால் கொண்டுவரப்பட்ட முறைமைப்படுத்தல் நடப்பாட்சியானது சந்தைக்கு பிரயோகிக்கத்தக்க சட்டத்திற்கான சிறந்த விளக்கத்தினை வழங்குவதுடன் பல்வேறு முக்கிய அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

மெய்யாகவே புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தினை சட்டவாக்கமாக்கியதைவிட வேறு ஏதும் என்னை பெருமை கொள்ளச் செய்யவில்லை என்பதனை நான் ஏற்றுக்கொள்ளல்வேண்டும். சட்டமானது நோக்கத்திற்கான ஒரு

"மெய்யாகவே புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தினை சட்டவாக்கமாக்கியதைவிட வேறு ஏதும் என்னை பெருமை கொள்ளச் செய்யவில்லை என்பதனை நான் ஏற்றுக்கொள்ளல்வேண்டும். சட்டமானது நோக்கத்திற்கான ஒரு கூற்றாகும். இந்த நோக்கமே ஒத்திசைவானது மற்றும் வருங்காலத்திற்கானது மற்றும் முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தி முனைப்புகளில் ஒரு சமத்துவத்தினை உறுதிப்படுத்தும் ஒரு புதிய முறைமைப்படுத்தல் ஆட்சிமுறையினைக் கொண்டுவருகின்றது."

கூற்றாகும். இந்த நோக்கமே ஒத்திசைவானது மற்றும் வருங்காலத்திற்கானது மற்றும் முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தி முனைப்புகளில் ஒரு சமத்துவத்தினை உறுதிப்படுத்தும் ஒரு புதிய முறைமைப்படுத்தல் ஆட்சிமுறையினைக் கொண்டுவருகின்றது.

பல்வேறு உட்கட்டமைப்பு சீர்திருத்தங்களில், மத்திய எதிர்தரத்தவர் பொறிமுறையொன்றினது (ம.எ.பொ.) நிறுவுதலானது எதிர்தரத்தவர் இடர்நேர்கைகளை குறைப்பதற்கு உத்தேசித்துள்ளதுடன் பிணையங்கள் சந்தையில் சிறந்த இடர்நேர்கை முகாமைத்துவத்திற்கான இயல்விக்கும் ஏற்பாடுகளையும் வழங்குகின்றது. பின்வருவன போன்ற சட்டத்தின் முற்போக்கான ஏற்பாடுகள் எவ்வித ஐயமுமின்றி சந்தையில் மிகவும் அவசியமான திரவத்தன்மை தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கும்: கட்டமைக்கப்பட்ட கடன்பெறல் மற்றும் கடன் வழங்கல் மற்றும் முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனை பொறிமுறை ஆகியவற்றினை இயலுமையாக்குதல். இதற்கும் மேலாக, சட்டமானது பிணையங்கள் சந்தைக்கு பரந்த வரிசையிலான புதிய கருவிகளது அறிமுகத்திற்கும் வசதியளிக்கின்றது. உதாரணமாக, சந்தை உருவாக்குநர்களது அறிமுகமானது சந்தையில் போதுமான திரவத்தன்மை மட்டங்கள் காணப்படுவதனை உறுதிசெய்யும்.

இ.பி.ப.ஆ. சட்டம் பற்றிய பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றதன் காரணமாக அதன் முக்கிய அம்சங்கள் குறித்து நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள் என நான் நம்புகின்றேன். எவ்வாறாயினும், மேலே குறிப்பிட்டவற்றுக்கும் அதிகமாக அதன் சில முக்கிய சிறப்பம்சங்களை நான் சுருக்கமாக விளக்காவிடின் அது கவனக்குறைவாக கருதப்படலாம். ஏழு பகுதிகளை உள்ளடக்கிய இ.பி.ப.ஆ. சட்டமானது ஏனையவற்றுக்கிடையில், தற்போது பல புதிய பிரிவுகளை உள்ளடக்கிய சந்தை இடையீட்டாளர்கள், சந்தை நிறுவனங்கள் மற்றும் துணைச் சேவை வழங்குநர்கள் ஆகியவற்றுக்கு வசதியளிக்கின்றது. அதேவேளை முன்னைய சட்டத்துடன் ஒப்பிடும்போது குற்றவியல் தவறுகள் வித்தியாசமாக கையளாப்படுவதற்கான ஒரு வலியுறுத்தல் பொறிமுறையினையும் இயலுமையாக்குகின்றது. நான் இதனை ஏன் இப்போது கூறுகின்றேன் என்றால், சட்டமானது அனைத்து தவறுகளையும் உள்ளடக்குவதுடன் ஒரு தவறாகக் கருதப்படும் நடத்தை என்னவென தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறக்கூடிய விதிவிலக்குகள் மற்றும் எதிர்வாதங்களும் குறிப்பிடப்பட்டுள்ளதன் காரணமாக தற்போது காணப்படுகின்ற ஏதேனும் தெளிவின்மைகளை அகற்றுகின்றது. 'தடைசெய்யப்பட்ட நடத்தை' என வகைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து தவறுகளும் (பொய்யான வர்த்தகம் மற்றும் சந்தை மோசடி, பங்குச் சந்தை கையாளுதல்கள், பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் கூற்றுக்கள், பிணையங்களில் வர்த்தகம் செய்வதற்கு நபர்களை மோசடியாக தூண்டிவிடுதல், கையாளுதல் மற்றும் ஏமாற்றும் சாதனங்களது பயன்பாடு) மற்றும் 'உள்ளுறைபவர் வர்த்தகம்' என்பன தற்போது மேல் நீதிமன்றத்தில் விளக்கமளிக்கப்படும். சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், அத்தகைய ஒரு தவறுக்கு குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட ஒருவர் 10 மில்லியன் ரூபாய்க்கும் குறையாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது 10 வருடங்களை விஞ்சாத ஒரு காலத்திற்கான சிறைப்படுத்தலுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் சிறைப்படுத்தல் இரண்டிற்கும் பொறுப்புடையவராவார்.

அத்துடன், சட்டமானது சேதங்களை மீட்பதற்காக வர்த்தக மேல் நீதிமன்றத்தில் குடியியல் பரிகாரங்கள் விதிப்பதனை அல்லது ஒரு குற்றப்பணத்தினை விதிக்குமாறு வேண்டுவதனை இயலுமையாக்கியுள்ளதனை குறிப்பிடுவது பொருத்தமானதாகும். அத்தகைய நடவடிக்கைகள் 'சந்தை துர்நடத்தை' என்ற தலைப்பிடப்பட்ட பகுதியின் கீழ் மீறுகைகளில் ஈடுபட்ட நபருக்கெதிராக மேற்கொள்ளப்படலாம். அத்துடன், அத்தகைய நடைமுறைகளை மேற்கொள்வதற்கான ஆணைக்குழுவின் தீர்மானமானது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்நிபந்தனைகளில் இறுதியாக தங்கியுள்ளது என்பதை மனதில் கொள்வது மிகவும் முக்கியமானதாகும். அதாவது, 'மீறுகையின் தன்மை மற்றும் விதம், சந்தையில் அது கொண்டுள்ள தாக்கம் மற்றும் யாரேனும் முதலீட்டாளருக்கு அது விளைவித்துள்ள நட்டம்'

சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள மற்றுமோர் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாக 'நிர்வாக வலுவளிப்புகளை' விதிப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகும். இவ்வாறு, ஆணைக்குழுவானது தற்போது யாரேனும் ஒருவரில் ஒரு பரந்த அளவிலான நிர்வாக வலுவளிப்புகளை விதிப்பதற்கான

## பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

விருப்புரிமையினை கொண்டுள்ளது. இது மீறுகையின் தன்மை மற்றும் விதம், சந்தையில் அது கொண்டுள்ள தாக்கம் மற்றும் யாரேனும் முதலீட்டாளருக்கு அது விளைவித்துள்ள நட்டத்தின் அளவு என்பவற்றில் தங்கியுள்ளது.

மேற்கூறியவற்றிற்கும் மேலாக, ஏழு நாட்களுக்கு செல்லுபடியாகும் காலத்திற்கு முடக்கும் கட்டளைகளை வழங்குவதன் மூலம் முதலீட்டாளர்களது சொத்துக்களை பாதுகாப்பதற்கான அதிகாரமும் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது ஒரு புலனாய்வினை அல்லது ஒரு விசாரணையினை நடாத்திக்கொண்டிருக்கும்போது நீதிமன்றத்தின் உறுதிப்பாட்டிற்கு கட்டுப்பட்டு மற்றும் உடனடியாக நிகழவுள்ள மீறுகைச் சூழல்களில் சில கட்டளைகளை வேண்டி நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கான அதிகாரம் என்பனவாகும் (பிணையங்கள் கொடுக்கல் வாங்கலானது வெறிதாக்கப்பட்டுள்ளது என பிரகடனம் செய்வதற்கு, ஏதேனும் பிணையங்களை விற்பனை செய்யுமாறு ஒருவரை பணிப்புறுத்துதல் போன்றவை).

புதிய சட்டமானது முதலீட்டாளர்களுக்கு வித்தியாசமான இடர்நோக்கை விளைவுத் தோற்றங்களுக்கு வசதியளிக்கின்றது. உதாரணமாக, ஏற்பளிக்கப்பட்ட முதலீட்டாளர்களது அறிமுகமானது வழங்குநர்களுக்கு உயர்ந்த இடர்நோக்கையுடைய பிணையங்கள் வழங்குவதனை இயலுமையாக்கும் அதேவேளை அத்தகைய வழங்கல்களில் நன்மையினை அடைவதற்கு உயர்ந்த இடர்நோக்கையினை பொறுப்பேற்கக்கூடிய முதலீட்டாளர்களையும் அனுமதிக்கின்றது. தவறுகளை அம்பலப்படுத்துபவர் தொடர்பான ஏற்பாடுகளது அறிமுகமும் கவனத்திலெடுக்கவேண்டிய ஒன்று ஏனெனில், இது சந்தை தவறுகளில் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளக்கூடிய ஆற்றலுடைய தகவல்களுடன் வருபவர்களுக்கு பாதுகாப்பாக செயற்படும். இதன் மூலம், இறுதியாக நடைமுறை சட்டத்தின் சீரான பிரயோகத்தினை அடையமுடியும்.

### பயனுறுதிமிக்க மற்றும் நம்பகத்தன்மையுடைய ஓர் சந்தைக்கான நவீன உட்கட்டமைப்பு

விநியோகம் எதிர் கொடுப்பனவு பொறிமுறையின் (வி.எ.கொ.) அறிமுகமானது வைப்பகத்தின் இடர்நோக்கை முகாமைப்படுத்தல் வரம்புறுகையினை மேம்படுத்தும். வி.எ.கொ. ஊடான சொத்து ஒப்படைப்பு இடர்நோக்கையின் தடுப்பானது சந்தையில் முதலீட்டாளர் நம்பகத்தன்மை வளர்ச்சியடைவதனை விளைவிக்கும். வி.எ.கொ. இன் நிறுவுதலானது நாட்டின் பிணையங்கள் சந்தையானது, வெளித்தோன்றும் சந்தைகளுக்கு தனித்துவமான ஓர் அம்சத்தினை -தேவைப்பாட்டினை நிறைவேற்றும் என்று நான் மிகவும் திருப்தியுடன் கூறுகின்றேன். இதற்கு அப்பால் துணிந்து முயலுவதற்காக, மத்திய எதிர்தரத்தவர் (ம.எ.)முறைமையினை நிறுவுவதற்கு வசதியளிப்பதற்காக இ.பி.ப.ஆ., கொ.ப.ப. உடன் இணைந்து ஒரு கூட்டுக் குழுவினை உருவாக்கியுள்ளது. இந்த முன்னெடுப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வெகுவிரைவில் ம.எ. பொறிமுறையின் நிறுவுதலானது இடம்பெறும் என்பது எனது நம்பிக்கையாகும்.

பல்நாணயப் பலகையின் அறிமுகமானது உள்ளூர் கம்பனிகள் வெளிநாட்டு நாணயத்தில் பெயரிடப்பட்ட பிணையங்களை வழங்குவதன் மூலம் அவர்களது நிதியளித்தல் தேவைப்பாடுகளை சந்திப்பதற்கு அனுமதிப்பதுடன் ஏற்றுமதி -இறக்குமதி வணிகங்களில் குறிப்பிடத்தக்களவு வெளிப்படுத்தல்களையுடைய கம்பனிகளுக்கு அவற்றின் நாணய தொடர்பான இடர்நோக்கைகளை இழப்பு காப்பதற்கும் அனுமதியளிக்கின்றது. நாட்டில் நிலவும் தற்போதைய சூழலில், இந்த முன்னெடுப்பானது உள்ளூர் பொருளாதாரத்திற்கும் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலுக்கும் வசதியளிக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

கொ.ப.ப. இன் சந்தை நிறுவனம் சாரா (ச.நி.சா.) மேடையினூடாக கூட்டாண்மை கடன் பிணையங்களிலான மீள்கொள்வனவு உடன்படிக்கை கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஓர் கொள்கை கட்டமைப்பின் முடிவுறுத்தலானது முதலீட்டாளர்களுக்கு அவர்களது முதலீடுகளை மேற்கொள்ளும்போது பரவலான தெரிவுரிமையினை வழங்கும். மேலும், ஆரம்ப பொது வழங்கல்களுக்கு பிரயோகிக்கப்படும் பட்டியலிடல் வரம்புறுகையின் விரிவாக்கமானது, பன்முகமான வணிக நலன்களையுடைய பரந்தளவிலான கம்பனிகளின் பட்டியலிடலூடாக நன்மையளித்துள்ளது என்பதனை நான் மிகவும் மகிழ்ச்சியாகவும் திருப்தியுடனும் கூறுகின்றேன்.

> "சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள மற்றுமோர் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாக 'நிர்வாக வலுவளிப்புகளை' விதிப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகும். இவ்வாறு, ஆணைக்குழுவானது தற்போது யாரேனும் ஒருவரில் ஒரு பரந்த அளவிலான நிர்வாக வலுவளிப்புகளை விதிப்பதற்கான விருப்புரிமையினை கொண்டுள்ளது. இது மீறுகையின் தன்மை மற்றும் விதம், சந்தையில் அது கொண்டுள்ள தாக்கம் மற்றும் யாரேனும் முதலீட்டாளருக்கு அது விளைவித்துள்ள நட்டத்தின் அளவு என்பவற்றில் தங்கியுள்ளது."

### முனைவிலிருந்து முனைவு வரையான டிஜிட்டல் மயமாக்கலுடனான முன்னோக்கிய நகர்வு

டிஜிட்டல் மயமாக்கல் தலைப்பிற்கு நகர்வதில், மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. இன் தலைவரினால் நியமிக்கப்பட்ட கூட்டுக்குழுவானது இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகிய இரண்டினதும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதுடன் கொ.ப.ப. இன் முனைவு முதல் முனைவு வரையான செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. பின்வருவனவற்றின் அறிமுகத்திற்கு வசதியளித்த கட்டம் இரண்டினை பூர்த்தி செய்துவிட்டு மூன்றாம் கட்டத்திற்கு நாம் தற்போது எட்டியுள்ளதன் காரணமாக இதனை நான் கூறுகின்றேன். இரண்டாம் கட்டமானது, உள்ளூர் கம்பனிகளுக்கு புதிய கணக்குகளை திறப்பதற்கு கொ.ப.ப. மொபைல் செயலியினது அறிமுகத்திற்கும், ம.வை.தி. இ-கெனக்ட் மற்றும் இ-ஆரம்ப பொது வழங்கல்கள் போன்றவற்றிற்கும் வசதியளித்தது. இதற்கும் மேலாக, இரண்டாம் கட்டத்தின் கீழ் முதலீட்டாளர் அனுபவத்தினை மேம்படுத்துவதனை நோக்கிய சட்-பொட் மற்றும் கூகுள் எசிஸ்டன்ட் போன்றவையும் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த முன்னெடுப்புகள் ஒரு முதலீட்டாளருக்கு எளிதில் பிணையங்களில் முதலீடு செய்வதற்கான ஆற்றலினை வழங்குவதனால் சந்தைக்கான அணுக்கத்தினை இது மேம்படுத்தும் என நான் நம்புகின்றேன்.

டிஜிட்டல் மயமாக்கல் முன்னெடுப்பின் மூன்றாம் கட்டத்தின் கீழ், கொ.ப.ப. இன் மொபைல் செயலியானது எவ்விதமான அசௌகரியங்களும் இன்றி செயலீயூடாக வெளிநாட்டு தனிநபர்கள் மற்றும் கம்பனிகள் எமது நாட்டில் முதலிடுவதற்கும் ம.வை.தி. கணக்குகளை திறப்பதற்கும் வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நான் முன்னர் குறிப்பிட்டவற்றிற்கும் மேலாக, மூன்றாம் கட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ள ஏனைய சிறப்பம்சங்கள் குறித்து நான் விளக்கப்படுத்துகின்றேன். அவை இ-உரிம வழங்கல், இ-மீள்கொள்வனவு-கட்டாயக் கொடைமுனை, எல்லைக்கடன் வர்த்தகம் (சொத்து வகுப்புகளுக்கிடையே தடையற்ற நிதி மாற்றல்கள்) போன்றவையாகும்.

### முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்களுக்கான ஒரு வரிசையான தெரிவுரிமைகள்

இலங்கையின் முதலீட்டாளர் தங்கம் மற்றும் ஆதனம் என்பவற்றிற்கு மிகவும் மதிப்பினை வழங்குவது பொதுவானதென்பது நன்கறிந்ததாகும். சமீப காலங்களில், ஆணைக்குழுவானது சந்தை நிறுவனம் சாராத மேடையினூடாக தாள் தங்கத்தின் வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக கொள்கையளவில் அங்கீகாரத்தினை வழங்கியது. தற்போது, இந்த முன்னெடுப்பினை அமுல்படுத்துவதற்கான வரம்புறுகையானது கொ.ப.ப. ஆல் உருவாக்கப்பட்டுக்கொண்டிருப்பதுடன் இந்த முன்னெடுப்பின் பின்னணியிலான நோக்கம் ஒரே சமயத்தில் முதலீட்டாளர்களுக்கு ஒரு வருமான

"சந்தையின் முறைமைப்படுத்துபவர் என்ற வகையில், மிகையான முறைமைப்படுத்தலின் அபாயத்தினை நாம் அறிந்துள்ளதுடன் தொடர்ச்சியான சரியான சமநிலையினை பேணுவதற்கு முயற்சிக்கும் அதேவேளை, இலங்கையின் மூலதனச் சந்தையினுள் நீடிப்புத்திறனை ஒருங்கிணைப்பதற்கு நாம் கடப்பாடுடையவர்களாயுள்ளோம்."

மூலத்தினை உருவாக்கும் அதேவேளை நாட்டிற்கும் ஒரு புதிய வருமான மூலத்தினை உருவாக்குவதாகும்.

ஆதன முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்புகளிலான (ஆ.மு.ந.பொ.) விதிகள் ஒரு வர்த்தமானியின் மூலம் இ.பி.ப.ஆ. ஆல் பிரசுரிக்கப்பட்டது. இதன் விளைவாக, இந்த முதலீட்டு வழியினூடாக நன்மையடைவதற்கான மற்றுமோர் வாய்ப்பானது பங்காளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டின் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிக் கோவையின் விரிவாக்கலாக, கூட்டு முதலீட்டுத் திட்டங்கள் கோவை (கூ.மு.தி.) தற்போது வரையப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இது பரிமாற்றக வர்த்தக நிதியங்கள், இடர்காப்பு நிதியங்கள் போன்ற பரந்தளவிலான திட்டங்களுக்கு வசதியளிக்கின்றது. இக்கோவையின் சட்டவாக்கத்துடன் முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்கள் பல்வேறு முதலீட்டு வாய்ப்புக்களின் நன்மைகளை அடையக்கூடியதாயிருக்கும்.

கொ.ப.ப. மற்றும் ஏனைய பங்காளிகளது கலந்தாலோசனையுடன் சந்தையின் புதிய பட்டியலிடல்களை மேம்படுத்தும் நோக்கத்திற்காக சிறப்பு நோக்க கையகப்படுத்தல் கம்பனிகளிலான (சி. நோ.கை.க.) ஒரு கொள்கை வரம்புறுகை இ.பி.ப.ஆ. ஆல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தற்போது, கொ.ப.ப. அதற்கு தேவையான முறைமைப்படுத்தல் கொள்கையினை உருவாக்கும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது.

மூலதனச் சந்தையினூடாக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிலை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான மூலதன திரட்டல் வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில், ஆணைக்குழுவானது உரித்துவ கூட்டு நிதிநல்கை மேடைகளுக்கு கொள்கையளவில் அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. இந்த முன்னெடுப்பிற்கு தேவையான தொழில்நுட்ப உறுதுணையானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (ஆ.அ.வ.) வழங்கப்படுகின்றது. இந்த மேடைகளை வழங்குபவர்கள் இ.பி.ப.ஆ. ஆல் சந்தை செயற்பாட்டாளர்களாக அங்கீகரிக்கப்படுவதனால், அத்தகைய நிறுவனங்களுக்கு வசதியளிப்பதற்காக விதிகள் வரையப்படும்.

நீடிப்புத்திறனை அடைவதற்காக மற்றும் நீடிப்புத்திறனைச் சூழ்ந்துள்ள குறிக்கோள்களை நாடானது அடைவது நோக்கி இயக்குவதற்காக, ஆணைக்குழுவானது பிணையங்கள் சந்தைக்கான பசுமை முறிகளுக்கு கொள்கையளவில் அங்கீகாரம் வழங்கியது. சி.நோ.கை.க. போன்று, குறித்த முன்னெடுப்பின் அமுலாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான தொழில்நுட்ப செயலறிவினை ஆ.அ.வ. வழங்கும். அத்தகைய பசுமை முறிகளிலிருந்து வெளிப்படும் வருவாயானது புதுப்பிக்கத்தக்க வலுவளம், நீடிப்புத்திறனுடைய கழிவு முகாமைத்துவத் திட்டங்கள், நீடிப்புத்திறனுடைய காணிப் பயன்பாடு (வனவியல் மற்றும் விவசாயம் ), தூய்மையான போக்குவரத்து முறைகள், தூய்மையான தண்ணீர் திட்டங்கள் போன்றவற்றின் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புக்காக பிரத்தியேகமாக பயன்படுத்தப்படும்.

மேலதிகமாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்கள் மற்றும் இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகளது அறிமுகத்திற்கான கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விருத்திசெய்யும் செயல்முறையிலும் இ.பி.ப.ஆ. ஈடுபட்டுள்ளது.

### இ.பி.ப.ஆ. இன் வலியுறுத்தல் பொறிமுறை

இதற்குள், நாட்டின் பிணையங்கள் சந்தையில் முதலீடு செய்வதற்கு ஆர்வமாயுள்ள முதலீட்டாளர்களது எண்ணிக்கை அதிகரித்ததன் விளைவாக கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கையில் கணிசமானளவு அதிகரிப்பு காணப்படுகின்றது. இதன் காரணமாக மிகவும் கடுமையான ஓர் கண்காணிப்பு பொறிமுறையின் அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தேவைப்பாட்டினைக் கருத்திற்கொண்டு, இ.பி.ப.ஆ. அதன் கவனத்திற்கு வந்துள்ள ஏதேனும் சந்தை துர்நடத்தைகள் நிகழக்கூடிய ஏதேனும் சாத்தியத்தினை நீக்குவதற்கான நோக்கத்துடன் கண்காணிப்பு, மேற்பார்வை ஆகியவற்றை பலப்படுத்துதல், மற்றும் செயல்திறன், தவிர்த்தல் மற்றும் விவேகம் போன்றவற்றினூடாக வலியுறுத்தல்களை மேற்கொள்ளும் புலனாய்வுகள் பிரிவுகளையும் பலப்படுத்தல் போன்ற அனைத்து சாத்தியமான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. உதாரணமாக, நாளாந்த வர்த்தகத்தில் கண்காணிப்புப் பிரிவானது நூற்றுக்கும் அதிகமான அவதானிப்புகளை குறியிட்டதுடன் பின்வரும் வலியுறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டது. பரிந்துரைகள், இணக்கப்பாட்டு அதிகாரிகள் அல்லது ஒரு உயர் அதிகாரிக்கு அறிவித்தல், முதலீட்டு ஆலோசகர்களுக்கு எச்சரிக்கை விடுத்தல், இயங்கலை வர்த்தக வசதிகளை இடைநிறுத்துதல், காரணங் காட்டுமாறு தரப்பினரை வேண்டுதல் மற்றும் குற்றவியல் வழக்குகள் அல்லது நடவடிக்கைகளை தொடர்தல் போன்றவையாகும். அத்தகைய செயற்திறனான வழிமுறைகள் சந்தை துர்நடத்தைகளை கணிசமானளவு குறைப்பதற்கு மிகவும் பயனுறுதிமிக்கவை என நிரூபணமாயுள்ளது.

தொற்று மற்றும் அதன் விளைவுகளைப் பற்றி நான் அதிகம் சொல்வதற்கில்லை. நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசி திட்டங்களின் துணையுடன் வைரஸின் பரவலினை கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றலானது நாட்டிற்கான ஆசீர்வதமாகும். இ.பி.ப.ஆ. இலுள்ள நாங்கள் அனைவரையும் போன்று அதன் தாக்கங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. இவ்வாறு, அறிவினை மேம்படுத்துவதற்காக சில நடவடிக்கைகளில் நாம் ஈடுபடும்போது காலத்திற்கேற்ற மாற்றங்களுடன் மாறவேண்டியுள்ளதுடன் அதன் திட்டங்களது தொடர்ச்சியினை உறுதிப்படுத்துவதற்காக இணையவழி மேடைகளையும் பயன்படுத்தவேண்டியேற்பட்டது. அத்தகைய மேடைகள் சந்தை பங்குபற்றுநர்களிடையே விழிப்புணர்வினை எழுப்புவதற்கு பயன்படுத்தப்பட்டதுடன் இ.பி.ப.ஆ. இதுவரைக்கும் அதனைத் தொடர்கின்றது.

### சந்தை பங்குபற்றுநர்களது முறைமைப்படுத்தலுக்கான விதிகள் மற்றும் வழிகாட்டிகள்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 183 இன் பிரகாரம், 'ஏதேனும் விடயத்தில் விதிகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவேண்டிய இந்த விதிகள்' அங்கீகரிக்கப்படுகின்றன. அத்தகைய விதிகள் 'வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பிரசுரிக்கப்பட்ட திகதியில் அல்லது குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய பிறிதொரு திகதியில் செயற்பாட்டிற்கு வரும்'. இந்த ஏற்பாட்டிற்கு அமைவாக, சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் சந்தை நிறுவனங்களுக்கு பிரயோகிக்கத்தக்க விதிகளை வரைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசாங்க வர்த்தமானியில் இவற்றின் பிரசுரிப்பிற்கு முன்னதாக இந்த விதிகள் இறுதிக்கட்டத்தினை எட்டியுள்ளதை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைவதுடன், இவை ஆணைக்குழுவினது 461 ஆவது கூட்டத்தில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் சட்டவலுவினை பெறும். இந்த விதிகளை வரையும் செயல்முறையானது மிகவும் கடினமானதாகும் ஏனெனில், இந்த விதிகளை வரைவதில் ஆழ்ந்த சிந்தனை, சாத்தியமானவாறு பல்வேறு பங்காளிகளது கலந்துரையாடல்களுக்கு இடமளித்து பல்வேறு பங்காளிகளின் கருத்துக்கள் என்பன உட்செலுத்தப்படல் வேண்டும்.

இதனைக் கூறியதன் பின்னர், அத்தகைய விதிகளின் உள்ளடக்கத்தினை தெளிவுபடுத்துதல் முக்கியமானதாகும் ஏனெனில், இவை பிணையங்கள் சந்தையின் முக்கியமான

## பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

"இருப்பினும், நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் கடந்த வருடத்தில் ஒரு சாதனை மிக்க வளர்ச்சிக்கு நாட்டின் பங்குச் சந்தையுடன் பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் திரும்பியுள்ளதை அழுத்தமாக தெரிவித்தல் முக்கியமானதாகும். மெய்யாகவே, நடந்துகொண்டிருக்கும் கொந்தளிப்பான பொருளாதார நிலைமையிலான உறுதியின்மை தனியார் துறைக்கு புத்துயிரளிக்கும் கொள்கைகளை முன்னிலைப்படுத்துவதற்கு நாட்டிற்கான ஒரு வாய்ப்பாகவும் காணப்படுகின்றது. இது நாட்டிற்கு மிகவும் அவசியமான வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதற்கான திடமான வழிமுறைகளுடன் மீள்கட்டியெழுப்புவதனை இயலுமையாக்கும்."

நிறுவனங்களது செயற்பாட்டிற்கு மிகவும் முக்கியம் என்பதுடன் சந்தையின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கும் அவசியமானதாகும். குறிப்பிட்ட விதிகள் உரிய நிறுவனங்களினால் ஒரு உரிமத்திற்கான ஒரு விண்ணப்பம் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் நேரம் தொடக்கம் அதன் நிறுத்தம் வரையான செயல்முறைவரை பிரயோகிக்கப்படும்.

இந்த விதிகளுக்கான ஓர் தனித்துவமாக ஒரு சந்தை இடையீட்டாளர் /ஒரு சந்தை நிறுவனத்தின் பொருத்தம் மற்றும் தகுதியிலான விதிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதனை நோக்காகக் கொண்டதாகும். அத்தகைய நிறுவனங்களின் முக்கிய முகாமைத்துவ நபர்கள் அத்தகைய நிறுவனங்களில் அவர்களது பங்களிப்புடன் தொடர்புபட்ட பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு பொருத்தம் மற்றும் தகுதியுடையவராய் இருத்தல் என்பதாகும். இதன் நோக்கம் முதலீட்டாளர்கள் மற்றும் அவர்களது சொத்துக்களை பாதுகாக்கும் வேளை எமது சந்தையினை பொறுப்புக்கூறல் மற்றும் நம்பகரமாக மேற்கொள்வதாகும். அதேபோன்று, ஒரு இணக்கப்பாட்டு கையேடு மற்றும் ஒரு இணக்கப்பாட்டு அறிக்கை என்பவற்றுக்கான ஆகக்குறைந்த உள்ளடக்கங்கள் சேர்க்கப்பட்டமையினை குறிப்பிடுவது முக்கியமாகும். நான் பல தடவைகள் குறிப்பிட்டதுபோல் இறுதியான குறிக்கோள் எமது சந்தையின் நேர்மையினை உயர்த்துவதன் மூலம் அது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆகிய இருசாராருக்கும் கவர்ச்சியூட்டுவதாய் இருக்கும்.

இ.பி.ப.ஆ. இன் நோக்கெல்லையின் கீழ் வரும் மற்றுமோர் பிரிவான சேவை வழங்குநர்களாக துணைச்சேவை வழங்குநர்கள் காணப்படுகின்றார்கள். சட்டத்தின் பிரகாரம், அவர்களுக்கு பிரயோகிக்கத்தக்க வழிகாட்டிகள் மற்றும் விதிகளை அமைப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இ.பி.ப.ஆ. தற்போது இந்த வழிகாட்டிகளை உருவாக்கும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளதுடன் இதன் மூலம் அத்தகைய துணைச் சேவை வழங்குநர்கள் ஆளுகை செய்யப்படுவார்கள்.

### இ.பி.ப.ஆ. இன் பணியாட்கள்: அதன் மிகவும் மதிப்புமிக்க சொத்து

இந்த மீளாய்வானது நிறைவுக்கு வரும்சமயம், இ.பி.ப.ஆ. இன் பணியாட்களினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பில் எனது திருப்தியினை நான் மறைக்க இயலாது. 2021 ஆம் வருடத்தில் பல்வேறு மைல்கற்களை அடைவதில் மிகவும் முக்கியமாக அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் கடப்பாடு காணப்பட்டது. எப்போதும்போல் எமது பணியாட்களின் ஆரோக்கியம் நல்வாழ்வு என்பவற்றை பாதுகாப்பதில் நாம் கடப்பாட்டுடன் உள்ளவேளை இந்த துறையில் அவர்கள் எதிர்கால தலைவர்களாக வருவதற்காக அவர்களை பேணிவளர்க்கின்றோம். ஒரு நிறுவனமாக நாம் முகங்கொடுத்த பல தடைகளுக்கு அப்பால் இந்த பயணத்தில் முழுநிறைவான ஒத்துழைப்பு மற்றும் கடப்பாட்டினை வழங்கியமைக்காக பணியாட்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக நாட்டின் பிணையங்கள் சந்தையினது மேம்பாடு மற்றும் வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்துவது நோக்கி இ.பி.ப.ஆ. முழுவதுமாக தொடர்ச்சியாக கடப்பாடுடையதாயிருக்கும் என கூறுவதில் எனக்கு எவ்விதமான ஐயமுமில்லை.

சந்தையின் முறைமைப்படுத்துபவர் என்ற வகையில், மிகையான முறைமைப்படுத்தலின் அபாயத்தினை நாம் அறிந்துள்ளதுடன் நாம் தொடர்ச்சியான சரியான சமநிலையினை பேணுவதற்கு முயற்சிக்கும் அதேவேளை, இலங்கையின் முலதனச் சந்தையினுள் நீடிப்புத்திறனை ஒருங்கிணைப்பதற்கு நாம் கடப்பாடுடையவர்களாயுள்ளோம். மேதகு ஜனாதிபதி, மான்புமிகு பிரதம மந்திரி, மான்புமிகு நிதி அமைச்சர், திறைசேரியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் ஏனைய அதிகாரிகளுக்கு அவர்களது உறுதுணை மற்றும் ஒத்துழைப்பிற்கு நான் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கொ.ப.ப. இன் தலைவர், திரு. துமித் பர்னாந்து, பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரஜீவ பண்டாரநாயக்க, பிரதம முறைமைப்படுத்தல் அதிகாரி திரு. ரேணுக்க விஜேவர்தன ஆகியோரடங்கிய கொ.ப.ப. இன் குழுவினது சிறப்பான பணியினையும் அவர்களது நம்பகத்தன்மை மிக்க தலைமைத்துவத்தினையும் நான் அங்கீகரிப்பதில் மகிழ்ச்சியடைவதுடன், இரண்டு நிறுவனங்களினதும் நெருங்கிய கூட்டாண்மையினை கொ.ப.ப. உறுதிப்படுத்தியுள்ளதுடன், தொடர்ச்சியாக கூட்டாக பணிபுரிவதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்.

இ.பி.ப.ஆ. இன் தலைவர் திரு. விராஜ் தயாரத்ன ஐ.ச. அவர்களுக்கு எந்நேரமும் எமக்கு வழங்கிய விவேகமான ஆலோசனை மற்றும் தவறாத உறுதுணைக்கு எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன். செயலகத்தின் சார்பில் மற்றும் ஒரு தனிப்பட்ட மட்டத்தில் எம்மில் வைத்த நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மைக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு அவர்களது அயராத உழைப்பிற்கும், திடமான ஆலோசனைக்கும், கூட்டான நிபுணத்துவத்திற்கும் மற்றும் இந்த செயல்முறையில் அவர்கள் அர்ப்பணித்த அவர்களது தனிப்பட்ட மற்றும் தொழில்சார் கடப்பாடுகளுக்கும், மற்றும் இ.பி.ப.ஆ. இன் பொறுப்பாணையினை அடைவதற்கான அதன் முயற்சியில் செயலகத்திற்கு எந்நேரமும் அவர்கள் வழங்கிய வழிகாட்டுதலுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீண்டுமொருமுறை, நாட்டின் பிணையங்கள் சந்தையானது, பலவீனமடைந்த பொருளாதாரத்திற்கு ஒரு உந்துதலை வழங்குவதற்கும் தனியார் துறைக்கு புத்துயிரளிப்பதற்கு மூலதனத்தினை திரட்டுவதற்கும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கவேண்டியுள்ளது. எனவே, பலவிதங்களில் எமது நாட்டினை உருமாற்றக்கூடிய மற்றும் செழிப்பூட்டக்கூடிய ஆற்றலினை கொண்ட சந்தையில் ஈடுபடுமாறு அனைவரையும் வரவேற்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.



சிந்தக்க மெண்டிஸ்
பணிப்பாளர் நாயகம்
18 ஏப்ரல் 2022

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்



திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச.
தலைவர்



திரு. மனில் ஜயசிங்க



திரு. சுஹத கமலத் ஜ.ச..



திரு. ஆர்.எம்.பி.ரத்நாயக்க



திரு. சிசிர ரத்நாயக்க



திரு. சுனில் லங்காதிலக்க



திரு. சஞ்சய பண்டார



திரு. சஞ்சீவ திசாநாயக்க



திரு.என்.டபி.ஜி.ஆர்.டி.நாணயக்கார

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

### திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச.

**தலைவர்**

திரு. விராஜ் தயாரத்ன, ஜனாபதி சட்டத்தரணி, அவர்கள் 2020 ஜனவரி 22 இல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராகப் பதவியேற்றார். திரு. தயாரத்ன, கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச தொடர்புகளில் இளமானி கலைத்துறை பட்டத்தையும் வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச வர்த்தக சட்டத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் 1989 இல் பிரவேசித்து நவம்பர் 1992 இல் உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

இவர் ஜனவரி 1993 இல் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டவாதியாக இணைந்து மே 2018 இல் மேலதிக மன்றாடி அதிபதியாக உயர்வு பெற்றார். அதே வருடத்தின் ஜூன் மாதத்தில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் ஜனாபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அவரது முதலாவது ஆறு வருட காலப்பகுதியில், திரு. தயாரத்ன அவர்கள் குற்றவியல் பிரிவுடன் இணைந்திருந்ததுடன் நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுப்புக்களை நடாத்தியதுடன் மேல் நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களுக்கு எதிராக மேன்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டால் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் அரசுக்காக ஆஜராகினார். இதன் பின்னர், இவர் குடியியல் மற்றும் வர்த்தகச் சட்டப் பிரிவிற்கு நகர்ந்து அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய சட்டபூர்வமான நிறுவனங்களை ஆரம்ப நீதிமன்றங்களுடன் மேன்முறையீட்டு நீதிமன்றங்களிலும் பிரதிநிதித்துவம் செய்தார். இவை பலவற்றுக்கிடையில் அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயங்கள், பொதுச் சட்டம், வர்த்தகச் சட்டம், வரி, வங்கியியல், சுங்கம் மற்றும் தொழில் சட்டம் ஆகியவற்றுடன் தொடர்புபட்டவையாகும். இவர் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் பல வர்த்தக நடுத்தீர்ப்புகளில் பிரசன்னமாகியுள்ளார். இவரது பணியானது அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய சட்டபூர்வமான நிறுவனங்களுக்கு பலதரப்பட்ட சட்ட விடயங்களில் அறிவுரை வழங்குவதனை உள்ளடக்கும்.

திரு. தயாரத்ன அவர்கள் விஜி குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வருகைதரும் நீதிபதி மற்றும் மலேசியாவிலுள்ள ஆசிய சர்வதேச நடுத்தீர்ப்புகள் மத்திய நிலையத்தின் (Mrlkep) நீதிகாண்பவர்கள் குழாமின் ஓர் நீதிகாண்பவருமாவார். இவர் ICLP நடுத்தீர்ப்பு மத்திய நிலையத்தின் ஆசிரியப் பணியாளர் சபையின் அங்கத்தவருமார். இவர் கட்டுமாண நடுத்தீர்ப்பு மற்றும் நீதிகாண்தலில் வருகைதரும் விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் நடுத்தீர்ப்பு சட்டத்தில் வருகைதரும் விரிவுரையாளராகவும் நிர்வாகச் சட்டத்தில் ஓர் பரீட்சிப்பவருமாக கடமையாற்றியுள்ளார். இவர் இன்வோர்மட்டிக்ஸ் இன்ஸ்ட்டிடியூட் ஒவ் டெக்னோலஜி இனால் நடாத்தப்படும் இலண்டன் இளமானி சட்டப் படிப்பு பாடக்கோப்புக்கு ஒப்பந்தச் சட்டத்தில் வருகைதரும் விரிவுரையாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

திரு. தயாரத்ன அவர்கள் ஓமான் சுல்தானகத்தின் பாதுகாப்பு அமைச்சின் ஒப்பந்தங்கள் மற்றும் சட்ட அலுவல்கள் இயக்கத்தின் சட்ட நிபுணராக 2009 முதல் 2011 வரையான இரண்டு வருட காலப்பகுதியில் சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கையின் அரச நிறுவனங்களது சீர்திருத்த ஆணைக்குழுவினதும் இலஞ்சமும் ஊழலும் சார்த்துரைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினதும் சட்ட ஆலோசகராகக் கடமையாற்றியுள்ளார். இவர் இலங்கை வான் படையின் நீதிபதி வழக்குரைஞர் அதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் பின்வரும் திட்டங்கள் தொடர்பாக திட்ட உடன்படிக்கைகளை வரைந்த திட்டக் குழுக்களின் அங்கத்தவராவார். மகாவலி சிறு நீர்மின் திட்டத்தை கட்டியெழுப்பு, சொந்தமாக்கு, செயற்படுத்து 'கட்டியெழுப்பு, சொந்தமாக்கு, செயற்படுத்து, மாற்றல்செய் அடிப்படையிலும் கிளிநொச்சி மாவட்ட மின்மயமாக்கல் திட்டத்தை கட்டியெழுப்பு, சொந்தமாக்கு, செயற்படுத்து அடிப்படையில் ஆகும். அத்துடன் இலங்கைக்கும் ஓமானுக்கும் இடையிலான இருதரப்பு முதலீட்டு உடன்படிக்கையினை பேச்சுவார்த்தை நடாத்திய இலங்கை அரசாங்கத் தூதுக் குழுவின் அங்கத்தவருமாவார். இவர் பல சர்வதேச கருத்தரங்குகளில் அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளதுடன் பல பிரசுரங்களுக்கு சட்டத்தின் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகளை எழுதியுள்ளார். அரச சேவைகள் ஆணைக்குழுவானது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து இ.பி.ப.ஆ. இன் தலைவர் கடமையினை பொறுப்பேற்பதற்காக விடுவிக்கப்பட்டார்.

### திரு. மனில் ஜயசிங்க

திரு. மனில் ஜயசிங்க அவர்கள் (ஐ.இ.) பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவரும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் மற்றும் அரச நிதியியல் மற்றும் கணக்கீட்டுக்கான பட்டய நிருவகத்தின் அங்கத்தவருமாவார்.

இவர் 40 வருடங்கள் பரவலான அனுபவத்தினை இலங்கை எர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தில் கொண்டுள்ளதுடன் தற்போது வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகளுக்குப் பொறுப்பான தேசத்தின் முகாமைத்துவ பங்காளி மற்றும் உறுதித் தலைமைப் பதவியினை வகிக்கின்றார்.

தற்போது இவர் பின்வரும் பதவிகளில் சேவையாற்றுகின்றார்:-

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் உடனடி முன்னாளர் தலைவர் மற்றும் சபை அங்கத்தவர்
- சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவர், சட்டரீதியான கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர் மற்றும் வேறு பல குழுக்களிலும் சேவையாற்றுகின்றார்.
- தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவர்
- இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் அங்கத்தவர்
- சி.எம்.ஏ. ஸ்ரீ லங்காவின் சபை உறுப்பினர்
- இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் சபை அங்கத்தவர்
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வுக் குழுக்களில் ஆலோசகராக கடமையாற்றுதல்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் பரீட்சைகள் குழுவின் தலைவராகவும், கடந்த வருடத்தில் சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழுவின் மாற்றீடு தலைவராகவும், சர்வதேச கணக்காளர்கள் சம்மேளனத்தின் சர்வதேச கணக்கீட்டு கல்வி தரங்கள் சபையின் அங்கத்தவராகவும், மொரட்டுவ பல்கலைக்கழகத்தினது சங்கத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

### திரு. சுஹுத கமலத்

திரு. கமலத், ஜனாதிபதி சட்டத்தரணி அவர்கள் முன்னாள் மன்றாடி அதிபதி என்பதுடன் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

### திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க

திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க அவர்கள் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்திலான உத்தியோகத்தர் என்பதுடன், தற்போது பொதுத் திறைசேரிக்கு பிரதிச் செயலாளராக பணிபுரிகின்றார். இவர் அரச சேவையில் 25 வருடங்களாக பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் நோர்வே பல்கலைக்கழகத்தில் விவசாயத்துறையில் முதுமானி பட்டத்தையும் பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி விஞ்ஞான (விசேட) பட்டத்தையும் வைத்துள்ளார்.

இவர் 1994 இல் அரச சேவையில் இணைந்ததுடன் பொதுத் திறைசேரியில் தேசிய திட்டமிடல் திணைக்களம், வெளிவாரி வளங்கள் திணைக்களம் போன்றவற்றில் பல்வேறு பதவிகளை வகித்திருந்தார். வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதியினைத் திரட்டுவதற்காக அபிவிருத்தி பங்காளிகள், கடன்வழங்கும் முகவர்கள் மற்றும் மூலதனச் சந்தை என்பவற்றுடனான ஒருங்கிணைப்பிற்கு பொறுப்பாளியாக இருந்தார். அத்துடன் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதுடன் வெளிநாட்டு நிதியானது நேரகாலத்துடன் வழங்கப்படுவதற்கு வசதியளித்தும் உள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் மாற்று நிறைவேற்று பணிப்பாளராகவும், தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராகவும், மக்கள் வங்கியின் பணிப்பாளராகவும், பட்டப்படிப்பின் பின்னரான மருத்துவ நிருவகத்தினது முகாமைத்துவச் சபையின் அங்கத்தவராகவும், இலங்கையின் அரசு மருந்துக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும், இலங்கையின் சிவில் விமானப் பிரயாண அதிகாரசபையின் பணிப்பாளராகவும், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிருவகத்தின் பணிப்பாளராகவும், தேசிய மருந்துகள் முறைமைப்படுத்தல் அதிகாரசபையின் அங்கத்தவராகவும் கடமை புரிந்துள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் பல் வேறு துறைகளில் " பல்வேறு விடயங்கள் தொடர்பாக பல கட்டுரைகளைப் பிரசுரித்துள்ளார்.

### திரு. சிசிர ரத்நாயக்க

திரு. ரத்நாயக்க அவர்கள் 35 வருடங்களாக சட்டத்துறையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளதுடன் இலங்கையில் குடியியல் மற்றும் குற்றவியல் சட்டத்தில் பரவலான அனுபவத்தினை கொண்டுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின், ஸ்கொட்லாந்திலுள்ள அபர்டீன் பல்கலைக்கழகத்தில் வணிகச் சட்டத்தில் பாராட்டுக்களுடன் முதுமானி பட்டத்தைப் (L.L.M.) பெற்றுள்ளதுடன் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் சட்ட வழக்கறிஞருமாவார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் நீதித்துறையில், நீதிவானாக, மாவட்ட நீதிபதியாக, மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் மற்றும் இலங்கையின் பல்வேறு நீதிமன்றங்களில் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் சேவையாற்றியுள்ளார். 2013 -2015 காலப்பகுதியில் இவர் நீதிச்சேவை ஆணைக்குழுவில் செயலாளராக கடமையாற்றியுள்ளார். இவர் 2007-2008 காலப்பகுதியில் நிதி அமைச்சில் மேலதிக செயலாளர் (சட்டம்) ஆகவும் சேவையாற்றியுள்ளார்.

இவர் நீதிச் சேவைகள் சங்கத்தின் பிரதி தலைவராகவும், தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். (நீதிச் சேவைகள் சங்கமானது நாட்டிலுள்ள அனைத்து நீதிவான்கள், மாவட்ட நீதிபதிகளை உள்ளடக்கிய ஓர் சங்கமாகும்). இவர் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கத்தில் பிரதி தலைவராகவும், தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். (மேல் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கமானது நாட்டிலுள்ள அனைத்து மேல் நீதிமன்ற நீதிபதிகளையும் உள்ளடக்கிய ஓர் சங்கமாகும்).

இவர் பின்வரும் சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளார். ஹொங்கொங்கில் இடம்பெற்ற, "கம்பனிகள் சட்டத்திலான நவீன போக்குகளில் மேம்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்", சிங்கப்பூரில், "பிராந்திய நீதித்தறை கருத்தரங்கு 2007", சிங்கப்பூரில் இலங்கையின் சிரேஷ்ட நீதித்துறை அங்கத்தவர்களுக்கான "சர்வதேச நடுத்தீர்ப்பு மற்றும் பொருளமைத்தல் சட்டத்திலான நிறைவேற்று பயிற்சி", இந்தியாவில், "இலங்கை நீதிபதிகளுக்கான அறிவுசெறிந்த நிகழ்ச்சித்திட்டம்", சிங்கப்பூர் அரச சேவை கல்லூரியில் இடம்பெற்ற "நீதித்துறை மற்றும் தனிச்சிறப்பு சிங்கப்பூரில் கற்கை விஜயம்", தென் கொரியாவில் "KOICA பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்", இங்கிலாந்தின் எடின்பேர்க்கில் "UKELA வருடாந்த கருத்தரங்கு" என்பவையாகும். இவர் இந்தியாவில் இடம்பெற்ற நீதிமன்ற முகாமைத்துவம், வழக்கு முகாமைத்துவம், குடியியல் சட்ட மறுசீரமைப்பு மற்றும் குடும்ப சட்ட மறுசீரமைப்பு ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்கேற்றுள்ளார்.

இவர் பின்வரும் உலகளாவிய நிகழ்வுகளில் இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். தென் ஆபிரிக்கா, கேப் டவுனில் இடம்பெற்ற "ஆசிய-ஆபிரிக்க சட்ட ஆலோசனை ஒழுங்கமைப்பின் 46 ஆவது அமர்வு", அமெரிக்காவின் வாரீங்டன் டி.சி. இல் இடம்பெற்ற "நீதித்துறை பேச்சுவழக்கு", அமெரிக்காவில் இடம்பெற்ற "கடனிறுக்க வகையின்மையில் INSOL/UNCITRAL.'.உலக வங்கி கூட்டு பல்தேச நீதித்துறை பேச்சுவழக்கு" என்பவற்றிலும் பங்குபற்றியுள்ளார்.

### திரு. சுனில் லங்காதிலக்க

திரு. சுனில் லங்காதிலக்க அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுனராவார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் மென்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் முதுமானி விஞ்ஞான பட்டத்தையும் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளதுடன், பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து வணிகத்தில் முதலாம் வகுப்பு இளமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான விவசாயத்துறை நிருவகத்திலிருந்து விவசாயப் பொருளியலில் முதுமானி தத்துவப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திரு. லங்காதிலக்க அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் பொருளாதார மற்றும் விலை ஸ்திரத்தன்மை, நிதியியல் துறை ஸ்திரத்தன்மை மற்றும் முகவர் தொழிற்பாடுகள் போன்ற பிரிவுகளில் 32 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். 1986 இல் இலங்கை மத்திய வங்கியில் சேரும் முன்னர் இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் இவரது 32 வருடகால சேவையில், திரு. லங்காதிலக்க அவர்கள் பின்வரும் பிரசித்தி பெற்ற பயிற்சி வழங்குனர்களினால் நடாத்தப்பட்ட அதிக எண்ணிக்கையிலான சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளார். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆகியவற்றினால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகளில் பின்வரும் தலைப்புகளில் பயிற்சி பெற்றுள்ளார். பாரிய பொருளாதார முகாமைத்தும், பாரிய பொருளாதார மாதிரியமைத்தல், நிதியியல் நிரலாக்கல், வர்த்தக கொள்கைகள், போட்டித்தன்மை, திட்ட முகாமைத்துவம், வெளிநாட்டு முதலீடு, மூலோபாய திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம் மற்றும் தொடர்பாடல் கொள்கை என்பனவாகும். திரு. லங்காதிலக்க அவர்கள் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் அங்கத்தவராகவும், பதிவாளர் அதிபதி திணைக்களத்தின் உரிமைக் காப்பீட்டு நிதியத்தின் முகாமைத்துவ சபை,

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழு மற்றும் இலங்கை மத்திய வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு ஏனைய குழுக்களில் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். திரு. லங்காதிலக்க அவர்கள் விசேடமாக வங்கியியல் உறவுகள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு போன்ற பிரிவுகளிலான பல்வேறு அரசாங்க தூதுக்குழுக்கள் மற்றும் பேச்சுவார்த்தை குழுக்களில் இலங்கை மத்திய வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.
திரு. லங்காதிலக்க அவர்கள் பல கட்டுரைகளை எழுதியுள்ளதுடன் அவற்றை பிரசித்திபெற்ற சர்வதேச மற்றும் உள்;ர் சஞ்சிகைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரசுரங்களிலும் வெளியிட்டுள்ளார். இவை பொருளாதார விடயங்கள், சிற்றளவு கைத்தொழில்கள், சர்வதேச வர்த்தகம், மாணிக்கக்கல் துறை, ஆடைத் துறை போன்றவற்றை உள்ளடக்கும்.

திரு. லங்காதிலக்க அவர்கள் பல்வேறு மன்றங்களில் பல்வேறு தராதரங்களில் திட்ட முகாமைத்துவம், திட்ட மதிப்பீடு, நுண்ணிய மற்றும் பாரிய பொருளாதாரம் போன்ற பிரிவுகளில் பிரசித்திபெற்ற வளவாளரும் ஆவார்.
திரு. லங்காதிலக்க அவர்கள் பொருளாதாரத்தின் பரவலான தலைப்புகளில் பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் அதிகளவு எண்ணிக்கையிலான விளக்கக்காட்சிகளை நடாத்தியுள்ளார்.

### திரு. என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார

திரு. நாணயக்கார அவர்கள் தற்போது இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகிக்கின்றார். இவர் இலங்கை மத்திய வங்கியில் 29 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன், விசேடமாக வங்கிகளது மேற்பார்வை மற்றும் முறைமைப்படுத்தல், வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவம், சர்வதேச செயற்பாடுகள், நாணயக் கொள்கை மற்றும் தொடர்புடைய உள்ளுர் செயற்பாடுகளை அமுல்படுத்துதல், பாரியவிவேகமான கண்காணிப்பு, பிராந்திய அபிவிருத்தி மற்றும் பொதுக் கடன் முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளிலாகும்.

திரு. நாணயக்கார அவர்கள் வாரிங்டன் டிசி இல் உள்ள அமெரிக்க பல்கலைக்கழகத்திலிருந்து முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சக அங்கத்தவர் (FCMA), இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவர் (ACA) மற்றும் அமெரிக்காவின் உள்ளக கணக்காய்வாளர்கள் நிருவகத்தின் சான்றளிக்கப்பட்ட நிதிச் சேவைகள் கணக்காளருமாவார் (CFSA).

### திரு. சஞ்சீவ திசாநாயக்க

திரு. சஞ்சீவ திசாநாயக்க அவர்கள் டிசம்பர் 1997 இல் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞராக அனுமதிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டார். இவர் ஹொங்கொங் பல்கலைக்கழகத்திலிருந்து மனித உரிமைகளில் முதுமான பட்டத்தினைப் (LLM) பெற்றுள்ளார். இவர் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்த ஓர் பிரதி மன்றாடி அதிபதியாவார். இவர் தற்போது கம்பனிகள் பதிவாளர் நாயகமாக கடமைகளை பொறுப்பேற்பதற்காக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

திரு. சஞ்சீவ திசாநாயக்க அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் குற்றவியல் மற்றும் குடியியல் பிரிவுகள் இரண்டிலும் அனுபவமுடையவர் என்பதுடன் பெப்ரவரி 2010 முதல் ஜுலை 2011 வரை ஊழலுக்கு எதிரான .ஃவிஜி சுயாதீன ஆணைக்குழுவில் ஓர் வழக்கு தொடருநராக சேவையாற்றியுள்ளார். இவர் கணக்கீட்டு நியமங்கள் குழு, இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை ஆகியவற்றின் பதவிவழி அங்கத்தவராவார்.

### திரு. சஞ்சய பண்டார

FCA, MBA (Col.) B.Sc கணக்கீட்டு மற்றும் நிதியியல் முகாமைத்துவம் (USJP)

திரு. பண்டார அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் மற்றும் ஆசிய பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பு, தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம் மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை ஆகியவற்றின் சபை அங்கத்தவருமாவார். மேலும், களணி பல்கலைக்கழகத்தின் மற்றும் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பர்கள் சங்கத்தின் ஆளுகைச் சபையின் அங்கத்தவருமாவார்.

இவர் பி.ஆர்.டி. சில்வா அன்ட் கம்பனி, பட்டயக் கணக்காளர்கள் (நெக்ஷியா இன்டர்நெஷனல் இன் நிறுவன அங்கத்தவர்) நிறுவனத்தின் பங்காளியாவார். இவர் உறுதிப்படுத்தல் சேவைகள் மற்றும் நிதி அறிக்கையிடல் ஆகியவற்றில் விசேடத்துவம் கொண்ட 23 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

# விரிவான, செயல்நோக்குடைய, நடைமுறையான மற்றும் அளவிடக்கூடிய மூலதனச் சந்தை மூலோபாயம் 2020 - 2025

இது தற்போது அமுல்படுத்தப்பட்டுக்கொண்டுள்ளது.

வளர்ச்சியின் ஒரு கருவியாக மூலதனச் சந்தையினை நிலைப்படுத்துதல்

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை அடைவதற்காக தனியார் துறையினை வளர்ப்பதற்கு



நன்கு விருத்திசெய்யப்பட்ட மற்றும் மீளெழுச்சியுடைய மூலதனச் சந்தை

பொறுப்புக்கூறலின் மேம்படுத்தல் மற்றும் சந்தை மேற்பார்வை

உட்கட்டமைப்பினை விருத்திசெய்தல் மற்றும் புதிய கருவிகளை இயலுமையாக்குதல்

நடைமுறையான

அளவிடக்கூடிய

சட்டம் மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை பலப்படுத்துதல் ( பி.ப.சட்ட மூலம், பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம், பொ.இ.கோவை)

உள்ளூர் ஆற்றல்களை கட்டியெழுப்புதல்

திரவத்தன்மையினை ஆழமாக்குதல் மற்றும் சந்தை பங்குபற்றலை விரிவாக்குதல்

மூலதனச் சந்தை பங்குபற்றுநர்களின் தரங்கள் மற்றும் திறமைகளை உயர்த்துதல்

வெளிநாட்டு நிதிய முகாமையாளர்களிடையே புலப்பாட்டினை அதிகரித்தல்

செயல்நோக்குடைய

மூலதன உருவாக்கத்திற்காக ஒரு இயலுமையான சூழலினை உருவாக்குதல்

கொ.ப.ப. இனை MSCI வெளித்தோன்றும் சந்தைக்கு உயர்த்துதல்

விரிவான

முறைசார் இடர்நேர்கையினை முகாமைப்படுத்தல் மற்றும் குறைத்தல்

முனையம் இருந்து முனையம் வரையான பங்குச் சந்தையின் டிஜிட்டல் மயமாக்கல்

# முக்கிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள்

**இது தற்போது அமுல்படுத்தப்பட்டுக்கொண்டுள்ளது.**


நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை அடைவதற்காக தனியார் துறையினை வளர்த்தல்


- புதிய பிணையங்கள் ஆணைக்குழுச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்
- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் மதிப்பீடும் மீளாய்வும்
- சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பான அனைத்து விதிகளின் மீளாய்வு
- பொ.ஒ.அ.ஒ. இனால் நிறுவப்பட்டுள்ள கொள்கைகளுக்கு அமைவாக கூட்டாண்மை ஆளுகை கோவையின் மீளாய்வு
- நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்டிசிக் கோவையின் மீளாய்வு
- புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் முடிவுறுத்தல்
- பிணையங்களாக்குதலின் சட்டக் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல்

- வர்த்தகத்தின் வினைத்திறனான கண்காணிப்பிற்காக மேம்பட்டு செயற்பாடுகளுடனான கண்காணிப்பு முறைமையின் தரமுயர்த்தல்
- பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் நிதியியல் கண்காணிப்பின் ஒரு விரிவான வரம்புறுகையினை விருத்திசெய்தல்
- பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக துணைச்சேவை வழங்குநர்களில் கடமைகளை சுமத்துதல்
- அனைத்து மூலதனச் சந்தை நிறுவனங்கள் மற்றும் இடையீட்டாளர்களதும் இ.பி.ப.ஆ. இன் மேற்பார்வையினை மேம்படுத்துதல்
- மூலதனச் சந்தை துர்நடத்தைகளை கட்டுப்படுத்துவதற்காக ஒரு வினைத்திறனான தடுப்பு பொறிமுறையின் அறிமுகம்
- சந்தை தவறுகளின் உடனடி புலனாய்வுகள்

- மூலதனச் சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான தகமை மற்றும் பொருத்தம் நியமங்களை மேம்படுத்துதல்
- சந்தை பங்குபற்றுநர்கள் தொடர்பான ஆவணப்படுத்தலை தரப்படுத்துல்
- மூலதனச்சந்தை பங்குபற்றுநர்களுக்கான நடைமுறையிலுள்ள தகமை வரன்முறையின் மீளாய்வும் தரமுயர்த்தலும்.
- அனைத்து சொத்து வகைகளுக்கு வசதியளிப்பதற்காக ஒரு பல்அடுக்கு உரிமமளித்தல் வரம்புறுகையினை விருத்திசெய்தல்
- நம்பிக்கை அலகு முகாமைத்துவ கம்பனிகள் மற்றும் முதலீட்டு முகாமையாளர்களுக்கு உலகளாவிய முதலீட்டுச் செயற்திறன் நியமத்தினை அறிமுகப்படுத்துவதற்கான செயலாக்கத்தினை மதிப்பீடு செய்தல்
- பணம் சலவை செய்தலை தடுப்பதற்காக இ.பி.ப.ஆ. ஆல் முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கு பொருத்தமான KYC தேவைப்பாடுகளை மேம்படுத்துதல்
- நிதியியல் ரீதியாக சவால்மிக்க கம்பனிகளின் வகைப்படுத்தலும் வெளிப்படுத்தலும்
- முறைமைப்படுத்தல் தேவைப்பாடு தொடர்பாக பங்கு பெறுமதியிடல் வழிகாட்டிகளின் அபிவிருத்தி

- விநியோகம் எதிர் கொடுப்பனவு (வி.எ.கொ.) மற்றும் மத்திய எதிர்தரத்தவர் (மஎத) பொறிமுறையின் அமுலாக்கத்திற்கு வசதியளித்தல்
- மூலதனச் சந்தை நிறுவனங்கள் மற்றும் இடையீட்டாளர்களுக்காக ஒரு இடர்நேர்கை நிறையிடப்பட்ட மூலதனப் போதுமையினை விருத்திசெய்தல்
- தளத்திலான மேற்பார்வைக்காக இடர்நேர்கை அடிப்படையான மதிப்பீட்டு வரம்புறுகையொன்றின் அபிவிருத்தி






- அளவு, பருமன் மற்றும் திரவத்தன்மையுடைய நிறுவனங்கள் மூலதன சந்தையினை அணுகுவதற்கான மேடையொன்றினை உருவாக்குதல்
- கூட்டாண்மை பிணையங்களுக்கான சந்தையினை விருத்திசெய்தல்
- மூலதனச் சந்தையூடாக உட்கட்டமைப்பு நிதியளித்தலுக்காக ஒரு வரம்புறுகையின் அறிமுகம்
- புதிய சந்தை பிரிவுகளுக்கு வசதியளிக்கும் மாற்றீட்டு பட்டியலிடல் பலகைகளை நிறுவுதல்
- மோர்கன் ஸ்டான்லி கெப்பிட்டல் இன்டர்நேஷனல் (MSCI) வெளித்தோன்றும் சந்தை நிலைக்கு உயர்வடைதல்

- சந்தையினை அணுகுவதற்காக சிறிய முதலீட்டாளர்களுக்கான ஒரு மார்க்கமாக நம்பிக்கை அலகுத் துறையினை விருத்திசெய்தல்
- மூலதனச் சந்தையில் ஓய்வூதிய நிதியங்களது பங்குபற்றலை அதிகரித்தல்
- வெளிநாட்டு முதலீட்டுத்தேக்க முதலீட்டாளர்களை கவர்வதற்காக ஒரு உகந்த சூழலினை இயலுமையாக்குதல்
- குறை விற்பனை, பிணையங்கள் கடன்வாங்கல் மற்றும் கடன் வழங்களது அறிமுகத்திற்கான ஒரு முறையினை உருவாக்குதல்
- திரவத்தன்மையினை அதிகரிப்பதற்காக உயர்ந்த பொது புழக்கத் தேவைப்பாடுகளது அமுலாக்கம்

- முறைமைப்படுத்தல் அறிக்கையிடுவதற்காக இ-கோப்பிடல் முறையினை மேம்படுத்தல்
- பங்குத்தரகுத் துறையிடையே நிலைபேறான பின் அலுவலக மற்றும் கட்டளை முகாமைத்துவ முறையின் அமுலாக்கம்
- தரப்படுத்தப்பட்ட டிஜிட்டல் வணிக அறிக்கையிடல் மேடையொன்றினது அறிமுகம்
- ஆதனத்துறை முதலீட்டு பொறுப்புக்கள் (REITs) மற்றும் பரிமாற்றக வர்த்தக நிதியங்கள் (ETFs) போன்ற புதிய சாதனங்களுக்கான கொள்கைகள் மற்றும் விதிகளது உருவாக்கம்
- இடர் காப்பிடப்பட்ட கருவிகளின் அறிமுகத்திற்கான ஒரு மேடையின் உருவாக்கம்

- பங்குச் சந்தை செயற்பாடுகளின் டிஜிட்டல்மயமாக்கல்
- கொ.ப.ப. செயற்பாடுகளின் பரஸ்பரமற்றமயமாக்கல்
- இ.பி.ப.ஆ. செயற்பாடுகளின் டிஜிட்டல்மயமாக்கல்
- இ.பி.ப.ஆ. அதன் குறிக்கோள்களை செயற்திறனான, வினைத்திறனாக மற்றும் உரிய காலத்தில் மேற்கொள்வதற்கான பொறுப்புணர்ச்சியனை உறுதிப்படுத்தல்
- முறைமைப்படுத்துபவரின் ஆற்றல்களை கட்டியெழுப்புவதற்காக திறமைமிக்க செயலணியினை பதவிக்கமர்த்தல் மற்றும் தக்கவைத்தல் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- மூலதனச் சந்தை தொடர்பாக அனைத்து பங்காளிகளுக்குமான நிதியியல் அறிவு மற்றும் மூலதனச் சந்தை வெளிப்பாட்டினை மேம்படுத்துதல்
- தொடர்ச்சியான முதலீட்டாளர் கல்வி மற்றும் பொது விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துதல்

# சிரேஷ்ட முகாமைத்துவம்



திரு. சிந்தக்க மென்டிஸ்

பணிப்பாளர் நாயகம்



திருமதி. அயந்தி அபேவிக்கிரம

பணிப்பாளர், சட்டமும் வலியுறுத்தலும் பதில் பணிப்பாளர் புலனாய்வுகள்



திரு. துஷார ஜயரத்ன

பணிப்பாளர், வெளிவாரி உறவுகள் மற்றும் மூலதனச் சந்தைக் கல்வி



திரு. பிரபாஷ் வணிகதுங்க

பணிப்பாளர், கண்காணிப்பு மற்றும் பதில் பணிப்பாளர் மூலதனச்சந்தை அபிவிருத்தி



திருமதி, பிரசாந்தி சபேசன்

பணிப்பாளர், மனித வளங்கள்



திருமதி, நிரோஷா கொடிகார

பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம்



செல்வி. மனுாரி வீரசிங்க

உதவிப் பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள்



திரு. சுனெத் பெரேரா

உதவிப் பணிப்பாளர், மேற்பார்வை



செல்வி. மதுகயனி பலபிட்டிய

உதவிப் பணிப்பாளர், புலனாய்வுகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம்



திரு. டி.எம்.ஜி. பிரியந்த

உதவிப் பணிப்பாளர், புலனாய்வுகள்

வராதவர்

திரு. தம்மிக்க பெரேரா, பிரதிப் பணிப்பாளர் நாயகம்

# சிரேஷ்ட முகாமையாளர்கள்



திருமதி, சஜீவனி பக்மீதெனிய

சிரேஷ்ட முகாமையாளர், மூலதனச் சந்தை கல்வி



திருமதி, ரன்மினி ஜயதிலக்க

சிரேஸ்ட முகாமையாளர், தகவல் தொழில்நுட்பம்



செல்வி, சர்மிளா பண்டித்தரத்ன

சிரேஷ்ட முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்



திருமதி. சவுமி கொடிப்பிலி

சிரேஷ்ட முகாமையாளர், மேற்பார்வை

# முகாமையாளர்கள்



திருமதி. தக்ஷிலா பிரான்சிஸ்

முகாமையாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி



செல்வி. மேகலா ஜயபால

முகாமையாளர், கூட்டாண்மை அலுவல்கள்



திரு. நிமல் குமாரசிங்க

முகாமையாளர், வெளிவாரி உறவுகள்



திருமதி, லக்ஷ்மி விக்கிரமநாயக்க

முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம்



திருமதி. அசோகா தயாரத்ன

முகாமையாளர், மனித வளங்கள்



திருமதி, அனுலா விஜேசிங்க

முகாமையாளர், புலனாய்வுகள்



திருமதி, பி.எம்.நிரோஷிகா உதயாங்கனி

முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்



திருமதி, பிரத்திபானி ஹேரத்

முகாமையாளர், மேற்பார்வை

வராதோர்

திரு. ஆர்.கே. வசந்த சுனிமல், முகாமையாளர், புலனாய்வுகள், திருமதி, மஞ்சுளா சந்திரரத்ன, முகாமையாளர், மேற்பார்வை, செல்வி, ஷீனா குணரத்ன, முகாமையாளர், வெளிவாரி உறவுகள்

மூலதனச் சந்தை அபிவிருத்திப் பிரிவு



திருமதி, ஒலிவி சொலங்காராச்சி
சிரேஷ்ட உதவி முகாமையாளர்

தலைவரது அலுவலகம்



திரு. தசுன் பெரேரா
உதவி முகாமையாளர்



திருமதி, சாமளிக்கா கருணாரத்ன
உதவி முகாமையாளர்

கூட்டாண்மை அலுவல்கள் பிரிவு



திருமதி, கிரிஷாந்தி முத்துதந்திரிகே
சிரேஷ்ட நிறைவேற்று காரியதரிசி



திருமதி, எரங்க மந்திரிரத்ன
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



செல்வி.மேரியன் ஜி. சந்தானம்
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



செல்வி. செமினிக்கா தயானிக்கா
உதவி முகாமையாளர்



திருமதி, சரண்யா அனுதினன்
உதவி முகாமையாளர்



திரு. தனிஷ்க திலக்கரத்ன
உதவி முகாமையாளர்

# பணியாட்டொகுதி அங்கத்தவர்கள்

பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம்



செல்வி. கே.எம். சானிக்கா குணசிங்க
உதவி முகாமையாளர்



திருமதி. ரோஷினி பீரிஸ்
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திரு. ரசிக்க வல்பிட்டிகம
உதவி முகாமையாளர்



திருமதி, கவீஷா கும்புக்கே
உதவி முகாமையாளர்



திருமதி. ராதா ஜி.பிரத்தீபா
உதவி முகாமையாளர்

வெளிவாரி உறவுகள் பிரிவு



செல்வி. அஷாரா செனவிரத்ன
உதவி முகாமையாளர்

மூலதனச் சந்தைக் கல்விப் பிரிவு



திருமதி, நிஷோகா ஜயதுங்க
நிறைவேற்று காரியதரிசி



திரு. எம்.ஏ. இம்ரான்
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திருமதி, ஜே.கே. பிரியதர்ஷினி
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திருமதி, பிரீனிக்கா நிலக்ஷி பெரேரா
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



செல்வி. துலாரி முகாந்திரம்
உதவி முகாமையாளர்



திரு. கயன் லொக்குகமகே
உதவி முகாமையாளர்



திரு. ஏ. சி. டயஸ்
உத்தியோகத்தர்



செல்வி.ஹேன் கிரிஷாந்தி பர்னாந்து
வரவேற்பாளரும் தொலைபேசி இயக்குநரும்



திருமதி, தனுாஷி தல்பிட்ட
வரவேற்பாளரும் தொலைபேசி இயக்குநரும்



திரு. எஸ். டி. தர்மசிறி



திரு. எல்.டபிள்யு.எல். பியதிஸ்ஸ



திரு. சி.சி நாகேந்திரன்

## பணியாட்டொகுதி அங்கத்தவர்கள்



திரு. டபிள்யு. ஆரியரத்ன



திரு. பெத்தும் நிரோஷன



திரு. எம்.ஏ. சந்தருவன் விஜேரத்ன



திரு. புத்திக பலபிட்டிய



திரு. சமித் பிரேமரத்ன

தகவல் தொழில்நுட்பப் பிரிவு



திரு. ரஜித்த வருண



திருமதி. சகுந்தலா தேவி



திருமதி. ரசாய்கி திசாநாயக்க
உதவி முகாமையாளர்



திரு. ரந்திக்க சில்வா
உதவி முகாமையாளர்

புலனாய்வுகள் பிரிவு



திருமதி. புத்தினி ஹேரத்
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திரு. ஜி.டி. கபில குமார
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திரு. ரக்கித்த திசாநாயக்க
உதவி முகாமையாளர்



திரு. டபி.எம்.எஸ்.துலேந்திர விஜேவர்தன
உதவி முகாமையாளர்



செல்வி. பி.ஜி.என். அஷானி பொன்சேகா
உதவி முகாமையாளர்



செல்வி. கலைவாணி ராஜகுமாரன்
உதவி முகாமையாளர்

மேற்பார்வைப் பிரிவு



திருமதி, மனீஷா சேனாதாராச்சி
உதவி முகாமையாளர்



செல்வி. பிஷ்மா எலியதுர
உதவி முகாமையாளர்



திருமதி. நொமானி செனவிரத்ன
சிரேஷ்ட உதவி முகாமையாளர்

## பணியாட்டொகுதி அங்கத்தவர்கள்



திருமதி. சுதார வீரக்கொடி
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



செல்வி. கவுசல்லா குணவர்தன
உதவி முகாமையாளர்



செல்வி. பூர்ணி வீரசேகர
உதவி முகாமையாளர்



திருமதி. சுரேகா ஜயசேகர
உதவி முகாமையாளர்



செல்வி. சமிளா கருணாரத்ன
உதவி முகாமையாளர்



திரு. சசித்ர வருசுவிதான
உதவி முகாமையாளர்

### கண்காணிப்புப் பிரிவு



திரு. லலிந்த தயாரத்ன
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திரு. தசங்க வர்ணகுலசூரிய
உதவி முகாமையாளர்



செல்வி. ருச்சிகா சேனாரத்ன
உதவி முகாமையாளர்



செல்வி. நிலஞ்சனா சிவாஜி

உதவி முகாமையாளர்



செல்வி. டபி.ஏ.ஜே. கங்கா டி கொஸ்தா

உதவி முகாமையாளர்

வராதோர்

திருமதி. ஜூலி அலகக்கோன், அந்தரங்க காரியதரிசி, வெளிவாரி உறவுகள், திருமதி. லக்ஷ்மி அத்தபத்து, அந்தரங்க காரியதரிசி, கூட்டாண்மை அலுவல்கள், திருமதி, சமந்தி குணவர்தன, சிரேஷ்ட உதவி முகாமையாளர், கூட்டாண்மை அலுவல்கள், திருமதி. சி. ஏரந்ததி வைத்தியசேகர, சிரேஷ்ட உதவி முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், திருமதி உதானி விக்கிரமரத்ன, உதவி முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், திருமதி. குமாரி சிறிவர்தன, அந்தரங்க காரியதரிசி, சட்டம் மற்றும் வலியுறுத்தல், திருமதி. வை.டி.சந்தமாலி, சிரேஷ்ட உதவி முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம், செல்வி. கிரிஷ்டோபல் சில்வா, சிரேஷ்ட நிறைவேற்று காரியதரிசி, மேற்பார்வை, திருமதி. தனேஷா ராஜபுர, சிரேஷ்ட உதவி முகாமையாளர், திரு. பிரியந்த ஹேரத், சிரேஷ்ட உதவி முகாமையாளர், புலனாய்வுகள்

# வருடத்தின் சிறப்பம்சங்கள்





டிஜிட்டல்மயமாக்கல் முன்னெடுப்பின் இரண்டானம் கட்டத்தின் அங்குரார்ப்பணம்







குடும்ப வணிகத்திற்கான பட்டியலிடல் மன்றம்






புதிய இ.பி.ப.ஆ. சட்டத்திலான ஒரு கலந்துரையாடல்




புதிய இ.பி.ப.ஆ. சட்டத்திலான பங்காளிகள் மன்றம்






## வருடத்தின் சிறப்பம்சங்கள்










புலம்பெயர் சமூகத்திற்கான டோக்கியோ இயங்கலை மன்றம்




துபாயில் இலங்கையில் முதலிடுங்கள் முதலீட்டாளர் மன்றம்



# ஒரு புதிய நோக்கம்

**செயற்பாட்டு மீளாய்வு**

# செயற்பாட்டு மீளாய்வு

**கூட்டாண்மை நிதி ஆலோசகர்கள், சந்தை உருவாக்குநர்கள், மூலாதாரப் பிணையங்களது தரகர்கள் மற்றும் வர்த்தகர்கள் போன்ற பல புதிய சந்தை இடையீட்டாளர்கள் பிரிவுகளுக்கான முறைமைப்படுத்தலை சட்டமானது வழங்குகின்றது**

### முறைமைப்படுத்தல்

பிணையங்கள் சந்தையின் நம்பகத்தன்மை, வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு திடமான மற்றும் பயனுறுதிமிக்க முறைமைப்படுத்தல் முக்கியமானதாகும். இ.பி.ப.ஆ. விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை நிறுவுவதனூடாக சந்தையினை முறைமைப்படுத்துவதுடன் இது சந்தையில் நியாயத்தன்மை, வினைத்திறன் மற்றும் ஒழுங்குமுறை என்பவற்றை உறுதிப்படுத்துகின்றது.

### உரிமமளித்தல் மற்றும் பதிவீடளித்தல்

நாம் முறைமைப்படுத்தும் நடவடிக்கைகள் பிரதானமாக 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் இ.பி.ப.ஆ. ஆன் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். இந்தச் சூழமைவில், சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் சந்தை இயக்குபவர்கள் மூலதனச் சந்தை நடவடிக்கைகளை வழங்குவதற்கு இ.பி.ப.ஆ. இடமிருந்து ஒரு உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு அறிவுரை வழங்கும் பதவீடளிக்கப்பட்ட நபர்கள் அவர்களது கடமையினை நிறைவேற்றுவதற்கு ஒரு பதிவீட்டினை பெற்றிருத்தல் வேண்டும். 31 டிசம்பர் 2021 இல் பின்வரும் நிறுவனங்கள் இ.பி.ப.ஆ. இனால் உரிமமளிக்கப்பட்டிருந்தன. (உருவம் 01)

உருவம் 01: உரிமமளித்தல் மற்றும் பதிவீடளித்தல்

| முறைமைப்படுத்தப்படும் நிறுவனத்தின் வகை | உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|
| பங்குப் பரிவர்த்தனைகள் | 01 |
| பங்குத் தரகுக் கம்பனிகள்* | 29 |
| பங்கு வர்த்தகக் கம்பனிகள் | 12 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | 24 |
| எல்லைக்கடன் வழங்குநர்கள் | 20 |
| ஒப்புரவாளர்கள் | 08 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 03 |
| தீர்வக இல்லங்கள் | 01 |

* மூன்று (3) பங்குத் தரகுக் கம்பனிகள் வணிகச் செயற்பாடுகளின் மனமுவந்த செயல்முடக்கலின் கீழ் காணப்பட்டன.

### கொள்கை முன்னெடுப்புகள்

**2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க புதிய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்.**

2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க புதிய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமானது பாராளுமன்றத்தில் சட்டவாக்கமாக்கப்பட்டு 21 செப்டம்பர் 2021 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டமானது 24 செப்டம்பர் 2021 இல் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கான இணைப்பாக பிரசுரிக்கப்பட்டது.

நவம்பர் 2017 இல் வர்த்தமானியில் சட்டமூலமானது முதலாவது தடவையாக பிரசுரிக்கப்பட்டதிலிருந்து பல வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பங்காளிகளுடனான கலந்துரையாடல்களின் பின்னர் முன்மொழியப்பட்ட பல திருத்தங்களுடன் சட்டத்தின் சட்டவாக்கச் செயற்பாடானது ஆரம்பிக்கப்பட்டது.

சட்டமானது சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டு பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படா கம்பனிகளின் பொது வழங்கல்களை உள்ளடக்குவதற்காக இ.பி.ப.ஆ. இன் ஆதிக்கவரம்பானது விஸ்தரிக்கப்பட்டது. கூட்டாண்மை நிதி ஆலோசகர்கள், சந்தை உருவாக்குநர்கள், மூலாதாரப் பிணையங்களது தரகர்கள் மற்றும் வர்த்தகர்கள் போன்ற பல புதிய சந்தை இடையீட்டாளர்கள் பிரிவுகளுக்கான முறைமைப்படுத்தலை சட்டமானது வழங்குகின்றது.

சட்டமானது நிர்வாக மற்றும் குடியியல் முதல் குற்றவியல் வலுவளிப்புகள் வரையான பரந்த வலியுறுத்தல் கருவிகளுக்கும் வசதியளிக்கின்றது. ச.பி.ஆ.ஒ. இன் பன்முக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கையொப்பதாரர்களாக எழுகின்ற கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக சிறப்பாக ஆயத்தமாயிருப்பதற்காக வெளிநாட்டு ஒத்தநிலையினருடன் தகவல்களை பரிமாறுவதற்கும் சட்டமானது வசதியளிக்கின்றது.

முழுவதுமாக சட்டமானது ச.பி.ஆ.ஒ. இன் கொள்கைகளது தேவைப்பாடுகள் மற்றும் சர்வதேச நியமங்களைச் சந்திப்பதற்காக ஒத்திசைவு செய்யப்பட்டுள்ளது.



திருமதி. அயந்தி அபேவிக்கிரம
பணிப்பாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்



செல்வி. சர்மிளா பண்டித்தரத்ன
சிரேஷ்ட முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்

### கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பரஸ்பரமற்றமயமாக்கல்

கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலமானது சில கொள்கை மாற்றங்கள் மற்றும் மேலதிக திருத்தங்களுக்காக மீளாய்வு செய்யப்பட்டவண்ணமுள்ளது.

### கொ.ப.ப. இனால் முதலீட்டாளர்கள் முறையீடுகளைக் கையாள்வதற்கான பொறிமுறை

கொ.ப.ப. இனால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்தாக்கப் பத்திரிகையினை இ.பி.ப.ஆ. மீளாய்வு செய்து பின்வருவன தொடர்பான கொள்கைகளில் திருத்தங்களை அறிவுறுத்தியது. வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குத் தரகர்களுக்கிடையேயான பிணக்குகள், அதேபோன்று வாடிக்கையாளர்கள், பங்குத்தரகர்கள் மற்றும் எல்லைக்கடன் வழங்குநர்களுக்கிடையேயான பிணக்குகளை தீர்க்கும் நோக்கத்திற்காக ஒரு சுயாதீன நியாயசபையினை நிறுவுதல் தொடர்பானதாகும்.

### உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர்களது தகவல்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் வேண்டுதல்கள்

2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பணிப்புரையின் கீழ் (நிறைவேற்று கடமைகளை செயற்படுத்தும் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளது பொருத்தம் மற்றும் தகமையினது மதிப்பீடு) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளின் நிறைவேற்று கடமைகளை செயற்படுத்துவதற்காக பணிப்பாளர்களாக அல்லது அதிகாரிகளாக நியமிக்கப்படவிருக்கும் அல்லது ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள நபர்களது பின்னணி பரிசோதனையினை நீடிப்பதன் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கியின் சார்பில் இ.பி.ப.ஆ. போதிய கவனச் செயல்முறைக்கு வசதியளித்தது.

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பிரிவு 21 (2) இன் பிரகாரம் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர்களாக நியமிக்கப்படுவதிலிருந்து அத்தகைய நபர்களை தடுப்பதற்கான இ.பி.ப.ஆ. இன் முறைப்படுத்தல் வரம்புறுகையின் பிரகாரம் ஏதேனும் அவதானிப்புகள் /பிரதிகூலமான கண்டுபிடிப்புகளை இலங்கை மத்திய வங்கி இ.பி.ப.ஆ. இடமிருந்து வேண்டியது.

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. 132 பரிசோதனைகளுக்கு வசதியளித்தது.

### அங்கீகாரங்கள்

### உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்கள்

வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத் திட்டத்தின் பரிந்துரைக்கமைய இ.பி.ப.ஆணைக்குழுவானது உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு கொ.ப.பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்குகின்றது. இவ் அங்கீகாரமானது அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கைச் சட்டம் மற்றும் இலங்கையின் பிணையங்கள் தொடர்பான சட்டம் ஆகியவற்றிற்கு இணங்கியொழுகுவதனைப் பொறுத்தே வழங்கப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. 56 உலக, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு இலங்கையில் பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியதுடன் 60 பெயர் மாற்றங்களையும் அங்கீகரித்தது.

### கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் மற்றும் பங்குத்தரகர் விதிகளின் மீளாய்வு

பின்வரும் பட்டியலிடல் விதிகள் மீளாய்வாண்டில் மீளாய்வு செய்யப்பட்டதுடன் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 24 மற்றும் 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 64 ஆகியவற்றின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

- உரிமை வழங்கல் வரம்புறுகைக்கான மேம்படுத்தல்களுக்கு வசதியளிப்பதற்காக கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் விதி இலக்கம் 5.2 க்கு கொ.ப.ப. இனால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள்
- அனைத்து பங்கு விலைச் சுட்டியின் புழக்க அடிப்படையிலான தொகுப்பிற்கு வசதியளிப்பதற்காக கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் விதி இலக்கம் 7.6 (iv) மற்றும் பிற்சேர்க்கைகள் 7பி மற்றும் 8ஏ ஆகியவற்றிற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள்
- விநியோகம் எதிர் கொடுப்பனவு (வி.எ.கொ.) தீர்ப்பனவு பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதற்கான பட்டியலிடல் விதிகளுக்கு கொ.ப.ப. இனால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள்

### கொ.ப.ப. இன் வர்த்தக விதிகளுக்கான திருத்தங்கள்

மீளாய்வாண்டில் கொ.ப.ப. இனால் முன்மொழியப்பட்ட பின்வரும் திருத்தங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன.

- வி.எ.கொ. தீர்ப்பனவு பொறிமுறை மற்றும் அதனுடன் தொடர்புடைய விடுமிகை தேவைப்பாடுகள் நடைமுறைப்படுத்துவதனை வசதியளிப்பதற்கான திருத்தங்கள்
- கூட்டாண்மை கடன் பிணையங்களிலான மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களது வர்த்தகத்திற்காக ஒரு சாளரவழி மேடைக்கு வசதியளிப்பதற்கான திருத்தங்கள்
- உள்ளூர் நிறுவனங்களினால் வெளிநாட்டு நாணயத்தில் பெயரிடப்பட்டு வழங்கப்படும் பங்குகளிலான வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கான திருத்தங்கள்

### வரையறுத்த (தனியார்) மத்திய வைப்பகத் திட்டங்களது (ம.வை.தி.) விதிகள் மற்றும் கொ.ப.ப. இன் விதிகளது மீளாய்வு

பின்வரும் வரையறுத்த (தனியார்) மத்திய வைப்பகத் திட்டங்கள் (ம.வை.தி.) விதிகள் மற்றும் கொ.ப.ப. இன் சங்க அமைப்பு விதிகள் மீளாய்வாண்டில் மீளாய்வு செய்யப்பட்டு பின்வருவனவற்றிற்கு இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டது:

- வி.எ.கொ. தீர்ப்பனவு பொறிமுறையின் நடைமுறைப்படுத்தலுக்கு வசதியளிப்பதற்காக ம.வை.தி. மற்றும் கொ.ப.ப. இன் விதிகளுக்கான திருத்தங்கள்.
- இலங்கையில் நிறுவப்பட்ட -ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களினால் வெளிநாட்டு நாணயத்தில் பெயரிடப்பட்டு வழங்கப்பட்ட பிணையங்களது பட்டியலிடல், வர்த்தகம் மற்றும் தீர்ப்பனவிற்கு வசதியளிப்பதற்காக ம.வை.தி. இன் விதிகளுக்கான திருத்தங்கள்.
- கொ.ப.ப. இன் சங்க அமைப்பு விதிகளின் உறுப்புரை 16 (iii) இனுள் அடங்கியுள்ள சாரத்தினை விளித்துரைப்பதற்கு திரட்டப்பட்ட விடுமிகையினை பயன்படுத்துவதற்கு வசதியளிக்கும் வி.எ.கொ. தீர்ப்பனவு பொறிமுறை தொடர்பான ம.வை.தி விதிகளது உறுதிப்படுத்தலுக்குட்பட்டு உறுப்புரை 16 (iii) இனை அகற்றுவதன் மூலம் கொ.ப.ப. இன் சங்க அமைப்பு விதிகளின் உறுப்புரை 16 க்கான திருத்தங்கள் மற்றும் கொ.ப.ப. இன் சங்க அமைப்பு விதிகளின் உறுப்புரை 16 (i) மற்றும் உறுப்புரை 16(ii) இன் பிரகாரம் வி.எ.கொ. தீர்ப்பனவு பொறிமுறையின் அறிமுகத்தினை தொடர்ந்து காலாகாலம் (உதாரணம் காலாண்டுதோறும்) திரட்டப்படவேண்டிய திரவத்தன்மை வைப்புகளது போதுமையினை கொ.ப.ப. மதிப்பிடுவதற்கு வேண்டுதல் என்பனவாகும்.

# செயற்பாட்டு மீளாய்வு

### பட்டியலிலிருந்து நீங்குதல்;

மீளாய்வாண்டின்போது, பின்வரும் மூன்று பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகள் இ.பி.ப.ஆ. விதிகளின் விதிகள் 4(2) மற்றும் 4(3) இன் பிரகாரம் கொ.ப.ப. இன் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து கட்டாயமாக நீக்கப்பட்டன.

1. இயுஜே இன்டர்நெஷனல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி.
2. ஆர்பிக்கோ வைனான்ஸ் பி.எல்.சி. மற்றும்
3. ட்ரேட் வைனான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ்

### கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரகாரம் பட்டியலிலிருந்து நீக்குவதிலான ஒத்திவைப்பு

கோவிட்-19 தொற்றினால் நாட்டில் நிலவிய தணிக்கும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு ஓர் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிக்கு பட்டியலிலிருந்து நீக்குவதில் ஓர் ஒத்திவைப்பு வழங்கப்பட்டது.

### பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையினது நிர்வாகம்

31 டிசம்பர் 2021 இல் பின்வரும் பொறுப்பேற்பு கொடைமுனைகள் நிர்வகிக்கப்பட்டன. (உருவம் 02)

**உருவம் 02: பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடைமுனைவுகள்**

| கொடைமுனைபவர் | பொறுப்பேற்கப்படுபவர் | கொடைமுனைவின் தன்மை | நிலைமை |
|---|---|---|---|
| ஹேவாவாசம்கே ரவீந்திரநாத் ஸ்ரீலால் விஜேரத்ன | SMB லீசிங் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | நிறைவு செய்யப்பட்டது |
| PGP க்ளாஸ் பிரைவேட் லிமிட்டட் | பிரமால் க்ளாஸ் சிலோன் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | நிறைவு செய்யப்பட்டது |
| RIL ப்ரொப்பர்ட்டி பி.எல்.சி. | பேனேசியன் பவர் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | நிறைவு செய்யப்பட்டது |
| லங்கெம் சிலோன் பி.எல்.சி. | எக்மி பிரின்டிங் அன்ட் பெக்கேஜிங் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | நிறைவு செய்யப்பட்டது |
| ஷோ வொலஸ் அன்ட் எஜஸ் லிமிட்டட் | கார்டியன் கெப்பிட்டல் பார்ட்னர்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | நிறைவு செய்யப்பட்டது |

### ஆகக்குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காண்பதற்காக கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட கால நீடிப்புகள்

சில பட்டியலிடப்பட்ட பொது கம்பனிகள் ஆகக்குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுக்கு குறைவாக இருந்ததன் காரணமாக இணக்கப்பாடு காண்பதற்காக கொ.ப.ப. இக்கு இ.பி.ப.ஆ. அதன் சம்மதத்தினை வழங்கியது.

நீடிக்கப்பட்ட காலத்தினுள் கம்பனிகள் ஆகக்குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காண்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் கம்பனியானது கொ.ப.ப. இன் இரண்டாவது பலகைக்கு மாற்றம் செய்யப்படும். அவ்வாறு நீடிக்கப்பட்ட காலத்தினுள் இணக்கப்பாடு காண்பதற்கு தவறிய அத்தகைய ஒரு கம்பனியானது கொ.ப.ப. இன் இரண்டாம் பலகைக்கு மாற்றல் செய்யப்பட்டது.

### பொருத்தம் மற்றும் தகமைக்கான வழிகாட்டிகள்

இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் செயலெல்லையினுள் நிதியியல் சேவைகளை வழங்குவதில் வாடிக்கையாளருடன் வர்த்தகம் செய்யும் நபர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்களது பொருத்தம் மற்றும் தகமை தொடர்பான வரைவு விதிகள் மற்றும் முறைமைப்படுத்தல் நியமங்கள் விருத்திசெய்யப்பட்டன.

### கொ.ப.ப. இன் முக்கிய செயற்பாடுகளின் டிஜிட்டல் மயமாக்கலுக்கு வசதியளித்தமை

கொ.ப.ப. இன் முனைவிலிருந்து முனைவு வரையான செயற்பாடுகளின் டிஜிட்டல் மயமாக்கலினை இயலுமையாக்குவதற்காக இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஓர் முற்போக்கான தேசிய முன்னெடுப்பினை தொடங்கின. இது கொ.ப.ப. ஏதேனும் தேசிய அவசரநிலையில் எவ்விதமான தடையுமின்றி செயற்படுவதற்கு வசதியளித்தது. இந்த முன்னெடுப்பானது பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களது அனைத்து முக்கிய நடவடிக்கைகளையும் டிஜிட்டல் மயமாக்கும் அரசாங்கத்தின் முன்னெடுப்புடன் ஒத்ததாகக் காணப்படுகின்றது.

**கொ.ப.ப. மற்றும் அதன் முழுவதும் உரித்தான துணைநிறுவனமான ம.வை.தி. என்பன இ.பி.ப.ஆ. இன் கட்டளை, வழிகாட்டல் மற்றும் உடன்பாட்டுடன் சாத்தியமான ம.வை. தி. கணக்குடைமையாளர்கள் ஒரு தாள் விண்ணப்பப் படிவத்தினை நிரப்பாது மற்றும் ஒரு பங்குத்தரகரின் கிளைக் காரியாலயத்திற்கு விஜயம் செய்யாது டிஜிட்டல் முறையாக ம.வை.தி. கணக்குகளை திறப்பதற்கான ஒரு மேடையினை அறிமுகப்படுத்தியது.**

கொ.ப.ப. மற்றும் அதன் முழுவதும் உரித்தான துணைநிறுவனமான ம.வை.தி. என்பன இ.பி.ப.ஆ. இன் கட்டளை, வழிகாட்டல் மற்றும் உடன்பாட்டுடன் சாத்தியமான ம.வை.தி. கணக்குடைமையாளர்கள் ஓர் தாள் விண்ணப்பப் படிவத்தினை நிரப்பாது மற்றும் ஓர் பங்குத்தரகரின் கிளைக் காரியாலயத்திற்கு விஜயம் செய்யாது டிஜிட்டல் முறையாக ம.வை.தி. கணக்குகளை திறப்பதற்கான ஓர் மேடையினை அறிமுகப்படுத்தியது (டிஜிட்டல் ம.வை.தி. கணக்கு திறத்தல் வசதி). கொ.ப.ப. இன் பொருத்தமான விதிகளுக்கான திருத்தங்களது அங்கீகரிப்பிற்கு வசதியளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### பங்குகளின் மாற்றல்களை தடைசெய்வதற்கான அறிவித்தல்கள்

குறிப்பிட்ட தனிநபர்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களின் பங்குரித்துடைமைகளது மாற்றல்களை தடைசெய்வது தொடர்பாக இ.ம.வ. கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட சில முடக்கல் கட்டளைகளை பெற்றுள்ளதாக இ.பி.ப.ஆ. க்கு அறிவிக்கப்பட்டது. இ.ம.வ. இன் வேண்டுதலின் பிரகாரம் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்மானங்களை கொ.ப.ப. மற்றும் ம.வை.தி. ஆகியவற்றிற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இ.பி.ப.ஆ. அதனை அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 29ஏ/81 இன் கீழான அங்கீகாரங்கள்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 29ஏ/81 இன் பிரகாரம், பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்படும் பட்டியலிடப்படா பிணையங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் இ.பி.ப.ஆ. க்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பின்வரும் நிறுவனங்களுக்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (உருவம் 03)

**உருவம் 03: இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 29ஏ-81 இன் கீழான அங்கீகாரங்கள்**

| வழங்குநரின் பெயர் | பிணையத்தின் வகை | அங்கீகரிக்கப்பட்ட தொகை | காலம் |
|---|---|---|---|
| LVL எனர்ஜி வன்ட் பி.எல்.சி. | பட்டியலிடப்படா பிணைசார்ந்த மாற்றஇயலாத ஆழமான கழிவுடைய முறிகள் | ரூபா 750 மில்லியன் | 5 வருடங்கள் |
| நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பி.எல்.சி. | பட்டியலிடப்படா, மாற்றத்தக்க தொகுதிக்கடன்கள் | ரூபா 350 மில்லியன் | 20 வருடங்கள் |
| இலங்கை வங்கி | பாசல் III இணக்கப்பாட்டு அடுக்கு 2, தனிப்பட்ட ஒதுக்கத்தினூடாக பட்டியலிடப்படா, பிணைசாரா, தாழ்நிலை, மீட்கத்தக்க தொகுதிக்கடன்கள் வாழுமையற்ற பதிவிறக்க சிறப்பியல்புடனானது. | ரூபா 12 பில்லியன் | வகை ஏ மற்றும் பி : 5 வருடங்கள்<br>வகை சி மற்றும் டி : 8 வருடங்கள் |
| LOLC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | தனிப்பட்ட ஒதுக்கத்தினூடாக பட்டியலிடப்படா, தரப்படுத்தப்பட்ட, பிணைசாரா, சிரேஷ்ட, மீட்கத்தகு தொகுதிக்கடன்கள் | ரூபா 2 பில்லியன் | வகை ஏ – 5 வருடங்கள்<br>வகை பி – 5 வருடங்கள்<br>வகை சி – 10 வருடங்கள் |
| ஜோன் கீள்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | பட்டியலிடப்படா மாற்றத்தகு முன்னுரிமைப் பங்குகள் | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| இலங்கை வங்கி | பாசல் III இணக்கப்பாட்டு அடுக்கு 2 பட்டியலிடப்படா, தரப்படுத்தப்பட்ட, பிணைசாரா, தாழ்நிலை, மீட்கத்தக்க தொகுதிக் கடன்கள் வாழுமையற்ற பதிவிறக்க சிறப்பியல்புடனானது | ரூபா 8 பில்லியன் | ஐந்து (5) வருடங்கள் மற்றும் எட்டு (8) வருடங்கள் |
| ஜோன் கீள்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | சாதாரண பங்குகள் | USD 50 மில்லியன் | பொருத்தமற்றது |
| | வர்த்தகம் செய்யப்படமுடியா / மாற்றல் செய்யப்படமுடியா தெரிவுரிமைகள் (“தெரிவுரிமைகள்”) | USD 30 மில்லியன் | ஆரம்ப இடுகையில் விண்ணப்பித்த திகதியிலிருந்து 12 மாதக் காலப்பகுதியினுள். |
| | | மொத்தம் USD 80 மில்லியன் | |

### தளத்திற்கப்பாலான பங்கு கொடுக்கல் வாங்கல்கள்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 84 (1) இன் ஏற்பாடுகளுக்கமைய ‘உரிமமளிக்கப்பட்ட ஒரு பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு பொதுக் கம்பனியில் பிணையங்களை வைத்திருக்கும் எந்த ஒரு நபரும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிமாற்றகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வர்த்தக செயல்முறைக்கு இணங்கியொழுகி அத்தகைய பிணையங்களை கொள்வனவு, விற்பனை, கொடை அல்லது இல்லையெனில் வர்த்தகம் செய்யலாம்.

எவ்வாறாயினும், அத்தகைய பரிமாற்றகத்தினால் எவ்விதமான வெளிப்படுத்தப்பட்ட வர்த்தக செயல்முறைகள் கடைப்பிடிக்கப்படாவிடின், ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

பாரிய பொருளாதார மாற்றங்களுடன் கடந்த ஐந்து வருடங்களில் விதிவிலக்கான சூழ்நிலைகளில் செயல்முறைப்படுத்தப்பட்ட மாற்றல்களின் தொகை என்பவற்றை கருத்திற்கொண்டு, தளத்திற்கப்பாலான மாற்றல்களுக்கு பிரயோகிக்கப்படும் கட்டணத்தினை திருத்துவதற்கான தேவை காணப்பட்டது. மேலும், 1 ஜூலை 2006 முதல் பதினைந்து வருடங்களுக்கு தளத்திற்கப்பாலான மாற்றல்களுக்கான கட்டணம் திருத்தியமைக்கப்படவில்லை. இதன் நிமித்தம் 01 ஒக்டோபர் 2021 முதல் வர்த்தகத் தளத்திற்கு அப்பால் பட்டியலிடப்பட்ட பிணையங்களது மாற்றல்களுக்கு வசதியளிப்பதற்கான நிருவாகக் கட்டணமானது திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டில், இ.பி.ப.ஆ. இன் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட 1,469 அசாதாரணமான மாற்றல்களுக்கும் 84 பங்குத் தானங்களுக்கும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. எல்லைக் கடன் வர்த்தகம், ஒற்றைக் கணக்கிலிருந்து கூட்டுக் கணக்குகளுக்கு, கூட்டுக் கணக்கிலிருந்து கூட்டுக் கணக்குகளுக்கு, கூட்டுக் கணக்கிலிருந்து ஒற்றைக் கணக்குகளுக்கு, நிதியளித்தல் வசதிகள், தானம் (விசேட), காப்பான் மாற்றங்கள், ஒன்றிணைத்தல்கள், கட்டாயக் கொடைமுனைவுகள், மறுசீரமைத்தல்கள் ஆகியவற்றிற்கு வசதியளிப்பதற்காக அசாதாரணமான மாற்றல்கள் இடம்பெற்றன.

### இ.பி.ப.ஆ. சட்டத்தின் 28 ஏ /80 பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

உரிமமளிக்கப்பட்ட ஓர் பரிமாற்றகத்தில் ஏதேனும் ஒரு பொதுக் கம்பனி பட்டியலிடுவதற்கு முன்னர் யாரேனும் நபருக்கு பங்குகளை ஒதுக்கியிருப்பின், கடைசியாக ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் ஏதேனும் அத்தகைய கம்பனியின் பங்குகளையோ அல்லது பங்காக மாற்றக்கூடிய ஏதேனும் பிணையங்களையோ ஓர் உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடலாகாது. அத்தகைய பட்டியலிடலுக்கு முன்னர் ஆணைக்குழுவிடமிருந்து அதற்கான எழுத்துமூல அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும். (உருவம் 04)

# செயற்பாட்டு மீளாய்வு

**உருவம் 04: இ.பி.ப.ஆ. சட்டத்தின் 28ஏ /80 பிரிவின் கீழான அங்கீகாரங்கள்**

| கம்பனிகளின் பெயர்கள் | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை -தற்போதைய நிலைமை |
|---|---|
| லங்கா கிரடிட் அன்ட் பிஸ்னஸ் வைனான்ஸ் லிமிட்டட் | அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| அபான்ஸ் பி.எல்.சி. | அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| சர்வோதய டெவலப்மன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| கோப்பரட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டட் | அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் பி.எல்.சி. | அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| எச்செனிட் பிஸ்னஸ் சொலூசன்ஸ் லிமிட்டட் | அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| ஹெல எப்பரல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் | அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| மைலேன்ட் டெவலப்மன்ட் லிமிட்டட் | அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| லுமினெக்ஸ் லிமிட்டட் | அங்கீகாரம் வழங்கப்பட்டது |
| சிக்செக் லிமிட்டட் | நிலுவையிலுள்ளது |
| எகஸ்டேமினேட்டர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | அங்கீகாரம் வழங்கப்பட்டது |

### கொ.ப.ப. இன் வலியுறுத்தல் விதிகளின் ஒத்திவைப்பு

கொ.ப.ப. இல் வர்த்தகத்தினை இடைநிறுத்துவதனை ஒத்திப்போடுதல் தொடர்பாக வருடத்தில் 3 விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதியின் பிரிவுகள் 7.5(டி) (ii) தொடர்பாக இந்த ஒத்திப்போடுதலானது பு; டயமன்ட்ஸ் ஜ"வலரி வேர்ல்ட்வைட் பி.எல்.சி., மல்டி வைனான்ஸ் பி.எல்.சி. மற்றும் நே'ன் லங்கா வைனான்ஸ் பி.எல்.சி. ஆகியவை பற்றியதாகும்.

### மேற்பார்வை மற்றும் இணக்கப்பாடு

முதலீட்டாளர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான மிகவும் முக்கிய உபாயமாக காணப்படுவது முதலீட்டாளர்களது தீர்மானங்களுக்கு முழுவதுமான தகவல்களது வெளிப்படுத்தல் ஆகும். இதன் மூலம் முதலீட்டாளர்கள் அவர்களது முதலீடுகளது சாத்தியமான இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை சிறப்பாக மதிப்பீடு செய்வதற்கு உதவுவதுடன் அவர்களது சொந்த நலன்களையும் பாதுகாக்கின்றது. வெளிப்படுத்தல் ஒழுங்குவிதிகளில் மீறல்களை இ.பி.ப.ஆ. கண்டுபிடித்தவுடன் அவை பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு செயல்திறனுடன் அறிவிக்கப்படுகின்றன. அத்தகைய முயற்சிகள் வெளிப்படுத்தல் ஒழுங்குவிதிகளின் மீறுகைகளது நிகழ்வுகள் மற்றும் மீள்நிகழ்வுகளை தவிர்ப்பதற்கு பங்களிப்பு செய்கின்றது.

பிணையங்கள் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடானது நியாயமான மற்றும் ஒழுங்கான சந்தைகளுக்கான அவசியமான அடித்தளத்தின் ஒரு பகுதி என்பதுடன் அது முதலீட்டாளர் பாதுகாப்பினையும் வழங்குகின்றது. இ.பி.ப.ஆ. ஆல் முறைமைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்கள் அவர்களது வாடிக்கையாளர்களது நலன்களை பாதுகாக்கும் விதத்திலும் சந்தைகளின் நேர்மையினை பாதுகாக்கும் விதத்திலும் நடந்துகொள்ளல் வேண்டும்.

இ.பி.ப.ஆ. இன் மேற்பார்வையானது ஒரு முற்றுமுழுதான பரிசீலனை, கண்காணிப்பு மற்றும் தொடர்ச்சியான இணக்கப்பாட்டு திட்டங்கள், சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் இ.பி.ப.ஆ. ஆகியோருக்கிடையேயான வழக்கமான ஊடாட்டம் உள்ளடங்கலான முறைகளை கொண்டதாகும்.



செல்வி. மனூரி வீரசிங்க

உதவிப் பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள்



செல்வி. மேகலா ஜயபால

முகாமையாளர், கூட்டாண்மை அலுவல்கள்

### பட்டியலிடப்பட்ட கம்பனிகள்

அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் நிதியாண்டு நிறைவடைந்து 5 மாதங்களுக்குள் அவற்றின் பங்குதாரர்களுக்கும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கும் (கொ.ப.ப.) வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும். இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்து இணங்கியொழுகாத விடயங்கள் தொடர்பாக கம்பனிகளுக்கு அறியப்படுத்துகின்றது. இந்த முயற்சியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளது பதிலளிப்பானது மிகவும் சாதகமாகக் காணப்படுகின்றது. இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கமானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் தகவல் பரப்புதல் மற்றும் நிதியியல் அறிக்கையிடலின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதாகும். பிணையங்கள் சந்தையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை நிலைநிறுத்துவதற்காகவும் தொழில்சார் நியமங்கள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் முக்கியமான தகவல்களை உடனடியாக பரப்புதல் வேண்டும் என்ற தேவைப்பாடு காணப்படுகின்றது.

வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்வதில் இ.பி.ப.ஆ. பின்வரும் விடயங்களில் கவனஞ்செலுத்தியது:

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள், இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்
- கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள்
- நிதியியல் எடுத்துக்காட்டல்கள்
- தலைவரின் அறிக்கை
- பணிப்பாளர்களின் அறிக்கை
- சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை
- பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர் தகவல்கள்
- நிதியியல் தரவுகள்
- பணிப்பாளர் சபையினது உப குழுக்களிலான அறிக்கைகள்

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் மற்றும் பொருத்தமான ஒழுங்குவிதிகளுக்கமைய வருடாந்த அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிப்பதில் கம்பனிகளிடையே அவர்களில் சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வு மட்டத்தினை மேம்படுத்துவதற்கு இச்செயல்முறையானது தொடர்ந்தும் பங்களிப்பு செய்யும்.

இவ்வருடத்தில் இ.பி.ப.ஆ. 154 பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கைகளில் மீளாய்வினை நடாத்தி இணங்கியொழுகுதலை மேம்படுத்துமாறும் வெளிப்படுத்தல்களை செழுமைப்படுத்துமாறும் 157 கருத்துக் கடிதங்கள் அனுப்பிவைத்தது.

இதற்கும் மேலாக நாம் 11 கடன் முன்விவரணக்கோவைகள் மற்றும் 20 உரித்துவ முன்விவரணக்கோவைகளில் ஆரம்ப மீளாய்வினை நடாத்தினோம்.

இ.பி.ப.ஆ. நடைமுறையிலுள்ள பங்குதாரர்களிடமிருந்து மேலதிக நிதியினை திரட்டுவதற்காக விண்ணப்பித்த 8 கம்பனிகளின் பங்குதாரர் சுற்றறிக்கைகளில் ஆரம்ப மீளாய்வினை நடாத்தி வெளிப்படுத்தல்களை மேம்படுத்துவதற்காக பின்னூட்டம் வழங்கப்பட்டது.

இ.பி.ப.ஆ. 8 சுயாதீன ஆலோசகர்களது அறிக்கைகளை மீளாய்வு செய்து வெளிப்படுத்தல் உட்பொருளினை மேம்படுத்துவதற்காக முறைமைப்படுத்தல் அவதானிப்புகளை வழங்கியது.

### வெளிப்படுத்தல்கள் மற்றும் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளது கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைமைப்படுத்தல் நடவடிக்கைகள்

இவ்வாண்டில், பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் சந்தை அறிவிப்புக;டாக மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களை இ.பி.ப.ஆ. மீளாய்வு செய்ததுடன் 93 சந்தர்ப்பங்கள் தொடர்பாக கொ.ப.ப. இடமிருந்து விளக்கங்களை கோரியது. அத்தகைய விளக்கங்கள் பின்வரும் வெளிப்படுத்தல்கள் தொடர்பானவையாகும். (உருவம் 05)

உருவம் 05: பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வெளிப்படுத்தல்கள் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

| விளக்கத்தின் தன்மை | சான்றுகளின் எண்ணிக்கை |
|---|---|
| பொ.ப.க. அவதானப் பட்டியல் /இரண்டாம் பலகையில் உள்ளபோது பணிப்பாளர்களின் வர்த்தகங்கள் | 2 |
| பணிப்பாளர்களின் வர்த்தகங்கள் - தாமதமான வெளிப்படுத்தல் | 27 |
| பணிப்பாளர்களின் வர்த்தகங்கள் - இருட்டடிப்பு காலத்தில் (ப.வி.8.6) | 10 |
| தாமதமான வெளிப்படுத்தல்கள் | |
| பணிப்பாளர்களிலான மாற்றங்கள் | 34 |
| ஏனைய உடனடி கூட்டாண்மை வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் | 20 |

### ஏனைய முறைமைப்படுத்துபவர்கள் /கொ.ப.ப. /ஏனைய நிறவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விடயங்கள்

பின்வரும் விடயங்கள் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை (இ.க.க.ந.க.ச.), கொ.ப.ப. மற்றும் அரசாங்க பெறுமதியிடல் திணைக்களம் ஆகியவற்றிற்கு அங்கீகாரம், அளவீடு மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பன பிரயோகிக்கப்படும் நியமங்களுடன் இணக்கப்பாடு கண்டுள்ளனவா என்று தெளிவுபடுத்திக்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டன. (உருவம்: 06)

உருவம் 06: ஏனைய முறைமைப்படுத்துபவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விடயங்கள்

| முறைமைப்படுத்துபவர் | கம்பனிகளின் எண்ணிக்கை | விடயத்தின் விபரம் |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (இ.க.க.நி.க.ச.) | 1 | ரேடியன்ட் ஜெம்ஸ் இன்டர்நேஷனல் பி.எல்.சி.<br>கம்பனியின் கணக்காய்வாளர் மற்றும் கொ.ப.ப. இன் இணையத்தளத்தில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை பிரசுரித்தமையானது இ.க.க.நி.க.ச. யின் அறிவுக்காகவும் அவசியமான நடவடிக்கைக்காகவும் அறியப்படுத்தப்பட்டது. |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | 1 | டெஸ் அக்ரோ பி.எல்.சி.<br>இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் ஓர் உடனடியான சந்தை வெளிப்படுத்தலை மேற்கொள்ளுமாறு பொ.ப.க. வேண்டப்பட்டது. |
| அரசாங்க பெறுமதியிடல் திணைக்களம் | 1 | சிட்ரஸ் லெசர் பி.எல்.சி.<br>அரசாங்க பெறுமதியிடல் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட உள்ளீடுகளின் அடிப்படையில் நிலுவையிலுள்ள ஓர் பொது முறையீடானது தீர்த்துவைக்கப்பட்டது. |

**பங்குத்தரகர்களின் மேற்பார்வையானது ஒரு இடர்நேர்கை அடிப்படையிலான அணுகுமுறையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதுடன் இது இடர்நேர்கை ஏற்படுவதன் சாத்தியம் மற்றும் அதன் தாக்கம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய கம்பனிகளின் சார்புடைய இடர்நேர்கை தோற்றுருவங்களை மதிப்பீடு செய்கின்றது.**

### சந்தை இடையீட்டாளர்களின் மேற்பார்வை

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரகாரம், பின்வரும் பதினொரு சந்தை இடையீட்டாளர்களுக்கு உரிமங்கள் வழங்கவும் முறைமைப்படுத்தல் மேற்பார்வையினை செயற்படுவதற்கும் இ.பி.ப.ஆ. க்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்த சந்தை இடையீட்டாளர்கள் பங்குத் தரகர்கள், பங்கு வர்த்தகர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளின் முகாமைத்துவ கம்பனிகள், எல்லைக்கடன் வழங்குநர்கள், ஒப்புரவாளர்கள், கூட்டாண்மை நிதி ஆலோசகர்கள், மூலாதாரப் பிணைய தரகர்கள், மூலோதாரப் பிணைய வர்த்தகர்கள் மற்றும் சந்தை உருவாக்குநர்கள் ஆகியோரை உள்ளடக்கும்.

### பங்குத் தரகு நிறுவனங்கள்

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தில் மற்றும் அதன்கீழான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு பங்குத்தரகர்களுக்கு உரிமமளித்து மேற்பாவை செய்யும் பணியானது இ.பி.ப.ஆ. க்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்பார்வையின் குறிக்கோளானது பங்குத் தரகர்களின் நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் செயற்பாட்டு இயலுமை என்பவற்றை உறுதிசெய்வதன் மூலம் மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் பாதுகாப்பினை பலப்படுத்தவும் முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை வளர்க்கக் கூடியதாகவும் இருக்கும்.

பங்குத்தரகர்களின் மேற்பார்வையானது ஓர் இடர்நேர்கை அடிப்படையிலான அணுகுமுறையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதுடன் இது இடர்நேர்கை ஏற்படுவதன் சாத்தியம் மற்றும் அதன் தாக்கம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய கம்பனிகளின் சார்புடைய இடர்நேர்கை தோற்றுருவங்களை மதிப்பீடு செய்கின்றது. பங்குத்தரகர்களுக்கு வெளிப்பாடுடைய இடர்நேர்கைகள் விவேகம், திரவத்தன்மை, எதிர்தரத்தவர், நிதியியல், கடன், செயற்பாட்டு,

# செயற்பாட்டு மீளாய்வு

நிலைமை மற்றும் சட்ட இடர்நேர்கைகள் போன்றவை இனங்காணப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டில் கோவிட்-19 தொற்றுக்கு மத்தியில், இ.பி.ப.ஆ. நிறுவனங்களினால் இணக்கப்பாடு காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, பயனுறுதிமிக்க வலியுறுத்தலினை அடைவதற்காக பங்குத் தரகர்களில் தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன.

தளத்திற்கப்பாலான பரிசீலனைகள் பங்குத்தரகுக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள், சட்டமுறையான அறிக்கைகள் மற்றும் இலத்திரணியல் கோப்பீட்டு முறைமைக்கு பதிவேற்றம் செய்யப்படும் அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பன மீளாய்வு செய்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் இயலுமையாயுள்ளது. தளத்திற்கப்பாலான மீளாய்வுகளின் போது அவதானிக்கப்படும் ஏதேனும் முரண்பாடுகள் மற்றும் இணக்கப்பாடின்மைகள் திருத்தத்திற்காக கம்பனிக்கு அறிவிக்கப்படுகின்றன.

மீளாய்வுக் காலத்தின்போது, கோவிட்-19 தொற்றினால் அசாதாரணமான மாறுபாடான தாக்கங்களின் நிமித்தம் இரண்டு பங்குத் தரகர்களது முறையீட்டினை கருத்திற்கொண்டு அவற்றின் வணிகங்களை மீள்செயற்படுத்துவதற்கு காலநீடிப்புகள் வழங்கப்பட்டன. இவ்விரண்டு பங்குத் தரகர்களும் அவற்றின் வணிகச் செயற்பாடுகளை கொ.ப.ப.ப. இன் பங்குத்தரகர் விதிகளின் பிரிவு 12 இன் பிரகாரம் மற்றும் இ.பி.ப.ஆ. இன் அங்கீகாரத்துடன் இரண்டு வருடங்களுக்கு செயல்முடக்கம் செய்தன. மேலும், இ.பி.ப.ஆ. இன் அங்கீகாரத்துடன் இரண்டு பங்குத் தரகர்கள் பெயர் மாற்றத்திற்கு உட்பட்டார்கள்.

மீளாய்வாண்டில், பங்குத் தரகர்களின் மொத்த புரள்வானது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது 215%இனால் அதிகரித்தது. இத்துறையின் இலாபகரத்தன்மையானது 260% அதிகரிப்பினை கண்டதுடன் 2020 இன் வரிக்குப் பிந்திய தேறிய இலாபமான ரூபா 1,751 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2021 இல் வரிக்கு பிந்திய தேறிய இலாபமானது ரூபா 6,308 மில்லியனாக அதிகரித்தது. இது வருடத்தில் காணப்பட்ட குறைந்த வங்கி வட்டி வீதங்களின் காரணமாக பாரிய எண்ணிக்கையிலான முதலீட்டாளர்களுக்கு பங்குச் சந்தை ஓர் விருப்பமான தெரிவாகக் காணப்பட்டதுடன் மற்றும் அரசாங்கம் மற்றும் இ.பி.ப.ஆ. இனால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முற்போக்கான நடவடிக்கைகள் என்பதனாலாகும். மேலதிகமாக, இ.பி.ப.ஆ. இன் தலைவரினால் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப.ப. ஆகியவற்றை உள்ளடக்கி நியமிக்கப்பட்ட கூட்டுக் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட கொ.ப.ப.ப. இன் செயற்பாடுகளது முனைவிலிருந்து முனைவு வரையான டிஜிட்டல் மயமாக்கல் இந்த ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தது. பங்குத் தரகுத் துறையின் செயற்திறனது ஒப்பீட்டு புள்ளிவிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவம்: 07)

**உருவம் 07: பங்குத் தரகுத் துறையின் சிறப்புக்கூறுகள்**

| | 2021 (ரூபா '000) | 2020 (ரூபா '000) | மாற்றம் % |
|---|---|---|---|
| புரள்வு | 13,555,296 | 4,303,668 | 215% |
| தேறிய தரகுக்கூலி | 12,764,289 | 3,929,094 | 225% |
| ஏனைய வருமானம் | 2,015,305 | 851,656 | 137% |
| செயற்பாட்டு இலாபம் /நட்டம் | 8,162,762 | 2,113,479 | 286% |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம் /நட்டம் | 7,723,787 | 1,905,233 | 305% |
| வரிக்கு பிந்திய இலாபம் /நட்டம் | 6,307,940 | 1,751,330 | 260% |
| மொத்த சொத்துக்கள்* | | 19,893,383 | 83% |
| மொத்த பொறுப்புக்கள் * | 23,956,798 | 12,943,874 | 85% |
| பங்குதாரர் நிதியங்கள்* | 12,533,662 | 6,949,509 | 80% |

*டிசம்பர் 31 இல் உள்ளவாறானது
மூலம்: பங்குத் தரகர்களினால் இ.பி.ப.ஆ. க்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்படா நிதிக் கூற்றுக்கள்

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறை

தொற்றிலிருந்து எழுகின்ற முன்நிகழ்ந்திராக சூழ்நிலைகளின் நிமித்தம் காணப்பட்ட செயற்பாட்டு சவால்களை கருத்திற்கொண்டு இ.பி.ப.ஆ. நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் (ந.அ.பொ.மு.க.) மேற்பார்வையில் இடர்நேர்கை அடிப்படையிலான அணுகுமுறையினை பலப்படுத்தியது.

ந.அ.பொ.மு.க. இன் தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வைகளை நாம் ஒரு இடர்நேர்கை அடிப்படையிலான அணுகுமுறையில் நடாத்தினோம். இங்கு விவேகம், செயற்பாடு, திரவத்தன்மை போன்ற முக்கிய இடர்நேர்கைகளை வலியுறுத்தியதுடன், நிதியியல் ஸ்திரத்தன்மையினை மதிப்பிடுவதற்கான முகாமைத்துவக் கொள்கைகளின் போதுமை மற்றும் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகள் என்பவையாகும்.

இவ்வாண்டில், சில கம்பனிகளில் இடர்நேர்கை அடிப்படையிலான தளத்திலான மேற்பார்வை நடாத்தப்பட்டதுடன் இவை அவற்றின் வணிக செயற்பாடுகள், இடர்நேர்கை முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றில் பொருத்தமான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் அவற்றின் இணக்கப்பாட்டு மட்டத்தினை உறுதிப்படுத்துவதற்காக கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பிட்ட தளத்திலான பரிசீலனைகள் தொற்றின் காரணமாக தொலைவிலிருந்தே நடாத்தப்பட்டன.

முறைமைப்படுத்தல் கோர்ப்புகளிலிருந்து தகவல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் இ.பி.ப.ஆ. தளத்திற்கப்பாலான மேற்பார்வையினை நடாத்தியது. நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவ கம்பனிகளுடன் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் குறிப்பிடப்பட்ட முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் அவற்றின் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தவும் இவர்களுடன் வழக்கமான ஊடாட்டத்தினை பேணுகின்றோம்.

மேலும், தளத்திற்கப்பாலான மீளாய்வுகளுடாக மூலதனச் சந்தையின் ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள் போதுமான நிதியியல் பலம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயல்திறனான இடர்நேர்கை முகாமைத்துவ நடைமுறைகள் பேணப்படுவதனை நாம் உறுதிப்படுத்தினோம்.

இ.பி.ப.ஆ. இனால் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த தேறிய மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கி செயற்படுவதற்கு ந.அ.பொ.மு.க. இன் நிதி நிலைமையானது உறுதியாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்கள் மற்றும் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் என்பவற்றை பகுத்தாய்வு செய்வதனூடாக தளத்திற்கப்பாலான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையானது மேலும் பலப்படுத்தப்பட்டது. இதற்கும் மேலாக, நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கையிலான அலகுடைமையாளர்கள், முதலீட்டு வரைகூறுகள் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடு என்பவற்றுடனான இணக்கப்பாடு ஆராயப்பட்டது. இது நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி கோவை, இ.பி.ப.ஆ. ஆல் வழங்கப்பட்ட பணிப்புரைகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளத்தக்க வரையறையினுள் அத்தகைய நிதியங்கள் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகும்.

ந.அ.பொ.மு.க. ஆல் இ.பி.ப.ஆ. உடன் தாக்கல் செய்யப்பட்ட நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களுக்கான விளம்பரங்கள் மற்றும் ஊக்குவிப்பு சடப்பொருட்களது மீளாய்வின்போது, இ.பி.ப.ஆ. இன் "நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி விளம்பரங்கள் மற்றும் ஊக்குவிப்பு சடப்பொருட்களுக்கான வழிகாட்டிகள்" இலான இ.பி.ப.ஆ. இன் பணிப்புரையுடன் பிறழ்நிலைகள் இ.பி.ப.ஆ. ஆல் இனங்காணப்பட்டன. அதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய குறித்த பிறழ்நிலைகள் ந.அ.பொ.மு.க. இனால் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாண்டில், மூலதனச் சந்தைக்கு இரண்டு புதிய நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களது அறிமுகத்திற்கு இ.பி.ப.ஆ. அங்கீகாரமளித்தது. இந்த நிதியங்கள் இ.ம.வ. இடமிருந்து அவசியமான அங்கீகாரத்தினை பெறுவதற்குட்பட்டு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் டொலர் பெயரிடப்பட்ட கருவிகளில் பிரதானமாக கவனஞ்செலுத்தும்.

31 டிசம்பர் 2021 இல் நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 194 பில்லியனாக (அண்ணளவாக) காணப்பட்டதுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்பொது அலகுடைமையாளர்களின் எண்ணிக்கையானது 13.4% ஆல் அதிகரித்துக் காணப்பட்டது. (உருவம் 08, 09)



திரு. சுனெத் பெரேரா
உதவிப் பணிப்பாளர், மேற்பார்வை



திருமதி. சவுமி கொடிப்பிலி
சிரேஷ்ட முகாமையாளர், மேற்பார்வை


**உருவம் 08 : நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி நிதியங்களின் ஒட்டுமொத்த நிலைமை**

| | 31.12.2021 இல் உள்ளவாறானது | 31.12.2020 இல் உள்ளவாறானது | % மாற்றம் |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் எண்ணிக்கை | 75 | 75 | |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதி (ரூபா பில்லியன் அண்ணளவாக) | 194.00 | 201.00 | (3.4) |
| அலகுடைமையாளர்களின் எண்ணிக்கை | 59,426 | 52,402 | 13.40 |
| வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை (அண்ணளவான மில்லியனில்) | 7,835 | 8,014 | (2.2) |
| உரித்துவத்திலான முதலீடு (ரூபா மில்லியன் அண்ணளவாக) | 17,586 | 14,019 | 25.4 |
| அரசாங்கப் பிணையங்களிலான முதலீடு (ரூபா மில்லியன் அண்ணளவாக) | 28,755 | 28,803 | (0.2) |
| ஏனைய கருவிகளிலான* முதலீடு (ரூபா மில்லியன் அண்ணளவாக) | 148,907 | 158,656 | (6.1) |

*வணிகத் தாள்கள், நம்பிக்கைப் பொறுப்பு சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள், வங்கி வைப்புகள் போன்றவை

மூலம்: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்

**31 டிசம்பர் 2021 இல் உள்ளவாறான நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் சந்தை பங்களிப்பு**




- சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்
- கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்
- என்டபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- சீபேங்க் எஸட் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்
- நெக்ஸ்ஜென் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட லிமிட்டட்
- ஜே பி வைனான்சியல் (பிறைவேட்) லிமிட்டட்
- கார்டியன் எக்கியூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்
- ஆர்ப்பிக்கோ அட்டரக்ஸியா எஸட் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்
- பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- எஸட்லைன் கெப்பிட்டல் (பிறைவேட்) லிமிட்டட்
- சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்
- சொவ்ட்லொஜிக் எஸட் மெனேஜ்மன்ட (பிறைவேட்) லிமிட்டட்
- ஏசியா செக்கியூரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்

## ஏனைய சந்தை இடையீட்டாளர்கள்

இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் பங்களிப்பானது மூலதனச் சந்தை இடையீட்டாளர்களது நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றை உள்ளடக்கும். இது அனைத்து உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களும் நிதியியல் ரீதியாக ஸ்திரமாக காணப்படுதல், தொழிற்பாட்டு ரீதியாக சாத்தியமாகக் காணப்படுதல், மற்றும் போதுமான உள்வாரி கட்டுப்பாடுகள் மற்றும் வழிமுறைகளைக் கொண்டுள்ளமை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காகும்.

சந்தை இடையீட்டாளர்களுக்கு ஏற்புடைய இடர்நேர்கைகளை இனங்காண்பதற்காகவும், கண்காணிப்பதற்காகவும், குறைப்பதற்காகவும் மற்றும் முகாமைப்படுத்துவதற்காகவும் தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வைகளில் ஓர் பயனுறுதிமிக்க மற்றும் திடமான வரம்புறுகையானது பிரத்தியேகமாக கடைப்பிடிக்கப்பட்டன. மீளாய்வாண்டில் காணப்பட்ட கோவிட்-19 தொற்றின் மத்தியில், பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. ஏனைய சந்தை இடையீட்டாளர்களில் தளத்திலான மேற்பார்வை மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வையினை நடாத்தியது.

2021 ஆம் ஆண்டில், மூன்று (3) முதலீட்டு முகாமையாளர் உரிமங்கள், இரண்டு (2) ஒப்புரவாளர் உரிமங்கள், ஒரு (1) கடன் தரப்படுத்தல் முகவர் உரிமம் மற்றும் ஒரு (1) பங்கு வர்த்தகர் உரிமம் ஆகியன வழங்கப்பட்டதுடன் நான்கு (4) எல்லைக்கடன் வழங்குநர்கள் அவர்களது வணிகத்தினை தொடர்வதற்கு விரும்பாததன் நிமித்தம் அவர்களது உரிமங்களை மனமுவந்து ஒப்படைத்தார்கள். (உருவம் 10)

# செயற்பாட்டு மீளாய்வு

**உருவம் 10: சந்தை இடையீட்டாளர்களின் நிதியியல் சிறப்புக்கூறுகள் (ரூபா மில்லியனில் )**

| பிரிவு | மொத்த வருவாய் | வரிக்கு முந்திய தேறிய இலாபம் | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| எல்லைக்கடன் வழங்குநர்கள் | 68,572 | 28,389 | 687,456 | 556,899 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | 2,694 | 1,709 | 4,268 | 729 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 233 | 81 | 325 | 84 |
| தீர்வக இல்லம் | 614 | 484 | 2388 | 1281 |
| பன்நோக்கு நிறுவனங்கள்* | | | | |
| எல்லைக்கடன் வழங்குநர் / ஒப்புரவாளர் | 209,060 | 125,172 | 6,359,981 | 5,712,235 |
| முதலீட்டு முகாமையாளர் / ஒப்புரவாளர் | 292,515 | 44,802 | 3,800,921 | 3,595,267 |
| எல்லைக்கடன் வழங்குநர் /ஒப்புரவாளர் /முதலீட்டு முகாமையாளர் | 5,525 | 882 | 34,047 | 29,937 |

*இ.பி.ப.ஆ. ஆல் பன்முக உரிமங்கள் வழங்கப்பட்ட நிறுவனங்கள்


## கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் வலியுளறுத்தல்

மூலதனச் சந்தையின் நம்பகத்தன்மையானது கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிகளின் வலியுறுத்தல் போன்றவற்றின் கலப்பினூடாக மூலதனச் சந்தையின் நம்பகத்தன்மையானது பராமரிக்கப்படுகின்றது. சந்தை கண்காணிப்பானது, குறிப்பாக, ஒரு மூலதனச் சந்தைக்கான சாத்தியமான பாதிப்பினை எதிர்பார்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. கண்காணிப்பானது, சாத்தியமான சந்தை துர்நடத்தைகளை கண்டுபிடிப்பதற்கான மற்றும் தடுப்பதற்கான மற்றும் ஒழுங்கற்ற வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து சந்தைக்கான இடையூறுகளை தவிர்ப்பதற்கான ஒரு முன்கூட்டிய வழிமுறையாக பார்க்கப்படுகின்றது. பிணையங்கள் சட்டங்களின் சாத்தியமான மீறுகைகள் காணப்படுமிடத்து, இவை அதன்பின்னர் மேலும் புலனாய்வு செய்யப்பட்டு அவசியமானவிடத்து வலியுறுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

### கண்காணிப்பு

இ.பி.ப.ஆ. ஒரு நியாயமான, ஒழுங்கான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையினை உருவாக்கி பராமரிக்கும் அதன் முக்கிய முறைமைப்படுத்தல் குறிக்கோளினுள் செயற்படுகின்றது. எனவே, கண்காணிப்பு செயற்பாடானது மூலதனச் சந்தையின் பாதுகாப்பு மற்றும் நேர்மையினை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்த நோக்கத்திற்காக, இ.பி.ப.ஆ. சந்தையில் காணப்படும் அசாதாரணமான அசைவுகள் மற்றும் போக்குகளில் வழக்கமான அவதானிப்புகள் மற்றும் பகுப்பாய்வினூடாக தடைசெய்யப்பட்ட நடத்தையிலான மேற்பார்வைக்கு ஒரு செயற்திறனான அணுகுமுறையினை பராமரிக்கின்றது. இ.பி.ப.ஆ. இன் ஆதிக்கவரம்பினுள் வருகின்ற சாத்தியமான சந்தை தவறுகள் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் 'பகுதி ஏ' இல் குறிப்பிடப்பட்டுள்ளன. நம்பத்தகுந்த தடைகளுக்கு வழிசமைப்பதற்காக முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை இயக்கவியலுக்கிடையே ஓர் சமநிலையினை ஏற்படுத்துவதற்காக கண்காணிப்பு செயற்பாடானது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. சந்தை தவறுகளை இனங்காண்பதில் நடைமுறைப்படுத்தப்பட்ட மூலோபாயங்களுடன் பயனுறுதிமிக்க கண்காணிப்பிற்கான அடிப்படை கூறுகளாக கண்டுபிடிப்பு, நுண்ணறிவு மற்றும் தடுப்பான்கள் காணப்படுகின்றன. (உருவம்: 11)

**உருவம் 11: பயனுறுதிமிக்க கண்காணிப்பின் கூறுகள்**





**நம்பத்தகுந்த தடைகளுக்கு வழிசமைப்பதற்காக முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை இயக்கவியலுக்கிடையே ஒரு சமநிலையினை ஏற்படுத்துவதற்காக கண்காணிப்பு செயற்பாடானது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.**

பிணையங்கள் வர்த்தகத்தில் சாத்தியமான சந்தை துர்நடத்தையினை தவிர்க்கும் நோக்குடன் விலை மற்றும் அளவுகளிலான அசாதாரண அசைவுகளை தீர்மானிப்பதற்காக இ.பி.ப.ஆ. நிகழ்நேர வர்த்தகத் தரவுகளை அவதானிக்கின்றது. அவசியமானவிடத்து, சந்தேகத்திற்கிடமான வர்த்தக நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் தடைசெய்யப்பட்ட நடத்தையினை தெளிவாக இனங்கண்டு கண்காணிப்பு பரிந்துரைகள் /குறிப்புகள் ஊடாக பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக ஓர் விரிவான பகுப்பாய்வு மேற்கொள்ளப்படும். அதன் விளைவாக, தடைசெய்யப்பட்ட நடத்தை தொடர்பாக நேரகாலத்துடனான மற்றும் விகிதப்படியான நடவடிக்கைகள், வர்த்தகச் சூழல் மற்றும் நிலவுகின்ற சந்தையிலான தாக்கம் என்பவற்றை கருத்திற்கொண்டு, மேற்கொள்ளப்படுகின்றன. பயனுறுதிமிக்க கண்காணிப்புக்காக கடைப்பிடிக்கவேண்டிய வரிசைமுறையான நடவடிக்கைகளை குறிப்பிடுகின்ற இ.பி.ப.ஆ. இன் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட செயல்முறை செயல்வழிப்படம் 2021 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.


வர்த்தக நடவடிக்கைகளது டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகளின் நிமித்தம் இளம் சந்ததியினரின் துடிப்பான பங்குபற்றலுடன் சந்தையானது தொடர்ச்சியாக ஒரு பெருக்கத்தினை கண்டது. முக்கியமாக 18 மற்றும் 39 வயதுகளுக்கிடைப்பட்ட சனத்தொகையினர் சந்தையில் ஒரு துடிதுடிப்பான பங்குபற்றலை வெளிப்படுத்தினார்கள். இது 2021 ஆம் ஆண்டில் இயங்கலை மேடைகளுடாக முடுக்கிவிடப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளை விளைவித்தது. (உருவம்: 12)

**உருவம் 12: வயதுவாரியான சந்தை பங்குபற்றல்**




டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட தடையற்ற வர்த்தக வசதிகள் சந்தையில் அதிகரித்த உத்வேகத்திற்கு மேலும் பங்களித்ததுடன் நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து முதலீட்டாளர்கள் சந்தையில் உள்நுழைந்தார்கள். இந்த முதலீட்டாளர்கள் வருடம் முழுவதும் துடிதுடிப்பாக வர்த்தகம் செய்தார்கள். (உருவம்: 13)

உருவம் 13: சந்தையில் மாவட்ட ரீதியான பங்களிப்பு





சந்தையில் அதிகமான புதியவர்களது பங்குபற்றலின் தாக்கத்திற்கு பதிலளிக்கும்முகமாக, இ.பி.ப.ஆ. சந்தையில் அசாதாரணமான அபிவிருத்திகளை அவதானிப்பதற்காக ஒரு முழுமையான அணுகுமுறையினை கடைப்பிடித்தது. இது சமூக ஊடக மேடைகள் மற்றும் ஏனைய பொது செயற்களங்களில் பகிர்ந்துகொள்ளப்படும் உள்ளீடுகளை கண்காணிக்கும் அளவிற்கு அதன் வரையெல்லை விரிவாக்கப்பட்டது. இதற்கும் மேலாக, பொருத்தமானவிடத்து, கொ.ப.ப. இடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகள் அல்லது இ.பி.ப.ஆ. இன் ஏனைய பிரிவுகளின் உள்வாரியான கண்டுபிடிப்புகள் அல்லது வெளிவாரி தரப்பினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற குறிப்பிட்ட முறைப்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் வர்த்தகமானது சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தையினை எழுப்புகின்றதா என்பதனை தீர்மானிப்பதற்காக ஆரம்ப பகுப்பாய்வுகள் நடாத்தப்பட்டன.

### செயல்திறனான கண்காணிப்பு

முதலீட்டாளர் சமூகத்தின் நம்பகத்தன்மையினை சீராக்குவதற்கு முன்கூட்டிய செயல்முறைகளை இ.பி.ப.ஆ. தீவிரமாக ஊக்கப்படுத்துகின்றது. செயற்திறனான கண்காணிப்பினை செயலாற்றும் குறிக்கோளுக்கமைய, மேற்கொண்ட அவதானிப்புகளின் தீவிரத்திற்கேற்ப 2021 ஆம் ஆண்டில் 35 விடயங்களில் முதலீட்டு ஆலோசகர்கள், இணக்கப்பாட்டு அதிகாரிகள் மற்றும் முதலீட்டாளர்களிடமிருந்து உடனடியாக தொலைபேசி அழைப்புகளுடாக விளக்கங்கள் கோரப்பட்டதுடன் முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய பங்காளிகளிடமிருந்து கிடைத்த 37 கடிதங்களுடாக விளக்கங்கள் தொடரப்பட்டன. இச்செயற்திறனான அணுகுமுறையானது சந்தையின் நேர்மையினை பராமரிப்பதில் ஏதேனும் துர்நடத்தையினை ஏற்படுத்தியிருக்கக்கூடிய அல்லது ஏற்படுத்தியுள்ளதாகக் தோன்றக்கூடிய முயற்சிகளை கட்டுப்படுத்துவதற்கு உதவியது. (உருவம்: 14)

**உருவம் 14: சந்தேகத்திற்கிடமான தவறுகளின் வகைகள்**




### கண்காணிப்பு பரிந்துரைகள் மற்றும் குறிப்புகள்

இ.பி.ப.ஆ. இன் கண்காணிப்பு கண்டுபிடிப்புகள், கொ.ப.ப. இன் கண்காணிப்பு பரிந்துரைத்தல் மற்றும் முறைப்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் பாரதூரமான சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தைகளை இனங்கண்டவுடன் இந்த கண்காணிப்பு பரிந்துரைத்தல்கள் - கண்காணிப்பு குறிப்புகள் என்பவற்றை கண்காணிப்பு மற்றும் புலனாய்வு குழுவுக்கு (க.பு.கு) பின்வரும் வரம்புறுகையின் கீழ் ஆழ்ந்தாராய்விற்காக மற்றும் தீர்மானத்திற்காக அனுப்பிவைக்கப்படுகின்றன,

1. ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியின் பிணையங்கள் தொடர்பாக பிரசுரிக்கப்படாத விலை உணர்திறனுடைய தகவல்களை வைத்திருக்கும் ஒரு தொடர்புடைய நபர் அக்கம்பனியின் பங்குகளில் வர்த்தகம் செய்தல்
2. ஒரு துடிப்பான வர்த்தகம் அல்லது சந்தையில் ஒரு பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் தோற்றத்தினை அல்லது கருத்துப்பதிவினை உருவாக்குதல், உருவாக்குவதற்கு துாண்டும் அல்லது உருவாக்குவதற்கு கணிப்பிட்ட எதனையும் செய்தல்

2021 ஆம் ஆண்டில், 21 கண்காணிப்பு பரிந்துரைகள் -குறிப்புகள் வெற்றிகரமாக தொகுக்கப்பட்டன. இந்த பரிந்துரைகள் மற்றும் குறிப்புகள் சாத்தியமான சந்தை கையாளுகைகள், முன்னோடுதல் மற்றும் சலவை வர்த்தகம் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன.

# செயற்பாட்டு மீளாய்வு

### பகுப்பாய்விற்காக தொழில்நுட்பத்தினை பயன்படுத்துதல்

உலக வங்கியின் நிதியளித்தல் திட்டமான – "நிதியியல் துறை நவீனமயப்படுத்தல்" இன் கீழ் இ.பி.ப.ஆ. ஒரு தகுதியுடைய அறிவுரைஞரது சேவையினை கண்காணிப்பு பொறுப்பேற்புகளை வலுப்படுத்துவதற்காக நடைமுறையிலுள்ள செயல்முறைகளது ஒழுங்குபடுத்துதல் மற்றும் கொள்திறன் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் நோக்கினைக் கொண்டு பெற்றுக்கொண்டது. தற்போதைய கண்காணிப்பு முறையானது அதன் செயற்பாடுகளை தரமுயர்த்துவதன் மூலம் மேலும் உருமாற்ற முடியும் எனும் கருத்தினைக் கொண்டுள்ள நிபுணத்துவ அறிவுரையின் அடிப்படையில் இ.பி.ப.ஆ. ஒரு நவீன கண்காணிப்பு முறையினை கொள்வனவு செய்யும் செயல்முறையிலுள்ளது.

2021 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப மேம்படுத்தல்களில் கண்காணிப்பு செயற்பாடானது மிகஉயர்ந்த முக்கியத்துவத்தினை பெற்றது. புதிய மற்றும் முற்போக்கான பகுப்பாய்வு கருவிகளினூடாக தரப்படுத்தல் மூலம் பிரிவுவாரியான செயற்திறனை மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இவை ஒருமைப்பாடு, ஒப்பிடுதிறம், முன்கணிப்புத்தன்மை மற்றும் பகுப்பாய்வின் ஒத்திசைவு மற்றும் அறிக்கையிடும் செயல்முறை என்பவற்றை மேம்படுத்தும். உயர் தொழில்நுட்ப ஆற்றலுடைய அத்தகைய பகுப்பாய்வுக் கருவிகள் அசாதாரணமான வர்த்தக மாதிரிகளை உடனடியாக இனங்காண்பதற்கும், சந்தை வெளிப்படுத்தல்களுடன் வர்த்தகத் தரவுகளை துல்லியமாக பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் சந்தேகத்திற்கிடமானவை என குறியிட்ட வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக செயற்திறனுடன் உண்மைகளை ஆவணப்படுத்துவதற்கும் துணைபுரியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தொழில்நுட்ப பொறிமுறைகளிலான முதலீடு பாரியளவு தொகையான தரவுகளை எளிதில் பகுப்பாய்வு செய்வதற்கு வழிவகுக்கும்.



திரு. பிரபாவ்ஷ் வணிகதுங்க
பணிப்பாளர், கண்காணிப்பு

### புலனாய்வுகள்

புலனாய்வுப் பிரிவானது இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள், அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும்/அல்லது ஒழுங்குவிதிகளது சந்தேகத்திற்கிடமான மீறுகைகளில் புலனாய்வுகளை நடாத்துகின்றது. மேலும், புலனாய்வுகளின்போது வெளிக்கொணரப்படும் பருப்பொருள் /சான்றுகளின் அடிப்படையில் பொருத்தமான வலியுறுத்தல் நடவடிக்கைகளை பரிந்துரைப்பது தொடர்பாக இப்பிரிவானது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்கின்றது.



திருமதி, அயந்தி அபேவிக்கிரம
பணிப்பாளர், சட்டம் மற்றும வலியுறுத்தல் மற்றும் பதில் பணிப்பாளர், புலனாய்வுகள்



செல்வி, மதுகயனி பலபிட்டிய
உதவிப் பணிப்பாளர், புலனாய்வுகள்



திரு. டி.எம்.ஜி.பிரியந்த
உதவிப் பணிப்பாளர், புலனாய்வுகள்

மீறுவோருக்கெதிரான வலியுறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது இப்பிரிவானது இ.பி.ப.ஆ. இன் சட்ட மற்றும் வலியுறுத்தல் பிரிவிற்கும் துணைபுரிகின்றது.

2021 ஆம் ஆண்டில், முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட இருபத்து ஒன்று (21) புலனாய்வுகளில் ஒன்பது (09) புலனாய்வுகளை இப்பிரிவானது நிறைவுசெய்தது. இவ்வருடத்தில் நிறைவுசெய்யப்பட்ட நான்கு (04) புலனாய்வுகளுக்கு வலியுறுத்தல் நடவடிக்கைகள் அவசியம் என தீர்மானிக்கப்பட்டது. ஐந்து (05) புலனாய்வுகள், இ.பி.ப.ஆ. இன் ஏற்பாடுகள், அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் /அல்லது ஒழுங்குவிதிகளில் மீறுகைகளை நிலைநாட்டுவதற்கான சான்றுகள் இல்லாதவிடத்து வலியுறுத்தல் நடவடிக்கை பரிந்துரைக்கப்படாதவாறு நிறைவுசெய்யப்பட்டன. மேலும், ஏனைய இரண்டு (02) புலனாய்வுகள் தொடர்பாக வெளிக்கொணரப்பட்ட கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் எட்டு (08) நபர்களுக்கு எதிரான வலியுறுத்தல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட இரண்டு புலனாய்வுகளுடன் தொடர்புடைய வேறு சில நபர்களுக்கு எதிரான புலனாய்வு நடவடிக்கைகள் வருட இறுதியில் நிகழ்ந்தவண்ணமுள்ளன.

மீளாய்வாண்டில், பிரிவினால் நடாத்தப்பட்ட ஆறு (06) புலனாய்வுகளது கண்டுபிடிப்புகளது அடிப்படையில் பின்வரும் வலியுறுத்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது :

- சாட்டியுரைக்கப்பட்ட உள்ளுறைபர் வர்த்தகம் தொடர்பாக ஒன்பது (09) நபர்களுக்கு காரணங்காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன
- சாட்டியுரைக்கப்பட்ட சந்தைக் கையாளுகை தொடர்பாக ஒன்பது (09) நபர்களுக்கு காரணக்காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன மற்றும்
- பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் சாட்டியுரைக்கப்பட்ட மீறுகைகள் தொடர்பாக மூன்று (03) நபர்களுக்கு காரணங்காட்டு கடிதங்கள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மேலும், ஒரு (01) புலனாய்வின் பொருத்தமான கண்டுபிடிப்புகள் இலங்கை மத்திய வங்கிக்கு (இ.ம.வ.) அவசியமான நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

மேலாக, 2021 ஆம் ஆண்டில், ஐந்து (05) முழுநீள புலனாய்வுகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் பதினேழு (17) புலனாய்வுகள் நடந்தவண்ணம் இருந்ததுடன் குறிப்பிட்ட புலனாய்வுகளின் முன்னேற்றம் மற்றும் சுருக்கமானது கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளிலான சந்தேகத்திற்கிடமான உள்ளுறைபவர் வர்த்தகத்தில் நடாத்தப்பட்ட ஐந்து (05) புலனாய்வுகளில், ஒரு (01) புலனாய்வு 2021 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் நான்கு (04) புலனாய்வுகள் வருட இறுதியில் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளிலான சந்தேகத்திற்கிடமான விலை /சந்தை கையாளுகையில் நடாத்தப்பட்ட ஐந்து (05) புலனாய்வுகளில், இரண்டு (02) புலனாய்வுகள் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இரண்டு (02) புலனாய்வுகள் வருட இறுதியில் இறுதிக் கட்டத்தில் உள்ளன.
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளிலான சந்தேகத்திற்கிடமான விலை -சந்தை கையாளுகை மற்றும் /அல்லது உள்ளுறைபவர் வர்த்தகத்தில் நடாத்தப்பட்ட ஆறு (06) புலனாய்வுகளில், ஐந்து (05) புலனாய்வுகள் வருட இறுதியில் இறுதிக் கட்டத்தில் உள்ளன.
- ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியினால் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகளிலான சாத்தியமான மீறுகையில் புலனாய்வு நடாத்தப்பட்டதுடன் இது வருட இறுதியில் இறுதிக் கட்டத்தின் உள்ளது.

மேற்குறிப்பிட் புலனாய்வுகளுக்கும் மேலாக, இப்பிரிவானது மீளாய்வாண்டில் பின்வரும் விடயங்களில் ஈடுபட்டது.

- மற்றுமோர் முறைமைப்படுத்தல் முகவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையினைத் தொடர்ந்து கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (கொ.ப.ப.) பட்டியலிடப்பட்ட பிணையங்களில் நிறைவேற்றப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்து பொருத்தமான பரிந்துரைகளை வழங்குமாறு இப்பிரிவானது ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் அறிவுறுத்தப்பட்டது. இதற்கமைய, இப்பிரிவானது 16 ஆரம்ப கண்டுபிடிப்பு அறிக்கைகளை தொகுத்தது.
- முழுநீள புலனாய்வுகளாக எடுத்துக்கொள்ளக்கூடிய கொ.ப.ப. இன் பரிந்துரைகளை (16 ஜனவரி 2020 முதல் 22 மார்ச் 2021 வரையான காலப்பகுதியில் இ.பி.ப.ஆ. ஆல் பெறப்பட்ட 20 கொ.ப.ப. பரிந்துரைகளில் ) இனங்காணுமாறும் அதன் ஆரம்ப கண்டுபிடிப்புகளை ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு அறியத்தருமாறும் இப்பிரிவானது அறிவுறுத்தப்பட்டது. இதற்கமைய, இப்பிரிவானது இவ்வருடத்தில் இவ்விடயத்தில் ஈடுபட்டது. வருட இறுதியில் அறிக்கைகளில் சில இறுதிக் கட்டத்தில் காணப்பட்டன.
- மீளாய்வாண்டில், இப்பிரிவானது சட்டம் மற்றும் வலியுறுத்தல் மற்றும் கண்காணிப்புப் பிரிவுகளுடன் இணைந்து ஒரு வலியுறுத்தல் விடயத்தில் ஈடுபட்டது.
- நவம்பர் 2021 இல், கண்காணிப்புப் பிரிவானது இ.பி.ப.ஆ. ஆல் 04 மார்ச் 2021 தொடக்கம் 08 ஒக்டோபர் 2021 வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட 14 மேலதிக கொ.ப.ப. பரிந்துரைகள் புலனாய்வுப் பிரிவின் கூர்ந்தாராய்வு / மீளாய்விற்காக பகிரப்பட்டது. இப்பிரிவானது இவ்விடயத்தில் ஈடுபட்டதுடன் பின்னர் இப்பிரிவானது குறித்த 14 கொ.ப.ப. பரிந்துரைகளில் புலனாய்வுகளை நடாத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

### வலியுறுத்தல் நடவடிக்கை

ஆணைக்குழுவின் வழிகாட்டல் மற்றும் தீர்மானத்திற்கேற்ப வலியுறுத்தல் நடவடிக்கைகள் இ.பி.ப.ஆ. ஆல் மேற்கொள்ளப்படுகின்றன.

### காரணங்காட்டு மற்றும் வழக்கறிவித்தல்களது வழங்கல்

- ஒரு உடைமைக் கம்பனியின் தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு ஒரு "காரணங் காட்டுதல்" வழங்கப்பட்டு, இ.பி.ப.ஆ. விதிகளின் விதி 13 மற்றும் விதி 14 இன் மீறுகையாக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் சில கையாளும் வர்த்தகங்கள் குழுமக் கம்பனிகளுடன் தொடர்புடைய பல கணக்குகளினால் மேற்கொள்ளப்பட்டதனால், உடைமைக் கம்பனி குழுமக் கம்பனிகளுக்கு சொந்தமானது, அவருக்கெதிராக இ.பி.ப.ஆ. ஏன் நடவடிக்கை மேற்கொள்ளப்படக்கூடாது என்பதை விளக்குமாறு இது வழங்கப்பட்டது.
- ஒன்பது இனங்காணப்பட்ட முதலீட்டாளர்களுக்கு 'வழக்கறிவித்தல் / அல்லது காரணங் காட்டு அறிவித்தல்' பின்வரும் காரணத்திற்காக இ.பி.ப.ஆ. ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என விளக்கமளிக்குமாறு வேண்டப்பட்டார்கள். ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் அவர்களது அசாதாரண வர்த்தக தோரணம் கம்பனியின் பங்குகளில் கணிசமானளவு விலை அதிகரிப்பினை ஏற்படுத்தியதுடன் இது இ.பி.ப.ஆ. ஆல் அசாதாரணமானது எனக் கருதப்பட்டது.

### எச்சரிக்கைகளது வழங்கல்

கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்ட பங்குகளுக்கு ஒரு பங்கு முதல் 100 பங்குகளுக்கும் குறைவான கொள்வனவு கட்டளைகளை பயன்படுத்துவதன் மூலம் வேண்டத்தகாத விலைத் தளம்பல் / மாற்றங்களை ஏற்படுத்தியதற்கு எதிராக ஒன்பது இனங்காணப்பட்ட முதலீட்டாளர்களுக்கு "எச்சரிக்கைகள்" வழங்கப்பட்டன.

### வழக்காடல்கள்

#### இ.பி.ப.ஆ. எதிர் எம். ஐ சம்சுதீன் மற்றும் எம். பி. நிசுஹர் - நீநீ S/5322/17

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 113 (பி) மற்றும் 102 இனை 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனையும் சேர்த்து வாசித்து இவற்றின் கீழ் தண்டிக்கத்தகு சந்தை/விலை கையாளுகைக்கு சதி செய்தமை மற்றும் சந்தை/விலை கையாளுகையினை செய்தமைக்காக மேற்குறிப்பிட்ட வழக்கினை இ.பி.ப.ஆ. கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் எம். இம்தியாஸ் சம்சுதீன் மற்றும் பாவிக் நிஷார் என்பவர்களுக்கெதிராக தாக்கல் செய்தது.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

#### டலிப் தவ்வீக் அல் நகீப் எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. வழக்கு இலக்கம் WP/HCCA/LA/158/2017 / WP/HCCA/CCL/175/2017(F)

விண்ணப்பதாரி ஓர் பட்டியலிடப்படா கம்பனியின் விடயங்களில் புலனாய்வுகளை நடாத்துமாறு ஓர் கட்டளையினை வேண்டி இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. க்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் முன்னால் ஓர் விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார்.

மதிப்பிற்குரிய கொழும்பு மாவட்ட நீதிபதியினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக மேன்முறையிடுவதற்கான அனுமதி வேண்டி மேற்குறிப்பிட்ட மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பதாரி வழக்கினை தாக்கல் செய்தார். குறிப்பிட்ட வழக்கு இலக்கம் DSP/20/2016 டலிப் தவ்வீக் அல் நகீப் அவர்களால் இ.பி.ப.ஆ. க்கும் கொ.ப.ப. க்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்டது.

குறிப்பிட்ட மேன்முறையீடானது நிலுவையிலுள்ளது.

#### மெக்பெக் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் எதிர் இ.பி.ப.ஆ. வழக்கு இலக்கம் HCMCA 217/2007

இ.பி.ப.ஆ. விதிகளுக்கு முரணாக சில முக்கியமான தகவல்களை உடனடியாக வெளிப்படுத்தாமைக்காக அறிவுபடைத்த கொழும்பு கோட்டை நீதிவான் அவர்களினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட நான்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் தீர்ப்புக்கும் அவர்களது தண்டனைத் தீர்ப்புக்கும் எதிராக மாகாண மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். நீதிமன்றமானது மூன்று குற்றஞ் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிரான தீர்ப்பினை மீளுறுதிபடுத்தியது ஆனால் மேன்முறையீட்டிலுள்ள தண்டனைத் தீர்ப்பினைக் குறைத்தது. குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பு இரண்டிற்கும் எதிரான 6ஆம் குற்றஞ்சாட்டப்பட்ட மேன்முறையீட்டாளரது மேன்முறையீடானது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

#### இ.பி.ப.ஆ. எதிர் லங்கா கன்னங்கர, கபில சேனாரத், பாரிக் வர்கான், மற்றும் ரவிந்திர மல்லவாரச்சி, நீநீ/கோட்டை/13736/19

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி

## செயற்பாட்டு மீளாய்வு

இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறாகக் கருதப்படும் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு கூட்டு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக நான்கு முதலீட்டு ஆலோசகர்களுக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

**இ.பி.ப.ஆ. எதிர் டபிள்யு.கே.எச். வெகாபிட்டிய, திலக் டி சில்வா மற்றும் தக்சிலா ஹூ லங்கமுவ, நீநீ/கோட்டை/16967/20**

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் தண்டிக்கத்தகு தவறாகக் கருதப்படும் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக மேற்குறிப்பிட்ட நபர்களுக்கெதிராக இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

**இ.பி.ப.ஆ. எதிர் சேன யத்தெஹிகே மற்றும் எஸ். தினமணி, நீநீ/கோட்டை/12639/19**

**சேன யத்தெஹிகே எதிர் இ.பி.ப.ஆ., மே.நீ./ பேராணை/417/2017**

**சேன யத்தெஹிகே எதிர் இ.பி.ப.ஆ., உநீ/விசேடம்:. LA 100:19**

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறு பிரிவு 32 இனை தண்டனைக் கோவையின் பிரிவு 102 உடன் சேர்த்து வாசிக்கும்போது உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக கலாநிதி. சேன யத்தெஹிகே மற்றும் திரு. சுப்பிரமணியம் தினமணி ஆகியோருக்கெதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட நபர்களுக்கெதிராக அறிவுபடைத்த நீதவான் அவர்களினால் அழைப்பாணை விடுக்கப்பட்டது. அதன்பின்னர், முதலாவது குற்றஞ் சுமத்தப்பட்டவர் இ.பி.ப.ஆ. க்கு எதிராக ஒரு பேராணை விண்ணப்பத்தினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு வேண்டி தாக்கல் செய்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றமானது நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு மறுப்பு தெரிவித்து கட்டளையினை வழங்கியதுடன் அறிவித்தல் வழங்கலில் எழுத்துமூல சமர்ப்பணங்களை தாக்கல் செய்யுமாறு வேண்டியது.

அதன்பின்னர், பேராணை விண்ணப்பம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டளைக்கு எதிர்ப்பு தெரிவித்து குற்றஞ்சாட்டப்பட்டவர் உயர்நீதிமன்றத்திற்கு விசேட அனுமதிக்கான மேன்முறையீடு செய்தார். சத்தியம் மற்றும் உறுதிப்படுத்தல் கட்டளைச்சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் தூதரகச் செயற்பாடுகள் சட்டத்திற்கமைய விண்ணப்பதாரியினால் நீதிமன்றத்தின் முன்னே சத்தியக்கடதாசி முறையாகத் தாக்கல் செய்யப்படவில்லை, காணப்படவில்லை என்ற ஆட்சேபனையை இ.பி.ப.ஆ. முன்வைத்தது. ஆரம்ப ஆட்சேபனைகளிலான கட்டளையினை நீதிமன்றம் ஒதுக்கி வைத்ததுடன் நீதவான் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னால் உள்ள நடவடிக்கைகள் உயர்நீதிமன்றத்தின் கட்டளை வரும் வரை நிறுத்திவைக்கப்பட்டன.

உயர்நீதிமன்றத்தின் கட்டளையானது நிலுவையிலுள்ளது.

இ.பி.ப.ஆ. எதிர் செல்வி. தனுஷ்யா குலாம்ஹுசேன் (நீநீ கோட்டை/17599/20)

இ.பி.ப.ஆ. எதிர் திரு. சந்தானம் ராஜு (நீநீ கோட்டை /17600/20)

இ.பி.ப.ஆ. மேற்குறிப்பிட்ட நபர்களுக்கெதிராக இ.பி.ப.ஆ. ஆல் நடாத்தப்படும் ஓர் புலனாய்வுடன் தொடர்புடைய ஒரு கூற்றினை பதிவுசெய்வதற்காக அழைப்பாணை விடுக்கப்பட்டபோது இ.பி.ப.ஆ. இன் முன்னால் தோன்றாமைக்காக வழக்கினை தாக்கல் செய்தது.

இவ்விடயங்கள் நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

**நகர அபிவிருத்தி அதிகாரசபை (ந.அ.அ.) எதிர் ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. – மே.நீ. (சிவில்)/11/2021/ CO**

ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. இன் ஓர் பாரிய பங்குதாரரான ந.அ.அ. கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 225 இன் கீழ் அதே சட்டத்தின் பிரிவுகள் 226, 520 மற்றும் 521 உடன் சேர்த்து வாசித்து, ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. க்கு எதிராக ஒரு விண்ணப்பத்தினை தாக்கல் செய்தது. இங்கு ஒனாலி ஹோல்டிங்ஸின் நடவடிக்கைகள் கம்பனியின் நலன்களுக்கு முரணான விதத்தில் நடாத்தப்படுவதாகவும் சமீபத்தில் இன்னுமோர் பட்டியலிடப்பட்ட கம்பனியானது ஒனாலி ஹோல்டிங்ஸின் பங்குகளது உரித்துவத்தினூடாக கம்பனியின் கட்டுப்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது என குற்றம் சுமத்தப்பட்டது.

ந.அ.அ., ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி., லங்கா ரியலிட்டி இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி, ரேணுகா கெப்பிட்டல் பி.எல்.சி, பி.டபிள்யு கோர்ப்பரேட் செக்கடேரியல் (பிரைவேட் ) லிமிட்டட் ஆகியோரை முறையே 1 முதல் 5 ஆவது பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளதுடன் இ.பி.ப.ஆ. 06ஆவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இ.பி.ப.ஆ. க்கு எதிராக எந்தவிதமான நிவாரணமும் வேண்டப்படவில்லை.

இந்த விடயத்தில், ந.அ.அ. ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை வேண்டுகின்றது :

அ. 02ஆவது பிரதிவாதி கம்பனியினால் 01ஆவது பிரதிவாதிக் கம்பனியின் 50.8%ஆன பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டு கம்பனியின் கட்டுப்பாட்டில் கணிசமானளவு மாற்றம் ஏற்பட்டுள்ளதனால், 01ஆவது பிரதிவாதிக் கம்பனியின் அலுவல்கள் 01ஆம் பிரதிவாதிக் கம்பனியின் நலன்களுக்கு முரணான விதத்தில் மேற்கொள்ளப்படும் அல்லது மேற்கொள்ளப்படலாம் என ஒரு வெளிப்படுத்தலை வழங்குவதற்காக்

ஆ. விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்து இ.பி.ப.ஆ. மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆகியவற்றின் விசாரணைகள் நிறைவுறும்வரை 01ஆவது பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர்களது ஏதேனும் பொதுக் கூட்டத்தில் 02ஆவது பிரதிவாதி, 01ஆவது பிரதிவாதி கம்பனியின் பங்குகளில் 43.82% க்கு அதிகமான ஏதேனும் பங்குகளில் வாக்குரிமைகளை பயன்படுத்துவதற்கு உரித்துடையவரல்ல என ஒரு வெளிப்படுத்தலுக்காக்

இ. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடுகளுடன் 01ஆவது பிரதிவாதி கம்பனியின் பொது உரித்துடைமையானது இணக்கப்பாடு காணும்வரை, 01ஆவது பிரதிவாதிக் கம்பனியின் பங்குதாரர்களது ஏதேனும் பொதுக் கூட்டத்தில் 02 ஆவது பிரதிவாதி, 01 ஆவது பிரதிவாதிக் கம்பனியின் பங்குகளில் 43.82% க்கு அதிகமான ஏதேனும் பங்குகளில் வாக்குரிமைகளை பயன்படுத்துவதற்கு உரித்துடையவரல்ல என ஒரு வெளிப்படுத்தலுக்காக்

ஈ. விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்பட்ட முறையீடுகளினுள் இ.பி.ப.ஆ. மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆகியவற்றின் விசாரணைகள் நிறைவுறும் வரை ஏதேனும் பொதுக் கூட்டத்தில் 02 ஆவது பிரதிவாதி, 01 ஆவது பிரதிவாதிக் கம்பனியின் பங்குகளில் 43.82% க்கு அதிகமான ஏதேனும் பங்குகளில் வாக்குரிமைகளை பயன்படுத்துவதை தடைப்படுத்தும் ஒரு இடைக்கால கட்டளைக்காக்

உ. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடுகளுடன் 01ஆவது பிரதிவாதி

கம்பனியின் பொது உரித்துடைமையானது இணக்கப்பாடு காணும்வரை, ஏதேனும் பொதுக் கூட்டத்தில் 02 ஆவது பிரதிவாதி, 01 ஆவது பிரதிவாதிக் கம்பனியின் பங்குகளில் 43.82% க்கு அதிகமான ஏதேனும் பங்குகளில் வாக்குரிமைகளை பயன்படுத்துவதை தடைப்படுத்தும் ஒரு இடைக்கால கட்டளைக்காக் மற்றும்

ஊ. 01ஆவது பிரதிவாதிக் கம்பனியின் ஓர் பொதுக் கூட்டத்தில் 01ஆவது பிரதிவாதிக் கம்பனியின் ஏதேனும் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளை விநியோகிப்பதற்கு மற்றும் / அல்லது 01 ஆம் பிரதிவாதிக் கம்பனியின் ஏதேனும் சொத்தினை விற்பனை செய்வதற்கான ஏதேனும் தீர்மானத்தினை முன்மொழிவதிலிருந்து, வேண்டுகோள் விடுப்பதிலிருந்து மற்றும் / அல்லது வாக்களிப்பதிலிருந்து 02 ஆம் பிரதிவாதியினை தடைப்படுத்தும் ஓர் இடைக்கால கட்டளைக்காக.

**S.C.F.R. விண்ணப்ப இலக்கம் 182/2021 – பொறியியலாளர் ஜீ. கபில ரேணுக்க பெரேரா எதிர் மதிப்பிற்குரிய சட்டமா அதிபர் மற்றும் இ.பி.ப.ஆ. உள்ளடங்கலான 32 ஏனையோர்**

விண்ணப்பதாரி உயர் நீதிமன்றத்தில் செலண்டிவா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் மற்றும் இ.பி.ப.ஆ. (07ஆவது பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது) உள்ளடங்கலாக ஏனைய 32 பேருக்கு எதிராக பின்வருவனவற்றை வேண்டி ஓர் அடிப்படை உரிமை விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார். ஏனையவற்றுக்கிடையில், அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட (இலங்கையின் சகல அனைத்து பிரஜைகளும் உள்ளடங்கலாக) விண்ணப்பதாரியின் 1 அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படை உரிமைகளில் ஓர் உடன்நிகழக்கூடிய மீறலாக வெளிப்படுத்தலுக்காகும்.

விண்ணப்பதாரி செலந்திவ இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் இனை (இது பொருத்தமான மறுசீரமைப்பினூடாக உச்ச செயற்திறன் மட்டத்திற்கு அரச உடைமையான விருந்தோம்பல் நிறுவனங்களை மாற்றுவதற்கான பிரதான குறிக்கோளினைக் கொண்டுள்ள ஓர் புதிய அரச உடைமையான ஆதன அபிவிருத்தி கம்பனியாகும்) நிறுவிய 06 மார்ச் 2020 திகதியிடப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தினை வெற்றும் வரிதுமானதாக்குமாறு ஓர் வெளிப்படுத்தலை வேண்டுகின்றார். திறைசேரியானது கம்பனியின் 100% உரித்துவத்தினைக் கொண்டுள்ளது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் செலந்திவ இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்டினை இ.பி.ப.ஆ. பட்டியலிடுவதற்கு அனுமதிப்பதிலிருந்து இ.பி.ப.ஆ. இனை தடைசெய்யும் ஓர் இடைக்காலக் கட்டளை வேண்டப்பட்டது.

இவ்விடயமானது உயர் நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

**மே.நீ. (பேராணை) விண்ணப்பம் இலக்கம் 148/2021: எம்.ஏ.சீ.ஈ. மந்திரிரத்ன எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் 14 ஏனையோர்.**

விண்ணப்பதாரி இந்த விடயத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதிகேள் பேராணை மற்றும் ஆணையீட்டெழுத்தாணை வழங்குவதற்காக ஒரு விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார். இது ஒரு பணியாளுக்கு பதவியுயர்வினை வழங்கும் இ.பி.ப.ஆ. இன் தீர்மானத்தினை நீக்குமாறும் மற்றும் அதற்குப்பதிலாக விண்ணப்பதாரியை பதவியுயர்த்துமாறு இ.பி.ப.ஆ. இல் ஒரு பணிப்புறுத்தலை வேண்டியும் அல்லது மாற்றுவழியாக விண்ணப்பதாரியை முகாமையாளர் பதவிக்கு, முகாமையாளர் பதவிக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்ட பணியாளுக்கு மேலாக விண்ணப்பதாரியை நியமிப்பதன்மூலம் பதவியுயர்வினை வழங்குவதை வேண்டியாகும்.

இவ்வழக்கானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

**வழக்கு இலக்கம் : உநீ (விசேட) LA விண்ணப்பம் இலக்கம் 177/2021**

விண்ணப்பதாரி கம்பனியான பஞ்சலிங்கம் எசோஸியேஸன் (பிரைவேட் ) லிமிட்டட் எச்.என்.பி. பி.எல்.சி. இன் கம்பனியினால் வைத்திருக்கும் பங்குகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சில பணிப்புரைகளுக்கு எதிராக உறுதிகேள் பேராணைக்காக ஒரு விண்ணப்பத்தினை தாக்கல் செய்தது. விண்ணப்பதாரி கம்பனி இலங்கை மத்திய வங்கியினது பணிப்புரைகளை ஒதுக்கிவைக்குமாறு வேண்டுகின்றது.

நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், வங்கி மேற்பார்வை பிரிவின் இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் இ.பி.ப.ஆ. உள்ளடங்கலாக ஏனைய நால்வர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளார்கள். மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பேராணையினை வழங்குவதற்கு மறுக்கப்பட்டதனால், விண்ணப்பதாரி கம்பனி உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான விசேட அனுமதிக்கு தாக்கல் செய்துள்ளது. இ.பி.ப.ஆ. இடமிருந்து எவ்வித நிவாரணமும் கோரப்படவில்லை.

இந்த விடயமானது உயர்நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

**முறையீடுகள் குறைதீர்த்தல் முறைமை**

பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறையீடுகளது நிலவரம் மற்றும் அவற்றுக்கான குறைதீர்த்தல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: (உருவம்: 15)

**உருவம்: 15 பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பான முறையீடுகள் மற்றும் விடயம்**

| முறையீட்டின் தன்மை | கையாண்ட முறையீடுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினது நடத்தை | 3 | 03 விடயங்கள் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன. |
| பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நடத்தை | 6 | 06 விடயங்கள் பொருத்தமானவாறு தீர்த்துவைக்கப்பட்டன. |
| இ.பி.ப.ஆ. விதிகள் /கொ.ப.ப. பட்டியலிடல் விதிகளுடன் இணங்கியொழுகாமை | 3 | 03 விடயங்கள் பொருத்தமானவாறு தீர்த்துவைக்கப்பட்டன. |
| ஏனைய நிர்வாக விடயங்கள் | 5 | 05 விடயங்கள் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன. |
| பிரயோகிக்கப்படவேண்டிய நிதியியல் அறிக்கையிடல் வரம்புறுகையுடன் இணங்கியொழுகாமை | 1 | 01 விடயம் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டது. |
| **மொத்தம்** | 18 | |

**மூலதனச் சந்தை அபிவிருத்தி**

மூலதனச் சந்தை என்பது பொருளாதாரத்தில் நீண்டகால நிதியங்களை திரட்டுவதற்கும் மற்றும் ஒதுக்குவதற்கும் கூட்டாக செயலாற்றும் நிறுவனங்கள் மற்றும் உட்கட்டமைப்பினை உள்ளடக்கிய ஒரு அவசியமான முகவராகும். இ.பி.ப.ஆ. இலங்கையின் மூலதனச் சந்தையினை பேணிவளர்ப்பதில் பின்வருவனவற்றினூடாக ஈடுபடுகின்றது. பிரதானமாக சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கான கொள்கை மற்றும் மூலோபாயங்களை உருவாக்குவதனூடாக மற்றும் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளின் அமுலாக்கலுக்கு வசதியளிப்பதனூடாக ஆகும். மீளாய்வுக் காலப்பகுதியில் இ.பி.ப.ஆ. ஆல் வசதியளிக்கப்பட்ட முக்கியமான சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

# செயற்பாட்டு மீளாய்வு



திரு. பிரபாஷ் வணிகதுங்க
பணிப்பாளர், கண்காணிப்பு மற்றும் பதில் பணிப்பாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி



திரு. தக்ஷிலா பிரான்சிஸ்
முகாமையாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி

### பங்குச் சந்தை செயற்பாடுகளின் டிஜிட்டல் உருமாற்றம்

மூலதனச் சந்தை என்பது பொருளாதாரத்தில் நீண்டகால நிதியங்களை திரட்டுவதற்கும் மற்றும் ஒதுக்குவதற்கும் கூட்டாக செயலாற்றும் நிறுவனங்கள் மற்றும் உட்கட்டமைப்பினை உள்ளடக்கிய ஒரு அவசியமான முகவராகும். இ.பி.ப.ஆ. இலங்கையின் மூலதனச் சந்தையினை பேணிவளர்ப்பதில் பின்வருவனவற்றினூடாக ஈடுபடுகின்றது. பிரதானமாக சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கான கொள்கை மற்றும் மூலோபாயங்களை உருவாக்குவதனூடாக மற்றும் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளின் அமுலாக்கலுக்கு வசதியளிப்பதனூடாக ஆகும். மீளாய்வுக் காலப்பகுதியில் இ.பி.ப.ஆ. ஆல் வசதியளிக்கப்பட்ட முக்கியமான சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

### கட்டம் 2: 07 ஜூலை 2021 இல் நிறைவுசெய்யப்பட்டது

டிஜிட்டல் மயமாக்கல் முன்னெடுப்பின் முதலாம் கட்டமானது வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு, இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இரண்டாம் கட்டத்தினை தொடங்கியதுடன் இது மாண்புமிகு கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கையின் ஜனாதிபதி அவர்களின் ஆதரவுடன் 07 ஜூலை 2021 இல் ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இரண்டாம் கட்டத்தின் பூர்த்தியுடன், பின்வரும் புதிய சிறப்புக்கூறுகள் இயலுமையாக்கப்பட்டன.

பங்குத் தரகர்;டாக உளளுர் கம்பனிகளுக்கு ம.வை.தி. கணக்கினை ஆரம்பிப்பதற்காக கொ.ப.ப. மொபைல் செயலியினை பயன்படுத்துதல், ம.வை.தி. இ-கனெக்ட், இ-ஆரம்ப பொது வழங்கல்கள் (E-IPOs) உடன் கணக்கு திறத்தல் மற்றும் முதலீட்டாளர் முதலீட்டுத்தேக்க தகவல் உறுதுணை என்பவற்றை வழங்குவதன் மூலம் பயனாளர்களின் அனுபவத்தினை மேம்படுத்துவதற்காக "செட்பொட்" மற்றும் "கூகுள் எஸிஸ்டன்ட்" போன்ற சிறப்புக்கூறுகளும் சேர்க்கப்படும். இரண்டாம் கட்டத்தில் நிறைவு செய்யப்பட்ட டிஜிட்டல் முன்னெடுப்புகள் பிரதானமாக முதலீட்டாளர்களுக்கு அதிக வசதியினை வழங்கும். ம.வை.தி. இ-கனெக்ட் ஊடாக முதலீட்டாளர்கள் உலகின் எப்பகுதியிலிருந்தும் தங்களது முதலீட்டுத் தேக்கத்தினை இயங்கலையில் பார்க்கக் கூடியதானது ஏனைய பல நலன்களுள் ஒன்றாகும். இதற்கும் மேலாக, ஆ.பொ.வ. இக்கு இயங்கலையில் விண்ணப்பிப்பதற்கான ஆற்றல், ஆய்வு வாயிலூடாக ஆய்வு அறிக்கைகளுக்கான அணுக்கம் மற்றும் ஏனைய பொருளாதார குறிகாட்டிகள் போன்ற பல நலன்கள் காணப்படுகின்றன.

### கட்டம் 3:

கட்டம் 02 இனை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர், 3ஆம் கட்ட டிஜிட்டல் மயமாக்கல் முன்னெடுப்புடன் இலங்கையின் மூலதனச் சந்தையில் டிஜிட்டல் மேம்படுத்தல் இயக்கிக்கான முயற்சிகள் தொடர்ந்தன.

டிஜிட்டல் மயமாக்கல் முன்னெடுப்பின் 3 ஆம் கட்டத்தின் ஓர் பகுதியாக அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் சில முக்கிய முன்னெடுப்புகள் பின்வருமாறு:

- புதிய வெளிநாட்டு தனிநபர்கள் மற்றும் வெளிநாட்டு கம்பனிகளை உள்ளீர்த்தல் (பங்குத் தரகு நிறுவனங்கள் மற்றும் காப்பக வங்கிக; டாக)
- இ-கனெக்ட் சிறப்புக்கூறுகள்:
  - அறிக்கைகளை வேண்டுவதற்கான வசதி
  - ம.வை.தி. /பங்குத்தரகர்களுக்கு தகவல் வேண்டுதல்களை அனுப்புதல் (செய்தியனுப்புதல் )
  - பங்கிலாபங்கள் /உரிமைகள் மற்றும் ஏனைய கூட்டாண்மை நடவடிக்கைகள் போன்றவற்றிலான கூட்டாண்மை நடவடிக்கை விழிப்பூட்டல்கள்
  - தனிப்பட்ட மாற்றல்கள் (உரித்துவ நலன்கள் மாறுதல் /தானங்கள் / எல்லைக்கடன் வர்த்தகம் இடம்பெறும்போது)
- இ- உரிமை வழங்கல்
- இ-மீள்கொள்வனவு /கட்டாயக் கொடைமுனை
- "பதில்செயலில் பயனுறுதி" என்பதில் தரகர் தரப்படுத்தல்
- எல்லைக்கடன் வர்த்தகம்(புதிய வாடிக்கையாளர்களது உள்வாங்கல் /சொத்து வகுப்புகளிடையே தடையற்ற நிதி மாற்றல்கள்)

### கொ.ப.ப. இல் மேம்படுத்தப்பட்ட வீடுமிகைத்தல் முறை மற்றும் வி.எ.கொ. பொறிமுறையின் நடைமுறைப்படுத்தலுக்கு வசதியளித்தல்

சந்தையில் காணப்படுகின்ற வர்த்தகத்தின் பின்னரான இடர்நேர்கைகளை வினைத்திறனுடன் முகாமைப்படுத்தும் குறிக்கோளுடன், கொ.ப.ப. இல் மேம்படுத்தப்பட்ட விடுமிகைத்தல் மாதிரி மற்றும் ஒரு வி.எ.கொ. பொறிமுறையின் நடைமுறைப்படுத்தலுக்கு இ.பி.ப.ஆ. வசதியளித்தது. முன்மொழியப்பட்ட மாதிரியின் ஆரம்ப வணிக மற்றும் செயற்பாட்டு விவரக்குறிப்பீடுகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் அதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதுடன் மாதிரியினை அமுல்படுத்துமாறு கொ.ப.ப. அறிவுறுத்தப்பட்டது. இந்த முன்னெடுப்பின் உயர்ந்த தொழில்நுட்ப தன்மையினை கருத்திற்கொண்டு, இந்த முன்னெடுப்பிற்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் ஒரு நிபுணர் நியமிக்கப்பட்டார்.

அதன்பின்னர், பங்குத்தரகு நிறுவனங்கள் மற்றும் கொ.ப.ப. இனால் விடுமிகைத்தல் மாதிரிக்கு திருத்தங்களை மேற்கொள்ளுமாறு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன், முன்மொழியப்பட்ட திருத்தங்கள் வி.எ.கொ. நிபுணருடன் கலந்தாலோசித்து மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. வி.எ.கொ. நிபணரினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் மற்றும் தீர்வக மற்றும் தீர்ப்பனவுக்கு பிரயோகிக்கப்படும் சர்வதேச சிறந்த நடைமுறைகளை கருத்திற்கொண்டு திருத்தியமைக்கப்பட்ட விடுமிகைத்தல் மாதிரிக்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது. இதற்கமைய, கொ.ப.ப. வி.எ.கொ. முறை மற்றும் விடுமிகைத்தல் மாதிரியின் அமுலாக்கலினை தொடர்ந்தது. இ.பி.ப.ஆ. அமுலாக்கல் செயல்முறையினை முடுக்கிவிட்டதுடன் பொருத்தமானவாறு கொ.ப.ப. க்கு கொள்கை மட்டத்திலான வழிகாட்டலை வழங்கியதுடன் வி.எ.கொ. முறை மற்றும் விடுமிகைத்தல் மாதிரியானது 16 ஆகஸ்ட் 2021 முதல் நேரலைக்கு வந்தது.

- ஒரு பங்குத்தரகர் பங்குபற்றுநரினால் சாத்தியமான தீர்ப்பனவு தவறுதலுக்கான இடைக்கால பொறிமுறை சாத்தியமான தீர்ப்பனவு தவறுதலுக்கான இடர்நேர்கையினை முகாமைப்படுத்துவதற்கான ஒரு இடைக்கால வழிமுறையாக, கொ.ப.ப. பங்குத்தரகு நிறுவனங்களுக்கு ஒரு தினத்தினுள்ளே கடன் வசதிகளை வழங்குவதற்கு முன்மொழிந்தது. இதற்கு தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் (தீ.உ.நி.) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் உடன்பட்டார்கள். இது ஆணைக்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்டது.

### கொ.ப.ப. இல் சாளரவழி மேடையூடாக (சா.மே.) தாள் தங்கத்தின் அறிமுகம்

தங்கம் மிகவும் பாதுகாப்பான முதலீட்டுச் சொத்துக்களில் ஒன்றாக கருதப்பட்டதுடன் பங்காளிகளிடமிருந்து தாள் தங்கத்தில் வர்த்தகம் செய்வதற்கு வசதியளிக்குமாறு பிரேரணைகள் பெறப்பட்டுள்ளன. ஆணைக்குழுவானது கொ.ப.ப. இன் சாளரவழி மேடையூடாக தாள் தங்கத்தின் வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கு கொள்கையளவில் அங்கீகாரத்தினை வழங்கியது. தற்போது, கொ.ப.ப. இனால் சாளரவழி மேடையூடாக தாள் தங்கத்தின் வர்த்தகத்தினை அறிமுகப்படுத்துவதற்கான வரம்புறுகை முடிவுறுத்தப்பட்டுக்கொண்டுள்ளதுடன், இது சந்தைக்கு ஒரு புதிய முதலீட்டு சொத்து வகையினை வழங்கும் மற்றும் அரசாங்கத்திற்கு ஒரு புதிய வரி வருமான மூலத்தினையும் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### விசேட தேவை கையகப்படுத்தல் கம்பனிகளின் பட்டியலிடலுக்கு வசதியளிப்பதற்கான பிரேரணை (வி.தே.கை.க.)

சந்தைக்கு புதிய பட்டியலிடலுக்கு வசதியளிப்பதற்காக பட்டியலிடல் தேவைப்பாடுகளை மேலும் விரிவாக்கும் குறிக்கோளுடன், கொ.ப.ப. மற்றும் ஏனைய பங்காளிகளுடன் ஆலோசித்து வி.தே.கை.கம்பனிகள் பட்டியலிடப்படுவதனை இயலுமையாக்குவதற்கான கொள்கை வரம்புறுகையானது முடிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு வி.தே.கை.க. என்பது நடைமுறையில் எவ்வித செயற்பாடுகளையோ அல்லது உள்ளார்ந்த வணிகத்தையோ கொண்டிராத புதிதாக ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியாகும். இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கையகப்படுத்தல்களை மேற்கொள்ளும் குறிக்கோளினைக் கொண்ட ஒன்று அல்லது ஒரு குழுமமான திட்ட உதவியாளர்கள், நன்கு அறிந்த தொழில்முயற்சியாளர்கள், தனிப்பட்ட உரித்துவம் அல்லது துறைசார் நிபுணர்களினால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். இலக்கு வைக்கப்பட் கம்பனியினை கையகப்படுத்தியதன் பின்னர், வி.தே.கை.க. கம்பனிச் சடடத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலக்கு வைக்கப்பட்ட கம்பனியுடன் இணைக்கப்பட்டு, இணைக்கப்பட்ட நிறுவனமானது கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்ட ஓர் சாதாராண நிறுவனமாக செயலாற்றும். வி.தே.கை.கம்பனிகளின் பட்டியலிடலுக்கு வசதியளிப்பதற்காக ஆணைக்குழுவானது கொள்கையளவில் அங்கீகாரம் வழங்கியதுடன் கொ.ப.ப. ஆனது தற்போது வி.தே.கை.க. இன் அறிமுகத்திற்கான முறைமைப்படுத்தல் கொள்கையினை முடிவுறுத்திக்கொண்டுள்ளது.

### கொ.ப.ப. இன் சாளரவழி மேடையில் (சா.மே.) கூட்டாண்மை கடன் பிணையங்களிலான மீள் கொள்வனவு உடன்படிக்கை (மீ.கொ.உ.) கொடுக்கல் வாங்கல்களினை இயலுமையாக்குதல்

கொ.ப.ப. ஊடாக கூட்டாண்மை கடன் சந்தையினை முடுக்கிவிடுவதற்காக, நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி சங்கமானது சில வர்த்தக வங்கிகள் மற்றும் முதற்தர வர்த்தகர்களுடன் இணைந்து கொ.ப.ப. இன் சாளரவழி மேடையினூடாக கூட்டாண்மை கடன் பிணையங்களுக்கான ஒரு மீள்கொள்வனவு உடன்படிக்கை கொடுக்கல் வாங்கல் பொறிமுறையினை அமுல்படுத்துமாறு கொ.ப.ப. இனை வேண்டின. இதற்கமைய, கொ.ப.ப. சாளரவழி மேடையினூடாக கூட்டாண்மை கடன்களின் மீள்கொள்வனவு உடன்படிக்கை கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்கான ஒரு பிரேரணையினை கொ.ப.ப. மேற்கொண்டதுடன் இது இ.பி.ப.ஆ. ஆல் மீளாய்வு செய்யப்பட்டு மேலும் மேம்படுத்தப்பட்டது. இதனை இயலுமையாக்குவதற்கான இறுதிக் கொள்கையானது கொ.ப.ப. உடன் இணைந்து கூட்டாக முடிவுறுத்தப்பட்டு அத்தகைய பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதற்காக கொ.ப.ப. க்கு கொள்கையளவில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன் பின்னர், இதற்கு வசதியளிப்பதற்காக ம.வை.தி விதிகளுக்கான திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டன. எனவே, சாளரவழி மேடையில் கூட்டாண்மை கடன்களிலான மீள்கொள்வனவு உடன்படிக்கை வர்த்தகங்கள் இயலுமையாக்கப்பட்டன.

### பிணையங்கள் கடன் பெறுதல் மற்றும் கடன் வழங்குதலூடாக பாதுகாப்புள்ள குறை விற்பனையின் அறிமுகத்திற்கு வசதியளித்தல்

வி.எ.கொ. முறை மற்றும் மேம்படுத்தப்பட்ட விடுமிகைத்தல் பொறிமுறையானது கொ.ப.ப. இல் நடைமுறைப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, பிணையங்கள் கடன் பெறல் மற்றும் கடன் வழங்குதலூடாக பாதுகாப்புள்ள குறை விற்பனையின் அறிமுகத்திற்கு வசதியளிப்பதற்கு எதிர்நோக்கப்பட்டுள்ளது. இது வினைத்திறனான விலைக் கண்டுபிடிப்பு, உயர்ந்த சந்தை திரவத்தன்மை மற்றும் சிறந்த இழப்புக் காப்பு வாய்ப்புகளினை இயலுமையாக்கும். இந்த முன்னெடுப்பிற்கு ஆணைக்குழுவானது கொள்கையளவில் அங்கீகாரம் வழங்கியதுடன், தற்போது உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வி.எ.கொ. நிபுணரிடமிருந்தான தொழில்நுட்ப உள்ளீடுகளின் கீழ் பிணையங்கள் கடன்பெறல் மற்றும் கடன் வழங்கலூடாக பாதுகாப்புள்ள குறை விற்பனையினை இயலுமைக்குவதற்கான கொள்கையானது கொ.ப.ப. உடன் கூட்டிணைந்து முடிவுறுத்தப்பட்டுக் கொண்டுள்ளது.

### பசுமை முறிகளின் அறிமுகத்திற்கு வசதியளித்தல்

பசுமை முறிகள் என்பது புத்தாக்கமான நிதியியல் கருவிகளாகும். இங்கு திரட்டப்படும் நிதியானது காலநிலை அல்லது ஏனைய சுற்றுச்சூழல் நன்மைகளை உருவாக்கும் பசுமை திட்டங்களில் பிரத்தியேகமாக முதலீடு செய்யப்படுகின்றது. உதாரணமாக, புதுப்பிக்கத்தக்க வலு, வலு செயல்திறன், நிலைபேறுள்ள கழிவு முகாமைத்துவம், நிலைபேறுள்ள காணிப் பயன்பாடு (காட்டியல் மற்றும் விவசாயம் ), உயிரினப்பன்மை, சுத்தமான போக்குவரத்து மற்றும் சுத்தமான தண்ணீர் போன்றவையாகும். ஒட்டுமொத்த மூலதனச் சந்தைக்கு நன்மை பயப்பதற்கும் மேலாக இந்த முன்னெடுப்பானது நாட்டின் சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைபேறுள்ள பொருளாதார அபிவிருத்தி நோக்கியும் பங்களிப்பு செய்யும். இந்த முன்னெடுப்பிற்கு ஆணைக்குழுவானது கொள்கையளவில் அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், நாம் இதற்கு துணைபுரிவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து தொழில்நுட்ப உதவியினை பெற்றுள்ளோம். கொ.ப.ப. பசுமை முறிகளை அறிமுகப்படுத்துவதில் ஓர் முறைமைப்படுத்தல் கொள்கை பத்திரிகையினை சமர்ப்பித்துள்ளதுடன் இது மீளாய்வு செய்யப்பட்டு மேலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகளது அறிமுகம்

இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கான கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விருத்திசெய்யும் செயல்முறையில் இ.பி.ப.ஆ. ஈடுபட்டுள்ளது. இது முதலீட்டாளர்கள் தங்களது முதலீட்டுத்தேக்கங்களை இஸ்லாமிய கொள்கைகளுக்கமைய மற்றும் நலன்களது சமத்துவமான பகிர்ந்தளிப்புடனான கருவிகளில் முதலீடு செய்வதனை இயலுமையாக்கும்.

- மேலும், இஸ்லாமிய கொள்கைகளுக்கமைவாக நிதியினை திரட்டுவதற்கு ஆர்வமுள்ள வழங்குநர்கள் தமது வழங்கல்களைத் தொடர்வதற்கு இந்த முன்னெடுப்பானது வாய்ப்பினை வழங்குகின்றது.
- இது தொடர்பில், இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகளை அறிமுகப்படுத்துவதற்காக கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விருத்தி செய்வதற்காக ஆ.அ.வ. இடமிருந்து தொழில்நுட்ப உறுதுணை பெறப்பட்டது.
- இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகள் தொடர்பாக முக்கிய கொள்கை சிந்தனைகளை உள்ளடக்கிய ஒரு நியாயாதிக்கங்களுக்கிடையேயான பகுப்பாய்வு நடாத்தப்பட்டது.
- இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகளை அறிமுகப்படுத்துவதற்காக ஆணைக்குழுவிடமிருந்து கொள்கையளவு அங்கீகாரம் பெறப்பட்டதுடன் இதற்கான கொள்கை வரம்புறுகையினை உருவாக்குமாறு கொ.ப.ப. வேண்டப்பட்டது. கொ.ப.ப. இன் பதில் எதிர்பார்த்த வண்ணமுள்ளது.
- ஆ.அ.வ. இடமிருந்து தொழில்நுட்ப உறுதுணை பெறப்பட்டு நியமிக்கப்பட்ட ஆலோசகர்களுடன் பணியானது ஆரம்பிக்கப்பட்டது.
- பங்காளிகளது கூட்டங்களுக்கு வசதியளிக்கப்பட்டதுடன் ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் இது மீளாய்வு செய்யப்பட்டு கருத்துக்கள் ஆ.அ.வ. உடன் பகிரப்பட்டது.
- ஆலோசகர்களிடமிருந்து இனங்காணப்பட்ட இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகள் தொடர்பான வரைவு விதிகள் எதிர்பார்க்கப்பட்டவண்ணமுள்ளன.

# செயற்பாட்டு மீளாய்வு

### கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களின் அறிமுகம்

கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களின் அறிமுகத்திற்காக கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விருத்திசெய்யும் செயல்முறையில் இ.பி.ப.ஆ. ஈடுபட்டுள்ளது. இது பரிமாற்றக வர்த்தகம் செய்யும் மூலாதாரப் பிணையங்களது அபிவிருத்தி நோக்கிய முதல் படியாகும். கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்கள் பல்வேறு நன்மைகளை கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவை நடைமுறையிலுள்ள கருவிகளது தேக்கத்தினை விரிவுபடுத்தும் என்பதுடன் முதலீட்டாளர்கள் தங்களது பணத்தை முதலீடு செய்வதற்கு பரவலான கருவிகள் காணப்படும். இது சந்தையில் பன்முகமான தெரிவுசெய்யப்பட்ட உள்;ர் மற்றும் வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களது பங்களிப்பினை பெறும்.

இது தொடர்பில், கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களை அறிமுகப்படுத்துவதற்கான கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விருத்திசெய்வதற்காக ஆ.அ.வ. இடமிருந்து தொழில்நுட்ப உதவியினை நாம் பெற்றுள்ளோம். எனவே, இத்தகைய ஒரு கருவிக்கான சந்தையின் தேவை மற்றும் சந்தையின் தயார்நிலை என்பவற்றை மதிப்பிடுவதற்காக ஆரம்ப மட்டத்திலான பங்காளிகளது கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. கலந்துரையாடல்களின்போது பல்வேறு பங்காளிகளிடமிருந்து பெறப்பட்ட சாத்தியமான பின்னூட்டங்களின் அடிப்படையில், கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களை அறிமுகப்படுத்துவதற்கான வரைவு வழிகாட்டிகள் விருத்திசெய்யப்பட்டதுடன் இது கொ.ப.ப. உடன் பகிரப்பட்டது. கொ.ப.ப. இடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டவுடன் இந்த வழிகாட்டிகள் பங்காளிகளது கருத்துக்களுக்காக துறைக்கு சமர்ப்பிக்கப்படும்.

### கொ.ப.ப. இல் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட / ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களினால் வழங்கப்படும் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்களது பட்டியலிடல், வர்த்தகம் மற்றும் தீர்ப்பனவு ஆகியவற்றிற்கு வசதியளித்தல்

கொ.ப.ப. இடமிருந்து கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்களது பட்டியலிடல், வர்த்தகம் மற்றும் தீர்ப்பனவிற்கு வசதியளிக்கும் பிரேரணையில் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடப்படவேண்டிய தொடர்புடைய விடயங்கள் எடுத்துக்காட்டப்பட்டிருந்தன. இ.பி.ப.ஆ. இந்த பிரேரணையினை நிதி அமைச்சுடன் பகிர்ந்து இந்த முன்னெடுப்பிற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டியது. எனவே, நிதி அமைச்சும் இலங்கை மத்திய வங்கியும் கொ.ப.ப. இன் பிரேரணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்களை விளித்துரைப்பதற்காக அவசியமான சட்ட ஏற்பாடுகளை இயலுமையாக்கி இந்த முன்னெடுப்பிற்கு வசதியளித்துள்ளது. இதற்கமைய, வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்களுக்கான பொருத்தமான விதிகள், மிகச் சிறியளவு விலை மாற்றம் மற்றும் கொடுக்கல் வாங்கல் கட்டண கட்டமைப்பு என்பவற்றில் கொ.ப.ப. திருத்தங்களை பிரேரித்துள்ளதுடன் அவை மீளாய்வு செய்யப்பட்டு மேலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முன்னெடுப்பு, மிகச் சிறியளவு விலை மாற்றம் மற்றும் கொடுக்கல் வாங்கல் கட்டண கட்டமைப்பிற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது.

### உரித்துவ கூட்டுநிதிநல்கை மேடைகளூடாக நிதி திரட்டலுக்கு வசதியளித்தல்

மூலதனச் சந்தையூடாக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (சி.ந.நி.) கிடைக்கக்கூடிய மூலதன திரட்டல் மார்க்கங்களை பரவலாக்கும் ஒரு குறிக்கோளுடன், ஒரு உரித்துவ கூட்டுநிதிநல்கை மேடைக்கு வசதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கூட்டுநிதிநல்கை என்பது ஒரு இணைய அடிப்படையிலான மேடை அல்லது ஒரு குறித்த திட்டம், வணிக முயற்சிகளுக்கான சமூக வலையமைப்புத் தளம் என்பவற்றூடாக பன்முக முதலீட்டாளர்களிடமிருந்து நிதியினை (சிறு தொகைகள் ) கோருதல் ஆகும். இந்த முன்னெடுப்பிற்கு ஆணைக்குழுவானது கொள்கையளவில் அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் இந்த முன்னெடுப்பினை முன்னே கொண்டுசெல்வதற்காக ஆலோசனை உள்ளீடுகளை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து தொழில்நுட்ப உதவியினை நாம் பெற்றுள்ளோம். தற்போது உரித்துவ கூட்டுநிதிநல்கை மேடையினை இயலுமையாக்குவதற்கான கொள்கை வரம்புறுகையானது இந்த முன்னெடுப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்களது துணையுடன் முடிவுறுத்தப்பட்டுக்கொண்டுள்ளது.

### முதலீட்டாளர் தளத்தினை பரவலாக்குவதற்கு மற்றும் விரிவாக்குவதற்கான டிஜிட்டல் மேடைகளுக்கு வசதியளித்தல்

டிஜிட்டல் மேடைகளது செயற்பாட்டாளர்கள் பங்குச் சந்தையில் முதலீட்டாளர் தளத்தினை பரவலாக்குவதற்கு அத்தகைய வசதிகளை அவர்களது சந்தாதாரர்கள் /அங்கத்துவர்களுக்கு வழங்கலாம். முதலீட்டாளர் தளத்தினை விரிவாக்குவதற்கு அத்தகைய மார்க்கங்களை இயலுமையாக்குவதன் மூலம் பங்குச் சந்தைக்கு கிடைக்கப்பெறக்கூடிய நலன்களை கருத்திற்கொண்டு, இந்த முன்னெடுப்பிற்கு வசதியளிப்பதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது. அத்தகைய டிஜிட்டல் மேடைகள் அவர்களது வசதிகளை வழங்குவதனை இயலுமையாக்குவதன் மூலம், இ.பி.ப.ஆ. பங்குச் சந்தையில் கிடைக்கப்பெறக்கூடிய முதலீட்டு வாய்ப்புகளில் பொது மக்களது விழிப்புணர்வு மற்றும் கல்வி மட்டங்கள் விரிவாக்கப்படும் என இ.பி.ப.ஆ. எதிர்பார்ப்பதுடன் முதலீட்டு நோக்கங்களுக்கு எந்தவொரு சாத்தியமான முதலீட்டாளருக்கும் தடையற்ற அணுக்கத்தினை இயலுமையாக்கும்.

**மூலதனச் சந்தையூடாக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (சி.ந.நி.) கிடைக்கக்கூடிய மூலதன திரட்டல் மார்க்கங்களை பரவலாக்கும் ஒரு குறிக்கோளுடன், ஒரு உரித்துவ கூட்டுநிதிநல்கை மேடைக்கு வசதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.**

### மூலதனச் சந்தை மூலோபாயம் 2021 - 2025

சந்தை அபிவிருத்திக்கான ஒரு மூலோபாய வழியினை வழங்குவதற்காக மூலதனச் சந்தை மூலோபாயம் 2021-2025 உருவாக்கப்பட்டது. இது மூலதனச் சந்தையினை அடுத்த கட்ட அபிவிருத்திக்கு கொண்டுசெல்வதற்கு வழிகாட்டும் முக்கிய அபிவிருத்தி மற்றும் முறைமைப்படுத்தல் மூலோபாயங்களை உள்ளடக்குகின்றது.

### கொடை வழங்கும் முகவர் திட்டங்களை ஒருங்கிணைத்தல்:

தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் அவர்களது வழிகாட்டலின் கீழ், 2020 இன் ஆரம்பத்திலிருந்து, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டங்களின் மூலதனச் சந்தை அபிவிருத்தி திட்டங்கள் விரைவுபடுத்தப்பட்டு, கொள்கை நடவடிக்கைகளது அமுலாக்கல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் மற்றும் பொருட்களது கொள்வனவுகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது நாள்வரைக்கும் குறித்த திட்டங்களில் கணிசமானளவு பகுதி நிறைவடைந்துள்ளது.

### மூலதனச் சந்தை ஆலோசனைச் சபையினை (மூ.ச.ஆ.ச.) மீள்கூட்டுதல்

பின்வரும் நோக்கங்களுக்காக, மதிப்பிற்குரிய அஜித் நிவார்ட் கப்ரால், இராஜாங்க அமைச்சர், பணம், மூலதனச் சந்தைகள் மற்றும் அரச நிறுவன சீர்திருத்தங்கள் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் மூ.ச.ஆ.ச. மீள்கூட்டப்பட்டது. இது மூலோபாய மட்டத்திலான வழியினை வழங்குதல், முகவர்களிடையேயான கொள்கை ஒருங்கிணைப்பிற்கு வசதியளித்தல், ஆசிய

அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்படும் நீண்டகால மூலதனச் சந்தை அபிவிருத்தி திட்டங்களுக்கு உறுதுணையளித்தல் மற்றும் முன்னேற்றங்களை கண்காணித்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டதாகும். மூ.ச.ஆ.ச. இலங்கை மத்திய வங்கி, இ.பி.ப.ஆ., இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு கண்காணிப்புச் சபை (இ.க.க.க.ச.) போன்ற முறைமைப்படுத்துபவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்களையும் ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி.) கொ.ப.ப. போன்ற ஏனைய பொருத்தமான அமுலாக்கல் முகவர்களையும் கொண்டிருந்தன. இதுவரைக்கும மூ.ச.ஆ.ச. 3 கூட்டங்களை நடாத்தியதுடன் இங்கு மூலதனச் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளிலான முன்னேற்றங்கள் கலந்துரையாடப்பட்டன.

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்படும் மூலதனச் சந்தை அபிவிருத்தி திட்டம் (மூ.ச.அ.தி.)

மூ.ச.அ.தி. என்பது இலங்கை அரசாங்கத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படும் ஒரு கொள்கை அடிப்படையிலான கடன் மற்றும் தொழில்நுட்ப உறுதுணை திட்டமாகும். மூ.ச.அ.தி. இன் கீழ் கூட்டு முதலீட்டுத் திட்டக் கோவையினை வரைவதற்கு, கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல், மூலதனச் சந்தை சான்றளிப்பு செயல்முறையினை புதுப்பித்தல், நிதியியல் அறிவினை மேம்படுத்தல், நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளுக்கான வெளிக்களம் என்பனவற்றிற்கு தொழில்நுட்ப உதவி பெறப்பட்டது. இதற்கும் மேலாக, புதிய அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கான தொழில்நுட்ப உதவி ஜூன் 2021 இல் பெறப்பட்டது. இது இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகள், கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்கள், பசுகை முறிகள் மற்றும் ஓர் உரித்துவ கூட்டுநிதிநல்கை மேடை என்பவற்றை உள்ளடக்கும்.

### உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டம்

உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் (நி.து.ந.தி.) கீழ் பல முக்கிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கான நிதியினை பெற்றுக்கொண்டது.

2021 டிசம்பர் அளவில் பின்வரும் ஆலோசனை மற்றும் பொருட்கள் கொள்வனவுகள் நிறைவுசெய்யப்பட்டன.

### பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப உதவி

- வி.எ.கொ.இன் நடைமுறைப்படுத்தலுக்கு மற்றும் ம.எ.பொ. இன் அமுலாக்கலுக்கான கொள்கை வரம்புறுகை என்பவற்றுக்கான ஆலோசனை (தனித்தனியான ஆலோசகர்கள்)
- கல்வி மற்றும் விழிப்புணர்வு விநியோக மார்க்கங்களை மேம்படுத்துவதற்கான ஆலோசனை - இ.பி.ப.ஆ. /மூ.ச.க.ப. /மூ.ச.த.மை. இணையத்தள நிபுணத்துவம்
- ஒரு நிறுவனரீதியான தகவல் தொழில்நுட்ப மூலோபாயத்தின் அபிவிருத்திக்கு / நடைமுறைப்படுத்தல் கண்காணிப்பிற்கான ஆலோசனை
- சந்தை கண்காணிப்பிற்கான ஆலோசனை

### உட்கட்டமைப்பு கொள்வனவுகள்

- கைக்ரோசொவ்ட் டேமினர் சேர்வர் உரிமம் 3 வருட பராமரிப்புடன்
- கண்காணிப்புப் பிரிவிற்கான தரவு பகுப்பாய்வு கருவி / டெப்லியு

ஏனைய பல இனங்காணப்பட்ட தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு கொள்வனவுகள் தற்போது நடந்தவண்ணமுள்ளன.

### இ.பி.ப.ஆ. பணியாட்களை பயிற்றுவிப்பதற்கான நிதி பெறப்பட்டது.

மேலாக, உலக வங்கிக்கு மேற்கொள்ளப்பட்ட பிரதிநிதித்துவங்கிளின் பிரகாரம், இ.பி.ப.ஆ. ஆல் விருத்திசெய்யப்பட்ட ஒரு பயிற்றுவித்தல் திட்டத்தின் அடிப்படையில் இ.பி.ப.ஆ. பணியாட்களின் அறிவுத்திறனை கட்டியெழுப்புவதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. இ.பி.ப.ஆ. ஆல் விருத்திசெய்யப்பட்ட பயிற்றுவித்தல் திட்டமானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டது.

### கூட்டாண்மை நிதியளித்தல் ஆலோசகர்களுக்கான சந்தை இடையீட்டாளர் வீதிகள்

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் சட்டவாக்கத்துடன் கூட்டாண்மை நிதியளித்தல் ஆலோசகர்கள் இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தலின் கீழ் ஓர் புதிய சந்தை இடையீட்டாளராகக் கொண்டுவரப்பட்டார்கள். இதற்காக கூட்டாண்மை நிதியளித்தல் ஆலோசகர்களுக்கான விதிகள் வரையப்பட்டு அவை இ.பி.ப.ஆ. ஆல் உள்வாரியாக மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் பங்காளிகளது கலந்துரையாடல்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

### தேசிய பாதீடு 2022 க்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள்

இ.பி.ப.ஆ. நிதி அமைச்சிற்கு பாதீட்டுப் பிரேரணைகளை சமர்ப்பித்தது. இவை புதிய பட்டியலிடல்களுக்கான வரிச் சலுகை, "வலுவளித்தல் பலகையில்" உள்ள பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான வருமான வரியிலான மேலதிக நிவாரணம் மற்றும் "பசுமை முறிகளை" வழங்குவதற்காக வரிச் சலுகைகள் என்பவற்றை உள்ளடக்கும். 2022 பாதீடு புதிய பட்டியலிடல்களுக்கு வரிச் சலுகைகளை உள்ளடக்கியிருந்தன.

### ஏனைய முன்னெடுப்புகள்

- பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள், பட்டியலிடல்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களை பட்டியலிலிருந்து நீக்குதல் போன்றவற்றின் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகளது பெறுமதியிடலுக்கான வழிகாட்டிகளை விருத்திசெய்தல்.
- 'பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒழுங்கமைப்பின் (பொ.ஒ.அ.ஒ.) கொள்கைகள், சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்கள் ஒழுங்கமைப்பின் (ச.பி.ஆ.ஒ.) கொள்கைகள் மற்றும் கூட்டாண்மை ஆளுகையிலான சர்வதேச சிறந்த நடைமுறைகள் என்பவற்றுக்கேற்ப கூட்டாண்மை ஆளுகைக் கோவையினை நடைமுறைப்படுத்தல்.
- பின்வருவனவற்றிலான முற்றுமுழுதான மீளாய்வு. செயற்பாட்டு வரம்புறுகை, இடர்நேர்கை இனங்காணல், விதிகளது ஆலோசனை மற்றும் பின்வருவனவற்றை இயலுமையாக்கும் புதிய பட்டியலிடல் மேடைகளை அறிமுகப்படுத்துவதற்கான அளவை மட்டக்குறியிடல்.
- உள்ளூர் நிறுவனங்களினால் பல்நாணய கடன் பட்டியலிடல்கள்
- சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் கடன் பட்டியலிடல்கள்
- வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் நேர்மையினை மேம்படுத்துவதற்கான ஒரு வரம்புறுகையினை உருவாக்குவதற்கான சாத்தியம் மற்றும் பங்காளிகளது இரகசியத்தை பாதுகாத்தல் என்பவற்றினை மதிப்பீடு செய்தல். அத்துடன் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வாளர்களுக்கு பிரயோகிக்கக்கூடிய முற்றுமுழுதான ஒரு வழிகாட்டியினை உருவாக்குவதற்காக நடைமுறையிலுள்ள தேவைப்பாடுகளை பலப்படுத்தல் என்பனவாகும்.
- பட்டியலிடப்படா கூட்டாண்மை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பொது வழங்கல்களிலான புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 75 (1) இன் கீழ் அவசியமான அங்கீகாரத்தினை வழங்குவதற்கான ஒரு செயல்முறையினை விருத்திசெய்தல்.
- ஒரு இடர்நேர்கை அடிப்படையிலான வெளிப்படுத்தல் அணுகுமுறையினை நடைமுறைப்படுத்துவதில் 'நிதியியல் கண்காணிப்பில்' வரம்புறுகையினை விருத்திசெய்து செயற்படுத்துதல்' அதற்கு வசதியளிப்பதற்காக உள்ளக கொள்திறனை கட்டியெழுப்புதல்.
- இலங்கையின் மூலதனச் சந்தைக்கு தரப்படுத்தப்பட்ட நிதியியல் அறிக்கையிடல் முறையினது அறிமுகத்தினை மதிப்பீடு செய்தல்.

### உலக வங்கியின் வணிகம் செய்தல் சுட்டி

வணிகம் செய்தல் 2022 சுட்டி தொடர்பான வினாக்கொத்திற்கான பதில்களை உருவாக்குவதில் இ.பி.ப.ஆ. பங்குபற்றியது. இது சிறுபான்மை

# செயற்பாட்டு மீளாய்வு

முதலீட்டாளர்களை பாதுகாத்தல், இது சிறுபான்மை முதலீட்டாளர்களை பாதுகாத்தல் உப-சட்டியிலான இலங்கையின் தரவரிசையினை உயர்த்துவதற்கு அவசியமாக இனங்காணப்பட்டது.

வணிகம் செய்தல் அறிக்கையானது உலக வங்கி குழுமத்தின் ஒரு முதன்மை பிரசுரமாகும். இது உலகிலுள்ள 190 பொருளாதாரங்களின் வணிக முறைமைப்படுத்தல்கள் அளவைமட்டக்குறியிடுகின்றது. சிறுபான்மை முதலீட்டாளர்களை பாதுகாக்கும் குறிகாட்டியானது உள்ளுர் கம்பனிகளில் சிறுபான்மை பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட பாதுகாப்புகளை அளவிடுவதுடன் வணிகம் செய்தல் அறிக்கையினால் பிரசுரிக்கப்படும் 11 குறிகாட்டிகளில் ஒன்றாகும்.

### மூலதனச் சந்தை விழிப்புணர்வு மற்றும் வெளிவாரி உறவுகள்

ஆற்றல்மிக்க, உறுதியான மற்றும் நன்கு அறிவூட்டப்பட்ட முதலீட்டாளர்கள் ஒரு ஆரோக்கியமான மூலதனச் சந்தைக்கு ஒரு அவசியமான பாகமாகும். இ.பி.ப.ஆ. நாடுபூராவும் மூன்று மொழிகளிலும் பல்வேறு மேடைகளுடாக முதலீட்டாளர் கல்வி முன்னெடுப்புகளை நடாத்துகின்றன. இது நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்காகவும் சந்தையில் பொதுமக்கள் பங்கேற்பதற்கு ஊக்கமளிப்பதற்காகவும் அவர்களது நிதியியல் நல்வாழ்வினை பலப்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்றன.



திரு. துஷார ஜயரத்ன

பணிப்பாளர், வெளிவாரி உறவுகள் மற்றும் மூலதனச் சந்தை கல்வி

### இரண்டாந்தர பாடசாலை பாடத்திட்டத்தில் மூலதனச் சந்தை உட்கூறுகளை உள்ளடக்குதல்

பிள்ளைகளுக்கு ஒரு இளம் வயதில் மூலதனச் சந்தை பற்றிய அறிவினை பகிர்ந்தளிப்பது அவர்களது வாழ்க்கையில் பல்வேறு கட்டங்களில் புத்திசாலித்தனமாக முதலீடு செய்வதற்கான திறன்கள் மற்றும் அறிவினை அவர்கள் பெற்றுக்கொள்வதனை இயலுமையாக்கும். அத்துடன் நிதியியல் கோட்பாடுகள் தொடர்பாக நம்பிக்கையினை அதிகரிப்பதுடன் அவர்களது தீர்மானம் மேற்கொள்ளுதலையும் மேம்படுத்தும். இதனைக் கருத்திற்கொண்டு, 2023 ஆம் ஆண்டின் பாடசாலை பாடத்திட்டத்தினை வருடம் ஆறு முதல் திருத்தியமைத்து மூலதனச் சந்தை உட்கூறுகளை உள்ளடக்குவதற்காக இ.பி.ப.ஆ. தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து பணியாற்றியது. இது "தொழில்முனைவு மற்றும் நிதியியல் கல்வியறிவு" என்ற தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படும்.

### இ.பி.ப.ஆ. இணைய வாசல்

இ.பி.ப.ஆ. பல பயனர் தோழமையான சிறப்பம்சங்கள் உள்ளடங்கலாக பல்வேறு மேம்படுத்தல்களை அதன் இணையத்தளத்திற்கு மேற்கொண்டது. அத்துடன் நாம் "முதலீட்டாளர் இடுக்கு" எனப்படும் ஒரு இணையத்தளத்தினை, பிரத்தியேகமாக முதலீட்டாளர்களை அறிவூட்டுவதற்காகவும் மூலதனச் சந்தையில் அவர்கள் மிகவும் உறுதியுடன் பங்குபற்றுவதனை இயலுமையாக்குவதற்காகவும், ஆரம்பித்தோம். இந்த இணையத்தளமானது முதலீட்டாளர் அதிகாரமளித்தல் மற்றும் இ.பி.ப.ஆ. இன் முதலீட்டாளர் பாதுகாப்பு முயற்சிகள் என்பவற்றை மேலும் உயர்த்தும் நோக்கில் புதிய மற்றும் அனுபவமிக்க முதலீட்டாளர்களுக்கு நம்பகமான மற்றும் துல்லியமான முதலீட்டாளர் கல்வி பருப்பொருளை வழங்குவதனை நோக்காகக் கொண்டதாகும்.

### சமூக ஊடக மேடைகளூடாக விழிப்புணர்வினை உருவாக்குதல்

நிதியியல் கல்வியின் டிஜிட்டல் விநியோகமானது வளர்ச்சியடைந்துள்ளதுடன் கோவிட்-19 தொற்றின் நிமித்தம் பலபேர் இணையவழி கருவிகளை தொழிலுக்காகவும் கற்பதற்காகவும் பயன்படுத்துவதனால் இது மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. நிதியியல் கல்வியின் டிஜிட்டல் விநியோகமானது பாரம்பரிய விநியோக முறைகளினூடாக எட்டமுடியாத பலதரப்பட்ட இலக்குவைக்கப்பட்ட அவையோருக்கு வரைபட வடிவத்தில் மற்றும் இளக்கமான, ஊடாட்டக்கூடிய விதத்தில் தகவல்களை காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பினை எமக்கு வழங்கியுள்ளது. இவ்வருடத்தில் எவ்வாறு புத்திசாலித்தனமாக முதலீடு செய்வது, முதலீட்டு துப்புகள் மற்றும் ஊழல்களை எவ்வாறு தவிர்ப்பது போன்றவற்றில் பல்வேறு உட்கூறுகளை நாம் உள்ளீடு செய்தோம். சமூக ஊடக உட்கூறுகள் உள்ளகத்தே உருவாக்கப்பட்டுள்ளதுடன் ஆகக் குறைந்தது தினசரி ஒரு உள்ளீடாவது பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

### இலங்கையில் முதலிடுங்கள் முதலீட்டு மன்றம் டுபாய்

கொ.ப.ப.ப. இன் விதிவிலக்கான செயற்திறனின் பின்னணியில் மற்றும் பிரயாணக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலுடன் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப.ப. இணைந்து 'இலங்கையில் முதலிடுங்கள்' முதலீட்டாளர் மன்றத்தினை நவம்பர் 05 2021 இல் டுபாய் செரட்டன் கிரான்ட் ஹோட்டலில் ஐ.அ.இ. இன் இலங்கை தூதரகம் மற்றும் டுபாய் மற்றும் வடக்கு எமிரேட்ஸ் க்கான இலங்கையின் உயர் தூதரகம் ஆகியவற்றுடன் இணைந்து நடாத்தியது. இந்த நிகழ்வானது பல்வேறு துறைகளைச் சார்ந்த டுபாயினைத் தளமாகக் கொண்ட இலங்கையர்களை பலமாகக் கவர்ந்ததுடன் மதிப்பிற்குரிய அஜித் நிவார்ட் கப்ரால் அவர்கள் சிறப்புரையாற்றினார். ஏனைய பேச்சாளர்களாக ஐ.அ.இ. தூதரகத்தின் இலங்கையின் உயர் ஸ்தானிகர், மதிப்பிற்குரிய மல்ராஜ் டி சில்வா, இ.பி.ப.ஆ. இன் தலைவர் திரு. விராஜ் தயாரத்ன ஐ.ச., இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் திரு. சிந்தக்க மெண்டிஸ், கொ.ப.ப. இன் தலைவர் திரு. துமித் பர்னாந்து மற்றும் இலங்கையின் ஐ.அ.இ. தூதரகத்தின் உயர் ஸ்தானிகர் திரு. நலிந்த விஜேரத்ன ஆகியோர் இருந்தார்கள்.

சந்தைக் கண்ணோட்டம் மற்றும் துறைசார் காட்சிப்படுத்தல்களை உள்ளடக்கிய தொழில்நுட்ப சுற்றில் திரு. சஞ்சீவ பர்னாந்து, சிடி சிஎல்எஸ்ஏ இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆய்வு மற்றும் மூலோபாயம், திரு. உதீசன் ஜோனாஸ், ப.க. நிறுவகத்தின் பிரதான மூலோபாயவாதி மற்றும் திரு. சரித்த குணசேகர, எஸ்சி செக்கியூரிட்டீஸின் ஆய்வுத் தலைமை ஆகியோர் பங்குபற்றினார்கள். கொ.ப.ப. இன் பிரதம நிறைவேற்று அதிகாரி, திரு. ரஜீவ பண்டாரநாயக்கா அவர்கள் குழுவிவாதத்தில் பங்குத்தரகர்களை பிரதிநிதித்துவப்படுத்தினார். டுபாய் முதலீட்டாளர் மன்றத்தின் பின்னர், தேறிய பாய்ச்சலானது ரூபா 5.6 மில்லியன் வெளிப்பாய்ச்சலிலிருந்து ரூபா 89 மில்லியன் உட்பாய்ச்சலாக உயர்ந்தது.

### வெளிநாட்டு முதலீட்டுக்கான ஒரு கவர்ச்சிகரமான இலக்காக இலங்கையினை எடுத்துக்காட்டுதல்

கோவிட்-19 தொற்றின் பிரயாணக் கட்டுப்பாடுகளுடன், இ.பி.ப.ஆ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள பணியாட்களுக்கு அறிவூட்டுவதற்காக ஒரு தொடரான இணையவழிக் கூட்டங்களை ஆரம்பித்தது. இது இலங்கையின் மூலதனச் சந்தையில் கிடைக்கக்கூடிய முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் சாத்தியமான வளர்ச்சி என்பவற்றில் அறிவூட்டுவதற்காகும். இந்த முன்னெடுப்பானது வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள பணியாட்கள் அந்தந்த நாடுகளிலுள்ள முதலீட்டு சமூகத்தினரிடையே இலங்கையில் முதலீட்டுத் தேக்க முதலீடுகளை ஊக்குவிப்பதனை இயலுமையாக்கியதுடன் எதிர்கால வெளிநாட்டு மன்றங்களை ஒழுங்குசெய்வதில் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. க்கு துணைபுரிவதற்குமாகும்.

இது தொடர்பில், ஐக்கிய இராச்சியம், சிங்கப்பூர், சுவீடன், அபுதாபி, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் வாரிங்டன் ஆகியவற்றிலுள்ள தூதரங்கள் / உயர் ஸ்தானிகராலயங்களிலுள்ள பணியாட்களுக்கு இணையவழி கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

இதன் பின்னர், இந்த முன்னெடுப்பின் இரண்டாம் கட்டமாக இ.பி.ப.ஆ. செப்டம்பர் 2021 இல் ஜப்பானிலுள்ள இலங்கையின் புலம்பெயர்ந்த சமூகத்தினருக்கு ஒரு இணையவழி மன்றம் நடாத்தப்பட்டது.

### கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ஊடான விழிப்புணர்வு

நிதியியல் விழிப்புணர்வினை பரப்புவதற்காக இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இன் குருணாகலை மற்றும் அம்பலாந்தொட்ட கிளைகளுடன் இணைந்து இணையவழி முதலீட்டாளர் விழிப்புணர்வு திட்டங்களை நடாத்தியது. இதற்கும் மேலாக, நாம் கண்டி கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கு ஒரு இணையவழி கருத்தரங்கினை நடாத்தினோம். மேலும் நாம் பங்காளிகளுக்கு அறிவூட்டுவதற்காக கருத்தரங்குகளையும் நடாத்தினோம்.

### புதிய இ.பி.ப.ஆ. சட்டத்திலான ஓர் கலந்துரையாடல்

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் சிறப்பம்சங்களை தெளிவுறுத்துவதற்காக பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு இ.பி.ப.ஆ. 6 ஒக்டோபர் 2021 மற்றும் 6 டிசம்பர் 2021 இல் இரண்டு மன்றங்களை ஒழுங்கு செய்தது.

இ.பி.ப.ஆ. இன் தலைவர் திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. அவர்கள் புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் முக்கியமான அம்சங்களிலான ஒரு காட்சிப்படுத்தலுடன் சிறப்புரை ஆற்றினார். முக்கியமாக இவை பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பானவையாகக் காணப்பட்டதுடன் ஒரு குழுவிவாதமும் தொடர்ந்தது. இந்த மன்றமானது 1000 க்கும் அதிகமான பங்குபற்றுநர்களை கவர்ந்தது

### பட்டியலிடப்படுவதற்கு சாத்தியமான கம்பனிகளின் பிரதம நிதியியல் அதிகாரிகளுக்கான செயலமர்வு

இ.பி.ப.ஆ. ஆல் பல தனியார் கம்பனிகளின் பிரதம நிதியியல் அதிகாரிகளுக்கு அவர்களை கொ.ப.ப. இல் பட்டியலிடுவதனை ஊக்குவிப்பதற்காக ஒரு மன்றம் நடாத்தப்பட்டது. இந்த மன்றத்தின் நோக்கம் பட்டியலிடப்படாத கம்பனிகளை எட்டுவதாகும். அத்துடன் அவர்களுக்கு பட்டியலிடுவதனால் ஏற்படும் நன்மைகளை பற்றி அறிவூட்டுவதற்கும் 2021 க்கான அரசாங்கத்தின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட முக்கிய பிரேரணைகளை பற்றி தெரிவிப்பதற்குமாகும். பாதீடானது 31 டிசம்பர் 2021 க்கு முன்னர் பட்டியலிடும் கம்பனிகளுக்கு சில வரிச் சலுகைகளை வழங்கியுள்ளது.

மேலாக, இ.பி.ப.ஆ. சமீபத்தில் கம்பனிகளின் பட்டியலிடலுக்கான ஒரு புதிய வரம்புறுகையினை அங்கீகரித்ததுடன், பட்டியலிடும் செயல்முறையில் கொ.ப.ப. க்கு பூரண சுயாதிகாரம் வழங்கப்பட்டதுடன், அதிக பட்டியலிடல்களை ஊக்குவிப்பதற்காக பட்டியலிடல் விதிகளும் தளர்த்தப்பட்டன.

**அத்துடன் நாம் "முதலீட்டாளர் இடுக்கு" எனப்படும் ஒரு இணையத்தளத்தினை, பிரத்தியேகமாக முதலீட்டாளர்களை அறிவூட்டுவதற்காகவும் மூலதனச் சந்தையில் அவர்கள் மிகவும் உறுதியுடன் பங்குபற்றுவதனை இயலுமையாக்குவதற்காகவும், ஆரம்பித்தோம்.**

### பங்குச் சந்தையில் ஒரு பட்டியலிடலூடாக குடும்ப வணிகங்கள் உச்சத்தினை அடைவதற்கான பட்டியலிடல் மன்றம்

இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் இணைந்து இலங்கையின் குடும்ப வணிக சமூகத்துடன் ஈடுபாட்டினை பின்வருவனவற்றின் ஊடாக ஏற்படுத்தியது. 'ஸ்தாபகரிலிருந்து குடும்பத்திற்கு – பொதுக் கம்பனி நோக்கி' எனும் கருப்பொருளில் 2021 க்கு ஒரு தொடக்க வழங்குநர் மன்றத்தினை கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் ஒழுங்குசெய்தது. இந்நிகழ்வானது எவ்வாறு ஒரு குடும்ப வணிகம், குடும்பமானது கட்டுப்பாட்டினை தக்கவைத்திருப்பதனை உறுதிசெய்யும் அதேவேளை ஒரு பொதுக் கம்பனியாக வருவதன் நலனை எவ்வாறு அடையலாம் என்று எடுத்துக்காட்டப்பட்டது. மேலும், கொ.ப.ப. இல் பட்டியலிடுதல் பற்றிய தவறான கருத்துக்களையும் மன்றமானது விளித்துரைத்தது.

இ.பி.ப.ஆ. இன் தலைவர் திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. மற்றும் கொ.ப.ப. இன் தலைவர் திரு. துமித் பர்னாந்து ஆகியோர் அவையில் சொற்பொழிவாற்றினார்கள்.

இ.பி.ப.ஆ. இன் ஆணைக்குழு அங்கத்தவர் திரு. மனில் ஜயசிங்க, இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் திரு. சிந்தக்க மென்டிஸ், கொ.ப.ப. இன் பிரதான முறைமைப்படுத்தல் அதிகாரி திரு. ரேணுக்க விஜேவர்தன மற்றும் கொ.ப.ப. இன் தொடக்கம் மற்றும் வழங்குநர் தொடர்புகளின் தலைமை திரு. புரசிசி ஜினதாச ஆகியோரடங்கிய ஒரு ஊடாட்டமான குழு விவாதமும் இடம்பெற்றது.

### தேசிய நிதியியல் உட்படுத்துதல் மூலோபாயம் (தே.ந.உ.மூ.)

தே.நி.உ.மூ. 2021-2024 ஆனது இலங்கையில் அனைத்து பங்காளிகளுக்கும் நிதியியல் உட்படுத்துகையினை மேம்படுத்துவதற்காக ஒரு செயற்திட்டம் உள்ளடங்கலாக, ஒரு தரப்படுத்தப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையினை வழங்குகின்றது. இது எவ்வாறு மூலோபாயத்தின் குறிக்கோள்களை ஒரு நேரகாலத்துடனான விதத்தில் அடையலாம் மற்றும் நிதியியல் உட்படுத்துகையினை மேம்படுத்துவதற்கு நடைமுறையிலுள்ள மற்றும் புதிய தரப்பினரை ஊக்குவித்தல் என்பதனையும் உள்ளடக்கும். இ.பி.ப.ஆ. செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் நிதியியல் உட்படுத்துகையினை மேம்படுத்துவதற்கும் ஒரு ஒருங்கிணைந்த மற்றும் கூட்டிணைந்த முயற்சியினை மேற்கொள்கின்றது.

### ஒ.தி.ப.ப. (ஒத்திசைவான, திறந்த, பதிலளிக்கக்கூடிய மற்றும் பயனுறுதிமிக்க) நீதித் திட்டம்.

இலங்கையின் சட்டத் தொழில்துறையின் ஆளுகை, தகமைகள் மற்றும் வேறுபாடு என்பவற்றை மேம்படுத்துவதற்காக தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் இலங்கை சட்டக் கல்லூரி என்பவற்றின் தெரிவுசெய்யப்பட்ட பெண் சட்ட மாணவிகளுக்கான உள்ளுர்மயமாக்கப்பட்ட கற்கை சுற்றுலாவிற்கு இ.பி.ப.ஆ. வசதியளித்தது. இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றில் ஒரு உள்ளிட்ட கற்கை சுற்றுலா திட்டத்திற்கு வசதியளித்தது.

இத்திட்டமானது இ.பி.ப.ஆ. போன்ற நிறுவனங்களது (கற்கையின் மையமாக முக்கிய நிறுவனங்களில் தெரிவு செய்யப்பட்ட ஒன்றாக இ.பி.ப.ஆ. காணப்பட்டது) தொழிற்பாடுகளை பார்வையிடுவதற்கு மாணவர்களுக்கு அதிகாரமளிப்பதற்காக USAID உடன் ஒன்றிணைந்து ஆரம்பிக்கப்பட்டதுடன் சட்டத் துறையில் காணப்படக்கூடிய பல்வேறு வேலை வாய்ப்புக்களில் ஒரு புரிந்துணர்வினையும் பெற்றுக்கொள்வதற்காகும்.

## செயற்பாட்டு மீளாய்வு


**மூலதனச் சந்தைக் கல்வி**

இ.பி.ப.ஆ. தொழில்சார் கல்வியினை விருத்திசெய்து நிர்வகிப்பதுடன் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துகின்றது. இது இலங்கையின் மூலதனச் சந்தைக்கான உரிமமளித்தல் ஆட்சிமுறையின் ஓர் அங்கமாவதுடன் பொதுமக்களுக்கு முதலீடு செய்வதிலான அடிப்படை அறிவியல் மற்றும் நடைமுறை தோற்றங்களை அறிவுறுத்துவதற்காக கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் வழங்குகின்றது.

மீளாய்வுக் காலத்தின்போது, 2019 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட மூலதனச் சந்தை தகமை வரம்புறுகையினை நாம் தொடர்ந்து நடமுறைப்படுத்தியதுடன், இது பங்குத் தரகு கம்பனிகளின் பயிற்சி முதலீட்டு ஆலோசகர்களுக்கான ஆகக் குறைந்த மட்டத்திலான தேர்ச்சியினை வழங்கும் நோக்கத்தினைக் கொண்டதாகும். குறித்த வரம்புறுகையானது சான்றளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர்களுக்கான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்து வகுப்பினை உள்ளடக்கியதாகும். அதாவது, உரித்துவப் பிணையங்கள், கடன் பிணையங்கள், மூலாதாரப் பிணையங்கள் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள் போன்றவையாகும்.

பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.) தகமையானது பிணையங்கள் துறையில் உள்ள அனைத்து சொத்து வகுப்புக்களையும் உள்ளடக்கிய ஒரு உச்சநிலை தகமையாகும். (உருவம்: 16)

**உருவம்: 16 நடைமுறை தகமை வரம்புறுகை**



தொற்றினால் கொண்டுவரப்பட்ட மாற்றங்களுடன் பொருத்தமாக்குவதன் முக்கியத்துவத்தினை இனங்கண்டு மற்றும் புரிந்துகொண்டு, இ.பி.ப.ஆ. தடையற்ற விரிவுரைகளை வழங்குவதற்காக மூலதனச் சந்தை சான்றிதழ் (மூ.ச.சா.) மற்றும் மூலதனச் சந்தையில் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களை ஓர் இணைய வடிவில் தொடர்ச்சியாக நடாத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய பரீட்சைகள், நாடளாவிய முடக்கல்கள் மற்றும் பொது கூட்டங்களுக்கு விதிக்கப்பட்ட அரசாங்க கட்டுப்பாடுகள் என்பவற்றின நிமித்தம் முதலாம் காலாண்டு மற்றும் நான்காம் காலண்டு

என்பவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.



திரு. துஷாரா ஜயரத்ன

பணிப்பாளர், வெளிவாரி உறவுகள் மற்றும் மூலதனச் சந்தைக் கல்வி



திருமதி. சஜீவனி பக்மீதெனிய

சிரேஷ்ட முகாமையாளர், மூலதனச்சந்தை கல்வி

உருவம் 17: புள்ளிவிபரச் செயற்திறன்

அதன் உரிமமளித்தல் ஆட்சியின் ஓர் அங்கமாக, இ.பி.ப.ஆ. உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகு நிறுவனங்களில் ஓர் முதலீட்டு ஆலோசகராக கடமைகளை நிறைவேற்றுவதற்கு கட்டாயமாக்கப்பட்ட பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.) மற்றும் சான்றளிக்கப்பட்ட உரித்துவப் பிணையங்கள் ஆலோசகர் (சா.உ.பி.ஆ.) சான்றளிப்பு என்பவற்றை நிர்வகிக்கின்றது. எனவே, முதலீட்டு ஆலோசகர்களுக்கான தொடர்ச்சியான வாய்மொழித் தேர்வுகள் தொற்றின் மத்தியில் வருடம் முழுவதும் இடம்பெற்றதுடன் இவை ப.மு.ஆ. உரிமத்தினை வேண்டியுள்ள மாணவர்களை உள்ளடக்குவதுடன் உரித்துவ பிணையங்கள், கடன் பிணையங்கள், நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள் மற்றும் மூலாதாரப் பிணையங்கள் போன்ற அனைத்து நான்கு வகையான சொத்துக்களுக்கு வசதியளிக்கின்றது. அத்துடன் உரித்துவ பிணையங்களை மாத்திரம் உள்ளடக்கிய ஒரு தனி சொத்து வகுப்பிற்கு வசதியளிக்கும் சா.உ.பி.ஆ. உரிமத்திற்கும் வசதியளிக்கின்றது. சில கட்டுப்பாடுகளின் நிமித்தம், குறிப்பிட்ட பரீட்சைகள் அனேகமாக 2021 இன் இறுதிப்பகுதியில் இணையவழியூடாக இடம்பெற்றதுடன் பௌதீகரீதியில் வாய்மொழித் தேர்வுகள் நடாத்தப்பட்டன. இதற்கும் மேலாக, சந்தை தொழில்புரிபவர்களின் தொழில்வல்லுநர்கள் தொடர்பான அறிவு மற்றும் திறனை விருத்தி செய்வதற்காகவும் பராமரிப்பதற்காகவும் வெபினார்கள் வடிவத்தில் தொடர்ச்சியான தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் (தொ.தொ.நி.) நடாத்தப்பட்டன.

மேலும், மூ.ச.க. பிரிவானது 2021 ஆம் ஆண்டில் நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு ஆங்கில மொழியில் முதலிடுவதிலான நிகழ்ச்சித்திட்டம் (மூ.நி.) எனும் ஒரு முதலீடு செய்தல் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்தியது. இந்த மூ.நி. திட்டங்களும் இணையவழியூடாக நடாத்தப்பட்டன.

2020 மற்றும் 2021 காலப்பகுதியில் காணப்பட்ட மேம்படுத்தப்பட்ட சந்தை செயற்திறனின் காரணமாக, மீளாய்வாண்டின்போது எமது அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் அதிகரித்த ஆர்வம் மற்றும் பங்குபற்றல் காணப்பட்டது. மூ.ச.சா. நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியதுடன் இங்கு மூலதனச் சந்தை தொழில்வல்லுனர்களுக்கும் மேலாக துறைசாரா தனிநபர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலைவிட்டு விலகியோர் மற்றும் ஏனைய துறைகளை சார்ந்த தொழில்வல்லுனர்களின் சேர்க்கையில் ஒரு அதிகரிப்பு காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் முதலீடு செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் முதலீட்டாளர்கள் மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களது பதிவீடுகளில் ஒரு அதிகரிப்பு காணப்பட்டது. மேலும், முன்னறிவிப்பிலா மாணவர்களின் அதிகரிப்பானது மூலதனச் சந்தை கல்வி நோக்கிய பொதுமக்களின் முனைப்புடனான ஆர்வத்தினை குறிப்பிடுகின்றது.

**மூலதனச் சந்தையில் சான்றிதழ் (மூ.ச.சா.), உரித்துவ பிணையங்களில் சான்றிதழ் (உ.பி.சா.), கடன் பிணையங்களில் சான்றிதழ் (க.பி.சா.) மற்றும் நம்பிக்கை அலகுப்பா பொறுப்பாட்சிகளில் சான்றிதழ் (ந.அ.பொ.சா.)**

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஆங்கில மொழியில் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டன. 24 ஆவது அணியானது ஓர் குறுகியகால தீவிர பயிற்சி மற்றும் 25ஆவது அணியானது முறையே பெப்ரவரி மற்றும் ஒக்டோபர் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டன. மொத்தமாக 132 பங்குபற்றுநர்கள் பதிவுசெய்ததுடன் இது இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான சேர்க்கைகளில் 78மூ ஆன அதிகரிப்பாகும். (உருவம்:17)

| மாணவர்களின் எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட மொத்தம் | பிணையங்கள் சந்தைகள் மற்றும் கருவிகள் தொடர்கள் பூர்த்திசெய்தவர்கள் | ஊரித்துவத் தொடர்களை பூர்த்தி செய்தவர்கள் | கடன் தொடர்களை பூர்த்தி செய்தவர்கள் | நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி தொடர்களை பூர்த்தி செய்தவர்கள் | நிதி திட்டமிடல், ஆலோசனை வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்களை பூர்த்தி செய்தவர்கள் | பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறைகள் தொடர்களை பூர்த்தி செய்தவர்கள் |
| 132 | 60 | 29 | 32 | 61 | 68 | 53 |

**பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலொசகர் (ப.மு.ஆ.), பதிவீடளிக்கப்பட்ட உரித்துவ பிணையங்கள் ஆலொசகர் (ப.உ.பி.ஆ.) மற்றும் மீளமர்த்தல்கள்**

இவ்வாண்டில் ப.மு.ஆ. உரிமம், ப.உ.பி.ஆ. உரிமம் ஆகியவற்றை வேண்டிய மாணவர்களுக்கு மற்றும் வருடாந்த தொ.தொ.நி. தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காணாததன் நிமித்தம் உரிமம் காலாவதியான முதலீட்டு ஆலொசகர்களை மீளமர்த்தலுக்காகவும் உரிமங்களை வழங்குவதற்காக 8 வாய்மொழித்தேர்வுகள் நடாத்தப்பட்டன.

# செயற்பாட்டு மீளாய்வு

இதற்கமைய, மொத்தமாக 27 மாணவர்கள் வாய்மொழித்தேர்வுகளின் பங்குபற்றியதுடன் சராசரி சித்திஎய்தல் சதவீதமானது 85% ஆகும். வெற்றியடைந்த மாணவர்களில், 6 மாணவர்கள் 86% சித்திஎய்தல் சதவீதத்தினை குறிப்பிட்டு ப.மு.ஆ. உரிமத்தினை பெற்றுக்கொண்டவேளை, 2 மாணவர்கள் 67% சித்திஎய்தல் சதவீதத்தினை குறிப்பிட்டு ப.உ.பி.ஆ. உரிமத்தினை பெற்றுக்கொண்டார்கள். மொத்தமாக 15 முதலீட்டு ஆலோசகர்கள் இவ்வருடத்தில் மீளமர்த்தப்பட்டு 88% சதவீத சித்திஎய்தலை குறிப்பிட்டார்கள். (உருவம்: 18)

உருவம் : 18 வாய்மொழித் தேர்வுகளின் புள்ளவிபர செயற்திறன்

| வாய்மொழித் தேர்வுகள் | பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சராசரி சித்தி % |
|---|---|---|
| பமுஆ / பஉபிஆ / மீளமர்த்தல்கள் | 27 | 85% |

**மூலதனச் சந்தைகளில் டிப்ளோமா (மூ.ச.டி.)**

2021 இல் இ.பி.ப.ஆ. ஐக்கிய இராச்சியத்தின் பிணையங்கள் மற்றும் முதலீடுகளுக்கான பட்டய நிருவகத்துடன் கூட்டிணைந்து வழங்கப்படும் மூ.ச.டி. நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் நிர்வகித்தது. 14 ஆவது அணியானது பெப்ரவரி 2020 இல் 17 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டில் நிறைவடைந்தது. 15 ஆம் அணியானது மொத்தமாக 9 சேர்க்கைகளுடன் பெப்ரவரி 2021 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (தொ.தொ.அ.) நிகழ்ச்சித்திட்டங்கள்**

நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்களுக்காக நடாத்தப்பட்டன. இவை உள்ளுர் மற்றும் வெளிநாட்டு மூலதனச் சந்தைகளிலான நவீன போக்குகளை தொடர்ச்சியாக அணுகி தங்களை இற்றைப்படுத்திக்கொள்வதற்காக நடாத்தப்பட்டன. 7 நிகழ்ச்சித்திட்டங்களில், 21 ஆகஸ்ட் 2021 இல் நடைபெற்ற 3 நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்து முதலீட்டு ஆலோசகர்களுக்கும் கட்டாயமானதாகும். இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 1,100 பங்குபற்றுனர்களுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டதுடன் இவர்கள் பங்குத்தரகு கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் பகுப்பாய்வாளர்களை உள்ளடக்கியது. அனைத்து தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்களும் வெபினார்களாக இணையவழியூடாக நடாத்தப்பட்டன.

அடுத்துவரும் ஆண்டில் தங்களது ப.மு.ஆ. தரத்தினை புதுப்பித்துக் கொள்வதற்கு நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்கள் ஆகக்குறைந்தது 4 தொ.தொ.அ. கருத்தரங்கு மதிப்புகளை பெறவேண்டும் என்ற கட்டாயத் தேவைப்பாட்டினை இ.பி.ப.ஆ. பராமரித்தது. (உருவம்: 19)

உருவம்: 19 தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்களின் சுருக்கம்: வருடம் 2021

| தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிதி திட்டமிடல், ஆலோசனை வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் | 176 |
| பங்குத் தரகர் மட்டத்திலான சந்தை கண்காணிப்பு மற்றும் சுய முறைமைப்படுத்தல் | 316 |
| துடிப்பான வர்த்தக மூலோபாயங்களுடன் சந்தையின் நேரப்படுத்தல் | 266 |
| பிணையங்கள் சந்தைகள் மற்றும் கருவிகள் | |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள் | 204 |
| நிதி திட்டமிடல், ஆலோசனை வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் | |
| தொழில்நுட்ப பகுப்பாய்வு அமைப்புகளுடன் உங்களது வர்த்தகத்தினை மேம்படுத்துதல் | 194 |

**முதலீடுவதிலான நிகழ்ச்சித்திட்டம் (மு.நி.)**

மு.நி. ஆனது சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு பங்கு வர்த்தகத்தின் அடிப்படை கருத்தியல் மற்றும் நடைமுறை கோட்பாடுகளை வழங்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆறு கிழமைகள் கொண்ட ஆங்கில மொழியிலான இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வருடத்தில் நடாத்தப்பட்டன. 26 ஆவது மற்றும் 27ஆவது அணிகள் முறையே ஜனவரி மற்றும் ஜூலை 2021 இல் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வருடத்தில் மொத்தமாக 36 பங்குபற்றுனர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினார்கள்.

## தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டம்

மீளாய்வாண்டில் நாம் தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டத்தினை தொடர்ந்தோம். இது பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தை தொடர்பான பாடங்களைப் பல்கலைக்கழக மாணவர்கள் கற்பதனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தைப் பிரிவுகளில் மிகச்சிறந்து விளங்கும் பல்கலைக்கழக மாணவனுக்கு தங்கப் பதக்கம் மற்றும் பணப் பரிசு வழங்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட திட்டம் தொடர்பாக பதினொரு (11) தேசிய பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (பு.ஒ.) கைச்சாத்திடப்பட்டன.

தொற்றின் பல்வேறு தாக்கங்களின் நிமித்தம், அனேகமான தேசிய பல்கலைக்கழகங்கள் தேர்வுகளை வெற்றிகரமாக நடாத்த இயலாது காணப்பட்டன. எனவே 2021 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பல்கலைக்கழகங்களுக்கு தங்கப் பதக்கங்கள் மற்றும் பணப் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன.

- களணிய பல்கலைக்கழகம்
- இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மூலதனச் சந்தை தகவல் மையம்

மூலதனச் சந்தையின் முறைமைப்படுத்துபவர் என்ற வகையில் இ.பி.ப.ஆ. எப்போதும் நாட்டில் நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. மூலதனச் சந்தையின் நீடிப்புத்திறனான அபிவிருத்திக்கு ஒரு அறிவு அடிப்படையிலான மற்றும் அறிவினால் வழிநடத்தப்படும் துறையினை உருவாக்குதல் முக்கியமாகும். மூலதனச் சந்தை தலைப்பினை பிரபல்யப்படுத்துதல் மற்றும் ஆய்வினை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்கில் மூலதனச் சந்தை தகவல் மையங்களை (மூ.ச.த.மை.) நிறுவுவதற்காக ஒரு திட்டம் முன்னெடுக்கப்பட்டது. கல்விமான்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒரு இலத்திரணியல் கற்கை சூழலூடாக மூலதனச் சந்தை தகவல்கள், தரவுகள் மற்றும் ஏனைய கல்விக் கருவிகளை நாம் வழங்குவதற்கு எதிர்பார்ப்பதன் நிமித்தம் மூ.ச.த.மை. தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்றது. மூ.ச.த.மை. யத்தினூடாக இம்மாணவர்கள் மூலதனச் சந்தை பகுப்பாய்வில் தங்களது புரிந்துணர்வினை மேம்படுத்திக்கொள்வதுடன் முதலீடு செய்வதில் தங்களது அறிவினை இற்றைப்படுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதைய சூழமைவில் அத்தகைய ஒரு முன்னெடுப்பின் முக்கியத்துவம் சிறப்பம்சமாக காணப்படுவதுடன் தற்போது இந்த இணையத்தளத்தினை புதுப்பிக்கும் செயல்முறையில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

## කොළඹ කොටස් වෙළෙඳ පොළෙහි ලැයිස්තුගත කිරීමේ වාසි ගැන පහදයි

## "ආන්තික ණය (Broker Credit) කප්පාදු කිරීමට කිසිසේත්ම අපේක්ෂාවක් නැහැ"

- විනිමය කොමිෂන් සභාවේ සභාපති ජනාධිපති නීතිඥ විරාජ් දයාරත්න

## CSE to Introduce DVP mechanism to the Stock Market

The Securities and Exchange Commission of Sri Lanka (SEC) and the Colombo Stock Exchange (CSE) are set to introduction a Delivery vs Payment (DVP) system for stock market transactions. The Go Live is scheduled for 26 July 2021 subject to a final round of testing and industry-wide mock runs.

The objective of introducing a DVP system for the stock market in Sri Lanka is to minimize the Asset concentrant risk of sellers. Under the DVP system the physical custody of shares will be transferred to buyers only on settlement date.

Presently the delivery of shares occurs immediately upon the execution of the transaction, while fund settlement takes place three market days after the transaction date (T+3), thus exposing the seller to a three-day settlement risk. Although stringent measures had been introduced to reduce settlement risk and the CSE has never experienced a settlement failure, the globally accepted mechanism for minimising settlement risk is through a DVP system where the securities and funds are exchanged simultaneously on the settlement date.

The implementation of DVP, a much-needed market infrastructure enhancement, will increase the overall credibility and integrity of the Sri Lankan stock market. Furthermore, the adaptation of the DVP settlement mechanism by CSE will be an additional qualification in obtaining the emerging market classification on international market indices.

The SEC has granted the necessary regulatory approvals for the amendments to the CDS Rules, ATS Rules, Listing Rules and Stockbroker Rules of the CSE to facilitate the implementation of the DVP Settlement Mechanism and enhanced margining model. Subsequent to the successful completion of the User Acceptance Testing (UAT) on the system changes, the CSE completed Market wide testing (Mock runs). The CSE will shortly commence the final round of Market wide testing which is due to be completed by 15 July 2021.

## SEC to introduce mechanism for investor-stock broker disputes


SEC Chairman Viraj Dayaratne PC

The Securities and Exchange Commission (SEC) is in the process of introducing a new mechanism for the resolution of disputes between investors and broker firms in a bid to further enhance investor protection.

Releasing SEC's annual report for the year 2020, Chairman Viraj Dayaratne PC noted that the mechanism that is being finalised will strengthen the independence and impartiality of the process as well as make it quicker.

"We are in the process of revising market intermediary rules in order to bring in more clarity, predictability, and consistency. Steps will also be taken to introduce a new take-overs and mergers code in order to align our regulatory regime pertaining to this sphere with emerging trends," he further added.

Dayaratne stated that since May 2020, the market witnessed a high level of activity with a record number of new investor accounts being opened.

"We have, therefore, stepped up our surveillance activities to detect any market abuse. Our surveillance capabilities will be further strengthened with the acquisition of a sophisticated surveillance system in the near future."

The SEC took steps to streamline the regulatory framework to ensure a smooth listing experience for companies by introducing a slew of measures such as relaxing the eligibility criteria, corporate governance norms, and reporting requirements. The CSE has been given complete autonomy with regard to the process of granting approval for listings.



The SEC's expert panel briefed potential market entrants on the benefits of getting listed

## SEC conducts workshop for CFOs of potential listed companies

The Securities and Exchange Commission of Sri Lanka (SEC) recently conducted a forum for the Chief Financial Officers (CFOs) of several private companies with the view of encouraging them listing a company was not as cumbersome or expensive as is generally perceived. He requested them to take the message to their respective boards.

## ESG reporting extremely important - SEC Chairman


SEC Chairman Viraj Dayaratne

SEC Chairman Viraj Dayaratne underscored the importance of component disseminating their Environmental, Social, and Governance (ESG) related data in their annual reports.

Dayaratne further linked such information to potentially being part of the material information that could be the duty of companies to report to all stakeholders through market disclosures.

Dayaratne was speaking as chief guest on 9 December at the CA Sri Lanka's Annual Report Awards ceremony held at the BMICH.

Dayaratne noted that in the coming years the Annual Report Awards was to incorporate to a larger scope ESG factors into the assessment criteria.

Dayaratne was of the view that the annual report in terms of documentation was one of the most important things that a company has in its communication with all stakeholders. He was of the view that good corporate governance was reflected in the annual report

Dayaratne said, "In the long-run good corporate governance pays off."

Dayaratne highlighted that in an increasingly complex and technologically evolving world the need for companies to stay ahead of the risks posed by public concerns of ESG was paramount. He noted that investors were more likely to invest in companies where the ESG data was disclosed in the marketplace.

Dayaratne noted that in the increasingly conscientious society investors would look at the ESG data as a measure of the potential risk a prospective investor would face when investing in a company.

Dayaratne highlighted that stakeholders were looking to compile ESG indices to be able to compare companies. ESG reporting would also help act as a check and balance on companies thereby bringing discipline and accountability in their dealings. Dayaratne was of the view that the corporate sector would be welcoming of more widespread ESG reporting.

## කොළඹ කොටස් වෙළෙඳ පොළ ඩිජිටල්කරණයේ දෙවැනි අදියර ආරම්භ වෙයි






SEC Chairman Viraj Dayaratne PC


CSE Chief Executive Officer (CEO) Rajeeva Sundaranaika


High Commissioner of Sri Lanka to Singapore Sashikala Premawardhana

## SEC to promote SL for portfolio investment

The Securities and Exchange Commission (SEC), along with the Foreign Ministry and the Colombo Stock Exchange (CSE), has commenced a series of virtual meetings to educate staff of Sri Lankan Missions overseas on the growth potential and investment opportunities available in the capital market of Sri Lanka.

This initiative will enable the respective staff of Missions overseas to promote portfolio investments to Sri Lanka among the investor community in the respective countries and assist the SEC and the CSE in organising future overseas forums.

"Portfolio investment will act as a catalyst for economic growth and is a top priority for the Government, particularly in the context of post-Covid economic recovery. These forums will offer the Sri Lankan diaspora the opportunity to understand the investment prospects available in the capital market of Sri Lanka as well," remarked SEC Chairman Viraj Dayaratne PC.

The CSE has performed exceptionally well in the past 12 months, with the All Share Price Index (ASPI) appreciating more than 55% and the S&P SL20 Index appreciating more than 44%.

*Contd. on page 3*

"ආන්තික ණය (Broker credit) කප්පාදු කිරීමට කිසිසේත්ම අපේක්ෂාවක් නැහැ"

## New SEC Act comes into force

THE new Act of the Securities and Exchange Commission (SEC) came into force on Tuesday following the certification by the Speaker Mahinda Yapa Abeywardena.

The development follows the SEC Bill being passed by Parliament earlier this month without a vote.


The new law, which will replace the Securities and Exchange Commission of Sri Lanka Act No. 36 of 1987 and aims to regulate the capital market in keeping with current international best practices.



## செயற்பாட்டு மீளாய்வு

இ.பி.ப.ஆ. சமூக ஊடக மேடையினூடாக விழிப்புணர்வினை உருவாக்குதல்





















உங்களுக்கு
தெரியுமா?
முதலீடு செய்யும் போது
முதலீட்டாளர் தன்னால் முகாமை
செய்ய இயலுமான ஆபத்தை
மட்டுமே எடுத்துக்கொள்வது
முதலீட்டில் மிகமுக்கியமான
ஒன்றாகும்.


உங்களுக்கு தெரியுமா?
உங்களது முதலீட்டு தீர்மானங்கள்
ஆதாரமற்ற வதந்திகள்/உதவிக்
குறிப்புகள் மற்றும் போலியான சமூக
ஊடக பதிவுகளை அடிப்படையாக
கொண்டல்லாமல் நம்பகரமான
ஆதாரங்களை அடிப்படையாக
கொண்டதாக இருக்கவேண்டும்.
FAKE NEWS


ඔබ දැන සිටියාද?
READ CAREFULLY


உங்களுக்கு
தெரியுமா?
இலங்கையில் மூலதனச்
சந்தை தொடர்பான
சேவைகளை
வழங்குவதற்கு
அந்நிறுவனங்கள்
இலங்கை நிறுவனங்களை
மற்றும் பரிவர்த்தனை
ஆணைக்குழுவின்
அனுமதிப்பத்திரத்தினை
அல்லது
ஆணைக்குழுவில் பதிவு
செய்திருக்க வேண்டும்
LICENSED
LICENSED
LICENSED


SEC
Risk comes from
not knowing
what you're doing


DID YOU KNOW ?
The Securities and Exchange Commission of Sri Lanka
DOES NOT grant licences to agents to operate in other
jurisdictions or to act as agents of international stockbroker firms.
SEC
SECURITIES AND EXCHANGE
COMMISSION OF SRI LANKA


Do you know that
your 'Stockbroker'
WILL NOT carry
out transactions on
behalf of you if you
do not submit your
Email Address and
Mobile Number to
your Stockbroker
on or before 10th
September 2020


Investing starts with a
plan, and an
investment plan
starts with defining
your financial goals.
Here's what to ask yourself:
What goals do I want to
achieve with my
investments?
How much do I need to
invest to achieve my goals?
How much can I afford to
invest?
What is my risk tolerance?
How can I be educated on
Market Malpractices?
Have I checked my
investment professional's
background on
www.sec.gov.lk?

# செயற்பாட்டு மீளாய்வு

### மனிதவளத் தோற்றம்

இ.பி.ப.ஆ. செயலகத்தின் பணியாட்டொகுதியானது அதன் அடிப்படை கொள்கைகள் மற்றும் முக்கிய விழுமியங்களை இழக்காது எப்போதும் மாறுபடும் வெளிவாரி சூழலுக்கேற்ப ஒத்துப்போவதற்கான பொறாமைப்படத்தக்க ஆற்றலினை வெளிக்காட்டியது. அத்தகைய ஒரு சூழலில், நாளைய இ.பி.ப.ஆ. இனை கட்டியெழுப்புவதில் நிறுவனத்தின் ஒவ்வொரு பணியாளும், அதாவது ஒரு தனிநபராக மற்றும் நிறைவாக்குகின்ற பங்கினைக் கொண்டுள்ளார்கள்.

### மனித வள இயக்கவியல்

இ.பி.ப.ஆ., பணியாட்களில் பின்வருவன காணப்பட்டால் மாத்திரமே திடமாக வளர்ச்சியடையலாம். அனைத்து வயதினர், நாட்டினர், இனங்கள், வருடக்கணக்கிலான அனுபவங்கள் மற்றும் படிநிலை மட்டங்கள் போன்ற பரவலான பணியாட்களுடன் ஒரு உகந்த தொழில்புரியும் சூழல் மற்றும் ஒருவர் மற்றவரது தனித்துவமான விழுமியங்களை பரஸ்பரமாக புரிந்துகொள்ளுதல் காணப்படின் வளர்ச்சியடையலாம்.

மேலும், இ.பி.ப.ஆ. இன் வெற்றியானது எமது அர்ப்பணிப்பான பணியாட்கள் குழுவின் ஆக்கத்திறன், அறிவு, திறன் மற்றும் நோ்மை என்பவற்றும் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட முகாமைத்துவம், நடுநிலை முகாமைத்துவம், செயலாளர் தரம் மற்றும் நிறைவேற்றுநரல்லா தரம் போன்ற படிநிலை வித்தியாசங்களை பொருட்படுத்தாமல் இவர்கள் ஒரு குடும்பமாக இ.பி.ப.ஆ. இனை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள். தனிமனிதத்திறன் எப்போதும் எமது உயர் முன்னுரிமை என்பதுடன் எமது தொலைநோக்காக எமது மக்களை முதல்நிலைப்படுத்தும் ஒரு மனிதாபிமான தொழில்புரியும் இடமாக வருவதாகும்.



திருமதி. பிரசாந்தி சபேசன்

பணிப்பாளர், மனித வளங்கள்



திருமதி. அசோகா தயாரத்ன

முகாமையாளர், மனித வளங்கள்

### கோவிட்-19 தொற்றுடன் ஈடுகொடுத்தல்


ஓர் கரிசனையுள்ள நிறுவனமாக, கோவிட்-19 தொற்றின்போது, இ.பி.ப.ஆ. மனிதாபிமானத்தினை தழுவுவதுடன் புரிந்துணர்வுடனும் கரிசனையுடனும் காணப்படுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற ஒரு திடமான நிலைப்பாட்டினை எடுத்தது. முன்னெப்போதும் நிகழ்ந்திராத சவால்மிக்க இந்த காலப்பகுதியில், எமது பணியாட்களிடையே ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு உயர் முக்கியத்துவமாக காணப்பட்டது. எனவே, எமது பணியாட்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வினை முன்னிலைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக உடனடி நடவடிக்கைகள் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும், மையமான /முக்கியமான செயற்பாடுகள் என்பவற்றை இனங்காண்பதுடாக பணியமர்த்தல் மூலோபாயங்கள் விருத்திசெய்யப்பட்டன. முக்கிய தொழில் பங்களிப்புடனான பணியாட்கள் தொலைவிலிருந்து தொழில்புரிவதற்கு ஒப்படைக்கப்பட்டதுடன் அவர்களுக்கு மடிக்கணனிகள், டொங்கள்கள் மற்றும் வழக்கமான பணிகளுக்கான தடைகளை குறைப்பதற்காக தொலைவிலிருந்தான அணுக்கம் என்பன வழங்கப்பட்டவேளை தரவுகளது பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டது. வெளிவாரி சூழலுக்கான வெளிப்பாட்டினை குறைப்பதற்காக, தொற்றுக் காலப்பகுதியின்போது போக்குவரத்து வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டன. பின்னர், நிலைமைகளின் தீவிரத்தின் தன்மைமைப் பொறுத்து, ஒரு வேலைமுறைப்பட்டியல் அடிப்படையில் வழக்கமான மற்றும் முக்கிய பணிகளை செயலாற்றுவதற்காக பணியாட்கள் உடல்ரீதியாக வேலைக்கு திரும்புவதற்கான மூலோபாயங்கள் விருத்திசெய்யப்பட்டன. இவ்வாறு செய்வதில், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் கைக்குழந்தைகளுடனான தாய்மார்கள் வீட்டிலிருந்து தொழில்புரிவதற்காக மேலதிக அனுமதிகள் வழங்கப்பட்டன.

### பணியமர்த்தல்


மூலதனச் சந்தையிலுள்ள சவால்களை சமாளிப்பதற்கு ஊக்கமளிக்கப்பட்ட மற்றும் ஈடுபாடுடைய பணியாட்டொகுதி முக்கியமானதாகும். எனவே, இ.பி.ப.ஆ. அதன் பணியமர்த்தல் செயற்பாட்டினை தொடர்ந்ததுடன் செயலகமானது பொருத்தமான தகமை மற்றும் அனுபவமுடைய நபர்களைக் கொண்டு ஒரு பணிப்பாளர் மற்றும் பதினான்கு உதவி முகாமையாளர்களை முக்கிய செயற்பாட்டு பிரிவுகளுக்கான வெற்றிடங்களை நிரப்பக்கூடியதாயிருந்தது. மேலும், தொடருகின்ற வருடத்தில் ஒரு சில சிரேஷ்ட முகாமைத்துவ நிலைகளை நிரப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செயற்பாட்டின் வினைத்திறன் மற்றும் பயனுறுதிறனை மேம்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் ஒரு நிலையான தவணை ஒப்பந்தத்தில் ஒரு ஆலோசகர் பணிக்கமர்த்தப்பட்டார்.


உருவம் 20: சேவைக்கால தகவல்கள்





உருவம் 21: கல்வித் தகமை பகுப்பாய்வு





உருவம் 22: பாலினத் தொகுப்பு



உருவம் 23: வயதுப் பகுப்பாய்வு




உருவம் 24: நடைமுறையிலுள்ள சேனை




## பயிலுதல் மற்றும் அபிவிருத்தி

சூழலில் காணப்படும் புதிய போக்குகள் மற்றும் சவால்கள் மற்றும் அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கு அவசியமான திறன்கள் என்பவற்றை ஒருங்கிணைப்பதற்காக பயிற்றுவித்தல் தத்துவங்கள் மற்றும் மூலோபாயங்கள் காலத்திற்கு காலம் மாற்றியமைக்கப்படல் வேண்டும் என இ.பி.ப.ஆ. நம்புகின்றது. பயிற்றுவித்தல் வாய்ப்புகள் அனைத்து பணியாட்களுக்கும் அவர்களது திறமைகள் மற்றும் தகுதியுடைமையினை அதிகரிப்பதற்காக வழங்கப்படுகின்றது. இது நிறுவனத்தின் தேவைகளை சந்திப்பதற்கும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு வசதியளிப்பதற்கும் வழங்கப்படுவதுடன் அதன்மூலம் பணியாட்களுக்கு சவால்மிக்க தொழில்துறையினையும் வழங்கும்.

ஜனவரி முதலே உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் இணையவழி மற்றும் வெளிவாரி மூலம் ஆரம்பித்தன.

மீளாய்வாண்டில், இ.பி.ப.ஆ. ரூபா 25 மில்லியனை பணியாட்களது வெளிநாட்டு பயிற்சிக்காக பாதீடு செய்துள்ளது. துரதிஷ்டவசமாக, கோவிட்-19 தொற்றின் காரணமாக ச.பி.ஆ.ஒ., ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (ஆ.பி.பொ.ஒ.) போன்ற நிறுவனங்கள், ஏனைய நாடுகளின் பிணையங்கள் முறைமைப்படுத்தல் ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்கள் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியாத நிலையிலுள்ளன. எவ்வாறாயினும், செயலகத்தின் பணியாட்களுக்கு ச.பி.ஆ.ஒ., ஜப்பானிய பிணையங்கள் வர்த்தகச் சங்கம் (ஜ.பி.வ.ச.), சிங்கப்பூர் நாணய அதிகாரசபை, பிணையங்கள் பரிவர்த்தனை மலேஷியா மற்றும் ச.பி.ஆ.ஒ./ச.நி.மு.நி.தி. -ஹாவார்ட் சட்டக் கல்லூரி ஆகியவற்றினால் ஒழுங்குசெய்யப்பட்ட இணையவழி கருத்தரங்குகளை பின்பற்றுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

மேலாக, பணியாட்கள் மீளாய்வாண்டில் பின்வரும் உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்கேற்றார்கள். தேசிய சட்டக் கருத்தரங்கு 2021, வங்கிக் கற்கைகளுக்கான மத்திய நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட, 'ஆக்கபூர்வமான பொருளாதாரம்: எதிர்காலத்திற்கான இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான மூலோபாயம்', கோர்ப்பரேட் லீகள் கன்சல்டன்ட்ஸ் அவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட 'புதிய இ.பி.ப.ஆ. சட்டத்திலான' கருத்தரங்குகள், ஆசிய பசிபிக் கணக்காளர்களது 20ஆவது சம்மேளனம், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் 42 ஆவது தேசிய கருத்தரங்கு மற்றும் இலங்கையின் பொருளாதாரக் கருத்தரங்கு 2021 என்பனவாகும்.

பணியாட்களது அறிவூட்டலுக்கான கடப்பாட்டினை வெளிப்படுத்தும்விதமாக, இ.பி.ப.ஆ. இன் பயிற்றுவித்தல் அங்கமானது பணியாட்களுக்கு அவர்களது மூலதனச் சந்தை அறிவினை தரமுயர்த்துவதற்கான பாடநெறிகளை பின்பற்றுவதற்கான வாய்ப்பினை தொடர்ச்சியாக வழங்குகின்றது. பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர் நிருவகம் (ப.நி.ப.) கழிவிறக்கம் செய்யப்பட்ட விலைகளில் பணியாட்களுக்கு பாடத்திட்டங்களை பின்பற்றுவதற்காக கல்வி உதவித்தொகையினை வழங்குகின்றது. இதற்கும் மேலாக, பின்வரும் நிபந்தனையின் பேரில் இ.பி.ப.ஆ. பணியாட்டொகுதியினருக்கு பட்டப்படிப்பின் பின்னரான உயர் கல்விகளைத் தொடர்வதற்கான கல்வி உதவித்தொகைகளை வழங்குகின்றது. இது பாடத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்தபின் செயலகத்தில் இரண்டு வருடங்கள் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டதாகும்.

இ.பி.ப.ஆ. நிறுவனத்தில் இடம்பெறும் பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி பணியாட்களுக்கு அறிவிப்பதுடன் பணியாட்களும் அறிவு மற்றும் திறனில் முன்னணியில் இருப்பதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தேடிக்கொள்வதற்கான ஒரு முயற்சியினை மேற்கொள்வதற்கு கடப்பாடுடன் இருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, பணியாட்கள் அவர்களது பிரிவுகளின் தலைமையுடன் ஆலோசித்து பயிற்றுவித்தல் சலுகைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றார்கள். மூலதனச் சந்தையிலுள்ள ஏனையோரிலும் மேலாக எங்களுக்கு மக்கள் போட்டிக்குரிய வாய்ப்பினை வழங்கியுள்ளார்கள். எமது பணியாட்கள் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு தேவையான தகுதியுடனும் மற்றும் நிறுவனத்தினை வெற்றி நோக்கி வழிநடத்துவதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

## வளங்களது ஈடுபாடு

விதிவிலக்கான செயற்திறனை புரிந்துகொள்வதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் பணியாட்களுடனான ஈடுபாடானது ஒரு பெறுமதிமிக்க கோட்பாடாகும். இ.பி.ப.ஆ. ஊக்குவிக்கப்பட்ட, உறுதியான மற்றும் நம்பகமான பணியாட்களை வளர்ப்பதன் முக்கியத்துவத்தினை முன்னரே அறிந்துள்ளது. எனவே, பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி, மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் என்பன பணியாட்கள் ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. பணியாட்களது ஈடுபாடு மற்றும் செயற்திறனை ஊக்குவிப்பதில் கலாச்சாரமும் முக்கிய பங்கு வகிக்கின்றது. செயலகத்தின் ஒவ்வொரு பணியாளும் செயல்சார் பங்களிப்பவர் என்பதுடன் பல மட்டங்களில் பல பிரிவுகளில் பங்களிப்பு செய்கின்றார்கள்.

மேலும், நீண்டகால பணியாட்கள் கடப்பாட்டினை விருத்திசெய்வதற்காக, ஊதியம் மற்றும் நலன்களிலான ஒரு சந்தை மதிப்பாய்வினை மேற்கொள்வதற்காக இ.பி.ப.ஆ. இன் முகாமைத்துவமானது எர்னஸ்ட் அன்ட் யங் ஆலோசகர்களுடன் இணைந்தது. இத்திட்டத்தின் நோக்கமானது ஊதியக் கட்டமைப்பில் நடைமுறையிலுள்ள முரண்பாடுகளை அறிந்து அத்தகைய முரண்பாடுகளை திருத்தியமைத்து சந்தை மதிப்பாய்வு கண்டுபிடிப்புகளுக்கேற்ப திருத்தியமைப்பதற்கான தெரிவுகளை வழங்குகின்றது.

முன்னிறுத்தப்பட்ட அபிவிருத்தி முன்னெடுப்புகளுடன் ஒரு குடும்பசூழலான மற்றும் உறுதுணையளிக்கும் தொழில்புரியும் சூழலினை வளர்த்தல் ஒரு சவால்மிக்க மூலதனச் சந்தையில் செயற்படும்போது செயலகத்திற்கு உயர்ந்த சிறப்பினை எட்டுவதற்கான தூண்டுதலை வழங்குகின்றது. நிறுவனத்தின் அடிமட்டத்திலுள்ள மற்றும் நீண்டகாலம் சேவையாற்றியுள்ள பணியாட்களின் வேண்டுதல்களுக்கு பதிலளிக்கும் முகமாக நிதி அமைச்சின் ஒத்திசைவுடன் செயலகத்திற்கு ஒரு பங்களிப்புடனான ஓய்வூதிய திட்டத்தினை நிறுவி முறைமைப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முன்னெடுப்பானது கடப்பாட்டின் மட்டத்தினை பிரதிபலிப்பதுடன் செயலகமானது பணியாட்கள்

# செயற்பாட்டு மீளாய்வு

நிறுவனத்தில் நீண்டகால பாகமாயிருத்தல் வேண்டும் என குறிப்பிடுவதுடன் இது பணியாட்களிடமிருந்து விசுவாசம் மற்றும் உள்வாங்கலை ஊக்குவிக்கும்.

### சமூக நல்வாழ்வு

கோவிட்-19 தொற்றின் மத்தியில், மனிதவள பிரிவானது பணியாட்களுடன் பல்வேறு சமூக நிகழ்வுகளை பின்வரும் நோக்குடன் ஒழுங்குசெய்தது. பணியாட்களது ஈடுபாட்டின் மட்டத்தினை மேம்படுத்துவதற்கு, ஒருவர் மற்றொருவரை புரிந்துகொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல், தொழிலிலான திருப்தியினை அதிகரிப்பதற்கு மற்றும் பணியாட்களின் மனவுறுதியினை மிகையூட்டுவதற்காகும்.

இ.பி.ப.ஆ. பின்வருவனவற்றை உள்ளடக்கிய ஒரு துடிப்பான சமூக நாள்காட்டியினை பராமரித்தது. வருடத்தின் முதலாம் வேலை நாளில் புதுவருட கொண்டாட்டங்கள், இரவுமுழுவதுமான பிரித் வைபவம், புதுவருட பணியாட்கள் கொண்டாட்டம் மற்றும் வருட இறுதி கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் என்பனவாகும்.

மேலும், பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டலுடன் மனிதவளப் பிரிவானது இ.பி.ப.ஆ. இன் பணியாட்களது பிள்ளைகளிடையே வாசிப்பதற்கான ஆசையினை விருத்திசெய்வதற்காக தேசிய எழுத்தறிவு மாத கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக 'ஒரு வாசிப்பாளரை எழுப்பு' முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் குறிக்கோளானது பணியாட்கள் அவர்களது பிள்ளைகளுக்கு ஒரு எழுத்தறிவு கலாச்சாரத்தினை உருவாக்குவதற்கு இ.பி.ப.ஆ. இனது உறுதுணையுடன் உதவுவதாகும் மற்றும் கோவிட்-19 தொற்று நிலைமையில் புத்தகங்களுக்கான தெரிவு மற்றும் அணுக்கத்தினை வழங்கி வாசிப்பதற்கான வாழ்க்கைபூராவுமான ஆசையினை ஊக்குவிப்பதாகும். மேலாக, ஓவியம் மற்றும் கட்டுரை போட்டிகள், சிறுகதை எழுதுதல் போட்டிகளும் இடம்பெற்றன. வெற்றியாளர்களுக்கு சரசவி புத்தகசாலையின் பரிசு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன.

இந்த முன்னெடுப்புகள் இ.பி.ப.ஆ. அதன் பணியாட்களின் நலன்களை கவனிப்பதிலான அதன் கடப்பாட்டினை தெளிவாக குறிப்பிடுகின்றது.

### விசேடதிறமைக்கான செழித்தோங்கல்

இடையூறுடனான ஒரு வருடத்தில் குறிக்கோள்கள் மற்றும் செயற்திறன் அளவீடுகளை மனிதவளச் செயற்பாடானது மீள்மதிப்பு செய்யும்போது நெகிழ்வுத்தன்மை ஒரு அவசியமான நற்பண்பாக காணப்படுகின்றது. 2021 கொண்டுவந்த மாற்றங்கள் அடுத்த வருடத்தினை ஒரு உருமாற்றத்திற்கான ஒரு வருடமாவதற்கு வழிசமைத்துள்ளது. துறைசார் நகர்வுகளை புரிந்துகொள்வது, இடம்பெறும் துரித விருத்திகளுடன் ஒத்துபோவதற்கு முக்கியமானதாகும், விசேடமாக தொற்றின் மத்தியிலாகும். அந்த நோக்கத்திற்காக இ.பி.ப.ஆ. 2022 ஒரு முக்கியமான ஆண்டாகக் காணப்படும் என நம்புகின்றது. இங்கு மனித வளம் நிறுவனத்தினது விருத்தியில் கவனஞ்செலுத்துவதுடன் தொழில் எதிர்காலத்தினை வடிவமைக்கும்.

## சட்டபூர்வமான நிதியங்கள்

### தீர்வை நிதியம்

தீர்வை நிதியமானது 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் 14ஏ மற்றும் 14பி பிரிவுகள், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கத் திருத்தச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத் திருத்தச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் (பழைய இ.பி.ப.ஆ. சட்டம் ), என்பவற்றின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பழைய சட்டமானது 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 156 (1) இனால் நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது 21 செப்டம்பர் 2021 முதல் நடைமுறைக்கு வந்தது.

பழைய சட்டத்தின் பிரிவு 14 ஏ மற்றும் பிரிவு 14 பி இன் பிரகாரம் தீர்வை நிதியத்தினை செயற்படுத்துவதற்கான செயல்முறை மற்றும் நோக்கங்கள் பின்வருமாறு.

14A (1) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் அமைச்சரினால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய வீதத்தில், உரிமம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பதிவாகும் ஒவ்வொரு பிணையங்கள் கொள்வனவு மற்றும் விற்பனையிலும் அல்லது அதன் விதிகளுக்கேற்ப கொள்வனவாளராலும் விற்பனையாளராலும் ஒரு தீர்வை விதிக்கப்பட்டு, அறவிடப்பட்டு மற்றும் செலுத்தப்படல் வேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட பிணையங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் குறிப்பிடப்படலாம்.

(2) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலாகச் செலுத்தப்படல்வேண்டும்.

14B (1) பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையை வரவு வைப்பதற்காக தீர்வை நிதியம் எனப்படும் நிதியமொன்று நிருவப்படல்வேண்டும். 14A.

(2) ஆணைக்குழுவின் உத்தரவின்படி பின்வரும் நோக்கங்களுக்காக தீர்வை நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் செய்யலாம் :

(அ) பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு

(ஆ) 38ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்துவதற்கு

(இ) ஆணைக்குழுவின் நோக்கங்களை அடையும் பொருட்டு அதனது அதிகாரம், கடமைகள், தொழிற்பாடுகள் போன்றவற்றை உபயோகிப்பதற்கும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும்.

(3) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் தீர்வை நிதியத்தில் வரவிலுள்ள பணத்தை ஆணைக்குழு முதலீடு செய்ய முடியும். 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவுகள் 155 (1) மற்றும் (2) மற்றும் 156 (1), (2) மற்றும் (3) இன் பிரகாரம் தீர்வை நிதியத்தினை செயற்படுத்துவதற்கான செயல்முறை மற்றும் நோக்கங்கள் பின்வருமாறு.

155 (1) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் அமைச்சரினால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய வீதத்தில், உரிமம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பதிவாகும் ஒவ்வொரு பிணையங்கள் கொள்வனவு மற்றும் விற்பனையிலும் அல்லது அதன் விதிகளுக்கேற்ப கொள்வனவாளராலும் விற்பனையாளராலும் ஒரு தீர்வை விதிக்கப்பட்டு, அறவிடப்பட்டு மற்றும் செலுத்தப்படல் வேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட பிணையங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் குறிப்பிடப்படலாம்.

(2) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலாகச் செலுத்தப்படல்வேண்டும்

156 (1) பிரிவு 155 இன் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையை வரவு வைப்பதற்காக தீர்வை நிதியம் எனப்படும் நிதியமொன்று நிருவப்படல்வேண்டும்.

(2) தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள பணமானது பின்வரும் நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படலாம் -

(அ) பிணையங்கள் சந்தையினை விருத்தி செய்வதற்கு

(ஆ) இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்துவதற்கு அல்லது இந்த பகுதியின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவின் நிதியத்திற்கு

(இ) ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு, செயலாற்றுவதற்கு மற்றும் நிறைவேற்றுவதில் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் செயற்பாடு

என்பவற்றுக்கான ஆணைக்குழுவினால் ஆட்பட்ட அனைத்து செலவினங்களையும் சந்திப்பதற்கு

(எ) ஆணைக்குழு பொருத்தமானது எனக் கருதும் பிரகாரம் ஆணைக்குழுவின் பணியாட்களுக்கு வீடமைத்தல், கல்வி, ஆரோக்கியம் மற்றும் போக்குவரத்து நோக்கங்களுக்கு கடன்கள் வழங்குவதற்கு

(ஏ) பணிப்பாளர் நாயகம் மற்றும் அதன் அதிகாரிகள் மற்றும் சேவகர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் நியமிக்கப்பட்டோர் ஆகியோரது நலனுக்காக நிறுவப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் மற்றும் ஏனைய திட்டங்களுக்கு பங்களிப்புகளை மேற்கொள்வதற்கு மற்றும்

(ஐ) ஆணைக்குழுவினால் தகுதியானவர்கள் என தீர்மானிக்கப்பட்டவாறு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சேவகர்களுக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கற்கைக்கான செலவினங்களுக்கு பணங்கொடுத்து தீர்ப்பதற்கு

(3) தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள ஏதேனும் மேலதிக பணத்தை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய விதத்தில் தீர்வை நிதியத்தினை விருத்திசெய்யும் நோக்கத்திற்காக ஆணைக்குழு முதலீடு செய்யலாம்.



திருமதி. நிரோஷா கொடிகார
பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம்



திருமதி. லக்ஷ்மி விக்கிரமநாயக்க
முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம்

### உரித்துவ பிணையங்களுக்கான இ.பி.ப.ஆ. தீர்வை

கொ.ப.ப. இன் வழிகாட்டல்களின் பிரகாரம், 1 ஆகஸ்ட் 2010 முதல் இ.பி.ப.ஆ. ஆல் விதிக்கப்பட்டுள்ள தீர்வை வீதமானது இரண்டாவது தடவையாக ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.09% இலிருந்து ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.072% ஆக குறைக்கப்பட்டுள்ளது. முன்னைய குறைப்பானது 1 டிசம்பர் 2003 முதல் பிரயோகத்திலுள்ள தீர்வைக் கட்டணம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.1% இலிருந்து 0.09% ஆகக் குறைக்கப்பட்டது.

மேலும், மேற்குறிப்பிட்ட வீதங்களுக்கு பிரயோகிக்கப்படும் குறுமட்டமானது 27 ஜூன் 2017 முதல் ரூபா 100 மில்லியனாக மாற்றியமைக்கப்பட்டது. முன்னர், 1 ஜனவரி 2011 முதல், ரூபா 50 மில்லியன் வரைக்குமான மற்றும் ரூபா 50 மில்லியனுக்கு மேலான கொடுக்கல் வாங்கல்களுக்கு இ.பி.ப.ஆ. தீர்வையானது முறையே 0.072 % மற்றும் 0.045% ஆக அறவிடப்பட்டன. அதன் பின்னர் 27 ஜூன் 2017 தொடக்கம், மாற்றியமைக்கப்பட்ட குறுமட்டத்தின் பிரகாரம் ரூபா 100 மில்லியன் வரைக்குமான மற்றும் ரூபா 100 மில்லியனுக்கும் மேலான கொடுக்கல் வாங்கல்களுக்கு இ.பி.ப.ஆ. தீர்வையானது முறையே 0.072% மற்றும் 0.045% ஆக அறவிடப்பட்டன.

இதற்கும் மேலாக, ஒரே நாளிலான வர்த்தகங்களுக்கு, அதாவது ஒரு வாடிக்கையாளர் ஒரே தினத்தில் ஒரே தரகரூடாக ஒரே பிணையத்தினை வாங்கி விற்றால் (அல்லது நேர்மாறாக) இ.பி.ப.ஆ. க்கு சேரவேண்டிய கொடுக்கல் வாங்கல் கட்டணம் 15 பெப்ரவரி 2006 முதல் ஒரு பக்க கொடுக்கல் வாங்கலுக்கு விதிக்கப்படமாட்டாது.

கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை விற்பனை செய்த பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக இல்லாதவிடத்து மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல் கட்டணம் குறைந்த எண்ணிக்கையிலான வாங்கிய அல்லது விற்ற பங்குகளுக்கு அறவிடப்படமாட்டாது. வாங்கிய பங்குகளின் மொத்த எண்ணிக்கை விற்ற பங்குகளின் மொத்த எண்ணிக்கைக்கு சமமாக உள்ளவிடத்து கொடுக்கல் வாங்கல் கட்டணம் விற்பனைக்கு அறவிடப்படமாட்டாது. ஒரு வாடிக்கையாளரின் ஒரே பிணையத்திலான மொத்த கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் இ.பி.ப.ஆ. கொடுக்கல் வாங்கல் கட்டணத்தின் விலக்களிப்பினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக கருத்திலெடுக்கப்படும். இருப்பினும், அரசாங்க பங்குக் கொடுக்கல் வாங்கல் கட்டணமான 0.30% ஆனது கொடுக்கல் வாங்கலின் இரு பக்கங்களுக்கும் அறவிடப்படும்.

### தீர்வை நிதியத்தின் செயற்பாடு


இழப்பீட்டு நிதியத்தினைப் பலப்படுத்தவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதற்கும் மேலாக ரூபா 100 மில்லியன் தீர்வை நிதியத்திலிருந்து தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்கு 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 50 மில்லியன் வீதம் மாற்றல் செய்யப்பட்டது.

திரட்டிய நிதியத்திற்கு ஐந்து தடவைகள் மேற்கொண்ட மாற்றல்கள் முறையே ரூபா 276 மில்லியன், ரூபா 380 மில்லியன், ரூபா 94 மில்லியன், மற்றும் ரூபா 52 மில்லியன் மற்றும் 312 மில்லியன் என்பன முறையே 2010, 2012, 2013, 2019 மற்றும் 2020 ஆகும்.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் இத்தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள தொகை ரூபா 3,884.3 மில்லியனை எட்டியது என்பதுடன் இதில் பன்னிரண்டு மாதங்களினுள் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 355.7 மில்லியன் முதலீடு செய்யப்பட்டும், பன்னிரண்டு மாதங்களின் பின்னர் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 3,159.1 மிலலியன் முதலீடு செய்யப்பட்டும், ரூபா 452.2 மில்லியன் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு செய்யப்பட்டும் உள்ளன.

2012 முதல் 2021 வரையான காலப்பகுதியில் நிதியத்தின் அசைவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள:

**தீர்வை நிதியம்**



# செயற்பாட்டு மீளாய்வு

## இழப்பீட்டு நிதியம்

1987 இல் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவப்பட்டதோடு இழப்பீட்டு நிதியம் செயற்பாட்டிற்கு வந்துள்ளது. 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (திருத்தியமைக்கப்பட்டவாறு), 20 செப்டம்பர் 2021 வரை நடைமுறையிலிருந்தது, (பழைய இ.பி.ப.ஆ. சட்டம் ) கீழ் ஓர் இழப்பீட்டு நிதியத்தினை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் இ.பி.ப.ஆ. இன் சட்டரீதியான ஓர் பொறுப்பாகும்.

பழைய சட்டத்தின் பிரிவுகள் 38 மற்றும் 39 இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தின் குறிக்கோள் மற்றும் அதனைப் பராமரிப்பதற்கான வழிகாட்டிகள் பின்வருமாறு:

38 (1) யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை சந்திப்பதற்கு ஆற்றலின்றி காணப்படுகின்றார் என்று கண்டறிவதன் விளைவாக யாரேனும் முதலீட்டாளர் பணவகையான நட்டத்தினை அடைந்தால் அவருக்கு இழப்பீடு வழங்கும் நோக்கத்திற்காக இழப்பீட்டு நிதியம் என்றழைக்கப்படும் ஒரு நிதியம் நிறுவப்படல் வேண்டும்.

(2) இழப்பீட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்

(a) நிதியத்தின் நோக்கத்திற்காக பாராளுமன்றத்தினால் வாக்களிப்பு செய்யக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

(b) பிரிவு 51ஏ இன் கீழ் (பிரிவு 51ஏ தவறுகளை ஒத்திணங்கல் செய்வதிலாகும் ) நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

(c) இ.பி.ப.ஆ. சட்டத்தின் 14பி பிரிவின் கீழ் தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

(3) இழப்பீட்டு நிதியத்திற்கு சொந்தமான பணமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 39 (1), அமைச்சர் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களிலிருந்து மூன்று அங்கத்தவர்களை உள்ளடக்கிய இழப்பீட்டு குழுவினை நியமித்தல் வேண்டும் என வேண்டுகின்றது.

20 செப்டம்பர் 2021 இல் நடைமுறைக்கு வந்த 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இ.பி.ப.ஆ. (புதிய இ.பி.ப.ஆ. சட்டம் ) சட்டத்தின் பிரிவு 158 இன் கீழ் ஓர் இழப்பீட்டு நிதியத்தினை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் இ.பி.ப.ஆ. இன் ஓர் சட்டரீதியான பொறுப்பாகும். புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தின் நோக்கம் மற்றும் அதனை பராமரிப்பதற்கான வழிகாட்டிகள் பின்வருமாறு.

158 (1) யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை சந்திப்பதற்கு ஆற்றலின்றி காணப்படுகின்றார் என்று கண்டறிவதன் விளைவாக யாரேனும் முதலீட்டாளர் பணவகையான நட்டத்தினை அடைந்தால் அவருக்கு இழப்பீடு வழங்கும் நோக்கத்திற்காக இழப்பீட்டு நிதியம் என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்.

(2) இழப்பீட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்

(a) நிதியத்தின் நோக்கத்திற்காக பாராளுமன்றத்தினால் வாக்களிப்பு செய்யக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்

(b) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள் மற்றும்

(c) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

(3) இழப்பீட்டு நிதியத்திற்கு சொந்தமான பணமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 159, அமைச்சர் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களிலிருந்து மூன்று அங்கத்தவர்களை உள்ளடக்கிய இழப்பீட்டு குழுவினை நியமித்தல் வேண்டும் என வேண்டுகின்றது.

இக்குழுவானது செய்யப்படும் எந்த விண்ணப்பத்தின் தொடர்பிலும் இழப்பீட்டை மதிப்பிடுவதற்கும் வழங்குவதற்கும் பொறுப்பாயிருப்பதோடு, அத்தகைய மதிப்பீட்டின் அல்லது அளிப்பின் மீதான இக்குழுவின் தீர்மானம் இச்சட்டத்தின் தேவைகளுக்காக இறுதியானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும்.

இச்சட்டமானது இழப்பீட்டிற்கு விண்ணப்பம் செய்வதற்கான வழிமுறையையும் கூட வழங்குகிறது. இச்சட்டத்தின் பிரகாரம் இக்குழுவானது விண்ணப்பதாரரொருவரினால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களையும் பிற சான்றுகளையும் பரிசீலனை செய்த பின்னர், அல்லது எவ்வாறாயினும் விசாரணையொன்று நடத்தப்பட்டிருந்தால் அவ் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அந்த உரிமைக்கோரிக்கையை இழப்பீடு பெறுவதற்கு அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். இதுநாள்வரை இழப்பீட்டு நிதியத்திலிருந்து எவ்வித உரிமைக்கோரிக்கைகளும் செய்யப்படவில்லை.


## இழப்பீட்டு நிதியத்தின் செயற்பாடு

இழப்பீட்டு நிதியத்தினை பலப்படுத்துவதற்காக 2009 ஆம் வருடத்தில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள மீதி ரூபா 561.6 மில்லியனை எட்டியது. இதில் பன்னிரண்டு மாதங்களில் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 113.6 மில்லியனும், பன்னிரண்டு மாதங்களுக்கு பின்னர் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 394.2 மில்லியனும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் ரூபா 40 மில்லியனும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

2012 முதல் 2021 வரை காலப்பகுதியில் இழப்பீட்டு நிதியத்தின் அசைவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

இழப்பீட்டு நிதியம்



## தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் (தீ.உ.நி.)

தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் 1998 மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மத்திய வைப்பக முறைமையில் பங்குபற்றுபவர்களுக்கிடையேயான வர்த்தகங்களின் தீர்ப்பனவை உத்தரவாதமிடும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் தொழிற்பாடு கீழே விளக்கப்பட்டுள்ளது.

- வர்த்தகமொன்று நிறைவேற்றப்பட்டவுடன் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் உடைமை மாற்றப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆந் திகதி கொ.ப.ப. ஆனது ஓரடுக்குத் தீர்வுச்சுற்றை அமுல்படுத்தியது. இதற்கமைய வாங்குபவர் ரி+3 மீது கொடுப்பனவு செய்யவேண்டும், அதாவது வர்த்தகம் செய்த நாள் உள்ளடங்களாக 4 ஆவது சந்தை தினத்தில் செலுத்தவேண்டும். விற்பனை செய்பவர் தீர்ப்பனவை ரி+3 ஆம் நாளன்று பெறுவார், அதாவது வர்த்தகம் செய்த நாளிலிருந்து 4ஆவது சந்தை நாளில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. உடமையின் மாற்றத்திற்கும் வரும்படிகளின் பெறுகைகளுக்குமிடையிலான ஒப்பீட்டளவிலான நீண்ட இடைவெளி பாதுகாப்பற்ற தீர்ப்பனவு இடர்நோக்கைக்கு வழிவகுத்துள்ளது. இது தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் தாபிக்கப்படும் தேவையை ஏற்படுத்தியுள்ளது..

- இந்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக கீழ் காண்பவர்கள் பதவி வழி நியமனம் பெற்றுள்ளனர். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், திறைசேரிப் பிரதிச் செயலாளர்,இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் நாயகம்.

- இலங்கை அரசாங்கமானது இந்த நிதியத்தினை உருவாக்குவதற்கு 50 மில்லியன் ரூபாயைக் கொண்ட தொகையை வழங்கியுள்ளது. இப்பணத்தொகையானது அரசாங்கப் பிணையங்களிலும் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது மீள் நிறைவாக்கல்களாக நன்கொடைகள், கொடைகள், தரும சாதனங்கள் போன்றவற்றைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது தரகர்களும் காப்பக வங்கிகளும் இந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதில்லை.

- எவ்வாறாயினும் தீ.உ.நி. ஆனது தீர்ப்பனவு இடர்நோக்கையை முறையாகத் தீர்ப்பதற்கு போதாததாகக் காணப்படுவதனால் இ.பி.ப.ஆ. இத் தீர்ப்பனவு இடர்நோக்கையை பயனுள்ள விதத்தில் சந்திக்கத்தக்க ஒரு மத்திய எதிர்தரத்தவர் பொறிமுறையினை (ம.எ.பொ.) நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து தீ.உ.நி. இலிருந்து எவ்வித உரிமைகோரல்களும் இடம்பெறவில்லை.


## தீ.உ.நி. இன் செயற்பாடு

இந்நிதியத்தினைப் பலப்படுத்தும்பொருட்டு தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தலா ரூபா 50 மில்லியன் வீதம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. கொ.ப.பரிவர்த்தனையும் ஜனவரி 2012 இல் இந்நிதியத்திற்கு ரூபா 100 மில்லியனை, தீ.உ.நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் இத்தகைய பெறுகைகளுக்கு வசதியளிக்கும் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் மாற்றல் செய்தது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் தீ.உ.நி. இன் வரவிலுள்ள மீதியானது ரூபா 1065.9 மில்லியனை எட்டியது. இதில் பன்னிரண்டு மாதங்களினுள் முதிர்வடையும் என எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 278.7 மில்லியனும், பன்னிரண்டு மாதங்களின் பின்னர் முதிர்வடையும் என எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 194.8 மில்லியனும், அரச வங்கிகளில் நிலையான வைப்பாக ரூபா 300 மில்லியனும், மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் ரூபா 242.9 மில்லியனும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

2012 முதல் 2021 வரையான காலப்பகுதியில் தீ.உ. நிதியத்தின் அசைவு கீழேயுள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீ.உ. நிதியம்




### தகவல் தொழில்நுட்பம்

மீளாய்வாண்டில், உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் (நி.ந.தி.) கீழ் இ.பி.ப.ஆ. இன் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காகவும் இ.பி.ப.ஆ. இல் ஒரு பாதுகாப்பான தகவல் தொழில்நுட்ப சூழலினை இயலுமையாக்குவதற்காகவும், ஒரு நிறுவனரீதியான தகவல் தொழில்நுட்ப மூலோபாயம் மற்றும் அடுத்த 5 வருடங்களுக்கான சாலை வரைபடம் ஆகியவற்றை விருத்திசெய்வதற்காக, ஆலோசனை ஒப்பந்தமானது KPMG ஸ்ரீலங்கா மற்றும் AAM மெனேஜ்மன்ட் இன்வர்மேஷன் கன்சல்டிங் (ஹங்கேரி) ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இதன் பிரகாரம், நி.ந.தி. இன் கீழான மேற்குறிப்பிட்ட ஆலோசனை உறுதுணையானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுடன், இது தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும்.

இத்திட்டமானது இரண்டு கட்டங்களில் அமுல்படுத்தப்படும். முதலாம் கட்டமானது இ.பி.ப.ஆ. க்கு ஒரு நிறுவன தகவல் தொழில்நுட்ப மூலோபாயம் மற்றும் அடுத்த ஐந்து வருடங்களுக்கு சாலை வரைபடத்தினை உருவாக்குவதாகும். இரண்டாம் கட்டமானது மூலோபாயத்தின் அமுலாக்கலிற்கு அமுல்படுத்தல் / கண்காணிப்பு உறுதுணையினை வழங்குவதுடன், தகவல் தொழில்நுட்ப பொருட்கள் மற்றும் சேவைகளது கொள்முதல்களுக்கு விலைகோரல் ஆவணங்களை தயாரிப்பதற்கான உறுதுணையினை வழங்குவதற்குமாகும்.

நியமிக்கப்பட்ட திட்ட மீளாய்வுக் குழுவானது, நடைமுறையிலுள்ள அமைப்பு முறைகள், வணிகச் செயல்முறைகள், தகவல் அமைப்புமுறை கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்ப கொள்கைகள் என்வற்றை மீளாய்வு செய்தும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் தரக்குறியிடுவதன் மூலம் இடைவெளிகள் / பற்றாக்குறைகள் என்பவற்றை இனங்கண்டும், தொடக்க அறிக்கை மற்றும் ஆய்ந்தறிதல் அறிக்கை என்பவற்றினை முடிவுறுத்துவதில் வெற்றிகண்டது.

மேலும், இனங்காணப்பட்ட அமைப்பு முறைகளின் செயற்பாட்டு தேவைப்பாடுகளது வரன்முறைகளை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# மேலதிகத் தகவல்கள்

**உரிமமளிக்கப்பட்ட சந்தை நிறுவனங்கள்**

**கொழும்பு பங்குப் பரிவர்த்தனை**

**வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத் திட்டங்கள்**

**பங்குத் தரகர்கள் பிரிவில் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:**

1. எக்யூட்டி ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
2. ஆஷா செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்
3. ஏசியா கெப்பிட்டல் ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்*
4. ஏசியா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
5. எஸட்லைன் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்*
6. பார்ட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
7. கென்டோர் ஈக்கியுட்டீஸ் லிமிட்டட்
8. கெப்பிட்டல் எலாயன்ஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
9. கெப்பிட்டல் எலாயன்ஸ் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
10. கெப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
11. சிடி சி எல் எஸ் ஏ செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
12. என்டர்பிரைஸ் சிலோன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
13. வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
14. வெர்ஸ்ட் கார்டியன் ஈக்யூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
15. ஜே பி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
16. ஜோன் கீல்ஸ் ஸடொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
17. லங்கா செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
18. எல்ஓஎல்சி செக்கியுரிட்டீஸ் லிமிட்டட்
19. நேஷன் லங்கா ஈக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
20. என்டிபி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
21. நெஸ்ட் ஸடொக் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
22. என்எஸ்பி வன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
23. ரிச்சட் பீரிஸ் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
24. எஸ்சி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
25. சொவட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
26. சமர்வில் ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
27. டெப்ரோபேன் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
28. டிகேஎஸ் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்*
29. வெல்த் ட்ரஸ்ட் செக்கியுரிட்டீஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)

***வணிகச் செயற்பாடுகள் மனமுவந்து செயலற்றதாக்கப்பட்டுள்ளன.**

**பங்கு வர்த்தகர்கள் பிரிவில் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:**

1. ஏசியா செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
2. பார்ட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
3. கெப்பிட்டல் எலாயன்ஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
4. சிடி சிஎல்எஸ்ஏ செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
5. என்டர்பிரைஸ் சிலோன் கெப்பிட்டல் (பிரைவேட் ) லிமிட்டட்
6. ஜேபி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
7. நேஷன் லங்கா ஈக்கியுட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
8. நெஸ்டர் ஸடொக் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
9. என்எஸ்பி வன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
10. செலான் பேங்க் பி.எல்.சி. (கடன் பிணையங்கள்)
11. சொவ்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
12. வெல்த் ட்ரஸ்ட் செக்கியுரிட்டீஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)

**முதலீட்டு முகாமையாளர் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:**

1. அமானா எஸட் லிமிட்டட்**
2. ஏசியா செக்கியுரீட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
3. எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
4. எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
5. இலங்கை வங்கி
6. கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்
7. கெப்பிட்டல் ட்ரஸ்ட் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
8. சீபேங்க் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
9. கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
10. வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
11. கார்டியன் எக்கியுட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
12. கார்டியன் வன்ட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
13. ஹெலியோஸ் வென்ச்ர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்1
14. இனோவெஸ்ட் இன்வெஸ்ட்மனட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
15. ஜேபி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்
16. லீனியர் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
17. மேர்ச்சன்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.
18. நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
19. என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
20. என்எஸ்பி வன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்
20. ஓரியன் வன்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
21. பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
22. சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
23. சொவட்லொஜிக் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
24. வோல்டொக் மெக்கன்சி லிமிட்டட்

** **உரிமமானது நிர்வாகரீதியாக நீட்டிக்கப்பட்டது.**

**ஒப்புரவாளர் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:**

1. இலங்கை வங்கி
2. கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பி.எல்.சி.
3. டிஎவ்சிசி பேங்க் பி.எல்.சி.
4. ஹற்டன் நெஷனல் பேங்க் பி.எல்.சி.
5. மேர்ச்சன் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.
6. நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி.
7. சம்பத் பேங்க் பி.எல்.சி.
8. செலான் பேங்க் பி.எல்.சி.

**கடன் தரப்படுத்தல் முகவர்கள் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:**

1. விச் ரேட்டிங்
2. இக்ரா லங்கா லிமிட்டட்
3. லங்கா ரேட்டிங் ஏஜன்சி லிமிட்டட்

**நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளின் முகாமைத்துவக் கம்பனிகள் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை** இடையீட்டாளர்கள்:

1. ஆர்பிக்கோ ஹட்டரக்சியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
   I. ஆர்பிக்கோ ஹட்டரக்சியா கே' மெனேஜ்மன்ட் ட்ரஸ்ட் வன்ட்
   II. ஆர்பிக்கோ ஹட்டரகசியா ஈக்கியுட்டி இன்கம் வன்ட்
   III. ஆர்பிக்கோ ஹட்டரக்சியா ரிபோ இன்வெஸ்ட்மன்ட் வன்ட்
   IV. ஆர்பிக்கோ ஹட்டரக்சியா ஸ்ரீலங்கா பொன்ட் வன்ட்
   V. ஆர்பிக்கோ ஹட்டரக்சியா யுஎஸ்டி விக்ஸ்ட் இன்கம் வன்ட்

2. ஏசியா செக்கியுரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்
I. ஏசியா செக்கியுரிட்டீஸ் மணி மார்க்கட் வன்ட்
3. எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
   I. எஸ்ட்ரூ எக்டிவ் இன்கம் வன்ட்
   II. எஸ்ட்ரூ அல்பா வன்ட்

4. எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
   I. எஸட்லைன் இன்கம் வன்ட்
   II. எஸட்லைன் இன்கம் ப்ளஸ் குரோத் வன்ட்
5. கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டட்
   I. கெல் பெலன்ஸ்ட் வன்ட்
   II. கெல் கோர்ப்பரேட் டெட் அன்ட் கிளட் டிரேடிங் வன்ட்
   III. கெல் கோர்ப்பரேட் ட்ரஸரி வன்ட்
   IV. கெல் கிளட் வன்ட்
   V. கெல் கிளட் மணி மார்க்கட் வன்ட்
   VI. கெல் கிளட் ட்ரேடிங் வன்ட்
   VII. கெல் ஐ ஹீல்ட் வன்ட்
   VIII. கெல் இன்கம் வன்ட்
   IX. கெல் இன்வெஸ்ட்மன்ட் கிரேட் வன்ட்
   X. கெல் மீடியம் ரிஸ்க் வன்ட்
   XI. கெல் குவான்டிடேடிவ் இக்யுடி வன்ட்
   XII. கெல் ஸ்ரீலங்கா டொலர் வன்ட்

6. சீபேங்க் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
   I. சீபேங்க் சென்சரி குரோத் வன்ட்
   II. சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (ஏ சீரீஸ்)
   III. சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (பி சீரீஸ்)
   IV. சீபேங்க் ஐ ஹீல்ட் வன்ட்
   V. சீபேங்க் சேவிங்ஸ் ப்ளஸ் மணி மார்க்கட் வன்ட்
   VI. சீபேங்க் சுரகும் கிளட் எட்ஜ் வன்ட்
   VII. சீபேங்க் யுனிட் ட்ரஸ்ட் வன்ட்

7. சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்
   I. சிலோன் டொலர் பொன்ட் வன்ட்
   II. சிலோன் வைனான்சியல் செக்டர் வன்ட்
   III. சிலோன் இன்கம் வன்ட்
   IV. சிலோன் இன்டெக்ஸ் வன்ட்
   V. சிலோன் ஜபிஎ வன்ட்
   VI. சிலோன் மணி மார்க்கட் வன்ட்
   VII. சிலோன் டுஹரிசம் வன்ட்
   VIII. சிலோன் டிரசரி இன்கம் வன்ட்

8. கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்
   I. கொம்ரஸ்ட் அடல் முதாரபஹா வன்ட்
   II. கொம்ரஸ்ட் இக்யுடி வன்ட்
   III. கொம்ரஸ்ட் கில்ட் எட்ஜட் வன்ட்
   IV. கொம்ரஸ்ட் மணி மார்க்கட் வன்ட்

9. வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   I. வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யுட்டி வன்ட்
   II. வெர்ஸ்ட் கெப்பிட்டல் விக்ஸ்ட் இன்கம் வன்ட்
   III. வெர்ஸ்ட் கெப்பிட்டல் கில்ட் எட்ஜட் வன்ட்
   IV. வெர்ஸ்ட் கெப்பிட்டல் மணி மார்க்கட் வன்ட்
   V. வெர்ஸ்ட் கெப்பிட்டல் வெல்த் வன்ட்

10. கார்டியன் எக்யூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   I. கார்டியன் எக்யூட்டி ஈக்யுட்டி வன்ட்
   II. கார்டியன் எக்யூட்டி மணி மார்க்கட் வன்ட்
   III. கார்டியன் எக்யூட்டி இன்கம் வன்ட்

11. ஜே பி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்
   I. ஜே பி வான்டேஜ் மணி மார்க்கட் வன்ட்
   II. ஜே பி வான்டேஜ் சோர்ட் டேர்ம் கிளட் வன்ட்
   III. ஜே பி வான்டேஜ் வெலியூ ஈக்யுட்டி வன்ட்

12 . நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட லிமிட்டட்
   I. நாமல் பேங் வன்ட்
   II. நாமல் குரோத் வன்ட்
   III. நாமல் ஐ ஹீல்ட் வன்ட்
   IV. நாமல் இன்கம் வன்ட்
   V. நாமல் மணி மார்க்கட் வன்ட்
   VI. நெஷனல் இக்யுடி வன்ட்

13. என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   I. என்டிபி வெல்த் கில்ட் எட்ஜ்ட் வன்ட்
   II. என்டிபி வெல்த் குரோத் அன்ட் இன்கம் வன்ட்
   III. என்டிபி வெல்த் குரோத் வன்ட்
   IV. என்டிபி வெல்த் இன்கம் வன்ட்
   V. என்டிபி வெல்த் இன்கம் ப்ளஸ் வன்ட்
   VI. என்டிபி வெல்த் இஸ்லாமிக் மணி பிளஸ் வன்ட்
   VII. என்டிபி வெல்த் மணி வன்ட்
   VIII. என்டிபி வெல்த் மணி பிளஸ் வன்ட்

14. பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   I. பிரீமியர் குரோத் வன்ட்
   II. பிரீமியர் மணி மார்க்கட் வன்ட்

15. சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்
   I. சென்வின் டைனமிக் இன்கம் வன்ட்
   II. சென்வின் டிவிடன்ட் வன்ட்
   III. சென்வின் குரோத் வன்ட்
   IV. சென்வின் மணி மார்க்கட் வன்ட்
   V. சென்வின் ஷரியா பெலன்ஸ்ட் வன்ட்
   VI. சென்வின் ஷரியா இன்கம் வன்ட்

16. சொவ்ட்லொஜிக் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்
   I. சொவ்ட்லொஜிக் ஈக்யூட்டி வன்ட்
   II. சொவட்லொஜிக் மணி மார்க்கட் வன்ட்

## மேலதிகத் தகவல்கள்

| வருடம் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| வருடாந்த புரள்வு (ரூ.மில்.) உரித்துவம் | 220,591 | 200,069 | 171,408 | 396,882 | **1,173,157** |
| உள்ளூர் (ரூ.மில்.) | 117,135 | 111,378 | 109,003 | 318,354 | **1,112,817** |
| வெளியூர் (ரூ.மில்.) | 103,456 | 88,691 | 62,405 | 78,527 | **60,340** |
| சந்தை நாட்கள் (இலக்கம்) | 241 | 240 | 241 | 209 | **240** |
| நாளாந்த சராசரி புரள்வு (ரூ.மில்) உரித்துவம் | 915 | 834 | 711 | 3,217 | **4,888** |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண்.மில்.) உரித்துவம் | 8,468 | 6,001 | 9,855 | 21,349 | **59,772** |
| உள்ளூர் (எண்.மில்.) | 6,529 | 4,821 | 7,091 | 19,808 | **57,905** |
| வெளியூர் (எண்.மில்.) | 1,939 | 1,180 | 2,764 | 1,541 | **1,866** |
| வர்த்தகங்கள் (எண்.) உரித்துவம் | 981,977 | 885,657 | 1,197,205 | 3,070,021 | **8,131,508** |
| உள்ளூர் (எண்.) | 928,276 | 838,784 | 1,150,486 | 2,968,092 | **8,009,816** |
| வெளியூர் (எண்.) | 53,701 | 46,873 | 46,719 | 101,929 | **121,692** |
| புதிய பட்டியலிடல் (எண்.) | 3 | 3 | 2 | 1 | **17** |
| பட்டியலிலிருந்து அகற்றல் (எண்.) | 2 | 2 | 10 | 7 | **3** |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகள் | 296 | 297 | 289 | 283 | **296** |
| வர்த்தகம் செய்யப்பட்ட கம்பனிகள் | 279 | 279 | 279 | 266 | **240** |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்.) | 2,899.29 | 2,839.45 | 2,851.31 | 2,960.65 | **5,489.17** |
| வருட இறுதியிலுள்ள வி.உ.வி.(மடங்குகள்) | 10.60 | 9.65 | 10.83 | 11.3 | **13.6** |
| சந்தை மூலதனவாக்கத்திற்கு புரள்வு (%) | 7.6 | 7.0 | 6.01 | 13.4 | **21.4** |
| வருட இறுதியிலுள்ள பங்கிலாப விளைவு (%) | 3.19 | 3.09 | 3.2 | 2.7 | **2.17** |
| வருட இறுதியிலுள்ள விலை புத்தகப் பெறுமதி (மடங்கு) | 1.31 | 1.18 | 1.1 | 1.1 | **1.67** |
| மொ.உ.உ. இன் சதவீதமாக சந்தை மூலதனவாக்கம் | 24% | 21% | 21% | 19% | **37%** |
| | | | | | |
| விலைச் சுட்டிகள் | | | | | |
| அனைத்து பங்கு விலைச் சுட்டி (அ.ப.வி.சு.) | 6,369.26 | 6,052.37 | 6,129.21 | 6,774.22 | **12,226.01** |
| வருடத்திலிருந்து வருடம் மாற்றம் % | 2.3 | (5.0) | 1.3 | 10.52 | **80.48** |
| S&P ஸ்ரீலங்கா 20 | 3,671.72 | 3,135.18 | 2,936.96 | 2,638.10 | **4,233.25** |
| வருடத்திலிருந்து வருடம் மாற்றம் % | 5.0 | (14.6) | (6.32) | (10.18) | **60.47** |
| | | | | | |
| மொத்த விளைவு சுட்டிகள் | | | | | |
| அபவிசு இலான மொத்த விளைவு சுட்டி (ASTRI) | 8,457.09 | 8,066.97 | 8,203.82 | 9,078.65 | **16,423.75** |
| வருடத்திலிருந்து வருடம் மாற்றம் % | 2.7 | (4.6) | 1.70 | 10.7 | **80.91** |
| S&P ஸ்ரீலங்கா 20 சுட்டியிலான மொத்த விளைவு சுட்டி (S&P ஸ்ரீலங்கா 20TRI) | 5,259.85 | 4,686.71 | 4,603.57 | 4,332.84 | **7,241.29** |
| வருடத்திலிருந்து வருடம் மாற்றம் % | 8.6 | (10.9) | (1.8) | (5.9) | **67.13** |

| வருடம் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| உள்ளுரல்லாத நடவடிக்கை* | | | | | |
| வருடாந்த புரள்வு (ரூ.மில்.) | 103,456 | 88,691 | 62,405 | 78,527 | **60,340** |
| கொள்வனவுகள் (ரூ.மில்.) | 112,285 | 77,067 | 56,537 | 52,889 | **34,016** |
| விற்பனைகள் (ரூ.மில்.) | 94,627 | 100,315 | 68,272 | 104,165 | **86,665** |
| **தேறிய வெளிநாட்டு பாய்ச்சல் (ரூ.மில்.)** | 17,657.4 | (23,247.5) | (11,735) | (51,276) | **(52,649)** |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண்.மில்.) | 1,939 | 1,180 | 2,764 | 1,541 | **1,866** |
| கொள்வனவுகள் (எண்.மில்.) | 2,062 | 1,060 | 3,896 | 928 | **1,308** |
| விற்பனைகள் (எண்.மில்.) | 1,817 | 1,299 | 1,631 | 2,154 | **2,425** |
| வர்த்தகங்கள் | 53,701 | 46,873 | 46,719 | 101,929 | **121,692** |
| கொள்வனவுகள் (எண்.) | 56,643 | 37,855 | 25,759 | 42,134 | **74,172** |
| விற்பனைகள் (எண்.) | 50,760 | 55,892 | 67,680 | 161,725 | **169,213** |
| | | | | | |
| கடன் சந்தை | | | | | |
| **கூட்டாண்மை கடன்** | | | | | |
| புரள்வு (ரூ.000) | 3,592,905.5 | 4,540,599 | 5,677,080 | 5,856,002 | **1,244,587** |
| வர்த்தகங்களின் எண்ணிக்கை | 529 | 293 | 234 | 243 | **93** |
| வர்த்தகம் செய்யப்பட்ட தொகுதிக்கடன்கள் (000) | 35,696 | 44,024 | 55,643 | 54,230 | **11,439** |
| சந்தை மூலதனவாக்கம் (மில்.) | | | | | |
| | | | | | |
| நம்பிக்கை அலகுகள் | | | | | |
| தேறிய சொத்தின் பெறுமதி (தே.சொ.பெ) (ரூ.பில்.) | 128,804 | 64.22 | 104.79 | 201 | **194** |
| அலகுடைமையாளர்கள் (எண்.) | 41,037 | 42,093 | 46,481 | 52,402 | **59,426** |
| வழங்கப்பட்ட அலகுகள் (எண்.000) | 7,639 | 3,368 | 4,769 | 8,014 | **7,835** |
| உரித்துவத்திலான முதலீடு (ரூ.மில்.) | 12,466 | 9,416 | 9,841 | 14,019 | **17,586** |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு (ரூ.மில்.) | 24,386 | 3,379 | 9,150 | 28,803 | **28,755** |
| ஏனைய கருவிகளிலான முதலீடுகள் **(ரூ.மில்.) | 91,732 | 50,601 | 84,542 | 158,656 | **148,907** |

# ஒரு புதிய

# கண்ணோட்டம்

## நிதியில் அறிக்கைகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | 77 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 80 நிதி நிலைமைக் கூற்று
81 நிதிச் செயற்திறன் கூற்று | 82 தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று | 83 காசுப்பாய்ச்சல் கூற்று
85 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம் | 99 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை
102 நிதி நிலைமைக் கூற்று | 103 நிதிச் செயற்திறன் கூற்று | 104 தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று
105 காசுப்பாய்ச்சல் கூற்று | 106 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம் | 111 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை
114 நிதி நிலைமைக் கூற்று | 115 நிதிச் செயற்திறன் கூற்று | 116 தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று
117 காசுப்பாய்ச்சல் கூற்று | 118 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | 123 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை
125 நிதி நிலைமைக் கூற்று | 126 நிதிச் செயற்திறன் கூற்று | 127 தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று
128 காசுப்பாய்ச்சல் கூற்று | 129 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | பின்புற உள்மட்டை - கூட்டாண்மைத் தகவல்கள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. BAN/G/SEC/FA/2021/2

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 29 March 2022

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான ஆணைக்குழுவின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் ஆணைக்குழுவினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் ஆணைக்குழுவின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு ஆணைக்குழு வேண்டப்படுகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான ஆணைக்குழுவின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் ஆணைக்குழு நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைக்கேற்ப ஆணைக்குழுவானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iஇ) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iஈ) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.


2.2 செயலாற்றப்பட்ட செயல்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், கருதத்தக்க விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் ஆணைக்குழுவினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் ஆணைக்குழுவினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எவ்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், ஆணைக்குழுவினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு ஆணைக்குழு இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப ஆணைக்குழுவானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் ஆணைக்குழுவின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்டுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.



டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

| 31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிச் நிலைமைக் கூற்று | குறிப்பு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 7 | 64,954,716 | 75,447,839 |
| | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| கையிருப்புகள் | 8 | 3,005,873 | 2,033,967 |
| வருமதிகள் | 9 | 226,209,609 | 47,213,119 |
| நிலையான வைப்புகளிலான முதலீடுகள் | 10 | 642,737 | 639,895 |
| வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 11 | 62,548,982 | 64,685,096 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 12 | 109,037,723 | 103,007,105 |
| மொத்த சொத்துக்கள் | | 466,399,640 | 293,027,021 |
| | | | |
| நிதிகள் மற்றும் பொறுப்புக்கள் | | | |
| பயன்படுத்தப்பட்ட நிதிகள் மற்றும் ஒதுக்கங்கள் | | | |
| திரண்ட நிதியம் | 13 | 0 | 0 |
| | | | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | | | |
| கொடை - தீர்வை நிதியத்திலிருந்து மூலதனச் செலவினங்களுக்கான மாற்றல்கள் | 14 | 58,702,817 | 69,195,940 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள் | 15 | 59,054,227 | 50,378,208 |
| | | | |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| செலத்தவேண்டிய வரி | 16 | 323,018,972 | 23,339,815 |
| கடன் கொடுத்தோர் மற்றும் அட்டூறுகள் | 17 | 19,436,181 | 145,547,211 |
| விற்பனையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை - நி.து.பெ.தி. | 18 | 68,134 | 558,060 |
| முற்பணப் பெறுகைகள் | | 6,119,309 | 4,007,787 |
| மொத்த நிதிகள் மற்றும் பொறுப்புக்கள் | | 466,399,640 | 293,027,021 |

பக்கங்கள் 85 முதல் 98 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும், காட்சிப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்காகவும் அதன் சார்பிலும்

சிந்தக்க மெண்டிஸ்
பணிப்பாளர் நாயகம்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

விராஜ் தயாரத்ன
தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

நிரோஷா கொடிகார
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கொழும்பு
15 மார்ச் 2022

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

| 31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிச் செயற்திறன் கூற்று | குறிப்பு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| உரிமக் கட்டணங்கள் | | 2,793,194 | 3,610,706 |
| நிர்வாக விதிப்பு | | 6,360,039 | 1,172,909 |
| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | | 5,542,684 | 3,480,239 |
| வட்டி வருமானம் | | 1,820,617 | 5,360,805 |
| ஏனைய வருமானம் | | 448,073 | 78,755 |
| பணியாட்கள் கடன்களிலான வட்டி | | 818,946 | 738,471 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான இலாபம் ∴ (நட்டம் ) | | 0 | (44,525) |
| அரசாங்கக் கொடை - நி.து.பெ.தி. | | 104,804,128 | 11,720,560 |
| கொடைகளின் அங்கீகாரம் | 14 | 21,735,241 | 23,631,788 |
| மொத்த வருமானம் | | 144,322,923 | 49,749,708 |
| | | | |
| செலவினம் | | | |
| ஆளணிச் செலவினங்கள் | 19 | (269,419,695) | (236,519,212) |
| நிர்வாக மற்றும் நிறுவனச் செலவுகள் | 20 | (172,148,244) | (166,024,494) |
| மூலதனச் சந்தை அபிவிருத்தி செலவுகள் | 21 | (55,241,934) | (32,367,005) |
| நிதிச் செலவுகள் | 22 | (103,030) | (40,887) |
| மொத்தச் செலவினம் | | (496,912,903) | (434,951,598) |
| | | | |
| வருமான வரிச் செலவினம் | | 0 | 0 |
මගේ අංකය எனது இல. My No. BAN/G/CESS/FA/21/3 ඔබේ අංකය உமது இல. Your No. දිනය திகதி Date 29March 2022

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினது தீர்வை நிதியத்தின் ("நிதியம்") 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தீர்வை நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில்

அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.


ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.



டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | குறிப்பு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளிலான முதலீடு | | 3,159,199,611 | 969,902,655 |
| | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளிலான முதலீடு | | 355,702,975 | 204,156,542 |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி | | 76,520,029 | 46,794,137 |
| மீள்கொடுப்பனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டி | | 146,132 | 183,599 |
| வருமதியான தீர்வை | | 27,289,951 | 11,266,847 |
| இ.பி.ப.ஆ. இலிருந்து வருமதியானவை | | 0 | 130,331,961 |
| காசும் காசுக்குச் சமனானவைகள் | 7 | 459,076,390 | 1,437,680,052 |
| மொத்த சொத்துக்கள் | | 4,077,935,087 | 2,800,315,793 |
| | | | |
| நிதிகள் மற்றும் பொறுப்புக்கள் | | | |
| பயன்படுத்தப்பட்ட நிதிகள் மற்றும் ஒதுக்கங்கள் | | | |
| திரண்ட நிதியம் | | 3,884,378,325 | 2,800,315,793 |
| | | | |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| இ.பி.ப.ஆ.க்கு செலுத்தவேண்டியவைகள் | | 193,356,762 | 0 |
| கணக்காய்வு கட்டணங்கள் | | 200,000 | 0 |
| மொத்த நிதியங்கள் மற்றும் பொறுப்புக்கள் | | 4,077,935,087 | 2,800,315,793 |

பக்கங்கள் 106 முதல் 110 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக்கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் காட்சிப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்திற்காகவும் மற்றும் அதன் சார்பிலும்

சிந்தக்க மென்டிஸ்
பணிப்பாளர் நாயகம்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

விராஜ் தயாரத்ன
தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

நிரோஷா கொடிகார
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கொழும்பு
15 மார்ச் 2022

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிச் செயற்திறன் கூற்று | குறிப்பு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| வருடத்தில் பெறப்பட்ட தீர்வை | | 1,554,518,067 | 528,483,025 |
| திறைசேரி முறிகளிலான வட்டி | | 144,908,971 | 167,565,413 |
| திறைசேரி உண்டியல்களிலான வட்டி | | 0 | 5,724,385 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான வட்டி | | 91,940,659 | 46,017,563 |
| மொத்த வருமானம் | | 1,791,367,697 | 747,790,386 |
| | | | |
| செலவினம் | | | |
| செயற்பாட்டு மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக இ.பி.ப.ஆ. க்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் | | (363,832,098) | (396,457,822) |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | (398,000) | 0 |
| வங்கிக் கட்டணங்கள் | | (18,442) | (13,796) |
| மொத்த செலவினம் | | (364,248,540) | (396,471,618) |
| | | | |
| வருமான வரிச் செலவினம் | 8 | (343,056,625) | (28,434,785) |
| | | | |
| செலவினத்தினை விஞ்சிய மிகை வருமானம் | | 1,084,062,532 | 322,883,983 |

பக்கங்கள் 106 முதல் 110 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான தீர்வை நிதியத்திலான மாற்றங்களின் கூற்று | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| திரண்ட நிதியம் | | |
| வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 2,800,315,793 | 2,789,763,682 |
| வருடத்திற்கான செலவினத்தினை விஞ்சிய மிகை வருமானம் | 1,084,062,532 | 322,883,983 |
| திரண்ட நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் | 0 | (312,331,872) |
| வருடத்தின் இறுதியில் உள்ளவாறான மீதி | 3,884,378,325 | 2,800,315,793 |

பக்கங்கள் 106 முதல் 110 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| செலவினத்தினை விஞ்சிய மிகை வருமானம் | 1,084,062,532 | 322,883,983 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு /(குறைப்பு) | 1,084,062,532 | 322,883,983 |
| | | |
| தொழிற்படு மூலதனத்திலான மாற்றம் | | |
| பணியாட்கள் கடன்களிலான (அதிகரிப்பு)/குறைப்பு | 0 | 21,347,330 |
| வருமதியான தீர்வையின் (அதிகரிப்பு)/குறைப்பு | (16,023,104) | (8,035,772) |
| இ.பி.ப.ஆ. இடமிருந்தான வருமதியின் (அதிகரிப்பு)/குறைப்பு | 130,331,961 | (46,180,984) |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு)/குறைப்பு | (29,725,892) | 16,710,292 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு)/குறைப்பு | 37,467 | 187,976 |
| குத்தகை வாடகை வைப்பிலான (அதிகரிப்பு)/குறைப்பு | 0 | 42,985,944 |
| செலுத்தவேண்டியவைகளிலான அதிகரிப்பு /(குறைப்பு) | 193,556,762 | 0 |
| | 278,177,195 | 27,014,786 |
| | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் /(வெளிப்பாய்ச்சல்) | 1,362,239,726 | 349,898,769 |
| | | |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்கான காசுப் பாய்ச்சல்கள் | | |
| அரச நிறுவனங்களின் தற்காலிக மிகை நிதியத்தில் முதலீடு | 0 | 306,607,487 |
| திரண்ட நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் | 0 | (312,331,872) |
| திறைசேரி முறிகளிலான முதலீடு | (2,340,843,389) | 738,949,681 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்) | (2,340,843,389) | 733,225,296 |
| | | |
| காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு /(குறைப்பு) | (978,603,662) | 1,083,124,065 |
| காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு அ) | 1,437,680,052 | 354,555,986 |
| காலத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு ஆ) | 459,076,390 | 1,437,680,052 |
| | | |
| குறிப்பு (அ) | | |
| காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள் | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடுகள் | 1,425,824,301 | 350,000,000 |
| வங்கியிலுள்ள காசு | 11,855,751 | 4,555,986 |
| | 1,437,680,052 | 354,555,986 |
| குறிப்பு (ஆ) | | |
| காலத்தின் இறுதியியல் உள்ளவாறான காசும் காசுக்கு சமனானவைகள் | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடுகள் | 452,265,729 | 1,425,824,301 |
| வங்கியிலுள்ள காசு | 6,810,660 | 11,855,751 |
| | 459,076,390 | 1,437,680,052 |

பக்கங்கள் 106 முதல் 110 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1 பொதுவான தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியமானது (தீர்வை நிதியம் ) 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 14பி (1) இன் கீழ், 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சட்டம் (பழைய இ.பி.ப.ஆ. சட்டம் ) என்பவற்றால் திருத்தியமைக்கப்பட்டு நிறுவப்பட்டதுடன் இது 21 செப்டம்பர் 2021 முதல் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (புதிய இ.பி.ப.ஆ.) பிரிவு இலக்கம் 156 (1) இனால் நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது.

பழைய சட்டத்தின் பிரிவு 14 பி (1) இவ்வாறு கூறுகின்றது, 'பிரிவு 14ஏ இன் கீழ் விதிக்கப்படும் தீர்வை வருவாயினை வரவு வைப்பதற்காக தீர்வை நிதியம் என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்.'

புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 156 (1) இவ்வாறு கூறுகின்றது, "பிரிவு 155 இன் கீழ் விதிக்கப்படும் தீர்வை வருவாயினை வரவு வைப்பதற்காக ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படவேண்டிய "தீர்வை நிதியம்" என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்."

தீர்வை நிதியமானது இலங்கை ஜனநாயக சோ'லிச குடியரசில் வாழ்வகத்தினைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு 01, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம் - கிழக்கு கோபுரம், 28 மற்றும் 29 ஆம் மாடியில் அமைந்துள்ளது.

### 1.2 செயற்பாட்டின் தன்மை மற்றும் பிரதான நடவடிக்கைகள்

20 செப்டம்பர் 2021 வரை செல்லபடியான பழைய சட்டத்தின் பிரிவு 14 பி (2) இன் பிரகாரம் பின்வரும் நோக்கத்திற்காக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் அத்தகைய தொகைகள் தீர்வை நிதியத்திலிருந்து செலுத்தப்படும் :

(அ) பிணையங்கள் சந்தையினை விருத்தி செய்தல்

(ஆ) பிரிவு 38 இன் கீழ் நிறுவப்பட்ட இழப்பீட்டு நிதியத்தில் வரவிலுள்ள பணத்தினை மேம்படுத்துதல் மற்றும்

(இ) அதன் குறிக்கோள்களை அடையும் நோக்கத்திற்காக ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு, செயலாற்றுவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு.

மேலும், பழைய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 14 பி (3) இற்கமைய தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள பணமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

21 செப்டம்பர் 2021 முதல் அமுலுக்கு வந்த புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 156 (2) இன் பிரகாரம் தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள பணமானது பின்வரும் நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படலாம் :

(அ) பிணையங்கள் சந்தையினை விருத்தி செய்தல்

(ஆ) இழப்பீட்டு நிதியத்தின் அல்லது இந்த பகுதியின் கீழ் ஆணைக்குழுவினால் நிறுவப்பட்ட நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்துதல்

(இ) ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை அமுல்படுத்துவதில், செயலாற்றுவதில் மற்றும் நிறைவேற்றுவதில் ஆணைக்குழுவின் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் செயலாக்கம் என்பவற்றில் ஆணைக்குழுவினால் ஆட்பட்ட அனைத்து செலவினங்களையும் சந்தித்தல்

(ஈ) ஆணைக்குழு பொருத்தமானது என்று கருதுகின்றவாறு ஆணைக்குழுவின் பணியாட்களுக்கு வீடு கட்டுதல், கல்வி, ஆரோக்கியம் மற்றும் போக்குவரத்து நோக்கங்களுக்காக கடன் வழங்குதல்`

(உ) பணிப்பாளர் நாயகம் மற்றும் அதன் அதிகாரிகள் மற்றும் சேவையாட்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்கள் மற்றும் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் ஆகியோரது நலனுக்காக நிறுவப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் மற்றும் ஏனைய திட்டங்களுக்கு பங்களிப்புகளை மேற்கொள்வதற்கு மற்றும்

(க) ஆணைக்குழுவினால் நிருபிக்கப்பட்ட தகுதி வாய்ந்தவர்கள் என தீர்மானிக்கப்பட்டவாறு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சேவையாட்களின் இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆட்படும் கற்கைச் செலவுக்காக பணங்கட்டுவதற்கு.

மேலும், புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 156 (3) இன் பிரகாரம் தீர்வை நிதியத்தின வரவில் ஏதேனும் மிகையான பணம் இருப்பின், அதனை தீர்வை நிதியத்தினை விருத்திசெய்வதற்காக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

### 1.3 அமைவுறல் கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்தினது நிதிக்கூற்றுக்களை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரித்துள்ளது. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, தீர்வை நிதியத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

### 1.5 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தீர்வை நிதியத்தின் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தீர்வை நிதியம் எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை தீர்வை நிதியம் எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது தீர்வை நிதியம் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.6 தயாரிப்பிற்கான அடிப்படை

பழைய இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இ.பி.ப.ஆ. இன் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், 1 ஜனவரி 2020 முதல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழுவானது இ.பி.ப.ஆ. தீர்வை நிதியத்திற்கு

தனியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, தீர்வை நிதியத்திலான மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை மாத்திரம் உள்ளடக்குகின்றது

தீர்வை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் மற்றும் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து அடுத்துவரும் குறிப்புகளில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 1.8 செயற்பாட்டு மற்றும் காட்சிப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது தீர்வை நிதியத்தின் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தின் காட்சிப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 1.9 முக்கியத்துவம் மற்றும் திரள்வு

ஒத்த வகையான உறுப்படியின் ஒவ்வொரு முக்கியத்துவ வகுப்பும் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாட்டினை உடைய உறுப்படிகள் அவை முக்கியமானவை ஆக இல்லாதவிடத்து மாத்திரமே தனித்தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.10 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருவனவாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. இ.அ.க.நி. அனுமதித்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் தீர்வை நிதியத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

### 1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிப்பிலுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மை

### 1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.13 கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 2 சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

### 2.1 முதலீடுகள்

உரிமமளிக்கப்பட்ட அரசாங்க வங்கிகளில், நிலையான வைப்புகள் மற்றும் குறுங்கால முதலீடுகள், அரசாங்க திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. இவை கிரயத்தில் மற்றும் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதிவரைக்குமான அட்டுறு வட்டியுடன் சேர்த்து குறிப்பிடப்படுகின்றன.

### 2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

### 3.1 பொறுப்புகள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள், கோரும் பட்சத்தில், செலுத்தவேண்டியவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறையல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டிய நிலுவைகளைக் கொண்டுள்ளன.

தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 4 நிதிச் செயற்திறன் கூற்று

### 4.1 வட்டி வருமானம்

முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் நிதிச் செயற்திறன் கூற்றில் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.2 ஏனைய வருமானம்

ஏனைய வருமானம், ஏதேனும் இருப்பின், அவை ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

## 5 செலவின அங்கீகரிப்பு

நிதியியல் செயற்திறனை உறுதிசெய்யும்போது தீர்வை நிதியத்தின் அனைத்து செலவினங்களும் ஓர் அட்டுறு அடிப்படையில் வருமானத்திற்கு ஆட்படுத்தப்படுகின்றது.

## 6 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமமானவைகளுக்குள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்வினைக்கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 7. காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்

| | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடு | 452,265,729 | 1,425,824,301 |
| வங்கியிலுள்ள காசு | 6,810,660 | 11,855,751 |
| மொத்தம் | 459,076,390 | 1,437,680,052 |

## 8 வருமான வரிச் செலவினம்

| | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| Y/A 2019/2020 க்கான வருமான வரிச் செலவினம் | 0 | 14,315,868 |
| Y/A 2020/2021 க்கான வருமான வரிச் செலவினம் | (2,905,438) | 14,118,917 |
| Y/A 2021/2022 க்கான வருமான வரிச் செலவினம் | 345,962,063 | 0 |
| மொத்தம் | 343,056,625 | 28,434,785 |

வருமான வரிக்கான பொறுப்பானது 2017 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கமைய கணிக்கப்படுகின்றது.

## 9 மூலதனக் கடப்பாடுகள்

31.12.2021 இல் எவ்விதமான மூலதன கடப்பாடுகளும் காணப்படவில்லை.

## 10 நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31.12.2021 இல் எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை

## 11 தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்.

தீர்வை நிதியமானது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழு அங்கத்தவர்களினால் முகாமைப்படுத்தப்படுகின்றது. திரு. விராஜ் தயாரத்ன, ஜ.ச. அவர்கள் 8 ஜனவரி 2020 முதல் இ.பி.ப.ஆ. இன் தலைவராக நியமிக்கப்பட்டதுடன் அவர் 22 ஜனவரி 2020 முதல் கடமையினைப் பொறுப்பேற்றார்.

2021 இல் ஆணைக்குழுவின் பின்வரும் அங்கத்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவி வகித்தார்கள்.

- திரு. சஞ்சய பண்டார அவர்கள் 21 டிசம்பர் 2021 முதல் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சீவ திசாநாயக்க அவர்கள் 8 ஜூலை 2021 முதல் கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகிப்பதன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் பொது திறைசேரியின் பிரதி செயலாளர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. என். டபிள்யு. ஜி. ஆர். டி. நாணயக்கார அவர்கள் 01 ஜனவரி முதல் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சுஹுத கமலத் ஜ.ச. அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சிசிர ரத்நாயக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சுனில் லங்காதிலக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. நரேஷ் அபேசேகர அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவியிலிருந்து நீங்கினார்கள்.

- 7 ஜனவரி 2020 முதல் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் பதவியினை வகித்ததன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்ட திரு. மனில் ஜயசிங்க அவர்கள் 21 டிசம்பர் 2021 முதல் அங்கத்தவர் பதவியிலிருந்து நீங்கினார்.
- கம்பனிகள் பதிவாளர் நாயகமாக பதவியினை வகித்ததன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்ட திரு. டி. என். ஆர். சிறிவர்தன அவர்கள் 1 ஜனவரி 2021 முதல் அங்கத்தவர் பதவியிலிருந்து நீங்கினார்.

பின்வரும் அட்டவணையானது மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக பதவி வகித்தவர்களின் தொடர்புகளை குறிப்பிடுகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. என். டபிள்யு.ஜி.ஆர். நாணயக்கார | இலங்கை மத்திய வங்கி | 14 டிசம்பர் 2020 முதல் பிரதி ஆளுநர் | பூச்சியம் |
| திரு. சுஹுத கமலத், ஜ.ச. | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | பூச்சியம் |
| திரு. சிசிர ரத்நாயக்க | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | பூச்சியம் |
| திரு. சுனில் லங்காதிலக்க | நிதி அமைச்சு | 1 பெப்ரவரி 2021 முதல், மூன்று வருடங்களுக்கு அந்நியச் செலாவணி சட்டத்தின் புலனாய்வுச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | எல்.ஓ.எல்.சி. டெவலப்மன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | 24 ஆகஸ்ட் 2021 முதல் நிறைவேற்றுநரல்லா சுயாதீன பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. நரேஷ் அபேசேகர | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | பூச்சியம் |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

பின்வரும் அட்டவணையானது மீளாய்வாண்டில் பதவி விலகிய ஆணைக்குழுவின் பதவிவழி அங்கத்தவர்களது தொடர்புகளை விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. மனில் ஜயசிங்க | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | 2021 டிசம்பர் வரை தலைவர் | பூச்சியம் |
| | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் | முகாமைத்துவப் பங்காளி - இலங்கை மற்றும் மாலைதீவு | பூச்சியம் |
| திரு. டி.என்.ஆர். சிறிவர்தன | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 1 ஜனவரி 2021 முதல் கம்பனிகள் பதிவாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | பதவிவழி அங்கத்தவர் | |
| | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புக் குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

இ.பி.ப.ஆ. இன் தீர்வை நிதியமானது பின்வரும் நடைமுறை கணக்கினை இலங்கை வங்கியில் (இ.வ.) பராமரிப்பதுடன் வங்கி மீதியானது கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2021 இல் உள்ளவாறான மீதி | 31.12.2020 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம் | 0009834430 | 2,784,645 | 1,862,994 |

2021 ஆம் ஆண்டில் பின்வரும் முதலீடுகள் இ.வ. ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

| முதலீட்டின் வகை | இவ்வருடத்தில் இ.வ. இல் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் (ரூபா) | 31.12.2021 இல் இ.வ. இல் உள்ளவாறான மீதி (ரூபா) |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | 2,544,999,931 | 3,218,095,441 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடு | 16,680,238,374 | 436,000,000 |
| மொத்தம் | 19,225,238,305 | 3,654,095,441 |

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை




தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினது இழப்பீட்டு நிதியத்தின் ("நிதியம்") 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, இழப்பீட்டு நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (ளுடுயுரளுள). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின்

அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.


ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.



டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | குறிப்பு | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளிலான முதலீடுகள் | | 394,240,378 | 242,875,161 |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளிலான முதலீடுகள் | | 113,632,425 | 39,606,748 |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி | | 13,002,217 | 9,308,709 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில வருமதியான வட்டி | | 13,406 | 32,027 |
| காசும் காசுக்கு சமனானவைகள் | 7 | 40,728,226 | 248,820,908 |
| மொத்த சொத்துக்கள் | | 561,616,651 | 540,643,553 |
| நிதிகள் மற்றும் பொறுப்புக்கள் | | | |
| பயன்படுத்தப்பட்ட நிதிகள் மற்றும் ஒதுக்கங்கள் | | | |
| திரண்ட நிதியம் | | 555,571,118 | 521,752,939 |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| இ.பி.ப.ஆ. க்கு செலுத்தவேண்டியவை | | 5,845,532 | 18,890,614 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | 200,000 | 0 |
| மொத்த நிதிகள் மற்றும் பொறப்புக்கள் | | 561,616,651 | 540,643,553 |

பக்கங்கள் 118 முதல் 122 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக்கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் காட்சிப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்திற்காகவும் அதன் சார்பிலும்

சிந்தக்க மென்டிஸ்
பணிப்பாளர் நாயகம்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

விராஜ் தயாரத்ன
தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

நிரோஷா கொடிகார
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கொழும்பு
15 மார்ச் 2022

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் உள்ளவாறான நிதச் செயற்திறன் கூற்று | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| வருமானம் | | | |
| திறைசேரி முறிகளிலான வட்டி | | 33,305,523 | 33,778,140 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான வட்டி | | 11,583,114 | 8,602,751 |
| வருடத்தில் பெறப்பட்ட ஒத்திணங்கள் தண்டப்பணங்கள் | | 0 | 36,300,000 |
| மொத்த வருமானம் | | 44,888,637 | 78,680,891 |
| | | | |
| செலவினம் | | | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | (398,000) | 0 |
| வங்கிக் கட்டணங்கள் | | (2,912) | (1,282) |
| மொத்த செலவினம் | | (400,912) | (1,282) |
| | | | |
| வருமான வரிச் செலவினம் | 8 | (10,669,546) | (18,890,614) |
| | | | |
| செலவினை விஞ்சிய மிகை வருமானம் | | 33,818,179 | 59,788,995 |

பக்கங்கள் 118 முதல் 122 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக்கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாயுள்ளன.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான இழப்பீட்டு நிதியத்திலான மாற்றங்களின் கூற்று | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| திரண்ட நிதியம் | | |
| வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 521,752,939 | 461,963,944 |
| செலவினத்திலும் மேலான மிகை வருமானம் | 33,818,179 | 59,788,995 |
| வருடத்தின் இறுதியியல் உள்ளவாறான மீதி | 555,571,118 | 521,752,939 |

பக்கங்கள் 118 முதல் 122 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக்கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாயுள்ளன.

# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| செலவிலும் மேலான மிகை வருமானம் | 33,818,179 | 59,788,995 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு /(குறைப்பு) | 33,818,179 | 59,788,995 |
| | | |
| தொழிற்படு மூலதனத்தின் மாற்றம் | | |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு)/குறைப்பு | (3,693,508) | 1,091,126 |
| மீள்கொடுப்பனவு உடன்படிக்கைகளின் வட்டியிலான (அதிகரிப்பு)/குறைப்பு | 18,621 | 41,462 |
| இ.பி.ப.ஆ. க்கு செலுத்தவேண்டியவைகளின் அதிகரிப்பு /(குறைப்பு) | (13,045,081) | 18,890,614 |
| ஏனைய செலுத்தவேண்டியவைகளின் அதிகரிப்பு /(குறைப்பு) | 200,000 | 0 |
| | (16,519,968) | 20,023,202 |
| | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் /(வெளிப்பாய்ச்சல்) | 17,298,211 | 79,812,197 |
| | | |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்கான காசுப் பாய்ச்சல்கள் | | |
| திறைசேரி முறிகளிலான முதலீடு | (225,390,894) | 98,973,250 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் /(வெளிப்பாய்ச்சல்) | (225,390,894) | 98,973,250 |
| | | |
| காசும் காசுக்குச் சமனானவைகளிலான தேறிய அதிகரிப்பு/(குறைப்பு) | (208,092,682) | 178,785,447 |
| காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு அ) | 248,820,908 | 70,035,461 |
| காலத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு ஆ) | 40,728,226 | 248,820,908 |
| | | |
| குறிப்பு (அ) | | |
| காலத்தின் ஆரம்பத்திலுள்ள காசும் காசுக்குச் சமனானவைகள் | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடுகள் | 248,721,328 | 69,852,733 |
| வங்கியிலுள்ள காசு | 99,580 | 182,728 |
| | 248,820,908 | 70,035,461 |
| குறிப்பு (ஆ) | | |
| காலத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள் | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடுகள் | 40,000,000 | 248,721,328 |
| வங்கியிலுள்ள காசு | 728,226 | 99,580 |
| | 40,728,226 | 248,820,908 |

பக்கங்கள் 118 முதல் 122 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக்கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1 பொதுவான தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியமானது (இழப்பீட்டு நிதியம் ) 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 38 (1) இன் கீழ், 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சட்டம் (பழைய இ.பி.ப.ஆ. சட்டம் ) என்பவற்றால் திருத்தியமைக்கப்பட்டு நிறுவப்பட்டதுடன் இது 21 செப்டம்பர் 2021 முதல் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (புதிய இ.பி.ப.ஆ.) பிரிவு இலக்கம் 158 (1) இனால் நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது.

பழைய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 38 (1) பின்வருமாறு கூறுகின்றது: 'யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் தனது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான ஆற்றலின்றி காணப்படுவதன் விளைவாக் பணவகையான நட்டத்தினை சகித்திருந்த யாரேனும் முதலீட்டாளருக்கு இழப்பீட்டினை வழங்கும் நோக்கத்திற்காக இழப்பீட்டு நிதியம் என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்.'

புதிய இ.பி.ப.அ. சட்டத்தின் பிரிவு 158 (1) பின்வருமாறு கூறுகின்றது: 'யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் தனது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான ஆற்றலின்றி காணப்படுவதன் விளைவாக் பணவகையான நட்டத்தினை சகித்திருந்த யாரேனும் முதலீட்டாளருக்கு வரையறுத்த இழப்பீட்டினை வழங்கும் நோக்கத்திற்காக "இழப்பீட்டு நிதியம்" என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்.'

இழப்பீட்டு நிதியமானது இலங்கை ஜனநாயக சோ'லிச குடியரசில் வாழ்வகத்தினைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு 01, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம் - கிழக்கு கோபுரம், 28 மற்றும் 29 ஆம் மாடியில் அமைந்துள்ளது.

### 1.2 செயற்பாடுகளின் தன்மையும் பிரதான நடவடிக்கைகளும்

20 செப்டம்பர் 2021 வரை அமுலிலிருந்த பழைய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 38 (1) இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தினை நிறுவுவதன் நோக்கம் யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் தனது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான ஆற்றலின்றி காணப்படுவதன் விளைவாக் பணவகையான நட்டத்தினை சகித்திருந்த யாரேனும் முதலீட்டாளருக்கு இழப்பீட்டினை வழங்குவதற்காகும்.

மேலும், பழைய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 38 (2) ஆனது இழப்பீட்டு நிதியம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

(அ) நிதியத்தின் நோக்கத்திற்காக பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படும் அத்தகைய பணத்தொகைகள்

(ஆ) பிரிவு 51ஏ இன் கீழ் வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள் மற்றும்

(இ) பிரிவு 14பி இன் கீழ் தீர்வை நிதியத்திலிருந்த வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

இதற்கும் மேலாக, பழைய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரகாரம் இழப்பீட்டு நிதியத்திற்கு சொந்தமான பணமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

21 செப்டம்பர் 2021 முதல் புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 (1) இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தினை நிறுவுவதன் நோக்கம் யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் தனது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான ஆற்றலின்றி காணப்படுகின்றார் என ஆணைக்குழு கண்டறிந்து அதன் விளைவாக பணவகையான நட்டத்தினை சகித்திருந்த யாரேனும் முதலீட்டாளருக்கு வரையறுத்த இழப்பீட்டினை வழங்குவதற்காகும்.

மேலும், புதிய சட்டத்தின் பிரிவு 158 (2) இழப்பீட்டு நிதியம் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும் என குறிப்பிடுகின்றது

(அ) பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்

(ஆ) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதியத்திற்கு வரவு வைக்கக்கூடிய அத்தகைய பணத் தொகைகள் மற்றும்

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடிய அத்தகை பணத்தொகைகள்

இதற்கும் மேலாக, புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 (3) இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்திற்கு சொந்தமான பணமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

### 1.3 அமைவுறல் கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்தினது நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, ஒதுக்கத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

### 1.5 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இழப்பீட்டு நிதியத்தின் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இழப்பீட்டு நிதியம் எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை இழப்பீட்டு நிதியம் எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இழப்பீட்டு நிதியம் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 1.6 தயாரிப்பிற்கான அடிப்படை

இ.பி.ப.ஆ. இன் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், 1 ஜனவரி 2020 முதல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழுவானது இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கு தனியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, இழப்பீட்டு நிதியத்திலான மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை மாத்திரம் உள்ளடக்குகின்றது

இழப்பீட்டு நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் மற்றும் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து அடுத்துவரும் குறிப்புகளில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன..

நிதிக் கூற்றுக்கள் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 1.8 செயற்பாட்டு மற்றும் காட்சிப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது இழப்பீட்டு நிதியத்தின் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தின் காட்சிப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் ஏதேனும் இருப்பின், யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 1.9 முக்கியத்துவம் மற்றும் திரள்வு

நுயஉா அயவநசயைட உடயளள ழக ளஅைடையச வைநஅ ளை ிசநளநவெநன ளநியசயவநடல ை வாந கயைெஉையட ளவயவநஅநவெள. ஐவநஅள ழக ளளைளளஅைடையச யெவரசந ழச கரஉெவழைெ யசந ிசநளநவெநன ளநியசயவநடல ரடெநளள வாநல யசந அைஅயவநசயைட.

### 1.10 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருவனவாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. இ.அ.க.நி. அனுமதித்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

### 1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிப்பிலுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

### 1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.13 கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 2 சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

### 2.1 முதலீடுகள்

உரிமமளிக்கப்பட்ட அரசாங்க வங்கிகளில், நிலையான வைப்புகள் மற்றும் குறுங்கால முதலீடுகள், அரசாங்க திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. இவை கிரயத்தில் மற்றும் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதிவரைக்குமான அட்டுறு வட்டியுடன் சேர்த்து குறிப்பிடப்படுகின்றன.

### 2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

### 3.1 பொறுப்புகள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள், கோரும் பட்சத்தில், செலுத்தவேண்டியவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறையல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டிய நிலுவைகளைக் கொண்டுள்ளன.

தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 4 நிதிச் செயற்திறன் கூற்று

### 4.1 வட்டி வருமானம்

முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் நிதிச் செயற்திறன் கூற்றில் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்

### 4.2 பெறப்பட்ட தண்டப்பணம்

இ.பி.ப.ஆ. இன் ஏற்பாடுகளுக்கமைய இழப்பீட்டு நிதியத்திற்கு பெறப்பட்ட தண்டப்பணமானது காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது

### 4.3 ஏனைய வருமானம்

ஏனைய வருமானம், ஏதேனும் இருப்பின், அவை ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 5 செலவின அங்கீகரிப்பு

நிதியியல் செயற்திறனை உறுதிசெய்யும்போது இழப்பீட்டு நிதியத்தின் அனைத்து செலவினங்களும் ஓர் அட்டுறு அடிப்படையில் வருமானத்திற்கு ஆட்படுத்தப்படுகின்றது.

### 6 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமமானவைகளுக்குள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்வினைக்கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.

### 7 காசும் மற்றும் காசுக்குச் சமனானவைகள்

| | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடுகள் | 40,000,000 | 248,721,328 |
| வங்கியிலுள்ள காசு | 728,226 | 99,580 |
| மொத்தம் | 40,728,226 | 248,820,908 |

### 8 வருமான வரிச் செலவினம்

| | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| Y/A 2020/2021 க்கான வருமான வரிச் செலவினம் | (7,508) | 18,890,614 |
| Y/A 2021/2022 க்கான வருமான வரிச் செலவினம் | 10,677,054 | 0 |
| மொத்தம் | 10,669,546 | 18,890,614 |

வருமான வரிக்கான பொறுப்பானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டத்திற்கமைய, திருத்தியமைக்கப்பட்டவாறு, கணிப்பிடப்படுகின்றது.

### 9 மூலதனக் கடப்பாடுகள்

31.12.2021 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

### 10 நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31.12.2021 எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை.

### 11 தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்.

இழப்பீட்டு நிதியமானது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழு அங்கத்தவர்களினால் முகாமைப்படுத்தப்படுகின்றது. திரு. விராஜ் தயாரத்ன, ஜ.ச. அவர்கள் 8 ஜனவரி 2020 முதல் இ.பி.ப.ஆ. இன் தலைவராக நியமிக்கப்பட்டதுடன் அவர் 22 ஜனவரி 2020 முதல் கடமையினைப் பொறுப்பேற்றார்.

2021 இல் ஆணைக்குழுவின் பின்வரும் அங்கத்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவி வகித்தார்கள்.

- திரு. சஞ்சய பண்டார அவர்கள் 21 டிசம்பர் 2021 முதல் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சீவ திசாநாயக்க அவர்கள் 8 ஜூலை 2021 முதல் கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகிப்பதன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் பொது திறைசேரியின் பிரதி செயலாளர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. என். டபிள்யு. ஜி. ஆர். டி. நாணயக்கார அவர்கள் 01 ஜனவரி முதல் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகிப்பதன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சுஹத கமலத் ஜ.ச. அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சிசிர ரத்நாயக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சுனில் லங்காதிலக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. நரேஷ் அபேசேகர அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவியிலிருந்து நீங்கினார்கள்.

- 7 ஜனவரி 2020 முதல் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் பதவியினை வகித்ததன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்ட திரு. மனில்

ஜயசிங்க அவர்கள் 21 டிசம்பர் 2021 முதல் அங்கத்தவர் பதவியிலிருந்து நீங்கினார்.

- கம்பனிகள் பதிவாளர் நாயகமாக பதவியினை வகித்ததன் நிமித்தம் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்ட திரு. டி. என். ஆர். சிறிவர்தன அவர்கள் 1 ஜனவரி 2021 முதல் அங்கத்தவர் பதவியிலிருந்த நீங்கினார்.

பின்வரும் அட்டவணையானது மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக பதவி வகித்தவர்களின் தொடர்புகளை குறிப்பிடுகின்றது

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. விராஜ் தயாரத்ன, ஐச | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | 8 ஜனவரி 2020 முதல் நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதுன் 22 ஜனவரி 2020 முதல் கடமையினை பதவியேற்றார். | பூச்சியம் |
| திரு. சஞ்சய பண்டார | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | டிசம்பர் 2021 முதல் தலைவர் | பூச்சியம் |
| | மோர்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | பெப்ரவரி 2012 முதல பெப்ரவரி 2021 வரையான காலத்திற்கு பணிப்பாளர் /தலைவர் | பூச்சியம் |
| | பிரைம் லேன்ட் ரெசிடன்ஸீஸ் பி.எல்.சி. | மார்ச் 2021 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. சஞ்ஜீவ திசாநாயக்க | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 8 ஜுலை 2021 முதல் கம்பனிகள் பதிவாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| திரு. ஆர். எம்.பி. ரத்நாயக்க | பொது திறைசேரி | 8 ஜனவரி 2020 முதல் பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | 28 ஏப்ரல் 2020 முதல் பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | அகடமி ஒவ் வைனான்சியல் ஸ்டடீஸ் (கரண்ட்டி) லிமிட்டட் | 6 செப்டம்பர் 2021 முதல் பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | உள்ர் கடன் அபிவிருத்தி நிதியம் | 14 செப்டம்பர் 2020 முதல் ஆணையாளர் மற்றும் தலைவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | 22 ஜனவரி 2021 முதல் பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | 16 ஜனவரி 2020 முதல் நம்பிக்கைப் பொறுப்பாளர் | |
| | பூச்சியம் | | |
| திரு. என். டபிள்யு.ஜி.ஆர். நாணயக்கார | இலங்கை மத்திய வங்கி | 14 டிசம்பர் 2020 முதல் பிரதி ஆளுநர் | பூச்சியம் |
| திரு. சுஹத கமலத், ஐ.ச. | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | பூச்சியம் |
| திரு. சிசிர ரத்நாயக்க | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | பூச்சியம் |
| திரு. சுனில் லங்காதிலக்க | நிதி அமைச்சு | 1 பெப்ரவரி 2021 முதல், மூன்று வருடங்களுக்கு அந்நியச் செலாவணி சட்டத்தின் புலனாய்வுச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | எல்.ஓ.எல்.சி. டெவலப்மன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | 24 ஆகஸ்ட் 2021 முதல் நிறைவேற்றுநரல்லா சுயாதீன பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. நரேஷ் அபேசேகர | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | பூச்சியம் |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

பின்வரும் அட்டவணையானது மீளாய்வாண்டில் பதவி விலகிய ஆணைக்குழுவின் பதவிவழி அங்கத்தவர்களது தொடர்புகளை விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. மனில் ஜயசிங்க | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | 2021 டிசம்பர் வரை தலைவர் | பூச்சியம் |
| | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் | முகாமைத்துவப் பங்காளி - இலங்கை மற்றும் மாலைதீவு | பூச்சியம் |
| திரு. டி.என்.ஆர். சிறிவர்தன | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 1 ஜனவரி 2021 முதல் கம்பனிகள் பதிவாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புக் குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியமானது பின்வரும் நடைமுறை கணக்கினை இலங்கை வங்கியில் (இ.வ.) பராமரிப்பதுடன் வங்கி மீதியானது கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2021 இல் உள்ளவாறான மீதி (ரூபா) | 31.12.2020 இல் உள்ளவாறான மீதி (ரூபா) |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம் | 75433985 | 728,226 | 99,580 |

2021 இல் பின்வரும் முதலீடுகள் இ.வ. ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

| முதலீட்டின் வகை | இவ்வருடத்தில் இ.வ. இல் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் (ரூபா) | 31 டிசம்பர் 2021 இல் இ.வ. இல் உள்ளவாறான மீதி (ரூபா) |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | 264,997,642 | 423,797,061 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடு | 1,940,806,368 | 40,000,000 |
| மொத்தம் | 2,205,804,010 | 463,797,061 |

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. BAN/G/SGF/1/20/5 ඔබේ අංකය உமது இல. Your No. දිනය திகதி Date ২৭ March 2022

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினது தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் ("நிதியம்") 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்தின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (3). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (னை) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (ஸை) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

# தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | குறிப்பு | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளிலான முதலீடுகள் | | 194,860,375 | 473,635,565 |
| நிலையான வைப்புகளிலான முதலீடுகள் | | 300,000,000 | 300,000,000 |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| திறைசேரி முறிகளிலான முதலீடுகள் | | 278,775,190 | 155,151,060 |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி | | 18,034,969 | 18,480,637 |
| நிலையான வைப்புகளில் வருமதியான வட்டி | | 30,780,824 | 9,780,823 |
| மீள்கொடுப்பனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டி | | 81,429 | 3,926 |
| காசும் காசுக்குச் சமனானவைகள் | 5 | 243,458,440 | 30,725,513 |
| மொத்த சொத்துக்கள் | | 1,065,991,227 | 987,777,524 |
| நிதிகள் மற்றும் பொறுப்புக்கள் | | | |
| பயன்படுத்தப்பட்ட நிதிகள் மற்றும் ஒதுக்கங்கள் | | | |
| கொடை - திறைசேரி | | 50,000,000 | 50,000,000 |
| கொடை - தீர்வை நிதியம் | | 100,000,000 | 100,000,000 |
| கொடை - கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | | 100,000,000 | 100,000,000 |
| திரண்ட நிதியம் | | 806,487,080 | 732,213,570 |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 6 | 9,397,147 | 5,453,954 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | 107,000 | 110,000 |
| மொத்த நிதிகள் மற்றும் பொறுப்புக்கள் | | 1,065,991,227 | 987,777,524 |

பக்கங்கள் 129 முதல் 132 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பொறுப்பாளியாவார்கள்.

தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்காகவும் அதன் சார்பிலும்

சிந்தக்க மென்டிஸ்
நம்பிக்கைப் பொறுப்பாளர் - தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

விராஜ் தயாரத்ன
நம்பிக்கைப் பொறுப்பாளர் - தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

கொழும்பு
15 மார்ச் 2022

# தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிச் செயற்திறன் கூற்று | குறிப்பு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| முதலீடுகளிலான வட்டி - மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் | | 3,363,641 | 6,316,460 |
| முதலீடுகளிலான வட்டி - திறைசேரி முறிகள் | | 66,380,973 | 75,022,727 |
| முதலீடுகளிலான வட்டி - நிலையான வைப்புகள் | | 21,000,001 | 9,780,823 |
| மொத்த வருமானம் | | 90,744,615 | 91,120,010 |
| | | | |
| செலவினம் | | | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | (165,000) | (176,000) |
| வங்கிக் கட்டணங்கள் | | (2,164) | (750) |
| மொத்த செலவினம் | | (167,164) | (176,750) |
| | | | |
| வருமான வரிச் செலவினம் | 7 | (16,303,941) | (16,593,802) |
| | | | |
| செலவினத்திற்கும் மேலான மிகை வருமானம் | | 74,273,510 | 74,349,458 |

பக்கங்கள் 129 முதல் 132 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்கான தேறிய சொத்துக்களில் மாற்றங்களின் கூற்று | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| திரண்ட நிதியம் | | |
| வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 732,213,570 | 657,864,112 |
| வருடத்திற்கான செலவிலும் மேலான மிகை வருமானம் | 74,273,510 | 74,349,458 |
| வருடத்தின் இறுதியில் உள்ளவாறான மீதி | 806,487,080 | 732,213,570 |

பக்கங்கள் 129 முதல் 132 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

| 31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த வருடத்திற்காக காசுப் பாய்ச்சல் கூற்று | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| செலவினத்திலும் மேலான மிகை வருமானம் | 74,273,510 | 74,349,458 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு /(குறைப்பு) | 74,273,510 | 74,349,458 |
| | | |
| தொழிற்படு மூலதனத்திலான மாற்றம் | | |
| ஏனைய வருமதிகளிலான (அதிகரிப்பு)/குறைப்பு | (20,631,836) | (6,271,072) |
| செலுத்தவேண்டியவைகளிலான அதிகரிப்பு /(குறைப்பு) | 3,940,192 | (30,408,206) |
| | (16,691,643) | (36,679,278) |
| | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் /(வெளிப்பாய்ச்சல்) | 57,581,867 | 37,670,180 |
| | | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| திறைசேரி முறிகளிலான முதலீடுகள் | 155,151,060 | 217,524,480 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | 0 | (300,000,000) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் /(வெளிப்பாய்ச்சல்) | 155,151,060 | (82,475,520) |
| | | |
| காசும் காசுக்குச் சமனானவைகளிலான தேறிய அதிகரிப்பு /(குறைப்பு) | 212,732,926 | (44,805,340) |
| காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு அ) | 30,725,513 | 75,530,853 |
| காலத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு ஆ) | 243,458,440 | **30,725,513** |
| | | |
| குறிப்பு (அ) | | |
| காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள் | | |
| மீள்கொடுப்பனவுகளிலான முதலீடுகள் | 30,486,575 | 75,100,000 |
| வங்கியிலுள்ள காசு | 238,938 | 430,853 |
| மொத்தம் | 30,725,513 | **75,530,853** |
| | | |
| குறிப்பு (ஆ) | | |
| காலத்தின் இறுதியிலுள்ள காசும் காசுக்குச் சமனானவைகள் | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடுகள் | 242,950,000 | 30,486,575 |
| வங்கியிலுள்ள காசு | 508,440 | 238,938 |
| மொத்தம் | 243,458,440 | **30,725,513** |

பக்கங்கள் 129 முதல் 132 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. பொதுவான தகவல்கள்

### 1.1 அமைவுறல் கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது (தீ.உ.நி.) ஓர் இலாபமீட்டாத நம்பிக்கை நிதியமாகும். இது 1988 இல் நம்பிக்கை பொறுப்புறுதி இலக்கம் 1376, திருத்தியமைக்கப்பட்டவாறு, இன் காரணமாக நிறுவப்பட்டது. இதன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசு துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பொறுப்பு

தீ.உ.நி. இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் முன்னிலைப்படுத்துவதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

### 1.3 தயாரிப்பதற்கான அடிப்படை

தீ. உ. நி இன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் அட்டூறு அடிப்படையில் வரலாற்றுச் செலவு மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான விடயங்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்து வரும் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

### 1.4 அறிக்கையிடும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் தினத்தின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.5 கணக்கீட்டுக் கொள்கைகளிலுள்ள மாற்றங்கள்

கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் கடந்த ஆண்டில் கடைப்பிடிக்கப்பற்றவற்றுடன் ஒத்ததாகக் காணப்படுகின்றன.

### 1.6 ஒப்பிடப்படும் எண்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்றல்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

## 2. சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

### 2.1 முதலீடுகள்

முதலீடுகள் அரசாங்கத் திறைசேரி முறிகளிலும், உரிமமளிக்கப்பட்ட அரச வங்கிகளில் நிலையான வைப்புகளிலும் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலும் மேற்கொள்ளப்பட்டு அவை கொள்விலையில் மற்றும் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதி வரைக்குமான அட்டூறு வட்டியுடன் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

### 3.1 ஓய்வுபெறல் நலன்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய எவ்வித

பொறுப்புக்களும் எழவில்லை. ஏனெனில் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தை நம்பிக்கைப் பொறுப்பாளர் நிர்வகிப்பதால் நிதியத்தில் உத்தியோகத்தர் எவரும் வேலைக்கு அமர்த்தப்படவில்லை.

### 3.2 கொடுபடவேண்டிய கணக்குகள்

கொடுபடவேண்டியவைகள் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 4. நிதிச் செயற்திறன் கூற்று

### 4.1 வருமான அங்கீரிப்பு

முதலீடுகளிலான வட்டியானது ஓர் அட்டூறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.2 செலவின அங்கீகரிப்பு

தீ.உ.நி இனைப் பேணுவதில் ஏற்படும் சகல செலவினங்களும் அட்டூறு அடிப்படையில் கணிக்கப்பட்டு நிதியியல் செயற்திறனை அறிவதற்காக வருமானத்தில் இருந்து கழிக்கப்படுகின்றது.

### 4.3 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமனானவையும், கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளிடம் மேற்கொள்ளப்பட்ட மூன்று மாதங்களுக்குட்பட்ட முதிர்வினைக் கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றது.

## 5. காசும் காசுக்குச் சமனானவைகளும்

| | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடுகள் | 242,950,000 | 30,486,575 |
| வங்கியிலுள்ள காசு | 508,440 | 238,938 |
| மொத்தம் | 243,458,440 | 30,725,513 |

## 6. செலுத்தவேண்டிய வருமான வரி

| | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| Y/A 2019/2020 க்கு செலுத்தவேண்டிய வருமான வரி | 0 | 224,015 |
| Y/A 2020/2021 க்கு செலுத்தவேண்டிய வருமான வரி | (101,382) | 5,229,939 |
| Y/A 2021/2022 க்கு செலுத்தவேண்டிய வருமான வரி | 9,498,528 | 0 |
| மொத்தம் | 9,397,147 | 5,453,954 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 7. வருமான வரிச் செலவினம்

| | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| Y/A 2019/20 க்கான வருமான வரிச் செலவினம் | 0 | 224,015 |
| Y/A 2020/21 க்கான வருமான வரிச் செலவினம் | 0 | 16,369,787 |
| Y/A 2021/22 க்கான வருமான வரிச் செலவினம் | 16,303,941 | 0 |
| மொத்தம் | 16,303,941 | 16,593,802 |

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின், திருத்தியமைக்கப்பட்டது, ஏற்பாடுகளுக்கமைய வருமானவரிப் பொறுப்பானது கணிப்பிடப்பட்டுள்ளது.

## 8. மூலதனக் கடப்பாடுகள்

31 டிசம்பர் 2021 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

## 9. நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31 டிசம்பர் 2021 இல் எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை.

## 10. அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

நம்பிக்கைப் பொறுப்பாளர் நிகழ்வுகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து தேவையேற்படும்போது ஐந்தொகைத் திகதியின் பின்னரான முக்கியமான நிகழ்வு தொடர்பாக பொருத்தமான விதத்தில் தற்போதைய நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்களை மேற்கொள்வார்.

## 11. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்

நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

தீ.உ.நி. இன் கீழ்காணும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் 2021 இல் பதவி வகித்தார்கள்.

- திரு. விராஜ் தயாரத்ன ஐ.ச., தலைவர் இ.பி.ப.ஆ. (08 ஜனவரி 2020 முதல் நியமிக்கப்பட்டு 22 ஜனவரி 2020 இல் கடமையினைப் பொறுப்பேற்றார் )
- திரு. துமித் பர்னாந்து, தலைவர் கொ.ப.ப. (01 ஜூலை 2020 முதல் நியமிக்கப்பட்டார் )
- திரு. ரஜீவ பண்டாரநாயக்க, பிரதம நிறைவேற்று அதிகாரி கொ.ப.ப.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க, இ.பி.ப.ஆ. இன் ஆணையாளர் மற்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் (16 ஜனவரி 2020 முதல் நியமிக்கப்பட்டார் )
- திரு. சிந்தக்க மென்டிஸ், பணிப்பாளர் நாயகம் இ.பி.ப.ஆ. (02 மார்ச் 2020 முதல் நியமிக்கப்பட்டார் )

கீழ் காணும் அட்டவணையானது இவ்வருடத்தில் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக பதவி வகித்தவர்களின் தொடர்புகளை தெளிவுபடுத்துகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. விராஜ் தயாரத்ன ஐ.ச. | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | 8 ஜனவரி 2020 முதல் நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதுன் 22 ஜனவரி 2020 முதல் கடமையினை பதவியேற்றார். | பூச்சியம் |
| திரு. துமித் பர்னாந்து | கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | 01 ஜனவரி 2020 முதல் தலைவர் | பூச்சியம் |
| | மத்திய வைப்புத் திட்டம் | ஜூலை 2017 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | பெந்தேரா வென்சர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | செப்டம்பர் 2013 முதல் பணிப்பாளர் | 100மூ |
| | பிவி கோல் பிரொப்பர்ட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | ஜூன் 2014 முதல் பணிப்பாளர் | 100மூ |
| | பிவி ஹில்டொப் ஹோல்டிங்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | ஜூன் 2014 முதல் பணிப்பாளர் | 100மூ |
| | ஓமெக் டெக்னோலொஜீஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | நவம்பர் 2014 முதல் தலைவர் | ₨10மூ |
| | டெக்கிட்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | ஜூலை 2015 முதல் தலைவர் □பணிப்பாளர் | 10.34மூ |
| | வன் சீசன் பிரொப்பர்ட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | ஜூன் 2014 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | டியு பெரடைஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | ஜூலை 2014 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | அனிவா (பிரைவேட் ) லிமிட்டட் | ஜூலை 2016 முதல் பணிப்பாளர் | ₨11.8மூ |
| | ஜெனரேட்டர் சொலூஸன்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | ஒக்டோபர் 2015 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | ஜுவலெக்ஸ் எக்ரி குமாரகம (பிரைவேட் ) லிமிட்டட் | நவம்பர் 2015 முதல் பணிப்பாளர் | 15மூ |
| | ஏசியா செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | ஜனவரி 2015 முதல் பணிப்பாளர் | 76.70மூ |
| | ஏசியா செக்கியுரிட்டீஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | ஏப்ரல் 2016 முதல் பணிப்பாளர் | 27.64மூ |
| | ஏசியா கெக்கியுரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட் | ஜூன் 2017 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | ஏ-செக் கெப்பிட்டல் (பிரைவேட் ) லிமிட்டட் | பெப்ரவரி 2017 முதல் பணிப்பாளர் | 100மூ |
| | ஏசியா செக்கியுரிட்டீஸ் எட்வைசர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | ஒக்டோபர் 2018 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| | சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. | ஒக்டோபர் 2017 முதல் பணிப்பாளா | பூச்சியம் |
| | யூனியன் எசூஹரன்ஸ் பி.எல்.சி. | ஆகஸ்ட் 2018 முதல் பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. ரஜீவ பண்டாரநாயக்க | கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | பிரதம நிறைவேற்று அதிகாரி | பூச்சியம் |
| | லங்கா வைனான்சியல் சேர்விசஸ் பியுரோ லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | பொது திறைசேரி | 08 ஜனவரி 2020 முதல் பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | 16 ஜனவரி 2020 முதல் பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | 28 ஏப்ரல் 2020 முதல் பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | அகடமி ஒவ் வைனான்சியல் ஸ்டடீஸ் (கரன்டி) லிமிட்டட் | 06 செப்டம்பர் 2021 முதல் பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | லோக்கல் லோன் டெவலப்மன்ட் வன்ட் | 14 செப்டம்பர் 2020 முதல் ஆணையாளர் மற்றும் தலைவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | 22 ஜனவரி 2021 முதல் பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| திரு. சிந்தக்க மென்டிஸ் | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | 02 மார்ச் 2020 முதல் பணிப்பாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை | 02 மார்ச் 2020 முதல் பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | கட்டுமான உத்தரவாத நிதியம் | 02 மார்ச் 2020 முதல் நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

தீ.உ.நி. இலங்கை வங்கியில் (இ.வ.) பின்வரும் நடைமுறை கணக்கினை பராமரிப்பதுடன் அதன் மீதி கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2021 இல் உள்ளவாறான மீதி (ரூபா) | 31.12.2020 இல் உள்ளவாறான மீதி (ரூபா) |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | 1,833 | 508,440 | 238,938 |

2021 ஆம் வருடத்தில் பின்வரும் முதலீடுகள் இ.வ. ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

| முதலீட்டின் வகை | இவ்வருடத்தில் இ.வ. இல் மேற்கொண்ட முதலீடுகள் (ரூபா) | 31 டிசம்பர் 2021 இல் உள்ளவாறான மீதி (ரூபா) |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | 0 | 369,217,775 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடு | 1,159,593,901 | 242,950,000 |
| மொத்தம் | 1,159,593,901 | 612,167,775 |

## குறிப்புகள்

## குறிப்புகள்

## குறிப்புகள்

## குறிப்புகள்

# கூட்டாண்மைத் தகவல்கள்

### காரியாலய முகவரி

28 ஆம் மற்றும் 29 ஆம் மாடி
கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
எச்சிலன் சதுக்கம்
கொழும்பு 1
இலங்கை

### தொலைபேசி

+94 11 2143843

### தொலைநகல்

+94 11 2439149

### மின்னஞ்சல்

mail@sec.gov.lk

### இணையம்

www.sec.gov.lk

### கணக்கீட்டு ஆண்டு

31 டிசம்பர் 2021 இல் நிறைவடைந்த ஆண்டு

### கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

### வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
சம்பத் வங்கி பிஎல்சி
கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி

Designed & produced by
emagewise
Printed by Gunaratne Offset (Pvt) Ltd

SEC | SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA